மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள்

(28.09.2019 முதல் 30.01.2020 வரை)

தொகுப்பு – 2

மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள்

(20.09.2019 முதல் 20.01.2020 வரை)

தொகுப்பு – 2

சிறப்பு வெளியீடு எண். 36

தமிழரசு

இலவச வெளியீடு

பிப்ரவரி 2020

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.09.2019 அன்று சேலம் மாவட்டம் சங்ககிரி சட்டமன்றத் தொகுதியில், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமினை துவக்கிவைத்து ஆற்றிய உரை.................................1

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.09.2019 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கச்சுப்பள்ளியில் முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கிவைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை................17

3. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 29.09.2019 அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, மேட்டூரில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமினை துவக்கிவைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை................25

4. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 29.09.2019 அன்று சேலம் மாவட்டம், ஓமலூர் சட்டமன்றத் தொகுதி, ஓமலூரில், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்ட முகாமினை துவக்கிவைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை...38

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
5.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 29.09.2019 அன்று நடைபெற்ற விழாவில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்துவைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை	50
6.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.10.2019 அன்று சென்னை, கொடுங்கையூரில் ரூபாய் 348 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறப்பு விழாவில் ஆற்றிய உரை..	56
7.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் நிகர் நிலை பல்கலைக்கழகத்தின் 28ஆவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய விழாப் பேருரை – 20.10.2019.......................	68
8.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.10.2019 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் மற்றும் அருள்மிகு அத்திவரதர் சிறப்புப் பணி பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய விழாப் பேருரை................................	79
9.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 31.10.2019 அன்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி	

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
	மற்றும் ஊராட்சித் துறைகளின் சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை.	90
10.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.11.2019 அன்று இந்திய தொழில் கூட்டமைப்பும், தமிழ்நாடு அரசும் இணைந்து நடத்திய Connect 2019 மாநாட்டை துவக்கிவைத்து ஆற்றிய விழாப் பேருரை.	100
11.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.11.2019 அன்று சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்தில் முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கி, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்து ஆற்றிய உரை.	110
12.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 12.11.2019 அன்று மகான் குருநானக் அவர்களின் 550ஆவது ஜெயந்தி விழாவில் ஆற்றிய உரை.	124
13.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.11.2019 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை கட்டடங்கள் மற்றும் நீர்வள ஆதாரத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய தொடக்க உரை.	127

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
14.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 22.11.2019 அன்று தென்காசியில் நடைபெற்ற விழாவில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட தென்காசி மாவட்டத்தினை தொடங்கிவைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளைத் துவக்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை	130
15.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 25.11.2019 அன்று கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பத்தில் அமைக்கப்பட்டுள்ள திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் நினைவு மண்டபத்தினை திறந்துவைத்து ஆற்றிய விழாப் பேருரை	165
16.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.11.2019 அன்று கள்ளக்குறிச்சியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தினை தொடங்கி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளைத் துவக்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை	175
17.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் விழுப்புரத்தில் 26.11.2019 அன்று நடைபெற்ற சட்டக்கல்லூரி வளாகத் திறப்பு விழா டாக்டர் எம்.ஜி.ஆர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டடத் திறப்பு விழா மற்றும் விழுப்புரம் நகராட்சி நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை	194

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
18.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.11.2019 அன்று திருப்பத்தூரில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்டத்தினைத் தொடங்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளைத் துவக்கிவைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை	205
19.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.11.2019 அன்று இராணிப்பேட்டையில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட இராணிப்பேட்டை மாவட்டத்தினைத் தொடங்கிவைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளைத் துவக்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை	224
20.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 29.11.2019 அன்று செங்கல்பட்டில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்தினைத் தொடங்கிவைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளைத் துவக்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.	247
21.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 29.11.2019 அன்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால், சென்னை, கோயம்பேட்டில் நிறுவப்பட்டுள்ள, நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட மூன்றாம் நிலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தைத் திறந்துவைத்து விழாப் பேருரை	272

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
22.	*Speech of the Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru.* ***Edappadi K. Palaniswami*** *during the "Investment & Skill Development Conclave" held on 30.11.2019*	280
23.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 22.12.2019 அன்று 46ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2019–2020யினை தொடங்கிவைத்து ஆற்றிய உரை	286
24.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.01.2020 அன்று சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மெரினா கிரிக்கெட் மைதானத்தில், தமிழ்நாடு அகில இந்திய குடிமைப்பணி மற்றும் மத்தியப் பணி அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டியினை துவக்கிவைத்து ஆற்றிய உரை	299
25.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.01.2020 அன்று தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட 43ஆவது சென்னை புத்தகக் காட்சியை துவக்கிவைத்து ஆற்றிய உரை	302
26.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 19.01.2020 அன்று முகாம் அலுவலகத்தில், குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கி, தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமை தொடங்கிவைத்து ஆற்றிய உரை	313

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
27.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.01.2020 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை*	*317*
28.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.01.2020 அன்று ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரை*	*328*
29.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 30.01.2020 அன்று நடைபெற்ற இந்திய தொழில் கூட்டமைப்பின் 125ஆவது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை*	*336*

❖ ❖ ❖

இந்திய வரலாற்றிலேயே பிறக்கின்ற குழந்தைகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை உடனே வழங்குகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு தான்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றைய தினம் சேலம் மாவட்டத்திலிருக்கின்ற சட்டமன்ற தொகுதிகளுக்கு நானே நேரில் சென்று, மக்களை சந்தித்து மனுக்களைப்பெற்று, பரிசீலித்து அந்த மனுக்களுக்கு தீர்வு காண்பதற்காக இந்த சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தை துவக்கியிருக்கின்றோம். இங்கு பெறப்படும் மனுக்களுக்கு விரைவாக தீர்வு காணப்படும். குறிப்பாக, முதியோர் உதவித்தொகை வழங்கிட வேண்டி அதிக மனுக்கள் அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் உழைக்கும் திறனற்ற, வயது முதிர்ந்த முதியோர்களுக்கு

அரசு உதவி செய்யவேண்டுமென்ற அடிப்படையில் சுமார் 5 இலட்சம் முதியோர்களுக்கு உதவித்தொகை அளிக்க வேண்டுமென்று முடிவெடுத்து, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் சுமார் 2,000 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதா மாதம் ரூ.1,000 வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதோடு நீண்ட நாட்களாக தாங்கள் வசித்த வீட்டிற்கு பட்டா வாங்காமல் இருக்கின்றவர்கள் பட்டா வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கின்றார்கள். அதனையும் அதிகாரிகள் ஆய்வு செய்து தகுதியுள்ளவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதேபோல், நிலம், வீடு வாங்கியுள்ளவர்கள் பட்டா மாறுதல் செய்வதற்கு மனு கொடுத்தால், அந்த மனுவை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்வு செய்து பட்டா மாறுதல் செய்து கொடுக்கப்படும். மக்கள் தங்களது இதர பிரச்சினைகள் குறித்து மனுக்களை கொடுத்தால், அரசு அதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்கள் பகுதிக்கு சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி, போக்குவரத்து வசதி, மருத்துவமனை, பள்ளி ஆகியவை வேண்டுமென்று பல்வேறு மனுக்களை அளித்துள்ளார்கள். அம்மனுக்களை ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து தொகுதிகளிலும் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம் துவக்கப்பட்டு, ஆங்காங்கே மாவட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரடியாகச் சென்று மனுக்களை பெற்று வருகிறார்கள். அம்மனுக்களை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை எடப்பாடியில் இந்தத் திட்டத்தை துவக்கி, பிறகு கெங்கவள்ளி, ஆத்தூர், ஏற்காடு, வீரபாண்டி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் மக்களிடத்தில் மனுக்களை பெற்றிருக்கின்றோம். நாளைய தினம் மேட்டூர், ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மக்களிடமிருந்து மனுக்களை பெற்று தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 8 ஆண்டுகளில் அம்மாவின் அரசால், சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்கு அளிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆனால், எதிர்க்கட்சித்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை என்று குற்றச்சாட்டு கூறுகின்றார். அதுமட்டுமல்ல, பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்களும் குற்றச்சாட்டை சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு பதில் சொல்லவேண்டிய கடமையில் நாங்கள் இருக்கின்றோம்.

இன்றைக்கு சங்ககிரி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் கூட்டுறவுத் துறையின் சார்பாக 220 நபர்களுக்கு பயிர்க்கடன் உதவிகளும், 41 நபர்களுக்கு மத்திய காலக் கடனுதவிகளும், 97 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளும், 358 பயனாளிகளுக்கு ரூபாய் 2 கோடி மதிப்பிலான நலத்திட்டங்களையும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கி இருக்கின்றோம்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 60 நபர்களுக்கு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடுகளும், மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், வீடு நிதியுதவி என 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 96 இலட்சம் மதிப்பீட்டிலான கடனுதவிகளை இன்று வழங்கி இருக்கின்றோம்.

மகளிர் திட்டம் சார்பில் 14 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் உதவி மற்றும் 59 நபர்களுக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் மானியம் என மொத்தம் 73 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 1 இலட்சத்து 5 ஆயிரம் மதிப்பிலான கடனுதவி வழங்கப்படுகிறது.

தோட்டக்கலைத் துறையின் சார்பாக 16 நபர்களுக்கு பாரதப் பிரதமரின் நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ் மானியமும், 4 நபர்களுக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சாதாரண நடவு மானியமும், 6 நபர்களுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் மானியமும், என மொத்தம் 26 பயனாளிகளுக்கு ரூபாய் 13 இலட்சத்து 51 ஆயிரம் மதிப்பிலான நிதியுதவியும், வேளாண் பொறியாளர் துறை சார்பில் வேளாண் இயந்திரமாக்கல் உப இயக்கத் திட்டத்தின் கீழ் 2 நபர்களுக்கு டிராக்டர் மானியம், என மொத்தம் 2 பயனாளிகளுக்கு ரூபாய் 7 இலட்சத்து 2 ஆயிரம் மதிப்பிலான நிதியுதவி வழங்கப்படுகிறது.

தொழில்நுட்ப வேளாண்மை முகமைத் திட்டத்தின் கீழ், சோலார் விளக்கு பொறிகளும் என மொத்தம் 26 பயனாளிகளுக்கு நிதியுதவியும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், 7 நபர்களுக்கு விலையில்லா தையல் இயந்திரமும் வழங்கப்படுகிறது.

ஆகமொத்தம், இன்று நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 592 பயனாளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 4 இலட்சம் மதிப்பிலான பல்வேறு திட்ட உதவிகள் வழங்குகின்ற அரசு எங்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கடந்த 8 ஆண்டுகளில் சுமார் ரூபாய் 210 கோடி மதிப்பீட்டில் இந்தத் தொகுதியில் மட்டும் 35,710 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருவாய்த் துறையில் ரூபாய் 83.50 கோடி மதிப்பீட்டில் 8,195 பயனாளிகளுக்கு ரூபாய் 85 கோடியே 27 இலட்சம் மதிப்பிலான பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், 5,825 பயனாளிகளுக்கு ரூபாய் 15.61 கோடி மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையில் சுமார் ரூபாய் 83 இலட்சம் மதிப்பீட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. வடுகபட்டி மற்றும் மகுடஞ்சாவடி ஆகிய இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 1.56 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆகவே, இன்றைக்கு தரமான மருத்துவ சிகிச்சையை கிராமப்புற மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக 30 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனையை கொடுத்து, புதிய மருத்துவர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு அங்கே வருகின்றவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்க வேண்டும் என்பதற்காக அரசு மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையையும் நாங்கள் இந்தத் தொகுதியில் துவக்கியிருக்கின்றோம் என்பதைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் மூலம் 20,233 பயனாளிகளுக்கு ரூபாய் 65 கோடியே 7 இலட்சம் மகப்பேறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றிலேயே பிறக்கின்ற குழந்தைகளுக்கு உடனே அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு அரசுதான். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். அதன் மூலமாக 634 பச்சிளம் குழந்தைகளுக்கு 16 வகையான பொருட்களை கொண்ட பரிசுப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தின் கீழ், 969 தாய்மார்களுக்கு ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலான ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன. அம்மாவினுடைய அரசால் இன்றைக்கு ரூபாய் 3.15 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

தமிழகத்தில்தான் நெடுஞ்சாலைத்துறை சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நெடுஞ்சாலைத்துறையின் மூலமாக இந்த தொகுதியில் கடந்த 8 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 187 கி.மீ சாலைகள் அமைப்பதற்கு என சுமார் ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மட்டும் சுமார் 73 கி.மீ. சாலைகள் சுமார் ரூபாய் 69 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன.

தாரமங்கலம் பேரூராட்சிப் பகுதியில் புறவழிச்சாலை அமைக்கப்படும் என அறிவித்து, நிதி ஒதுக்கி, பணி முடிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. திட்டத்தைச் சொன்னோம், செய்தோம், திறந்துவைத்தோம். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்கிறார். தாரமங்கலம் பேரூராட்சிப் பகுதியில் புறவழிச்சாலை அமைத்தது எங்கள் அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக சுமார் ரூபாய் 24 கோடி செலவழிக்கப்பட்டு, 3.110 கி.மீ. சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

வேளாண்மைத் துறையில் சுமார் ரூபாய் 17.50 கோடி மதிப்பீட்டில் 87,341 விவசாயிகளுக்கு விவசாய இயந்திரங்கள், கருவிகள்,

விதைகள், சொட்டு நீர் பாசன மானியம், இடுபொருள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண் பெருமக்கள் செழிக்க வேண்டுமென்பதற்காக இந்தத் தொகுதியில் சுமார் ரூபாய் 17.56 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் இந்தப் பகுதியில் மட்டும் சுமார் ரூபாய் 28.9 இலட்சம் மதிப்பீட்டில் 11,982 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டு நீர் பாசன மானியம், காய்கறி விதைகள், பழச்செடிகள், தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. சங்ககிரி பகுதியில் 1,000 அடிக்கு மேல் bore போட்டால்தான் தண்ணீர் கிடைக்கும். எனவே, சொட்டுநீர் பாசனக் கருவிகளை பொருத்தவேண்டுமென்று விவசாயிகள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், விவசாயிகள் 1ஏக்கர் நிலம் வைத்திருந்தால் சொட்டுநீர் பாசனத்திற்கு முழு மானியம் தருகிறோம். அதற்கு மேல் எத்தனை ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும், அந்த விவசாயிகள் சொட்டுநீர் பாசன கருவிகள் வேண்டுமென்று விண்ணப்பித்தால், அவர்களுக்கு 75 தசவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனக் கருவிகளை கொடுத்து, விவசாயிகளுக்கு அனைத்து உதவிகளையும் அம்மாவின் அரசு செய்து வருகின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்பொறியியல் துறையின்சார்பாக 2,144 விவசாயிகளுக்கு சுமார் ரூபாய் 2.25 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கடந்த 8 ஆண்டுகளில் சங்ககிரி தொகுதியில் பல்வேறு குடிநீர் வசதிகளை செய்து கொடுத்திருக்கின்றோம். 158 ஊரக குடியிருப்புகளுக்கு சுமார் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் தனி மின்விசை குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. சங்ககிரி மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் 59 பள்ளிகள்,

35 அங்கன்வாடி மையங்கள், சுமார் ரூபாய் 1.32 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

குடிநீர் ஆதாரங்களை செறிவூட்டுவதற்காக 17 புனரமைப்புத் திட்டப் பணிகள் சுமார் ரூபாய் 69 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆகமொத்தம், ரூபாய் 14 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கூட்டுக் குடிநீர் திட்டத்தில் எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தைச் சார்ந்த 327 ஊரக குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு பாதுகாப்பான தண்ணீர் வழங்கப்படும் என அம்மா அவர்கள் அறிவித்து, அடிக்கல் நாட்டினார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே சுமார் ரூபாய் 46.45 கோடி மதிப்பீட்டில் இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீரை வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. சேலம் மாவட்டம் சங்ககிரி பேரூராட்சிக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் அடிக்கல் நாட்டப்பட்டு, பணி நடைபெற்று வருகின்றது. இப்பகுதி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுத்த அரசு எங்களுடைய அரசு.

இவ்வளவு புள்ளிவிவரங்கள் சொல்வதற்குக் காரணம், எங்கு பார்த்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் அவர்கள் இந்த அரசைப் பற்றி விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார். எனவே, இந்த அரசு இந்த சங்ககிரி தொகுதியில் மட்டும் என்னென்ன பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, என்னென்ன பணிகள் நிறைவேற்றப்படவுள்ளன என்பதை பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இதை நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

கூட்டுறவுத் துறையில், சுமார் 48,476 விவசாயப் பெருமக்களுக்கு ரூபாய் 253 கோடி பயிர்க்கடன் உதவியும், 2,428 விவசாயப் பெருங்குடி மக்களுக்கு சுமார் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் மத்திய காலக் கடனுதவியும், 4 இலட்சத்து 37 ஆயிரத்து 528 விவசாயப் பெருமக்களுக்கு ரூபாய் 1424.95 கோடி மதிப்பீட்டில் நகைக் கடனும் வழங்கப்பட்டுள்ளது. 552 மாற்றுத்திறனாளிகளுக்கு சுமார் ரூபாய் 2.53 கோடி மதிப்பிலான கடன் வழங்கப்பட்டுள்ளது. 1,226 மகளிருக்கு சுமார் ரூபாய் 32.5 கோடி மதிப்பீட்டில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 9,613 நபர்களுக்கு சுமார் ரூபாய் 31.41 கோடி மதிப்பீட்டில் இதர கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. ஆக, கடந்த 8 ஆண்டுகளில் சங்ககிரி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் ரூபாய் 4 இலட்சத்து 99 ஆயிரத்து 855 நபர்களுக்கு ரூபாய் 1,858.33 கோடி மதிப்பில் பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் உபதொழிலாக இருப்பது கால்நடை வளர்ப்பு. கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 12,636 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள், விலையில்லா அசல் இன கோழிகள், கால்நடை பாதுகாப்பு திட்டம், மாநில தீவன அபிவிருத்தித் திட்டம், மேச்சேரி இன ஆடு அபிவிருத்தித் திட்டம், சிறு பால்பண்ணை அமைக்கும் திட்டம் மற்றும் கால்நடை காப்பீடு திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் சுமார் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. அதுபோல 12 கால்நடை மருந்தகங்களுக்கு ரூபாய் 1.17 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஏழை, எளிய மாணவர்கள் நல்ல கல்வி கற்கவேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு பல்வேறு திட்டங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறது. பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், 16,473 மாணவ/மாணவியர்களுக்கு, சுமார் ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினியை அளித்து விஞ்ஞான கல்வியை பெறுவதற்கு வசதி செய்து

கொடுத்தது அம்மாவினுடைய அரசு. வல்லரசு நாடுகளில் கூட விலையில்லா மடிக்கணினி கொடுப்பது கிடையாது. முதலமைச்சர் அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட ஒளிமயமான எதிர்காலத்தை குழந்தைகளுக்கு உருவாக்குகின்ற இந்தத் திட்டத்தை எங்களுடைய அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கிராமங்களில் வாழ்கின்ற மாணவ, மாணவியர்கள் பள்ளிக்கு அதிக தூரம் சென்று கல்வி கற்க வேண்டிய சூழ்நிலையை கண்ட இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு, பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி கொடுத்தார்கள். கடந்த 8 ஆண்டுகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, நாட்டு மக்களுக்கு என்னென்ன திட்டங்களை வழங்கி வருகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுதுதான் எந்த அரசு நல்ல அரசு, எந்த அரசு மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய அரசு என்பதை சிந்தித்துப் பார்த்து, இந்த அரசுக்கு நீங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த புள்ளி விவரங்களை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். சங்ககிரி தொகுதியில் மட்டும் 13,438 மாணவ, மாணவியர்களுக்கு சுமார் ரூபாய் 4.75 கோடி மதிப்பீட்டில் மிதிவண்டிகள் வழங்கியிருக்கிறோம்.

அதேபோன்று, வருவாய் ஈட்டும் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு உதவித்தொகை, இடைநிற்றலைத் தவிர்க்க சிறப்பு ஊக்கத்தொகை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 20 ஆய்வக உதவியாளர் பணி நியமனம், விலையில்லா பேருந்து பயண அட்டை, இப்படி பல திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக கற்போர் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் பதவியேற்கின்றபொழுது, கல்வி கற்போரின் எண்ணிக்கை, அதற்கு

முன்னால் கல்வி கற்றோரின் எண்ணிக்கை, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பதவியேற்றதற்குப் பின்பு இன்றைக்கு கல்வி கற்போரின் எண்ணிக்கை என்னவென்று பார்க்க வேண்டும். அப்படி பிரித்துப் பார்க்கும்பொழுது, 2011ஆம் ஆண்டு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பதவியேற்றதற்குப் பிறகு கல்வி கற்போரின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. அதற்குக் காரணம் அம்மா எடுத்த நடவடிக்கைகள் மற்றும் அதைத் தொடர்ந்து எங்களுடைய அரசு எடுத்த நடவடிக்கைகள்தான். ஆகவே, புதிய, புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக, இன்றைக்கு மாணவர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பல்வேறு சலுகைகளை அளித்ததன் காரணமாக, கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில்தான் உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை 49 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. ஆனால், 2005 முதல் 2011 வரையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 32 சதவீதம் தான். 2011இல் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்திய கல்வி புரட்சியின் காரணமாக படிப்படியாக உயர்ந்து இன்றைக்கு இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கையில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. சங்ககிரி சட்டமன்றத் தொகுதியில் 4 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. எடப்பாடிக்கும், சங்ககிரிக்கும் இடையில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொடுத்திருக்கின்றோம்.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் 6 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகளும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கத்தின் சார்பில் மகுடஞ்சாவடி, சங்ககிரி மற்றும் தாரமங்கலம் மாதிரிப் பள்ளிகள் மற்றும் மாணவ விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. ஆகமொத்தம் ரூபாய் 25 கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு

புதிய கட்டடங்கள், ஆய்வகங்கள், சுற்றுச்சுவர், மாதிரிப் பள்ளிகள் மற்றும் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டங்கள் கட்டப்பட்டுள்ளன.

சமூக நலத்துறையின் மூலம் ஏழை, எளிய பெண்களுக்கு தங்க நாணயத்துடன் திருமண உதவியினை மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த பெண் பிள்ளைகள் திருமண வயதை எட்டுகின்றபோது குடும்ப பொருளாதார சூழ்நிலை காரணமாக திருமணம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை. அப்படிப்பட்ட பெண்கள் உரிய நேரத்திலே திருமணம் செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த திட்டத்தை துவக்கி வைத்தார்கள். அதேபோல, திருமண உதவித் திட்டத்தின் மூலமாக படித்த பெண்களுக்கு ரூ.50,000 மற்றும் ரூ.25,000 நிதியுதவியுடன் தங்க காசு நான்கு கிராம் என்பதை எட்டு கிராமாக உயர்த்தினார்கள். இன்றைக்கு ஒரு பவுன் 29,000 ரூபாய். அப்படி பார்க்கின்றபோது இந்த சங்ககிரி சட்டமன்ற தொகுதியிலே மட்டும் 2830 படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டத்தின் மூலம் 16.32 கோடி ரூபாய் நிதியுதவியாகவும், தங்க நாணயமாக 1,690 பவுன் கொடுத்திருக்கிறோம்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் 10.50 கோடி ரூபாய் செலவில் 704 பள்ளிகளில் பயில்கின்ற 5 முதல் 14 வயது வரை உள்ள 1,71,706 மாணவ, மாணவியர்களுக்கு 11 வகையான சத்தான கலவை சாதங்கள் மற்றும் முட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏழை, எளிய கர்ப்பிணித் தாய்மார்கள் நலமோடு குழந்தை பெற்று வளமோடு வாழ வேண்டும் என்பதற்காக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு திட்டம் கொண்டு வந்தார்கள். நேற்றைய தினம் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சேலம் மாவட்டத்தில்

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடைபெற்றது. இதுவரை சங்ககிரி சட்டமன்றத் தொகுதியில் 2,340 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறையின் மூலமாக பள்ளிக்கல்வித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மைத் துறை, தமிழ்வளர்ச்சித் துறை, போக்குவரத்துத் துறை, நீதித்துறை மற்றும் வருவாய் துறை ஆகிய துறைகளுக்கு ரூபாய் 13.48 கோடி மதிப்பீட்டில் 21 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

மேலும், 3 பள்ளிகளுக்கு ரூபாய் 5.14 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சங்ககிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 2.54 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

எங்களுடைய அரசு மக்கள் நலன் காக்கின்ற அரசு. மக்கள் என்ன நினைக்கின்றார்களோ அதை நிறைவேற்றுகின்ற அரசு. அந்த எண்ணத்தின் அடிப்படையில் குடிமராமத்து திட்டத்தை அறிவித்து தமிழ்நாடு முழுவதும் அந்தப் பணி இன்றைக்கு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

மேட்டூர் அணை பல ஆண்டு காலமாக தூர் வாரப்படாமல் இருந்தது. மேட்டூர் அணையின் கொள்ளளவை அதிகரிக்க வேண்டும், பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்க வேண்டும், உபரியாக வெளியேறும் நீரையும் சேமித்து வைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே 83 ஆண்டுகளுக்குப் பிறகு தூர்வாரி சரித்திரம் படைத்த அரசு எங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

மேட்டூர், ஓமலூர், சங்ககிரி, எடப்பாடி ஆகிய சட்டமன்ற தொகுதியிலே வாழ்கின்ற பொதுமக்கள் மற்றும் விவசாய பெருமக்கள் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதமாக ஒரு

மிகப் பெரிய திட்டமாக, 100 ஏரிகளில் நீர் நிரப்புகின்ற திட்டத்தை **565** கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற இருக்கின்றோம். அப்பணிக்கு இன்னும் 5 மாதத்தில் டெண்டர் விடப்படும். ஒரே ஆண்டிலே அந்தப் பணி நிறைவு பெற்று இந்த நான்கு தொகுதியிலே இருக்கின்ற 100 ஏரிகளில் தண்ணீர் நிரப்பப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் விவசாயத்திற்கு தேவையான நீர் கிடைக்கும். பொதுமக்களுக்கு குடிநீர் கிடைக்கும்.

காவேரி – கோதாவரி இணைப்புத் திட்டம் ஒரு மிகப் பெரிய திட்டமாகும். இந்தத் திட்டம் நிறைவேறுகின்றபோது மேட்டூரிலிருந்து கரூர் வரை இருக்கின்ற காவேரியின் இரண்டு கரையோர பகுதிகளிலும் நீர்ஏற்று பாசன முறையில் ஏரிகள் நிரப்பப்படும். மேலும், இந்த இரண்டு கரையோர பகுதிகளிலே இருக்கின்ற ஈரோடு, சேலம், கரூர், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சி ஆகிய மாவட்ட கரையோரங்களில் இருக்கின்ற ஏரிகளும் நிரப்பப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மேட்டூரிலிருந்து உபரி நீர் திறந்து விடுகின்றபோது, மாயனூர் கதவணையிலிருந்து குண்டாறு வரை செல்வதற்கு கால்வாய் வெட்டப்படும் என்று அறிவித்தார்கள். காவேரி – கோதாவரி இணைப்புத் திட்டமானது, கரூர் மாவட்டம், மாயனூர் கதவணையில் இணைக்கின்றபோது, அங்கே இருந்து வைகை, குண்டாறு வரை அந்த திட்டத்தை நீட்டிக்க அம்மாவின் அரசு திட்டம் தீட்டி வருகிறது. இப்பொழுது காவேரி – கோதாவரி இணைப்பு கரூரில் இணைக்கப்படுகிறது. அப்படி இணைக்கப்படுகின்ற போது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எண்ணிய எண்ணத்தை இந்த அரசு நிறைவேற்றும் என்பதை பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கரூர் மாவட்டம், மாயனூர் கதவணையிலிருந்து குண்டாறு வரை மூன்று பகுதிகளாக புதுக்கோட்டை, சிவகங்கை, வைகை

மற்றும் குண்டாறு இப்படி ஒவ்வொரு பகுதியாக கால்வாய் வெட்டப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வசதியும், அப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு பாசன வசதியும் இந்த அரசால் செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் சொன்னதை தான் செய்வோம், செய்வதை தாம் சொல்வோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து. நீர் மேலாண்மை மிக முக்கியம். அந்த நீர் மேலாண்மையை நாம் விவசாயிகளுக்கு சிறப்பாக செய்து தர வேண்டும். அதுதான் எங்களுடைய தலையாய நோக்கம். அதற்கு எவ்வளவு தடைகள் வந்தாலும், அத்தனை தடைகளையும் தகர்த்தெறிந்து விவசாய பெருமக்களுடைய நலன் காக்கும் அரசாக எங்களுடைய அரசு திகழும். குடிநீர் பிரச்சினை, தமிழகத்தில் இல்லாத அளவிற்கு நாங்கள் உருவாக்கி காட்டுவோம்.

முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் விழாவிற்கு மிக சிறப்பான ஏற்பாடுகளை செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***28.09.2019** அன்று சேலம் மாவட்டம் சங்ககிரி சட்டமன்றத் தொகுதியில்,*
முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமினை
துவக்கிவைத்து ஆற்றிய உரை.

ரூ.23.52 கோடி மதிப்பீட்டில் எடப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டம்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இன்றையதினம் எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறும் விழாவில் கலந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியானது புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற காலத்திலே எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஆகிய மூன்று ஒன்றியங்களை உள்ளடக்கி ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தை புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே அறிவித்து, அவர்களுடைய திருக்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அவர் முதலமைச்சராக இருந்தபோது துவக்கி வைத்ததாகும். அதில் சில பகுதிகள் விடுபட்டிருப்பதாக பல்வேறு தரப்பினரும் வேண்டுகோள் வைத்த காரணத்தினால் இன்றையதினம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில், எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட குடிநீர் கிடைக்காத 137 குடியிருப்புகளுக்கு

ரூபாய் 23 கோடியே 52 இலட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்பு திட்டத்தின் கீழ் எடப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் புதிய குடிநீர் திட்டப் பணிக்கு இன்றையதினம் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது, 137 குடியிருப்புப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் கிடைக்கும். கடுமையான வறட்சி வருகின்றபொழுது கூட, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் குடிநீர் பிரச்சினை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான், விடுபட்ட பகுதிகள், சரியாக தண்ணீர் சென்றடையாத பகுதியையெல்லாம் கண்டறிந்து, அந்தப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இன்றையதினம் நடைபெறும் விழாவில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பாக ரூபாய் 2 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் எடப்பாடி நகராட்சி பேருந்து நிலையம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய திருநாமத்தின் பெயரில் இன்றைக்கு வணிக வளாகம் ஒன்று திறக்கப்பட்டிருக்கின்றது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் தாய்–2 திட்டத்தின் கீழ் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் கொங்கணாபுரம் ஊராட்சி கச்சுப்பள்ளியில் உள்ள அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சிக் கூடமும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூபாய் 51 இலட்சம் மதிப்பீட்டில் குறுவம்பட்டி, சமுத்திரம் மற்றும் கச்சுப்பள்ளி ஆகிய 3 ஊராட்சி மன்ற அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்களும்,கச்சுப்பள்ளி,சமுத்திரம்,வளையப்பட்டி,கொல்லப்பட்டி, வெள்ளாளபுரம் ஆகிய ஊராட்சிகளில் சுமார் ரூபாய் 51 இலட்சத்து 2 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 அங்கன்வாடி மையங்களும் இன்றையதினம் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகமொத்தம், இந்த

விழாவில் ரூபாய் 4 கோடியே 32 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட 11 கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற அம்மா பூங்கா அழகாக, சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற மக்களுக்கு மாலை நேரத்தில் பொழுதுபோக்கு அம்சமாக அமைந்துள்ளது. வெளிநாட்டில் இருப்பதைப் போல, கச்சுப்பள்ளி பகுதியும் திகழ்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தப் பூங்காவில் இயற்கையாக இருக்கின்ற மிருகங்களைப் பார்ப்பது போல காட்சிப்படுத்தியிருக்கின்றார்கள். அதேபோல, இளைஞர்கள் உடற்பயிற்சி செய்வதற்காக அம்மா உடற்பயிற்சிக்கூடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இங்கே உள்ள இளைஞர்கள் கட்டான உடம்பை உருவாக்கிக்கொள்வதற்கு இந்த ஜிம்–ஐ பயன்படுத்திக்

கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல், ஷட்டில் கார்க்கோர்ட் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றது, அற்புதமான விளையாட்டு மைதானத்தை உங்களுக்காக அரசு வழங்கியிருக்கின்றது. ஆகவே, இவற்றையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தி, இங்கிருக்கின்ற இளைஞர்களும், பொதுமக்களும் மகிழ்ச்சியோடு பொழுதை கழிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கச்சுப்பள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு துவக்கியிருக்கிறது. எடப்பாடிக்கும், சங்ககிரிக்குமிடையே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்திருக்கின்றோம். கல்லூரிக்கான புதிய கட்டடம் எட்டிக்குட்டைமேட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தப் பகுதி மக்கள் குறைந்த கட்டணத்தில் கல்லூரியில் சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

அதேபோல, புதிய தொழில் துவங்குவதற்காக இன்றைக்கு எட்டிக்குட்டைமேட்டில் சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, விரைவாக தொழில் உற்பத்தி துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி தொழிற்பேட்டை துவங்குகின்ற பொழுது, கச்சுப்பள்ளியை சுற்றியுள்ள இளைஞர்களுக்கும், பொதுமக்களுக்கும் அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

அதுமட்டுமல்லாமல், இப்பகுதி மக்களுக்கு சீரான மின்சாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக எட்டிகுட்டைமேட்டில் பவர் ஹவுஸ் அமைத்திருக்கின்றோம். திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரி, கொங்கணாபுரம் வழியாக ஓமலூர் வரை செல்வதற்கு நான்கு வழிச்சாலைப் பணிகள் விரைவில் தொடங்க இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுக்குத் தேவையான குடிநீர் தங்குதடையின்றி வழங்க கச்சுப்பள்ளியில் இரண்டு குடிநீர் மேல்நிலைத்தொட்டிகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியைச் சுற்றிலும் நல்ல சாலை

வசதிகளை கொண்டதாக உருவாக்கித் தந்திருக்கிறோம். இப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, சுமார் ரூபாய் 93 இலட்சம் செலவில் திருமண மண்டபம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மிகக் குறுகிய காலத்தில், இந்த ஊராட்சியில் பல்வேறு பணிகளை நிறைவேற்றித் தந்திருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவுடைய அரசு மக்களுடைய அரசு. மக்களுக்கு தேவையான திட்டங்களை தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கும் அரசு. இந்தப் பகுதி ஒரு வறட்சியானபகுதி. விவசாயத்திற்கு தேவையான நீர் கிடைப்பதில்லை. பருவமழை பொய்கின்ற காரணத்தினால், தண்ணீர் பிரச்சினை ஏற்படுகிறது. இதற்குத் தீர்வு காண வேண்டும் என்று சொன்னால், இந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளீர்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதமாக, மேட்டூர் அணையின் உபரி நீர், சுமார் ரூபாய் 565 கோடி மதிப்பீட்டில் நீரேற்றுத் திட்டத்தின் மூலமாக, கொங்கணாபுரம் மற்றும் கச்சுப்பள்ளி பகுதிகளில் இருக்கின்ற ஏரிகளில் நிரப்பப்படும். அப்பணியினை இன்னும் 5 மாத காலத்திலே துவங்க இருக்கின்றோம். ஒரே ஆண்டில் பணி முடிந்து விடும். இன்னும் இரண்டு ஆண்டுகள் கழித்து பார்த்தால் நம்முடைய ஏரிகள் அனைத்தும் நீர் நிரம்பி காட்சியளிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமத்திலே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் அனைத்தும் தூர் வாரப்பட வேண்டும் என்பதற்காக குடிமராமத்து திட்டத்தை கொண்டு வந்து, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குளங்கள் எல்லாம் தூர் வாரப்படுகின்றன. அதேபோல, பொதுப்பணித்துறைக்கு சொந்தமான ஏரிகளும் தூர் வாரப்படுகின்றன. இந்த தூர் வாரும் திட்டத்தை முழுக்க முழுக்க விவசாயிகளுக்கே அளித்து செயல்படுத்துகின்றோம். விவசாயிகள் தூர்வாரும் போது கிடைக்கின்ற வண்டல் மண்ணை இயற்கை உரமாக

பயன்படுத்துகிறார்கள். மேலும் ஏரிகளும் ஆழமாகிவிடுகின்றது. ஏரியை தூர் வாருவதற்கு தேவையான நிதியை அரசு ஒதுக்கீடு செய்து, கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயிகள் பயனடைய வேண்டும், கிராமப்புற மக்களுக்கு தேவையான குடிநீர் வசதி செய்து தர வேண்டும், பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகக்கூடாது என்பதற்காக இந்த குடிமராமத்து திட்டத்தை விவசாயிகளிடத்திலே ஒப்படைத்து அரசு செயல்படுத்தி வருகிறது.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும், ஓடைகள் மற்றும் ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி, தண்ணீரை தேக்கி வைத்து, மழைக்காலத்தில் பெய்கின்ற மழைநீர் வீணாக வெளியேறாமல், அப்பகுதியிலே தேக்கி, நிலத்தடி நீர்மட்டம் உயர்த்தி, விவசாயத்திற்கும், குடிநீருக்கும் தேவையான நீர் கிடைத்திடும் வகையில், ஒரு மிகப்பெரிய திட்டத்தை நிறைவேற்றவுள்ளோம். இத்திட்டம், மூன்றாண்டு கால திட்டமாக நிறைவேற்ற ரூபாய் 1,000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளோம். இதுவரை ரூபாய் 600 கோடிக்கான பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள், உப தொழிலாக கால்நடைகளையும் வளர்க்கிறார்கள். அதிக அளவிலே பால் தரக்கூடிய பசு மாடுகளை வளர்க்க வேண்டும் என்பதற்காக தலைவாசல் கூட்டு ரோடு அருகிலே சுமார் 1,000 ஏக்கரில் ஆசியாவிலே மிகப் பெரிய கால்நடை பூங்கா உருவாக இருக்கிறது. அதற்காகத்தான் நான் வெளிநாடு சென்றேன். அமெரிக்க நாட்டின், கலிபோர்னியா மாநிலத்தில், Buffalo என்ற இடத்திலே இருக்கின்ற கால்நடை பண்ணைக்கும் சென்றேன். அங்கு ஒரே இடத்தில் 3,000 மாடுகளை வளர்க்கிறார்கள். அம்மாடுகள் காலையில் 30 லிட்டர் முதல் 40 லிட்டர் வரை பால் தருகிறது. மாலையில் சுமார் 35 லிட்டர் வரை பால் தருகின்றது. சராசரியாக ஒவ்வொரு மாடும் சுமார் 60 முதல் 75 லிட்டர் வரை பால் தருகிறது. அதேபோல தமிழ்நாட்டிலும் கலப்பின பசுக்களை உருவாக்கி,

விவசாயிகளுக்கு கொடுக்கின்றபோது, அவர்களின் பொருளாதார நிலையும் மேம்படும் என்பதற்காகத் தான், தலைவாசலில் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க இருக்கின்றோம். அதேபோல அதிகமான எடை கொண்ட தரமான ஆடுகளை ஆராய்ச்சி நிலையிலிருந்து விவசாயிகளுக்கு தர இருக்கின்றோம். மீன் வளர்த்து தர உள்ளோம். இப்படிப்பட்ட திட்டத்தை விவசாயிகளின் நலனிற்காக உருவாக்கித் தரவிருக்கின்றோம்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், அவர்களுக்கு கட்டுப்படியான விலையில் கிடைக்க வேண்டும் என்பதற்காக, சென்னைக்கு அருகிலே சுமார் ரூபாய் 2,000 கோடி மதிப்பீட்டில் உணவுப் பூங்கா ஒன்றை துவக்கவிருக்கின்றோம். ஓமலூர், மேச்சேரி, தாரமங்கலத்திற்கு இடையே பிரம்மாண்டமான காய்கறி மார்க்கெட் உருவாக்கவிருக்கின்றோம். அந்த மார்க்கெட்டில் ஆன்லைனில் காய்கறிகளை விற்கலாம். விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்றவும், அதிக விலை கிடைக்கவும் இந்த திட்டத்தை உருவாக்கி இருக்கின்றோம். தமிழ்நாடு முழுவதும் இந்த திட்டத்தை விரிவாக்கவும் இருக்கின்றோம். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பது தான் இதனுடைய நோக்கமாகும்.

விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, விவசாயிகளுக்கு நிறைந்த சேவையை அளிக்கின்ற அரசாக அம்மாவின் அரசு விளங்கி வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்களின் தேவையை அறிந்து நிறைவேற்றுகின்ற ஒரே அரசு எங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தொகுதிக்கு முதலமைச்சர் கிடைத்திருக்கிறார். அது மிக மிக முக்கியம். தமிழ்நாட்டில் 234 தொகுதிகள் இருந்தாலும், தமிழ்நாட்டில் எந்த பகுதிக்கும் சென்றாலும், நாங்கள் எடப்பாடியில் இருந்து வருகிறோம், முதலமைச்சர் தொகுதியில் இருந்து

வருகிறோம் என்று சொன்னால், தனி மரியாதை இருக்கிறது. நான் உங்களை முதலமைச்சராக இருந்து பார்க்கவில்லை. நீங்களெல்லாம் முதலமைச்சராக என்னை உருவாக்கித் தந்திருக்கின்றீர்கள். அந்த பெருமைக்கு உரிய வகையில் நீங்கள் இங்கே அமர்ந்திருக்கின்றீர்கள். மக்களுக்குத் தேவையான திட்டங்களை அளிப்பதுதான் என்னுடைய இலட்சியம்.

முதன்முதலாக நான் சேவல் சின்னத்தில் போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராக உயர்ந்து, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக நியமனம் செய்யப்பட்டு பணியாற்றினேன். சிறப்பாக பணியாற்றிய காரணத்தினால் 2016இல் நெடுஞ்சாலை துறை மற்றும் பொதுப்பணித் துறை ஆகிய இரண்டு பெரிய துறைகளை கொடுத்து சிறப்பாக நீங்கள் செயல்பட வேண்டும் என்று அம்மா அவர்கள் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே, சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருந்த நேரத்திலே அம்மா அவர்கள் மறைந்த பிறகு, எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால், அம்மாவுடைய அருளாசியால், உங்களைப் போல் இருக்கின்ற நல்ல உள்ளங்களின் அருளாசியால் இன்றைக்கு தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்று இன்று கச்சுப்பள்ளியிலே பேசுகின்ற வாய்ப்பை உங்களால்தான் பெற்றுள்ளேன் என்பதை எந்த காலத்திலும் மறக்க மாட்டேன். ஆகவே, நான் உங்கள் வீட்டில் ஒருவனாக இருந்து, இந்தப் பகுதி மக்களின் நலனுக்காக என்றென்றும் பாடுபடுவேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
28.09.2019 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதி,
கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கச்சுப்பள்ளியில்,
முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கிவைத்து,
புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை.

இந்த அரசு மக்களின் அரசு!
மக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்ற அரசு!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்குபெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம், மேட்டூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்த மனுக்களைப் பெற்று அந்த மனுக்களுக்குத் தீர்வு காண்பதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இந்த நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன.

ஏற்கெனவே நான் கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, சங்ககிரி, வீரபாண்டி ஆகிய சட்டமன்றத் தொகுதியிலுள்ள பொதுமக்களிடம் நேரடியாக மனுக்களைப் பெற்று அந்த மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றையதினம் மேட்டூர், இதற்குப் பிறகு ஓமலூர் செல்லவிருக்கின்றேன்.

இந்தத் திட்டத்தின் வாயிலாக, நீண்டகாலமாக தீர்க்கமுடியாமல் இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்து அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். அதேபோல், என்ன காரணத்திற்காக மனு நிராகரிக்கப்பட்டது என்பதையும் அவர்களுக்கு கடிதம் மூலமாக தெரிவிக்கப்படும். பொதுமக்களின் மனுக்களில் பெரும்பாலானவை முதியோர் உதவித்தொகை கோரி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் உழைக்கும் திறனற்ற, வயது முதிர்ந்த முதியோர்களுக்கு அரசு உதவி செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் சுமார் 5 இலட்சம் முதியோர்களுக்கு உதவித்தொகை அளிக்க வேண்டுமென்று முடிவெடுத்துள்ளோம்.

அதோடு, நீண்டகாலமாக மக்கள் வசித்து வருகின்ற வீடுகளுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கின்றார்கள். அதிகாரிகளின் ஆய்விற்குப் பிறகு தகுதியுள்ளவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோல், நிலம், வீடு வாங்கியுள்ளவர்கள் பட்டா மாறுதல் செய்வதற்கு மனு கொடுத்தால், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்விற்குப் பிறகு பட்டா மாறுதல் செய்து கொடுக்கப்படும். இன்னும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து மனு கொடுத்தால், அரசு அதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தனிப்பட்டா இருந்தால்தான் வங்கிகளிலும் நீங்கள் கடனுதவி பெறமுடியும். எனவே, தனிப்பட்டா பெறுவதற்கு விண்ணப்பித்தால் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இறப்புச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ் என சிறு

சிறு பிரச்சினைகளுக்கு பல அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை வைக்கும் நிலையை மாற்றி, முதலமைச்சரே நேரில் மனுக்களைப் பெறக்கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறோம். உங்கள் மனுக்கள் அனைத்தும் கணினியில் பதிவேற்றப்பட்டு மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மக்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்படும். ஒவ்வொரு மனுவின் மீதும் அதிகாரிகளால் தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பல அலுவலர்களை நியமித்து மக்களால் கொடுக்கப்படுகின்ற மனுக்கள் ஏதும் விடுபடாமல் தீர்வு காண நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

இன்றைக்கு தமிழகம் முழுவதும் கழக அரசால் அனைத்துப் பகுதிகளிலும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை என்ற ஒரு தவறான குற்றச்சாட்டை அவர் செல்கின்ற இடங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் பேசி வருகிறார். 2011ஆம் ஆண்டு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து 2019ஆம் ஆண்டு வரை 8 ஆண்டுகளில் மேட்டூர் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட பணிகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மேட்டூர் நகராட்சியில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர், நடைபாதை மற்றும் குழந்தைகள் விளையாட்டு சாதனங்களுடன்

அமைக்கப்பட்டுள்ள "சின்ன பார்க்" என்று அழைக்கப்படும் காமத் பூங்கா இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நேற்றையதினம் கட்சுப்பள்ளியில் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ள அம்மா பூங்காவில், குழந்தைகளுக்கு மகிழ்ச்சியூட்டக்கூடிய வகையில் விலங்குகளின் உருவ பொம்மைகள் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று இந்தப் பூங்காவிலும் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் நிதியின் மூலம் அமைக்கப்படும்.

ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 40 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான மானிய நிதியுதவியும், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 60 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான மானிய நிதியுதவியும் என மொத்தம் 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 86 இலட்சம் மானிய நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுத் துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு பயிர் கடன் உதவியும், 20 பயனாளிகளுக்கு மத்திய காலக் கடனுதவியும், 96 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடனுதவியும், 2 மாற்றுத் திறனாளிகளுக்கு கடனுதவியும் என மொத்தம் 218 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 62 இலட்சத்து 10 ஆயிரம் கடனுதவிகளும், மகளிர் திட்டம் சார்பில் 11 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவியும், 131 மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகன மானிய நிதியுதவியும் என மொத்தம் 142 மகளிருக்கு 69 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் கடனுதவி மற்றும் மானிய நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலைத் துறையின் சார்பில் பாரதப் பிரதமரின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ், 26 விவசாயிகளுக்கு ரூபாய் 31 இலட்சத்து 40 ஆயிரம் மானிய நிதியுதவியும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் 4 விவசாயிகளுக்கு ரூபாய் 14 இலட்சத்து 73 ஆயிரம் வேளாண்

கருவிகளுக்கான மானிய நிதியுதவியும், வேளாண்மைத்துறையின் சார்பில் நீடித்த நிலையான மானாவாரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 9 விவசாயிகளுக்கு உழவு மானியமும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 16 விவசாயிகளுக்கு இயந்திர நெல் நடவு மானியமும், 1 விவசாயிக்கு தென்னை மரம் ஏறும் கருவியும் என மொத்தம் 26 விவசாயிகளுக்கு ரூபாய் 1 இலட்சத்து 2 ஆயிரம் மானிய நிதியுதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.65 கோடி செலவில் தார்சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி மேம்பாட்டு மானிய நிதியுதவியின் மூலம் ரூபாய் 6.90 கோடி மதிப்பீட்டில் 10,000 பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்கும்

பணிகளும், ரூபாய் 2.40 கோடி மதிப்பீட்டில் 7,000 வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரூபாய் 1.55 கோடி மதிப்பீட்டில் குடிநீர் பகிர்மான குழாய்கள் நீட்டிக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூபாய் 73 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் நகராட்சிப் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஏறக்குறைய ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் எடப்பாடி நகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை நிறைவேற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித் துறை சார்பில் ரூபாய் 3.23 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் அணைக்கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள 9 ஏரிகளை சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேட்டூர் கிழக்குக் கரை மற்றும் மேற்குக் கரை கால்வாய்களில் செல்கின்ற நீர் வீணாகாமல் கடைமடைப் பகுதி முழுவதும் தண்ணீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக நவீன முறையில் கான்கிரீட் கால்வாயாக மாற்றி கொடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதற்கட்டப் பணி நிறைவு பெற்றுள்ளது. இரண்டாம் கட்டப் பணிகள் துவங்கப்படவுள்ளன. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய நீரை, முழுமையாக கிடைக்க இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. இதற்காக சுமார் ரூபாய் 250 கோடி செலவிடப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய முயற்சியினால் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை அரசிதழில் வெளியிட செய்த சாதனையை விளக்கும் வகையில் மேட்டூர் அணைப் பூங்காவின் முகப்புப் பகுதியில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் நினைவுத்தூண் கல்வெட்டு

பதித்து பூங்காவின் நுழைவுவாயில் புனரமைக்கும் பணியும் முடிக்கப்பட்டுள்ளன.

அதேபோல, 83 ஆண்டு காலமாக தூர்வாரப்படாமல் இருந்த மேட்டூர் அணையை தூர்வாரி சரித்திரம் படைத்த அரசு எங்களுடைய அரசு. முதலமைச்சர் என்ற முறையில் நானே நேரில் வந்து இத்திட்டத்தை தொடங்கி வைத்தேன். இதன் மூலம் கிடைக்கும் வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்து தங்கள் விளைநிலங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

பருவ காலங்களில் பொழிகின்ற மழைநீரை சேமிக்கும் வகையில், தொலைநோக்குச் சிந்தனையோடு, ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளை தூர்வாரும் குடிமராமத்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது முழுக்க, முழுக்க விவசாயிகளைக் கொண்டே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை குறை கூறும் எதிர்க்கட்சியினர், அவர்கள் ஆட்சி காலத்தில் ஒரு ஏரியைக்கூட தூர்வாரவில்லை. பொதுப்பணித்துறையின் கீழ் பராமரிக்கப்படும் சுமார் 14,000 ஏரிகள், ஊராட்சி ஒன்றியத்தின் கீழ்

பராமரிக்கப்படும் சுமார் 26,000 ஏரிகள், ஆக மொத்தம் தமிழ்நாட்டில் இன்றைக்கு 40,000 ஏரிகள், குளங்கள் உள்ளன. இவைகளை படிப்படியாக தூர்வாரும் வகையில் குடிமராமத்து திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட தொகையினை ஒதுக்கி, குறிப்பிட்ட ஏரிகளை எடுத்துக்கொண்டு குடிமராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக, ரூபாய் 100 கோடியும், இரண்டாம் கட்டமாக ரூபாய் 328 கோடியும் ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு, 1,829 பொதுப்பணித்துறை ஏரிகளை தூர்வாருவதற்கு ரூபாய் 500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஏரிகள், குளங்கள், குட்டைகளை தூர்வாருவதற்கு ரூபாய் 1,250 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், சிறப்பான இந்தத் திட்டத்தை எதிர்க்கட்சியினர் குறை கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் மேட்டூர் அணையிலிருந்து உபரி நீர் கடலில் வீணாக கலப்பதைத் தடுக்க முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லியுள்ளார். திமுக ஆட்சியில் மேட்டூர் முதல் கொள்ளிடம் வரை எத்தனை தடுப்பணைகள் கட்டினார்கள்? தமிழகத்திலே அதிக ஆண்டுகள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தவர் திரு. துரைமுருகன் அவர்கள் தான். ஆனால், ஒரு தடுப்பணை கூட கட்டவில்லை. எதுவுமே செய்யாத ஸ்டாலின் எங்களைப் பற்றி பேசுவதற்கு எந்த தகுதியும் இல்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மேட்டூரிலிருந்து உபரி நீர் வீணாக கடலில் சென்று கலப்பதை தடுப்பதற்காக கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்காக ஆதனூர் குமாரமங்கலம் என்ற இடத்திலே மேற்கொள்ள வேண்டும்

என்பதற்காக அம்மா அறிவித்தார்கள். அதனை நாங்கள் இன்று செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

பள்ளி மாணவ, மாணவியருக்கு பல்வேறு நலத் திட்டங்களை அம்மாவினுடைய அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. மேட்டூர் தொகுதியில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியிருக்கின்றோம். மாணவ, மாணவியருக்கு புதிய, புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி, தேவையான அனைத்து அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும் அம்மாவின் அரசு உருவாக்கித் தந்துள்ள காரணத்தினால் கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை 49 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கையில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது.

இன்றைக்கு தமிழகம் மின்மிகை மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது. அதனால் தான் புதிய, புதிய தொழிற்சாலைகள் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. கடந்த திமுக ஆட்சியில் கடுமையான மின்வெட்டு இருந்ததை நீக்கி, மூன்றே ஆண்டு

காலத்தில் தடையில்லா மின்சாரத்தை வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். நான் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்தபொழுது, அங்குள்ள தொழிலதிபர்கள் இன்றைக்கு தமிழ்நாடு வளம் கொழிக்கும் மாநிலமாகவும், தொழில் தொடங்க உகந்த மாநிலமாகவும் திகழ்கிறது என்று குறிப்பிட்டார்கள். மேலும், தமிழகத்தில் தொழில் தொடங்க 41 தொழில் நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்கள். இதனை பொறுத்துக்கொள்ள முடியாத எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் அவர்கள் வெள்ளை அறிக்கை கேட்கின்றார். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு தொழிற்சாலைகளைத் தொடங்கி வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்ற இலட்சியத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் உயர வேண்டும். விவசாயிகளின் வாழ்க்கை செழிக்க வேண்டும். அதற்காகத்தான் நீர் மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தி விவசாயிகளுக்கு போதிய நீர் கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வேளாண்மைத் துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை திமுக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும், 2011ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களையும் மக்கள் ஒப்பிட்டுப் பார்த்து, எந்த ஆட்சி மக்களுக்கான ஆட்சி என்பதை முடிவு செய்துகொள்ள வேண்டும்.

சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 7,751 பயனாளிகளுக்கு சுமார் ரூபாய் 79 கோடி மதிப்பிலான பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 14,797 பயனாளிகளுக்கு சுமார் ரூபாய் 40 கோடி மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியாவிலேயே தமிழகம் தொடர்ந்து முதன்மை வகித்து வருவதற்குக் காரணம் அம்மாவினுடைய அரசு தான். வெளிநாடு சென்றபொழுது, டெங்கு மற்றும் மலேரியா கொசுக்களை ஒழிப்பதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கின்றோம். மேட்டூர் தொகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்திருக்கின்றோம். புதிய மருத்துவர்களை நியமனம் செய்திருக்கின்றோம். நடமாடும் மருத்துவமனையை உருவாக்கியிருக்கின்றோம். மருத்துவத் துறையில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அதிகளவில் கால்நடை மருத்துவமனைகளை தொடங்கிய அரசு அம்மாவின் அரசு.

மேட்டூரில் 16 கண் பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. பவானியிலிருந்து மேட்டூர் வரை, மேட்டூரிலிருந்து தொப்பூர் வரையிலான சாலையினை விரிவாக்கம் செய்யவதற்கான நிலஎடுப்புப் பணி முடிந்தவுடன் விரைவில் சாலை விரிவாக்கம் செய்யப்படும்.

கூட்டுறவுத்துறை சார்பில் **51,610** விவசாய பெருமக்களுக்கு சுமார் ரூபாய் **270** கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளன. **2,585** விவசாய பெருமக்களுக்கு சுமார் ரூபாய் **16** கோடி மத்திய கால கடன் வழங்கப்பட்டுள்ளன. **4,65,843** விவசாய பெருமக்களுக்கு ரூபாய் **1,517** கோடி நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளன. **588** மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் **2.51** கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மகளிர் சுயஉதவிக் குழுவைச்சார்ந்த **1,305** மகளிருக்கு ரூபாய் **33.51** கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளன. **10,235** நபர்களுக்கு சுமார் ரூபாய் **33** கோடி இதர கடனுதவி வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம், **8** ஆண்டுகளில் மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் கூட்டுறவுத்துறையின் மூலம் மொத்தம் **5,32,166** நபர்களுக்கு ரூபாய் **1,871.99** கோடி பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல்வேறு திட்டங்கள் மேட்டூர் தொகுதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த அரசு மக்களின் அரசு, மக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்ற அரசு. இந்த அரசுக்கு நீங்கள் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு, இந்த சிறப்பான விழாவினை ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
29.09.2019 *அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் சட்டமன்றத் தொகுதி,*
மேட்டூரில், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமினை
துவக்கிவைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.

அனைத்து தரப்பட்ட மக்களின் நலனுக்காக தொடர்ந்து பாடுபடும் அரசு! புரட்சித்தலைவி அம்மாவின் அரசு!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்குபெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம், ஓமலூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்த மனுக்களைப் பெற்று அந்த மனுக்களுக்கு தீர்வு காண்பதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இந்த நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன.

முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்ட முகாம் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் நடைபெறும். பொதுமக்களிடத்தில்

மனுக்கள் பெறப்பட்டு அதற்குத் தீர்வு காணப்படும் என்ற அறிவிப்பை சட்டமன்றத்தில் வழங்கினோம். அந்த அறிவிப்பிற்கிணங்க சேலம் மாவட்டத்தில் முதற்கட்டமாக எடப்பாடியில் தொடங்கி ஏற்கெனவே நான் கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, சங்ககிரி, வீரபாண்டி மற்றும் இன்றையதினம் மேட்டூர் ஆகிய சட்டமன்றத் தொகுதியிலுள்ள பொதுமக்களிடம் நேரடியாக மனுக்களைப் பெற்று அந்த மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துடன் மாநகரப் பகுதிகளிலும் மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் நோக்கம், பொதுமக்கள் நேரடியாக அதிகாரிகளை சந்தித்து மனுக்களை வழங்குவதற்கு பதிலாக, முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் நேரடியாக மக்களை சந்தித்து, மனுக்களைப் பெறுவதுதான். இத்திட்டத்தின் மூலம் நீண்டகாலமாக தீர்க்கமுடியாமல் இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. உங்கள் மனுக்கள் அனைத்தும் கணினியில் பதிவேற்றப்பட்டு மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்து அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். ஒவ்வொரு மனுவின் மீதும் அதிகாரிகளால் தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணமும் மக்களுக்கு கடிதம் மூலமாக தெரிவிக்கப்படும்.

பொதுமக்களின் மனுக்களில் பெரும்பாலும் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, விதவைகள் உதவித்தொகை, ஆதரவற்றோர் உதவித்தொகை போன்றவையாகும். இதில் தகுதிவாய்ந்த மனுக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதயதெய்வம் அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்திலிருந்து இதுவரை ஓமலூர் தொகுதி மக்களுக்கு பல்வேறு பணிகளை நிறைவேற்றித் தந்திருக்கின்றோம். ஆனால்,

எதிர்க்கட்சியினர், பல கூட்டங்களிலும், பத்திரிகையாளர்களையும், ஊடகத்தினரையும் சந்திக்கின்ற பொழுதும் அதிமுக அரசு மக்களுக்கு எந்தத் திட்டங்களையும் செய்யவில்லை என்ற ஒரு தவறான, பொய்யான செய்தியை பரப்பி வருகின்றனர். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில், அம்மாவின் அரசால் பொதுமக்களுக்கு செய்யப்பட்டுள்ள திட்டங்களின் விவரங்களை குறிப்பிட விரும்புகின்றேன்.

ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 86 இலட்சம் மானிய நிதியுதவியும், கூட்டுறவுத்துறையின் சார்பில் ரூபாய் 1 கோடியே 60 இலட்சத்து 47 ஆயிரம் பயிர் கடன் உதவியும், மகளிர் திட்டம் சார்பில் 23 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடனுதவியும், 27 மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகன மானிய நிதியுதவியும் என மொத்தம் ரூபாய் 1 கோடியே 18 இலட்சத்து 75 ஆயிரம் மானிய நிதியுதவிகளும் வழங்கப்படுகிறது.

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் துணை வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் 4 விவசாயிகளுக்கு

ரூபாய் 14 இலட்சத்து 98 ஆயிரம் வேளாண் கருவிகளுக்கான மானிய நிதியுதவி வழங்கப்படுகிறது. தோட்டக்கலைத்துறையின் சார்பில் பாரதப் பிரதமரின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ், 13 விவசாயிகளுக்கு நிதியுதவியும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், 3 விவசாயிகளுக்கு நிதியுதவியும் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ், 10 விவசாயிகளுக்கு நிதியுதவியும், என மொத்தம் 26 விவசாயிகளுக்கு ரூபாய் 11 இலட்சத்து 62 ஆயிரம் மதிப்பிலான மானிய நிதியுதவி வழங்கப்படுகிறது.

வேளாண்மைத்துறையின் சார்பில் நீடித்த நிலையான மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 22 விவசாயிகளுக்கு உழவு மானியம், பனை விதைகள் மற்றும் உயர் மதிப்பீட்டு மரங்கள் விநியோகமும், ஆத்மா திட்டத்தின் கீழ் 3 விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் கருவிகளும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்,1 விவசாயிக்கு விசைத் தெளிப்பானும், என மொத்தம் 26 விவசாயிகளுக்கு ரூபாய் 57 ஆயிரம் மானிய நிதியுதவிகளும் வழங்கப்படுகிறது. ஆகமொத்தம், இன்றைய தினம் நடைபெறுகின்ற இவ்விழாவில் 424 பயனாளிகளுக்கு ரூபாய் 4 கோடியே 92

இலட்சத்து 39 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் ரூபாய் 270.64 கோடி மதிப்பீட்டில் 38,860 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 2,950 பயனாளிகளுக்கு ரூபாய் 30 கோடி மதிப்பிலான பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், ரூபாய் 13.50 கோடி மதிப்பிலான 5,235 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறை சார்பில் ரூபாய் 88 இலட்சம் மதிப்பீட்டில் செம்மாண்டப்பட்டி மற்றும் பச்சனம்பட்டி ஆகிய 2 பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் சரக்கப்பிள்ளையூரில் உள்ள 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் மூலம் 55,825 பயனாளிகளுக்கு ரூபாய் 22.12 கோடி மகப்பேறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 4,081 பச்சிளம் குழந்தைகளுக்கு அம்மா பரிசு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தின் கீழ் 742 தாய்மார்களுக்கு ரூ.14.84 இலட்சம் மதிப்பீட்டிலான ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இளம்பெண்களுக்கு 1,46,062 சானிடரி நாப்கின்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஓமலூர் அரசு மருத்துவமனையில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் 6 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கம் கட்டப்பட்டுள்ளது.

ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு ரூ.5.16 கோடி மதிப்பீட்டில் தரைதளத்தில் 24 படுக்கைகள் கொண்ட பிரசவ பகுதி அறுவை சிகிச்சை அரங்கம், முதல் தளத்தில் 20 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் 8 படுக்கைகள் கொண்ட

முதலமைச்சரின் காப்பீட்டு திட்ட வார்டு அறைகள், இரண்டாம் தளத்தில் ஆண்களுக்கென 20 படுக்கைகள் கொண்ட வார்டும், பெண்களுக்கென 20 படுக்கைகள் கொண்ட வார்டும் என அனைத்து வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டப்பட்டு நவீன மருத்துவமனையாக அரசு கொடுத்துள்ளது.

நெடுஞ்சாலைத்துறையில், 8 ஆண்டுகளில் ரூ.114.87 கோடி மதிப்பீட்டில் 321.04 கி.மீ. சாலைப்பணிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ரூ.80.89 கோடி மதிப்பீட்டில் 123.57 கி.மீ. சாலைப்பணிகள் அகலப்படுத்தி புதுப்பிக்கப்பட்டுள்ளன. தொளசம்பட்டி சாலையில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டுள்ளது. ஓமலூர் – சங்ககிரி சாலையிலிருந்து முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டு வருகின்றது. காட்டைமேடு – எருமைக்காரன் வளைவுச் சாலையில் ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டு வருகின்றது.

வேளாண்மைத் துறையின் மூலம் ரூ.13.71 கோடி மதிப்பீட்டில் 65,159 விவசாயிகளுக்கு விவசாய பண்ணை இயந்திரங்கள், கருவிகள், விதைகள், சொட்டு நீர் பாசன மானியம், இடுபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் 3,926 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டு நீர் பாசன மானியம், காய்கறி விதைகள், பழச்செடிகள், தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. பருவமழை பொய்த்ததன் காரணமாக தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்த 1,097 விவசாயிகளுக்கு ரூ.43.72 இலட்சம் வறட்சி நிவாரண இடுபொருள் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

பட்டுவளர்ச்சித்துறையில் மாநில திட்டத்தின்கீழ் ரூ.39.87 இலட்சம் மதிப்பீட்டில் 156 விவசாயிகளுக்கு பல்வேறு மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மை பொறியியல் துறையில்

ரூ.2.29 கோடி மதிப்பீட்டில் 2,027 விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை பொருளீட்டுக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், 8 விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடனுதவி ரூ.8.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஓமலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கி ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 8 ஆண்டுகளில் 206 ஊரக குடியிருப்புகளுக்கு சுமார் ரூ.9 கோடி மதிப்பீட்டில் தனி மின்விசை குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஓமலூர், காடையாம்பட்டி மற்றும் மேச்சேரி ஊராட்சி ஒன்றியங்களில் 49 பள்ளிகள், 100 அங்கன்வாடி மையங்கள், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் குடிநீர் ஆதாரங்களை செறிவூட்டுவதற்காக 25 புனரமைப்புத் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆக மொத்தம், ரூ.11.24 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.270 கோடி மதிப்பீட்டில் ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1,345 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இருந்து ஓமலூர், கருப்பூர் ஆகிய 2 பேரூராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு 2.87 மில்லியன் லிட்டர் அளவுக்கு சீரான குடிநீரும், ஓமலூர் மற்றும் தாரமங்கலம் ஆகிய 2 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 121 குடிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 4.48 மில்லியன் லிட்டர் அளவுக்கு சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

கூட்டுறவுத்துறையில் 94,831 விவசாய பெருமக்களுக்கு ரூ.495.54 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளன. 4,750 விவசாய பெருமக்களுக்கு ரூ.29.01 கோடி மத்திய கால கடன் வழங்கப்பட்டுள்ளன. 8,55,972 விவசாய பெருமக்களுக்கு ரூ.2,787.55 கோடி நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளன.

1,080 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4.60 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மகளிர் சுயஉதவிக் குழுவைச் சார்ந்த 2,398 மகளிருக்கு ரூ.61.57 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளன. 18,806 நபர்களுக்கு சுமார் ரூ.61.50 கோடி இதர கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 9,77,837 நபர்களுக்கு ரூ.3,439.71 கோடி பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்புத்துறையில் ரூ.13.50 கோடி மதிப்பீட்டில் 16,069 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள், விலையில்லா அசில் இன கோழிகள், கால்நடை பாதுகாப்புத் திட்டம், மாநில தீவன அபிவிருத்தித் திட்டம், மேச்சேரி இன ஆடு அபிவிருத்தித் திட்டம், சிறு பால் பண்ணை அமைக்கும் திட்டம் மற்றும் கால்நடை காப்பீட்டு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.1.57 கோடி மதிப்பீட்டில் 8 கால்நடை மருந்தகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

பள்ளிகல்வித் துறையில் விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.21.27 கோடி மதிப்பீட்டில் 19,264 மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.5.08 கோடி மதிப்பீட்டில் 16,664 மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. வருவாய் ஈட்டும் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், பெற்றோர்களை இழந்த 15 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.8.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இடைநிற்றலை தவிர்க்க சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 19,264 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.9.63 கோடி சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 84,729 மாணவ/ மாணவியர்களுக்கு போக்குவரத்து பேருந்து பயணச்சலுகை அட்டை வழங்கப்பட்டுள்ளது. ரூ.1.31 கோடி மதிப்பீட்டில் மூன்று அரசு

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. அ னை வ ரு க் கு ம் இடைநிலை கல்வி இயக்கத்தின் சார்பில் ரூ.7.32 கோடி மதிப்பீட்டில் 5 அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகம் மற்றும் கழிப்பறைகள் கட்டடமும், ரூ.5.22 கோடி மதிப்பீட்டில் காடையாம்பட்டி மாதிரிப் பள்ளிக்கு புதிய கட்டடமும், ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் காடையாம்பட்டியில் மாணவியர் விடுதி கட்டடமும் கட்டப்பட்டுள்ளன.

ஓமலூர்தொகுதியில் சேடப்பட்டி, வெண்ணானம்பட்டி, மூக்கனூர், குண்டுக்கல், பாகல்பட்டி, சக்கரைசெட்டிபட்டி, ஒலைப்பட்டி, பாலக்குட்டப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய 8 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இராமமூர்த்தி நகர், இராமிரெட்டிப்பட்டி, குண்டுக்கல், பாகல்பட்டி அரசுஉயர்நிலைப்பள்ளி ஆகிய 4 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப் பட்டுள்ளன. எனவே, ஒரே பள்ளியிலேயே தங்களுடைய படிப்பை மாணாக்கர் தொடரக்கூடிய வாய்ப்பை அம்மாவின் அரசு உருவாக்கித் தந்துள்ளது. இதனால் கல்வி கற்போரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

நபார்டு திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ரூ.24.19 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய பள்ளிக் கட்டடங்கள், ஆய்வகங்கள், வகுப்பறைகள், சுற்றுச்சுவர், மாதிரி பள்ளிகள் மற்றும் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலம் படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ், 4,744 படித்த ஏழைப் பெண்களுக்கு

ரூ.16 கோடி திருமண நிதியுதவியுடன் 2,684 பவுன் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் 2,600 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை மூலமாக, ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்புத்துறை, பள்ளிக் கல்வித்துறை, வருவாய்த்துறை, பத்திரப் பதிவுத்துறை, புள்ளியியல் துறை ஆகிய துறைகளுக்கு 23 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் வாயிலாக 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுகளில் 813 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்க தேர்வு செய்யப்பட்டு, 702 உழைக்கும் மகளிருக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.1.75 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டம் மூலம் ரூ.5.40 கோடி மதிப்பீட்டில் 180 குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

மாவட்ட தொழில் மையம் மூலமாக 207 பயனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களின் மூலம் புதிய தொழில்கள் தொடங்குவதற்கான மானியம் ரூ.4 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஓமலூரிலிருந்து மேச்சேரி செல்லும் வழியில் இரயில்வே கடவின் குறுக்கே உயர்மட்டப் பாலம் வேண்டுமென்ற கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும். அதேபோல, ஓமலூரிலிருந்து மேச்சேரி வரையிலான சாலை விரிவுபடுத்தப்படும். திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரி, கொங்கணாபுரம், தாரமங்கலம் வழியாக ஓமலூர் வரை செல்வதற்கு நான்கு வழிச்சாலைப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், அவர்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக ஓமலூர்,

மேச்சேரி சாலையில் பிரம்மாண்டமான காய்கறி மார்க்கெட் உருவாக்கவிருக்கின்றோம். ஓமலூர் பகுதி பூக்கள் அதிகம் விளையக்கூடிய பகுதியாக இருப்பதினால், விவசாயிகள் விளைவிக்கக்கூடிய மலர்களை நல்ல விலையில் விற்பனை செய்வதற்கு கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் சர்வதேச மலர் ஏல மையம் அமைக்கப்படவுள்ளது.

விவசாயிகள், உப தொழிலாக கால்நடைகளையும் வளர்க்கிறார்கள். அதிக அளவிலே பால் தரக்கூடிய பசு மாடுகளை வளர்க்க வேண்டும் என்பதற்காக தலைவாசல் கூட்டு ரோடு அருகிலே சுமார் 1,000 ஏக்கரில் ஆசியாவிலே மிகப் பெரிய கால்நடை பூங்கா உருவாக இருக்கிறது. அங்கு கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை ஆராய்ச்சி நிலையம் தொடங்கவிருக்கிறோம். அங்கு கலப்பின பசுக்களை உருவாக்கி விவசாயிகளுக்கு கொடுக்கின்ற போது, அவர்களின் பொருளாதார நிலை மேம்படும்.

என்னுடைய வெளிநாட்டுப் பயணத்தின்போது, அமெரிக்க நாட்டின், கலிபோர்னியா மாநிலத்தில், Buffalo என்ற இடத்திலே இருக்கின்ற கால்நடை பண்ணைக்கும் சென்றேன். அங்கு ஒரே இடத்தில் 3,000 மாடுகளை வளர்க்கிறார்கள். சராசரியாக ஒவ்வொரு மாடும் சுமார் 70 லிட்டர் வரை பால் தருகிறது. அதேபோன்று தலைவாசலில், கால்நடை ஆராய்ச்சிப் பண்ணையில் அதிக பால் தரக்கூடிய நோய் எதிப்பு சக்தி கொண்ட கலப்பின பசுக்களை உருவாக்கி நமது விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். அதேபோல அதிகமான எடை கொண்ட தரமான ஆடுகளை ஆராய்ச்சி நிலையிலிருந்து விவசாயிகளுக்கு தர இருக்கின்றோம். மீன் வளர்த்து தர உள்ளோம். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை விவசாயிகளின் நலனிற்காக உருவாக்கித் தரவிருக்கின்றோம்.

ஓமலூர் தக்காளி அதிகமாக பயிரிடப்படும் பகுதி என்பதால் அதிக உற்பத்தி மற்றும் விலை வீழ்ச்சி ஏற்படும் காலங்களில் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க தோட்டக்கலைத் துறையின்

மூலம் தக்காளியை பதப்படுத்தி மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் இயந்திரம் பொருத்திய வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தக்காளி ஜூஸ் தயாரித்து, அதனை கெடாமல் சேமித்து பயன்படுத்தலாம்.

சேலம் மாவட்டத்தில் இராணுவ தளவாட உதிரி பாகங்கள் தொழிற்சாலை அமையவுள்ளதால் இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மேலும், சென்னை—சேலம் விமான சேவை காலை நேரங்களில் மட்டுமே உள்ளதை, மாலை நேரங்களிலும் விரிவுபடுத்தப்படும்.

இந்த அரசு மக்களின் அரசு. விவசாயிகளின் நலன் காக்கும் அரசு. அனைத்து தரப்பட்ட மக்களின் நலனுக்காக என்றென்றும் தொடர்ந்து பாடுபடும் என்பதை தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
29.09.2019 *அன்று சேலம் மாவட்டம்,*
ஓமலூர் சட்டமன்றத் தொகுதி, ஓமலூரில்,
முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்ட முகாமினை
துவக்கிவைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை
வழங்கி ஆற்றிய உரை.

தமிழ்நாடு அரசு 2019-2020ஆம் ஆண்டு திருமண நிதியுதவித் திட்டத்திற்கு ரூ.726.32 கோடி நிதி ஒதுக்கீடு!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றையதினம் ஏழை, எளிய பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன்தாலிக்குத்தங்கம், அங்கன்வாடிப்பணியாளர்களுக்கு அலைபேசி மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா, முடிவுற்ற பணிகளின் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ள அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின்கீழ் ஓமலூர் வட்டம், தேக்கம்பட்டி, கெங்கவல்லி வட்டம், தெடாவூர் மற்றும்

ஆத்தூர் வட்டம், ஊனத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 47 இலட்சத்து 85 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 10 கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வுக்கூடம், கழிப்பறைகள் கட்டடம், குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவர் உள்ளிட்ட கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், விளாரிப்பாளையத்தில் ரூபாய் 31 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சார்பில் தேசிய பால்வளத் திட்டத்தின் கீழ், காரிப்பட்டி ஊராட்சி, வாழப்பாடி பேரூராட்சி, வி.புதுப்பாளையம், பேளூர் பேரூராட்சி, சந்திரப்பிள்ளை வலசு ஊராட்சி, உமையாள்புரம் ஊராட்சி, ஈச்சம்பட்டி ஊராட்சி, பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி, எருமசமுத்திரம் நரசிங்கபுரம் நகராட்சி ஆகிய 8 இடங்களில் ரூபாய் 2 கோடியே 29 இலட்சத்து 88 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 பால் குளிர்விப்பான் மையங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சேலம் மாநகராட்சி சார்பில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், ரூபாய் 25 கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில், வ.உ.சி.மார்க்கெட், சேலம் போஸ் மைதானம் மற்றும் வணிக வளாகம் மறுசீரமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், ரூபாய் 3 கோடியே 74 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில், சேலம் மாநகராட்சி நரசோதிப்பட்டி, வீரபாண்டி, காடையாம்பட்டி ஒன்றியம் காருவள்ளி, கொளத்தூர், ஜலகண்டாபுரம், மேச்சேரி, நங்கவள்ளி சின்னக்கோனூர், ஏற்காடு முளுவி, தலைவாசல் ஒன்றியம் காட்டுக்கோட்டை, பெத்தநாயக்கன்பாளையம் ஆகிய 10 இடங்களில்

கால்நடை மருந்தகக் கட்டடங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் ரூபாய் 1 கோடியே 3 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் கெங்கவல்லி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஜலகண்டாபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பனங்காட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகங்கள், கலை மற்றும் கைவினை அறை கட்டடம் மற்றும் கழிவறை கட்டடங்களும் என, ஆக மொத்தம் இன்றைய தினம் நடைபெறுகின்ற இவ்விழாவில் ரூபாய் 30 கோடியே 62 இலட்சத்து 90 ஆயிரம் மதிப்பீட்டில் 17 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு மே மாதம் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் தாலிக்குத் தங்கம் வழங்குவதை முதன்முறையாக அறிமுகப்படுத்தினார்கள். அதன்படி, ஏழைப் பெற்றோர்களின் மகள், ஆதரவற்ற பெண்கள், மறுமணம் செய்துகொள்ளும் விதவைகள், ஏழை விதவையின் மகள், கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதியர் ஆகியோர்

பயன்பெறும் வகையில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பட்டதாரி அல்லாதாருக்கு ரூபாய் 25 ஆயிரமும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு ரூபாய் 50 ஆயிரமும் வழங்கப்படுகிறது. மேலும், திருமாங்கல்யம் செய்வதற்கு முதலில் 4 கிராம் தங்கம் வழங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் 2016ஆம் ஆண்டு முதல் அதனை 8 கிராமாக உயர்த்தி வழங்கினார்கள்.

2011ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான 8 ஆண்டுகளில் 4,71,237 பட்டதாரி பெண்களுக்கும் 6,74,673 பட்டதாரி அல்லாத பெண்களுக்கும் என, ஆக மொத்தம் 11,45,910 பெண்கள் பயனடைந்துள்ளார்கள். இதற்காக 5,260.72 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படுவதில்லை.

பெண் குழந்தைகள் பிறந்துவிட்டது என்று முகம் சுழிக்கின்ற நிலையை மாற்றி, புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகளை, தான் பெற்ற குழந்தைகளைப் போல் கருதி, தாயுள்ளத்தோடு அக்குழந்தைகளுக்கு 16 வகையான பொருட்கள் அடங்கிய அம்மா பரிசு பெட்டகம், கரு நல்ல முறையில் வளர்வதற்கு ஊட்டச்சத்துப் பெட்டகம் என அனைத்து உதவிகளையும்

வழங்கியிருக்கின்றார்கள். சேலம் மாவட்டத்தில் 500 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மருத்துவப் பிரிவினை அம்மா அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். ஏழைத் தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளுக்காக பச்சிளம் குழந்தை சிறப்பு சிகிச்சை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களுக்கென நிறைய சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கின்றார்கள். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிகளவில் கடனுதவி வழங்கிய மாநிலம் தமிழ்நாடு. அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முன்னுக்கு வருவதற்கு அடித்தளமாக விளங்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழகத்தில் உயர்கல்வி படிப்பவர்களின் சதவிகிதம் 49ஆக உயர்ந்துள்ளதற்கு பெண்கள் அதிகமான அளவில் கல்வி பயில்வதுதான் காரணம். கடந்த 8 ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில், திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ், 237.50 கிலோ கிராம் தங்கம் ஏழை, எளிய பெண்களுக்கு வழங்கியிருக்கின்றோம்.

சமூக நலத்துறையின் சார்பில் 2019–2020ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசு திருமண நிதியுதவித் திட்டத்திற்கு ரூபாய் 726.32 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. சேலம் மாவட்டத்தில் இந்த ஆண்டு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 6,000 ஏழைப் பெண்களுக்கு ரூபாய் 23 கோடியே 39 இலட்சத்து 75 ஆயிரம் திருமண நிதியுதவியும், ரூபாய் 18 கோடியே 73 இலட்சம் மதிப்பிலான தாலிக்குத் தங்கமும் வழங்கப்படவுள்ளது.

இன்றையதினம் இந்நிகழ்ச்சியின் மூலம் 200 ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மக்களின் அரசு. கிராம மற்றும் நகர்ப்புறங்களில் வாழ்கின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அவர்களின் தேவைகளை அறிந்து, திட்டங்களை நிறைவேற்றித் தருகின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. இந்த அரசுக்கு நீங்கள் நல்லாதரவு தரவேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில்
***29.09.2019** அன்று நடைபெற்ற விழாவில்*
முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்துவைத்து,
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.

ரூ.1,250 கோடி மதிப்பீட்டில் சிறுபாசன ஏரிகள், குட்டைகள் மற்றும் ஊருணிகளின் கொள்ளளவினை அதிகரிக்கும் பணிகள்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

விண்ணிலிருந்து மண்ணில் விழும் ஒவ்வொரு நீர்த்துளியும் வீணாகக்கூடாது, பயன்படுத்தப்பட்ட நீரும் மறுசுழற்சி செய்து முறையான பயன்பாட்டிற்காக, முறையாக சேமித்து பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் உரிய முறையில் ஒருங்கிணைக்கும்

வகையில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள குடிமராமத்து திட்டத்தினை இணைத்து “நீர் வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்” தொடங்கப்படும் என்று 110 விதியின் கீழ் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் நான் அறிவித்தேன். அதற்கிணங்க, இன்று 348 கோடி ரூபாய் மதிப்பிலான 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவிலே கலந்துகொண்டு நல்ல பல கருத்துக்களை வழங்கிய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்பான கருத்துக்களை எடுத்து வைத்த மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற மரியாதைக்குரிய மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்த்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

சிறப்புரையாற்றிய தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம் அவர்களே!

வரவேற்புரையாற்றிய நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முதன்மை அரசுச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங் அவர்களே!

நன்றியுரையாற்ற உள்ள சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

“மக்கள் நம் பக்கம் இருக்கிறார்களா என்பதை விட மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது. என்னை நம்புகின்ற மக்களுக்கு என்ன என்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ, அந்த வழிகளைப் பற்றியே நான் சதா சர்வ காலமும் சிந்தித்துக்கொண்டே இருக்கிறேன். அதனால்தான் என் அன்பிற்குரிய மக்களாகிய நீங்கள் எப்போதும் என் பக்கம் இருக்கிறீர்கள்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும், மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அதனால்தான் மக்களின் பேராதரவு மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு தொடர்ந்து நிலைத்து நிற்கின்றது.

தமிழ்நாட்டில் உள்ள ஆறுகள் பெரும்பாலும் பருவமழையை நம்பியே உள்ளன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் ஆற்று நீரைக் கொண்டு ஏரி, குளம், குட்டை, ஊருணிகளை நிரப்பி, பின்னர் அந்த நீர், குடிநீர், பாசனம் மற்றும் பிற தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டது.

பொருளாதார வளர்ச்சிக்கு நீர் மேலாண்மை அவசியமானதாகும். பருவமழை பொய்க்கும் காலங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதற்கான நிரந்தரத் தீர்வை காண்பது மிகவும் இன்றியமையாதது. ஒவ்வொரு மழைத்துளியையும், பயன்படுத்தப்பட்ட நீரையும் மறுசுழற்சி செய்து முறையான பயன்பாட்டிற்காக சேமிக்கப்பட வேண்டியது அவசியம்.

“நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருக” என்ற புறநானூற்று பாடலின் வரிகள், மழை நீரை சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைப்பது ஒரு மன்னனின் தலையாய கடமை என்று கூறுகிறது. அதாவது, நிலம் எங்கெங்கு பள்ளமாக இருக்கிறதோ, அங்கெல்லாம் நீர் நிலைகள் அமையும்படி கரை அமைத்த மன்னர்களே சிறந்தவர்கள் என்கிறது.

இந்த புறநானூற்றுப் பாடலின் வரிகளுக்கு ஏற்ப, நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மழைநீர் சேகரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி வெற்றிக்கண்டார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியிலேயே மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்துச் செல்லவும், நீர் நிலைகளின் கொள்ளளவை அதிகப்படுத்தி

பாதுகாக்கவும், வேளாண்மைக்கு நீர் திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்யவும், கழிவுநீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி முறையில் உபயோகிப்பதை பெருமளவில் ஊக்கப்படுத்தவும் ''நீர் வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்'' என்ற தீவிர மக்கள் இயக்கத்தை 07.08.2019 அன்று நான் துவக்கி வைத்தேன் என்பதை இங்கே பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த தீவிர இயக்கத்தில் மழைநீர் சேகரித்தல், குடிமராமத்து திட்டத்தின் மூலம் நீர்நிலைகளை பாதுகாத்து அதன் கொள்திறனை அதிகரித்தல், நிலத்தடி நீரை செறிவூட்டி, குடிநீர் வழங்குதலை நிலைப்படுத்துதல், பயன்படுத்தப்பட்ட நீரினை மறுசுழற்சி செய்து உபயோகப்படுத்துவதன் மூலம் நன்னீருக்கான தேவையைக் குறைத்தல், இதன் மூலம் மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சிக் கோட்பாட்டினை தீவிரமாக கடைப்பிடித்தல் போன்ற பல்வேறு வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குடிமராமத்து திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு ரூபாய் 500 கோடி மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்ட 1,829 பணிகளும், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை நீரை சேகரிக்கும் முன்னேற்பாட்டின் ஒரு பகுதியாக, காவேரி டெல்டா பகுதியில் உள்ள கால்வாய்களை சீரமைக்க சுமார் ரூபாய் 61 கோடியே 38 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிகளும் இந்த தீவிர மக்கள் இயக்கத்தின் மூலமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இதன்மூலம், பல வருடங்களுக்குப் பிறகு காவேரி டெல்டா பகுதியான நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கடைமடைப் பகுதிகளில் கூட காவேரி நீர் இவ்வருடம் சென்றடைந்ததோடு மட்டுமல்லாமல், காவேரி டெல்டா மாவட்டங்களில் பாசன கால்வாய்கள் மூலம் நீர் பெறும் ஏரிகள் அனைத்தும் விரைந்து நிரம்பி வருகின்றன. இது மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் வரலாற்றுச் சாதனையாகும்.

அது மட்டுமல்லாமல், இத்தீவிர பிரச்சார இயக்கத்தின் மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மூலம் கிராமந்தோறும் சிறுபாசன ஏரிகள், குட்டைகள் மற்றும் ஊருணிகளின் கொள்ளளவினை அதிகரிக்கும் பணிகளும் ரூபாய் 1,250 கோடி மதிப்பீட்டில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரத்திலுள்ள 210 நீர்நிலைகளில், மாநகராட்சி நிதி மற்றும் தனியார் நிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதியின் மூலமாக 53 நீர் நிலைகளில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 114 நீர்நிலைகளில் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகளும் இந்த தீவிர இயக்கம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முழுவதும் இந்த இயக்கத்திற்கு, பொதுமக்கள் நல்ல வரவேற்பு அளித்துள்ளனர். இந்த இயக்கத்தில் தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள், அரசு சாரா நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் ஆகியோர் அதிக அளவில் பங்கு எடுத்துக்கொண்டு நீர்நிலைகளை தூர்வாரி வருகிறார்கள். எனவே, இந்தத் தீவிர இயக்கத்தின் மூலம் பருவமழை காலத்திற்கு முன்பே நீர்நிலைகள் மேம்படுத்தப்பட்டு, அதிக அளவு மழை நீர் சேமிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருகி வரும் மக்கள் தொகையை, அதற்கேற்ப பெருகும் நீரின் தேவையினையும் கருத்தில்கொண்டு, இனி நாம் ஒவ்வொருவரும் நீரின் சேமிப்பைப் பற்றி சிந்தித்து, அடுத்த தலைமுறைக்கு வளமான நீர் ஆதாரத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம்; இந்த இயக்கத்தின் நோக்கம்; மாண்புமிகு அம்மாவின் அரசின் முக்கிய நோக்கமாகும்.

சென்னை நகருக்கு தொடர்ந்து குடிநீர் வழங்குவதற்கென்று 1978ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால்

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் நிறுவப்பட்டது. சென்னை பெருநகர் பகுதியின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைக்கேற்ப பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று சேவைகளை இவ்வாரியம் சிறப்பாக செய்து வருகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய முயற்சியால் நடைமுறைப்படுத்தப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின்படி, கடந்த 2003ஆம் ஆண்டில் அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு முறைகள் ஏற்படுத்தப்பட்டன.

தற்போது மாண்புமிகு அம்மாவின் அரசின் ஆணைக்கிணங்க, இந்தத் திட்டத்தை சென்னைக் குடிநீர் வாரியமும், பெருநகர சென்னை மாநகராட்சியும் இணைந்து மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் முறையாக பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதா என கட்டமைப்புகளை பரிசோதித்து, அவற்றிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்யவும், தேவைப்பட்டால் மேம்படுத்தவும் அல்லது விரிவாக்கம் செய்யவும், நுகர்வோர்களுக்கு ஆலோசனை வழங்கிவருகிறது. இதனால், தற்பொழுது பெய்த மழைக்கு பிறகு, சென்னை மாநகரில் நிலத்தடி நீர் மட்டம் 2 அடி முதல் 5 அடிவரை உயர்ந்துள்ளது.

இரண்டு பருவமழைகளும் பொய்த்தாலும், சென்னை நகர மக்களுக்கு குடிநீரை தடையின்றி வழங்க, கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தினை மேற்கொள்ள மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 2004ஆம் ஆண்டு நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட நிலையத்தை அமைப்பதற்கான திட்டத்தினை அறிவித்தார்கள். அதன்படி, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் மீஞ்சூரில் அமைக்கப்பட்டது.

இரண்டாவது நிலையமாக, நெம்மேலியில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்கப்பட்டது.

கடல்நீரை குடிநீராக்கும் இந்த இரண்டு நிலையங்கள் சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. பருவமழை தேவையான அளவு பொழியாதபொழுது சென்னை மாநகரின், குடிநீர் தேவையை சமாளிக்க, இவ்விரு கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் உதவிகரமாக இருந்து வருகிறது.

தற்போது, நெம்மேலியில் இயங்கி வரும் நிலையத்திற்கு அருகாமையில், மற்றொரு கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, ரூபாய் ஆயிரத்து 259 கோடியே 38 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிகளுக்கு 27.06.2019 அன்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அருளாசியோடு, என்னால் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தின் குடிநீர் ஆதாரத்திற்கு ஓர் நிரந்தர தீர்வாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பேரூர் என்ற இடத்தில் ரூபாய் 6 ஆயிரத்து 78 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் இந்தத் திட்டம் தொடங்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பருவ மழை காலங்களில் பெறப்படும் மழை நீர் கடலில் கலந்து வீணாவதை தவிர்க்கும் பொருட்டும், மழை நீரை சேமித்து சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டும் கண்ணன்கோட்டை – தேர்வாய்கண்டிகை என்ற

இடத்தில் வருடத்திற்கு 1,000 மில்லியன் கன அடி கொள்ளளவு நீரை சேமிக்கும் வகையில் நீர்தேக்கத்தை அமைக்கும் பணி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

கழிவுநீர் மறுசுழற்சி மூலமாக தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு சுமார் 36 மில்லியன் லிட்டர் நீர் வழங்கும் முறை 1993ஆம் ஆண்டே மாண்புமிகு அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டு, தற்பொழுது தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளது.

இதன் தொடர் நடவடிக்கையாக, வடசென்னை பகுதியிலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்களுக்கு மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்க, கொடுங்கையூரில் ரூபாய் 348 கோடி மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் இன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, கோயம்பேடு பகுதியில் மேலும் ஒரு 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இது விரைவில் முடியும் தருவாயில் உள்ளது.

இதன் மூலம் வடசென்னை மற்றும் ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள தொழிற்சாலை தேவைகளுக்கு தினசரி 40 மில்லியன் லிட்டர் நன்னீருக்குப் பதிலாக கழிவுநீரை சுத்திகரித்து வழங்கப்பட உள்ளது. இவ்விரு நிலையங்கள் பயன்பாட்டிற்கு வரும்பொழுது, சென்னை மாநகரில் மொத்தமாக உருவாகும் கழிவுநீரில் 20 சதவீதம் அளவிற்கு மறு சுழற்சி செய்யப்படும். இதன்மூலம், நாட்டிலேயே அதிகபட்சமாக கழிவுநீரை மறு சுழற்சி செய்து பயன்படுத்தும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழும் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

நான் சமீபத்தில் அரசு முறைப் பயணமாக அமெரிக்க நாட்டிற்குச் சென்றபொழுது, அங்கே கழிவுநீரை மறுசுழற்சி செய்து கழிப்பறை, தோட்டங்கள், மரங்களுக்கு நீர் பாசனம் செய்யவும், ஏரிகளில் தேக்கி நிலத்தடி நீரை செறிவூட்டி, அந்த நிலத்தடி நீரை குடிநீருக்கும் பயன்படுத்துவதையும் பார்த்தேன். இதுபோன்று, கழிவுநீரை சுத்திகரித்து மறுசுழற்சி செய்தால், சென்னை மற்றும் இதர மாநகராட்சிகளில் நன்னீர் தேவை குறைவதுடன், சுற்றுச்சூழல் மாசுபடுவது தவிர்க்கப்படும்.

இதே தொழில்நுட்பத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு நெசப்பாக்கம் மற்றும் பெருங்குடியில் நாளொன்றுக்கு தலா 10 மில்லியன் லிட்டர் இரண்டாம் நிலை கழிவுநீரை சுத்திகரித்து நன்னீராக்கும் நிலையங்கள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், பெரிய நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி செய்வதற்கு, மாண்புமிகு அம்மாவின் அரசு இப்பொழுது நடவடிக்கை எடுத்து வருகிறது. இனி புதியதொழிற்சாலைகள் அல்லது அடுக்குமாடி கட்டடங்கள் கட்டுகின்றபோது நீரை மறுசுழற்சி மூலமாக மீண்டும் பயன்படுத்துவதற்கு சுத்திகரிப்பு நிலையத்தினை உருவாக்கினால்தான் அனுமதியே வழங்கப்படும் என்ற ஒரு விதி விரைவில் உருவாக்கப்பட உள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நன்னீரைப் பாதுகாக்கும் பொருட்டு, கழிவுநீரை சுத்திகரித்துப் பயன்படுத்துவதற்கான இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து ஊக்கமளிக்கும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் எனது சீரிய முயற்சியால் சென்னை நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, கண்டலேறு அணை **25.09.2019** அன்று திறக்கப்பட்டது.

தற்போது இந்த நீர், பூண்டி நீர் தேக்கத்தை வந்தடைந்துள்ளது. எனவே, சென்னை நகர மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு அதிகரிக்கப்படும் என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்னை நகரின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். சென்னை மக்களின் தாகம் தீர்க்க, வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மழைநீர் சேகரிப்பு என்ற உன்னதமான திட்டத்தைத் தந்து, அதை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியதும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான்.

தற்போது குடிமராமத்து திட்டம், நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம், பேரூர் மற்றும் நெம்மேலியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகள், கண்ணன்கோட்டை– தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கம், கொடுங்கையூர் மற்றும் கோயம்பேட்டில் கழிவு நீரை சுத்திகரித்து நன்னீராக்கும் திட்டம் ஆகிய முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி வருவதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தான் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநகரின் மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்குவதற்காக தொலைநோக்கு பார்வையுடன் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைத் தீட்டியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். இயற்கை பொய்த்தாலும், சென்னை நகர மக்களுக்கு உரிய குடிநீரை தங்கு தடையின்றி இன்றும் வழங்கி வரும் அரசும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை இங்கே ஆணித்தரமாக எடுத்துரைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கிருஷ்ணா நதியிலிருந்து வருகின்ற நீர் பல இடங்களில் வீணாகிறது. ஆகவே, கண்டலேறுவிலிருந்து திறக்கப்படுகின்ற நீர் முழுமையாக பூண்டி ஏரிக்கு வருவதற்கு அரசே இன்றைக்கு ஒரு புதிய திட்டத்தைத் தொடங்க இருக்கின்றது. கண்டலேறுவிலிருந்து குழாய் மூலமாக பூண்டிக்கு தண்ணீரைக் கொண்டு வருகின்றபொழுது, கண்டலேறு ஏரியிலிருந்து திறக்கப்படுகின்ற நீர் எவ்வித சேதாரமும் இல்லாமல் முழுமையாக பூண்டி ஏரிக்கு வந்தடையும். அவ்வாறு வந்தடைகின்றபொழுது நமக்கு முழுமையாக நீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கான திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். தமிழ்நாட்டை நீர்வளமிக்க மாநிலமாக மாற்றிக்கொண்டு இருப்பதும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் என்பதை உறுதிபட கூற விரும்புகிறேன்.

இந்த நிகழ்ச்சியினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.10.2019 அன்று சென்னை, கொடுங்கையூரில் ரூபாய் 348 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறப்பு விழாவில் ஆற்றிய உரை.*

கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்!

இதயதெய்வம் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களையும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தையும் வணங்கி, எளிய குடும்பத்தில் பிறந்து, தனது கடின உழைப்பு மற்றும் அயராத முயற்சியின் மூலம் பல கல்வி நிலையங்களை நிறுவி, ஒரு சிறந்த கல்வியாளராக திகழ்ந்து வரும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்களால் நிறுவப்பட்ட டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் நிகர் நிலைப் பல்கலைக்கழகத்தின் 28ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழா சீரும், சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு தலைமை தாங்கிக்கொண்டிருக்கின்ற டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவனர் – வேந்தர் மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்களே!

டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவனர் – தலைவர் மரியாதைக்குரிய திரு.ஏ.சி.எஸ்.அருண்குமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே,

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்களே!

மாண்புமிகு தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன் அவர்களே!

மற்றும் நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மக்களவை முன்னாள் சபாநாயகர் திரு.மு.தம்பிதுரை அவர்களே!

அரசு கொறடா மதிப்பிற்குரிய திரு.ராஜேந்திரன் அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

கௌரவ முனைவர் பட்டம் பெற்றுள்ள DRDOவின் செயலர் டாக்டர் ஜி.சதீஷ் ரெட்டி அவர்களே!

கங்கா மருத்துவமனையின் தலைவர் மற்றும் இயக்குநர் டாக்டர் எஸ். ராஜா சபாபதி அவர்களே!

இசையமைப்பாளர் மரியாதைக்குரிய திரு.ஹாரீஸ் ஜெயராஜ் அவர்களே!

பரதநாட்டிய கலைஞர் மரியாதைக்குரிய செல்வி. ஷோபனா சந்திரகுமார் அவர்களே!

பல்கலைக்கழக பேராசிரியர் மற்றும் ஆசிரிய பெருமக்களே!

இன்று பட்டம் பெற்றுள்ள நாளைய சாதனையாளர்களே! மாணவ, மாணவிகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

பெற்றோர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரி படிப்பு முடிந்தவுடன், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் உள்ள ஈடுபாட்டால் அவருடன் தன்னை இணைத்துக் கொண்டு அரசியல் பொது வாழ்வை திரு ஏ.சி.எஸ். தொடங்கினார்.

டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அன்பை பெற்ற மரியாதைக்குரிய திரு.ஏ.சி.எஸ். அவர்கள், 1980ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவும், 1984ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சமுதாய வளர்ச்சிக்காகவும், தொகுதி மக்கள் மேம்பாட்டிற்காகவும் பல திட்டங்களை செயல்படுத்தியவர்.

நாட்டின் வளர்ச்சிக்கும், வருங்கால சமுதாய மேம்பாட்டிற்கும் கல்வியே அடிப்படை என உணர்ந்த திரு.ஏ.சி.எஸ் அவர்கள், 1983ஆம் ஆண்டு முதன் முதலாக சென்னையில் பாலிடெக்னிக்

கல்லூரி ஒன்றைத் தொடங்கினார். இதனைத் தொடர்ந்து, சென்னை, ஆரணி மற்றும் பெங்களூர் ஆகிய நகரங்களில் பல கல்வி நிறுவனங்களை உருவாக்கினார். இக்கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து, தான் உருவாக்கிய இந்த நிகர்நிலை பல்கலைக்கழகத்திற்கு, தன்னை வளர்த்து ஆளாக்கிய பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில், டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் என்ற பெயரை சூட்டி பெருமை சேர்த்தார்.

இங்கு பயிலும் மாணவர்கள் வேலை தேடுபவர்களாக இல்லாமல் பலருக்கு வேலை அளிப்பவர்களாக உருவாக வேண்டும் என்ற இந்த நிறுவனத்தின் நோக்கம் பாராட்டிற்குரியது.

மன உறுதி, சிறப்பான கல்வியாற்றல் மற்றும் பிறருக்கு தொண்டு செய்யும் மனப்பான்மை ஆகிய உயர்ந்த எண்ணங்களுடன் நீங்கள் உங்கள் கல்லூரி வாழ்வினை துவக்கினீர்கள். கல்லூரியில் படிக்கும் காலங்களில் அந்த எண்ணங்கள் பூரணத்துவம் அடைந்து, அவற்றை நிறைவேற்ற, இன்று பட்டம் பெற்று, கல்லூரியிலிருந்து பொறுப்புள்ள இளைஞர்களாக வெளிவரும் உங்களுக்கு எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று என்னுடன் கௌரவ முனைவர் பட்டம் பெற்றுள்ள அனைவருக்கும் எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் இந்நிகழ்ச்சியின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டமளிப்பு விழா என்ற இந்த அருமையான நிகழ்வில் பங்கேற்பது தனிச்சிறப்பாகும். உங்களுக்காகக் காத்திருக்கும் பெருமை வாய்ந்த பொறுப்புக்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளும் தருணம் இதுவாகும். மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான உங்களது பொறுப்புக்களை நிறைவேற்ற உறுதி எடுத்துக்கொள்ளும் தருணமும் இதுதான். நானும் இன்று கௌரவ முனைவர் பட்டம் பெற்றதின் மூலம், எனது பொறுப்புகளும் அதிகரித்துள்ளன.

போற்ற வேண்டியவை ‘‘உண்மை, உழைப்பு, உயர்வு;’’ பின்பற்ற வேண்டியவை ‘‘கனிவு, பணிவு, துணிவு’’; பேண வேண்டியவை ‘‘கடமை, கண்ணியம், கட்டுப்பாடு’’ என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த அறிவுரையை சமூகப் பணி ஆற்றச் செல்லும் நீங்கள் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

‘‘கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை’’.

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியாகும். மற்ற செல்வங்கள் எல்லாம் அத்தனை சிறந்தவை அல்ல என்றார் தெய்வப் புலவர் வள்ளுவர் பெருந்தகை.

‘‘தரமான கல்வி நிறுவனங்கள் மூலம் மனிதவள மேம்பாட்டை ஊக்குவித்து, உயர்தரம் வாய்ந்த கல்வியாளர்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்குவதும், பல்கலைக்கழகக் கல்வியில் தமிழ்நாட்டை ஒரு பன்னாட்டு மையாக உருவாக்குவதுமே எனது அரசின் இலட்சியம்’’, என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, 12ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் பள்ளிக்கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் 28 ஆயிரத்து 957 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

‘‘கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி பயில வகை செய்தல் எனது நோக்கமாகும்’’ என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை துவக்கினார். மாண்புமிகு

அம்மாவின் வழியில் வந்த எங்கள் அரசும், 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கியுள்ளதுடன், 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் துவக்கியுள்ளது. சமீபத்தில் இராமேஸ்வரத்தில் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் மரியாதைக்குரிய திரு.அப்துல் கலாம் அவர்களின் பெயரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாண்புமிகு அம்மாவின் அரசால் துவக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய 6 மாவட்டங்களில் 6 சட்டக்கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன என்பதை நான் இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் உயர்கல்வித் துறைக்காக 4 ஆயிரத்து 584 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போதைய காலகட்டத்தில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் நமது மாணவர்கள் பின்தங்கி விடக்கூடாது என்பதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் மனதில் உதித்த திட்டம்தான் “விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்”.

இந்தத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் 2011–2012ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 6,813 கோடி ரூபாய் செலவில் 48 இலட்சத்து 17 ஆயிரத்து 195 மடிக்கணினிகள் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- கல்விக்கென தனியாக கல்வித் தொலைக்காட்சி ஒன்றினை தமிழ்நாடு அரசு துவக்கி, அதனை வெற்றிகரமாக நடத்தி வருகிறது.
- அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 100 மாணாக்கர்களுக்கு 15 நாட்கள் அயல்நாட்டில் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கும் திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- 1,350 கூடுதல் மருத்துவ பட்டப்படிப்பு இடங்கள் தமிழகத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளன.
- 1,213 மருத்துவ பட்ட மேற்படிப்பு இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மேலும், 6 மாவட்ட தலைநகரங்களில் புதிய மருத்துவக் கல்லூரி திறக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளோம். மத்திய அரசு அந்தக் கோரிக்கையினை தற்போது பரிசீலித்து வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன். ஏழை, எளிய மாணவர்கள் உயர் கல்வி படிக்கும் வகையில் கலை அறிவியல் கல்லூரிகள் மட்டுமல்லாது, சட்டக்கல்லூரிகளையும், தொழிற் கல்வி கற்பிக்கும் பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரிகளையும் அதிக அளவில் திறந்து, எண்ணற்ற சாதனைகளை கல்வித் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்தி வருகிறது. இதன் காரணமாகத்தான், உயர் கல்வியில் சேரும் மாணவர்கள் சதவீதம் 49 என உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்கள் அறிவுலகின் கோயில்கள். பொருளாதாரத் தேவைகளை எதிர்கொள்ளக்கூடிய ஆராய்ச்சி மற்றும் திறன் வாய்ந்த தொழிலாளர்களை, பணியாளர்களை, இளம் விஞ்ஞானிகளை உருவாக்குவதால்தான், சமூக மாற்றம் மற்றும் வளர்ச்சிக்கான முக்கியமான அமைப்புகளாக பல்கலைக்கழகங்கள் கருதப்படுகின்றது. தற்போது தமிழ்நாடு அரசு, திறன் மேம்பாடு பயிற்சித் திட்டங்களின் மூலம் முக்கிய மனிதவளத் தேவையைப் பூர்த்தி செய்து வருவதால், நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உருவாகியுள்ளது.

‘‘கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்கக் கூடியதாக இருத்தல் கூடாது. அது மனிதனைச் சிந்திக்க வைக்கக் கூடியதாகவும், புரிந்துகொள்ள வைப்பதாகவும், பொறுமையை வளர்ப்பதாகவும் இருத்தல் வேண்டும்’’ என்றார் முன்னாள் குடியரசுத் தலைவர் மரியாதைக்குரிய டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி, பொருளாதார பரிணாம வளர்ச்சியுடன் மட்டும் நின்று விடுவதில்லை. உணவு, கல்வி, மருத்துவம், குடியிருப்பு, உடை ஆகியவற்றுக்கு வகைசெய்யும் பொருள் வசதி மிக முக்கியமானதுதான். அதே நேரம், வாழ்க்கையை கற்க, மனிதனின் அகம் மேன்மையடைய, இலக்கியம், சிந்தனைகள், நீதிக் கதைகள் ஆகியவை வழியே கிடைக்கும் விவேகம் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்வதும் மிகவும் முக்கியமானது. இது இரண்டையும் ஒருங்கே கற்பவனே ஒரு முழு மனிதன் ஆவான்.

இங்கே கதை ஒன்றினை குறிப்பிட விரும்புகிறேன். ஊசி ஒன்று தன் ஒரு முனை கூர்மையாக இருப்பதில் பெருமையடைந்தது. ஆனால் தன் மறு முனையில் துவாரம் இருப்பதை அவமானமாக நினைத்தது. ஒரு நாள் அதன் காதுமுனை உடைந்து போனது. காதறுந்த நிலையில் அந்த ஊசியை பயன்படுத்தியவர், அந்த ஊசியை தூக்கி எறிந்தார். அப்போதுதான் அந்த ஊசிக்கு தான் அவமானமாக நினைத்த மறுமுனையின் முக்கியத்துவம் புரிந்தது.

மாணாக்கர்கள் ஆகிய நீங்கள் கற்ற கல்வி, ஊசியின் கூர்மையை போன்றது. வெளி உலகில் நல்ல குடிமகனாக விளங்குவதற்கு பொது அறிவு, வாழ்க்கை கல்வி, ஞானம் அளிக்கக்கூடிய புத்தகங்களை படிப்பது ஆகியவை ஊசியின் காது போன்றது. தன்னுள் நூலை நுழைத்துக்கொள்ள காது இருப்பதால்தான் கூர்மையான ஊசி பயன்படுகின்றது. அதேபோன்று, மாணாக்கர்களாகிய நீங்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும், உங்கள் கல்வி முழுமை பெற, நீங்கள் ஏட்டுக் கல்வியுடன், வாழ்க்கை கல்வியையும் சேர்ந்து கற்க வேண்டியது அவசியமாகும். பெற்றோர்களும் வாழ்க்கை கல்வி பெறுவதன் அவசியத்தை தங்கள் குழந்தைகளுக்கு எடுத்துரைக்க வேண்டுமென இத்தருணத்தில் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

“பத்து திங்கள் சுமந்தாளே
அவள் பெருமைப் படவேண்டும்
உன்னை பெற்றதனால் அவள்
மற்றவரால் போற்றப்பட வேண்டும்
கற்றவர் சபையில் உனக்காக
தனி இடமும் தரவேண்டும்”

என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளின்படி நீங்கள் ஒவ்வொருவரும் நம் நாடு போற்றும் மனிதர்களாக திகழவேண்டும் என்று உங்களை அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்கள் பேசுகின்றபொழுது, இந்தக் கல்லூரியினுடைய சிறப்பை எடுத்துச் சொன்னார். அவர் பெங்களூரில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே 1 இலட்சம் நபர்களுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை செய்த காரணத்தினாலே 1 இலட்சம் நபர்களை பிழைக்கவைத்த பெருமை மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்களைச்சாரும். பணம் இருந்தால் போதாது, மனம்

இருக்க வேண்டும். அந்த மனமும், ஈகையும் கொண்டவர் மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்கள், இந்த நேரத்தில் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, அவர் அண்மையிலே வேலூார் நாடாளுமன்றத் தொகுதியிலே போட்டியிடுகின்றபோது, நான் அவரோடு தேர்தல் பிரச்சாரத்திலே ஈடுபட்டிருந்தேன். அப்போது தேர்தல் பிரச்சாரத்திலே குறிப்பிட்டார், இந்த வேலூார் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளிலும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 100 நபர்களுக்கு என்னுடைய கல்லூரியிலே இலவசமாக படிக்க வைப்பேன், அனைத்து செலவுகளையும் நானே ஏற்றுக்கொள்வேன் என்று சொன்னார். 6 சட்டமன்றத் தொகுதிகள் என்கின்றபொழுது 600 நபர்களை இலவசமாக படிக்க வைப்பேன் என்று சொன்னால், எந்த அளவுக்கு பெருமைக்குரியது என்பதை நாம் பார்க்க வேண்டும். அதற்காக அவரை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வேலூார் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்டவர்கள் யாரேனும் நோய்வாய்ப்பட்டால் பெங்களூரிலுள்ள மருத்துவமனையில் நான் இலவசமாக அந்த சிகிச்சைக்குரிய முழு செலவையும் அளிப்பேன் என்ற உறுதியையும் கொடுத்தார். ஆகவே, ஒருவர் அரசியலிலே இருப்பது பெரிதல்ல, இருக்கின்ற காலத்திலே என்ன உதவி செய்தார் என்பது தான் பெரிது. அப்படி உதவி செய்கின்ற மனம் மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்களுக்கு இருக்கின்றது, அவர் பாராட்டுக்குரியவர்.

ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்து இந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறார் என்று சொன்னால், அவரது உழைப்பு எந்த அளவிற்கு இருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். “முயற்சி திருவினையாக்கும்” என்று சொல்வார்கள். முயற்சி செய்தால் எதையும் சாதிக்க முடியும். இதற்கு உதாரணமாக இருப்பவர் மரியாதைக்குரிய திரு.ஏ.சி.சண்முகம் அவர்கள். அவர் முயற்சி செய்த காரணத்தினாலே இன்றைக்கு 35,000 மாணவர்கள்

கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார். ஏறத்தாழ 7,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார். முயற்சி, உழைப்பு ஆகிய இரண்டும் இருந்தால், அவரைப் போல் நீங்களும் வளரலாம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவர்கள் இராணுவத்திற்கு உதவியாக பல்வேறு சாதனங்களை தயாரித்து கொடுத்து, இராணுவத்தில் பயன்படுத்துகின்ற நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை எண்ணி இந்த பல்கலைக்கழகத்தை பாராட்டுகிறேன். உங்கள் ஆராய்ச்சி தொடர வேண்டும், இந்த நாட்டிற்கு உங்களது பங்களிப்பு இருக்க வேண்டும், மென்மேலும் வெற்றியை குவிக்க வேண்டும். இந்த நாடு வளர, உங்களுடைய இல்லம் சிறக்க வாழ்த்தி, பட்டம் பெற்ற அனைவரையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
நிகர் நிலை பல்கலைக்கழகத்தின் 28ஆவது பட்டமளிப்பு விழாவில்
ஆற்றிய விழாப் பேருரை – 20.10.2019.

குற்றப் புலனாய்வுப் பணிகளில் ஈடுபடும்போது, சரியான முறையில் திட்டமிட்டு, காலம், நேரம், இடம் கணித்து திறம்பட செயலாற்ற வேண்டும்!

தமிழ்நாடு அமைதிப் பூஞ்சோலையாக திகழ்வதற்கு, சட்டம்–ஒழுங்கை நன்கு பராமரித்து வரும் காவல்துறையில் எண்ணற்ற நலத் திட்டங்களை செயல்படுத்தி, அத்துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய தமிழ்நாட்டின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இவ்விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று மேடையிலே வீற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மரியாதைக்குரிய நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!

மரியாதைக்குரிய உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே!

மரியாதைக்குரிய காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே!

மேடையில் வீற்றிருக்கும் காவல்துறை இயக்குநர்களே!

சென்னை மாநகர காவல் ஆணையாளர் அவர்களே!

காவல்துறை அதிகாரிகளே, காவலர்களே அவர்தம் குடும்பத்தினரே!

வருகை தந்திருக்கின்ற மாணவச் செல்வங்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

இவ்விழாவில் பங்கேற்றுள்ள பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களைக் காக்கும் மகத்தான பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள காவல்துறையில், காவல்துறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் மற்றும் குடிமை பாதுகாப்புப் படை மற்றும் தடய அறிவியல் துறை ஆகிய துறைகளில்

தகைசால் பணி, மெச்சத்தக்க பணி, பொது சேவையில் சீர்மிகு பணி, சிறந்த நற்பணி, சீர்மிகு புலனாய்வு, விரல் ரேகை அறிவியல் சீர்மிகு பணி, தடய அறிவியல் சீர்மிகு பணி ஆகியவற்றிற்கான மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் மற்றும் அருள்மிகு அத்திவரதர் சிறப்புப் பணி பதக்கங்களை **604** நபர்களுக்கு இச்சிறப்புமிகு விழாவில் வழங்கியதில் நான் பெரும் மகிழ்ச்சியடைவதோடு, பதக்கங்கள் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

“நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்கும்போதெல்லாம், காவலர்களுக்கு முழு சுதந்திரம் அளிப்பதுடன், அவர்கள் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் மட்டும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறேன். காவல்துறை பணிகளில் குறுக்கீடு செய்ய யாருக்குமே அதிகாரமில்லை என்பதுதான் எனது திடமான கருத்து ஆகும். காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கின்ற முதலமைச்சர் கூட அதன் செயல்பாடுகளில் தலையிட முடியாது” என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காவல்துறையினரைப் பற்றிக் குறிப்பிடுகையில், “நான் எங்கே வைத்து காவல்துறையினரைப் பற்றி பேசுகிறேன் என்பதை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு தாய்த்தன்மைக்கு ஈடாக, என்னைப் பெற்றெடுத்த தாய்க்கு ஈடாக வைத்து எண்ணுகிறேன்” என்று காவல்துறையைப் பற்றி மிகவும் உயர்வாகக் கூறியுள்ளார்.

காவல்துறையின் செயல் திறம் சிறக்க, பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளையும், காவலர்களின் நலன் காக்க பல்வேறு நலத்திட்டங்களையும் நமது இருபெரும்தலைவர்களும் செயல்படுத்தியுள்ளனர். இவர்களின் நல்லாசியுடன் செயலாற்றும் மாண்புமிகு அம்மாவின் அரசும் இந்தப் பணிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு காவல்துறையினர், தங்களது சிறப்பான செயல்பாடுகளினால், வரவுள்ள பிரச்சினைகளை முன்கூட்டியே கண்டறிந்து, தேவையான தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, பொதுமக்கள் பாதிக்கப்படாதவாறு மாநிலத்தில் சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி, பொது அமைதியை பேணிக் காத்து வருகின்றனர். மேலும், மாநிலம் முழுவதும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தி, குற்ற நிகழ்வுகளைத் தடுத்து வருவதுடன், குற்ற வழக்குகளில் எதிரிகளைக் கைது செய்து தண்டனை பெற்றுத் தந்தும் வருகின்றனர். இதனால் தமிழ்நாட்டில் பெரும்பாலான குற்ற நிகழ்வுகள் கணிசமாகக் குறைந்துள்ளன.

"அமைதி, வளம், வளர்ச்சி" என்ற கோட்பாட்டின்படி மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது. ஒரு மாநிலம் வளர்ச்சிப் பெற வேண்டுமானால், அந்த மாநிலத்தின் மக்கள் வளம் பெற வேண்டும். மக்கள் வளம் பெற வேண்டுமெனில் அந்த மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சி அடைய வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கென இதுபோன்ற பல்வேறு காரணிகள் இருந்தாலும், இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது பொது அமைதி, பாதுகாப்பு ஆகியவைதான். பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துக் காரணிகளும் இருந்தாலும், அமைதியான சூழ்நிலை நிலவவில்லை என்றால் அங்கே எந்தவிதமான வளர்ச்சியும் ஏற்படாது. எனவேதான் பொது அமைதிக்கும், பாதுகாப்பிற்கும், சட்ட ஒழுங்கிற்கும் மிகுந்த முக்கியத்துவத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்து வருகிறது. இதன் பயனாக தமிழ்நாட்டை நாடி பல்வேறு தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் வந்த வண்ணம் உள்ளன. இவ்வாண்டு தொடக்கத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் சந்திப்பும் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது என்பதை பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல்துறை நாட்டிலேயே சிறந்த படை என்ற பெயர் பெற்று விளங்குகிறது. இதற்கு சான்றாக, இந்தியா டுடே

பத்திரிகை, சட்ட ஒழுங்கில் சிறப்பாக செயல்படும் மாநிலம் தமிழ்நாடு என்பதற்காகவும், ஒட்டுமொத்த செயல் திறன் மற்றும் சுற்றுலாத் துறைக்கும், தமிழ்நாட்டிற்கு விருதுகள் வழங்கியுள்ளது. இது காவல்துறையினரான உங்களின் அயராத உழைப்பினால் மட்டுமே சாத்தியமாயிற்று.

மாமல்லபுரத்தில் இம்மாதம் 11 மற்றும் 12 தேதிகளில், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்களுக்கும், சீன அதிபர் ஷி ஜின்பிங் அவர்களும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இரு பெரும் உலகத் தலைவர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வுக்கு சிறப்பான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்த நமது காவல்துறையினரை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், சீன நாட்டு அதிகாரிகளும் வெகுவாகப் பாராட்டினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை வந்த சீன அதிபர் இரு நாட்களும் சென்னையிலிருந்து மாமல்லபுரம் சென்று திரும்பினார். ஒரு மிகப் பெரிய தலைவர் இவ்வளவு நீண்ட தூரம் சாலை வழியாகச் செல்வதற்கு பாதுகாப்பு வழங்குவது ஒரு சவாலான விஷயமாகும். அதை நமது காவல்துறை தங்களுக்கே இயல்பாக உள்ள அனுபவத்தாலும், செயல்திறனாலும் சிறப்பாகச் செய்து வெற்றி கண்டுள்ளனர்.

நமது காவல்துறையினர் வகுத்து வைத்திருந்த பாதுகாப்பு வியூகங்களையும், திறமைகளையும் கண்டு சீன அதிகாரிகள் வியந்து போனார்கள். “நாங்கள் எதிர்பார்த்ததைவிட சிறப்பாக செய்துள்ளீர்கள்” என்று அவர்கள் நமது காவல்துறையினரைப் பாராட்டினார்கள். இது காவல்துறையின் சிறப்பான பணிக்குக் கிடைத்த ஒரு மிகப் பெரிய பாராட்டுச் சான்றிதழாகும்.

பொது இடங்களில் குற்றங்கள் நடப்பதைத் தடுப்பதற்கும், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும்போது அவர்களின்

நடவடிக்கைகளை அறிந்து கைது செய்வதற்கு ஏதுவாகவும், காவல் நிலையங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், காவல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் இணையதள முறைமை கேமராவுடன் கூடிய உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகரத்தில் மட்டும் 1 இலட்சத்து 31 ஆயிரத்து 789 உள்சுற்று கண்காணிப்பு கேமராக்களும் மற்றும் தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களில் 1 இலட்சத்து 79 ஆயிரத்து 949 உள்சுற்று கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் குற்றங்கள் நடைபெறுவது பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பது அதிகரித்துள்ளது. இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி, தமிழ்நாட்டில் காவல் கண்காணிப்பை மேலும் மேம்படுத்த வேண்டும் என்று நான் காவல்துறை உயர் அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல்துறையினர் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளினால், தீவிரவாத இயக்கங்கள் மற்றும் இடதுசாரி தீவிரவாத அமைப்புகளின் சட்டவிரோதச் செயல்கள் பெருமளவு தடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் 2017ஆம் ஆண்டிற்கான காவல்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ள புள்ளி விவரங்களை பத்திரிகை வாயிலாக சுட்டிக்காட்டியுள்ளார். அதில் தவறு உள்ளதாக தெரிவித்துள்ளது முற்றிலும் தவறு. ஏற்கெனவே கொள்கை விளக்கக் குறிப்பில் தரப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்தில், பெருகிவரும் பொருளாதாரவளர்ச்சி காரணமாக, அதிகரித்து வரும் வாகனங்களால் சாலைகளில்

ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சாலை விபத்துக்களைத் தடுக்கவும், போக்குவரத்து சம்மந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளையும் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்து, தக்க தடுப்பு நடவடிக்கைகள், தமிழ்நாடு காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம், தமிழ்நாட்டில் சாலை விபத்துக்களில் உயிரிழக்கும் நபர்களின் எண்ணிக்கை 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 36.40 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவல்துறையின் இச்செயல்பாடுகளை, இந்திய மாநிலங்களவையில், மாண்புமிகு மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்.

அண்மையில் காஞ்சிபுரத்தில் 40 ஆண்டுகளுக்குப் பின்னர் பக்தர்களுக்குக் காட்சியளித்த அருள்மிகு அத்திவரதர் வைபவத்தின் போது, சுமார் ஒரு கோடி பக்தர்கள் காஞ்சி நகருக்கு வருகை புரிந்து அருள்மிகு அத்திவரதரை தரிசித்துச் சென்றனர். இவ்வைபவம் சிறப்பாக நடைபெற தொடர்ந்து 48 நாட்கள் இரவு–பகல், வெயில்–மழை என்று பாராமல், பக்தர்களை கனிவாகவும், பரிவோடும் அணுகி, பக்தர்கள் சிரமமின்றி அருள்மிகு அத்திவரதரை தரிசித்துச் செல்ல, காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து பணியாற்றிய காவல்துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் மற்றும் ஊர்க்காவல் படையினர்கள் அனைவரையும் நான் மனதார பாராட்டுகின்றேன். இப்பணிக்காக ஏற்கெனவே, 28,000 பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கியுள்ளேன். மேலும், அவர்களின் சிறந்த பணியைப் பாராட்டி அனைத்து சீருடைப் பணியாளர்களுக்கும் அருள்மிகு அத்திவரதர் பதக்கங்களை தற்போது வழங்கியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காவல்துறையைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு இவ்வரசு

அவர்களுக்குண்டான பதவி உயர்வுகளை குறித்த நேரத்தில் வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் காவல்துறை கண்காணிப்பாளர்கள் முதல் காவல்துறை இயக்குநர் வரை உள்ள பதவிகளுக்கு 218 உயர் அதிகாரிகளுக்கும், முதல் நிலை காவலர் முதல் காவல் ஆய்வாளர்கள் வரை உள்ள 5,979 காவல் ஆளிநர்களுக்கும், 305 அமைச்சுப் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு உரிய நேரத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாண்டிற்கான காவலர்களின் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு 5,530 காவலர்கள் தங்களது அடிப்படை பயிற்சி முடித்து காவல்துறையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேபோன்று, 227 தொழில்நுட்ப சார்பு ஆய்வாளர்களும், 179 விரல் ரேகை பிரிவு சார்பு ஆய்வாளர்களும் பயிற்சி முடித்து சம்பந்தப்பட்ட பிரிவுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், 8,427 இரண்டாம் நிலை காவலர்களின் காலிப் பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது, விரைவில் இப்பணிகள் முடிந்து, இக்காவலர்கள் பணியமர்த்தப்பட உள்ளனர். இதன்மூலம், காவல்துறையில் உள்ள காலிப் பணியிடங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு, காவல்துறையினர் மேலும் சிறப்பாகப் பணியாற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட காவல் நிறைவாழ்வு பயிற்சித் திட்டத்தின் கீழ், இது வரை 68,000 காவல் ஆளிநர்களும், அவர்களைச் சார்ந்த சுமார் 75,000 குடும்ப உறுப்பினர்களும் பயிற்சி பெற்றுள்ளனர் என்பது மிகுந்த மனமகிழ்ச்சி அளிக்கின்றது.

நான் சட்டமன்றத்தில் அறிவித்தபடி, காவல்துறையின் பணிகளை மேலும் சிறப்பாக்கும் வகையிலும், நமது காவல்துறை இந்திய அளவில் முதன்மை இடத்தைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காகவும், மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்த்திருத்த நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து, பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்கவும் “நான்காவது போலீஸ் கமிஷன்” அமைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல்துறையினருக்கான அனைத்து விதமான போட்டிகளில் தமிழ்நாடு காவல்துறையினர் திறமையாக செயல்பட்டு நாட்டிலேயே பிற மாநில காவல்துறையினருக்கு முன்னுதாரணமாக விளங்கி வருகின்றனர்.

- உத்திரபிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்ற காவல் திறனாய்வுப் போட்டிகளில், புலன் விசாரணையில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும், 13 பதக்கங்களும், 3 சுழற் கோப்பைகளும் வென்றுள்ளனர்.
- உடல் மற்றும் விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காகவும், பணித் திறனை வளர்த்துக் கொள்வதற்காகவும் உலக அளவில் சீன நாட்டில் நடைபெற்ற போட்டிகளில் 32 பதக்கங்களும் பெற்றுள்ளனர்.
- கேரளத்தில் நடைபெற்ற தென் மண்டல சுழல் துப்பாக்கிச் சுடும் போட்டிகளில் 4 பதக்கங்களையும் வென்று சாதனை படைத்துள்ளனர் என்பதை அறிவதில் உளமார மகிழ்ச்சி கொள்கிறேன், பாராட்டுகின்றேன் அவர்களை.

காவல்துறையினர், முக்கிய குற்றப் புலனாய்வுப் பணிகளில் ஈடுபடும்போது, சரியான முறையில் திட்டமிட்டு, காலம், நேரம், இடம் ஆகியவற்றை கணித்து, திறம்பட செயலாற்ற வேண்டும்.

ஒரு வேலையை நல்ல முறையில் செய்து முடித்தோம் என்ற பெருமை உணர்வு நமக்குள் இருந்து வரவேண்டும். வேலையின் தரமும், வேலையை செய்தவரின் தரமும் பிரிக்க முடியாதவை.

ஒருவிதப் பெருமை உணர்வுடன் ஒருவர் வேலை செய்யும் போதுதான் அந்த வேலை மிகச் சிறப்பாக இருக்கிறது. எந்தப் பணியையும் ஒவ்வொரு முறையும் சரியாகவே செய்யுங்கள். ‘நாளைய சமுதாயத்திற்கான சிறந்த காப்புறுதி; இன்று நீங்கள் செய்யும் சிறப்பான பணிதான்’. இங்கு எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

சிற்பக் கலைஞர் ஒருவர் பல நாட்களாக ஒரு சிலையை செதுக்கிக் கொண்டிருந்தார். சிறு சிறு விஷயங்களில் கூட கவனம் செலுத்தி திரும்பத் திரும்ப ஒவ்வொன்றையும் திருத்திக் கொண்டிருந்தார். சிலையின் முழு உருவத்தையும் மிகவும் நேர்த்தியாக, அழகு மிளிர வடித்துக் கொண்டிருந்தார். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அவரது செயல் தேவையற்ற வேலையாகத் தோன்றியது. அவரிடம், ஏன் இப்படி செய்கிறீர்கள் ? என்று கேட்டனர். அதற்கு அந்தச் சிற்பி, எந்த வேலையைச் செய்தாலும் மற்றவர்களுக்காக மட்டுமல்லாமல் நமக்கு முழு திருப்தி அளிக்கும் விதமாகத்தான் செய்ய வேண்டுமென்றார். அந்தச் சிலையின் நளினத்தையும், நேர்த்தியையும் கண்டு அதனைக் கோவிலில் நிறுவினார் அந்நாட்டு மன்னர். “சின்னஞ்சிறு விஷயங்களில் கூட கவனம் செலுத்தினால் தான் நம் பணி நிறைவாக, சிறப்பாக அமையும்” என்று கேலி பேசிய மக்கள் உணர்ந்தனர். இந்தக் கதையில் வரும் சிற்பக் கலைஞரைப் போல் நாம் எந்தப் பணியை மேற்கொண்டாலும் நமக்கு முழு திருப்தி அளிக்கும் விதமாகவும்,

நேர்த்தியாகவும் செயல்பட வேண்டுமென இத்தருணத்தில் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அப்படி நாம் செயல்பட்டால் நமது பணிக்கான அங்கீகாரமும், விருதுகளும் தானாக உங்களுக்கு வந்து சேரும்.

சீருடைப் பணியாளர்களின் தியாகத்தையும், கடமை உணர்வையும் பாராட்டி, கௌரவிக்கும் வகையில் இப்பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. இதுபோன்ற நிகழ்வுகள், பதக்கங்களைப் பெறுவோருக்கு மேலும் சிறப்பாக பணிபுரிய ஊக்கமளிப்பதுடன், பிற பணியாளர்களுக்கும் நற்பணியாற்ற வேண்டும் என்ற உத்வேகத்தையும் அளிக்கிறது. இந்த நிகழச்சியில் பதக்கங்கள் பெற்ற அனைவருக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் மீண்டும் ஒரு முறை எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு, இனிய தீபாவளி வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் இத்தருணத்தில் அனைவருக்கும் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
23.10.2019அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் மற்றும் அருள்மிகு அத்திவரதர் சிறப்புப் பணி பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய விழாப் பேருரை.

நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல், நகரங்களுக்கு இணையான கட்டமைப்புகளை கிராமங்களிலும் உருவாக்குதல் போன்ற எண்ணற்றப் பணிகளை செயல்படுத்தி வருகிறோம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் சார்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே நல்ல பல கருத்துக்களை வழங்கி அமர்ந்திருக்கிற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

முன்னிலை உரை ஆற்றி அமர்ந்திருக்கிற மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்களே!

வருகை தந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

மரியாதைக்குரிய வாரியத் தலைவர் அவர்களே,

கூட்டுறவுச் சங்க நிருவாகிகளே,

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கிற அரசு தலைமைச் செயலாளர் அவர்களே,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே,

நன்றியுரை ஆற்ற உள்ள நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களே,

அரசு அலுவலர்களே மற்றும் பணியாளர்களே!

சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பொறுப்பாளர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

“தமிழ்நாடு விரைவான வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வரும் மாநிலம்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும் தொடர்ந்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்திச் செல்கிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகள் உள்ளன. தேசிய அளவில் 31 சதவிகித மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 48.45 சதவிகிதம் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களைக்கொண்டு, நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

'கிராமங்களே நாட்டின் முதுகெலும்பு' என்றார் மகாத்மா காந்தியடிகள். தமிழ்நாட்டில் உள்ள 31 ஊரக மாவட்டங்களில் 79 ஆயிரத்து 394 குக்கிராமங்கள் உள்ளடக்கிய 12 ஆயிரத்து 524 ஊராட்சிகள் உள்ளன.

ஊரகப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்குவது, சமுதாயத்திற்கு தேவையான சேவைகளை அளிப்பது, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தனிநபர் குடும்பங்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவது, நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல், நகரங்களுக்கு இணையான கட்டமைப்புகளை கிராமங்களிலும் உருவாக்குதல் போன்ற எண்ணற்ற ஊரக வளர்ச்சித் திட்டங்களை தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தி வருகிறது.

"ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். கிராமப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு செயல்பாட்டையும் தாண்டி, தொழில் மேம்பாடு, நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் ஊரக சமுதாயத்தின் வளம் மற்றும் நிலைத்த உயர்வினை உருவாக்கி பெரும் மாற்றம் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உலக வங்கியின் நிதி உதவியுடன் "தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்" என்ற ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டம் 918 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டமானது, 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில், 3,994 ஊராட்சிகளில் இரண்டு கட்டங்களாக 6 வருடங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம், ஆதிதிராவிடர், பழங்குடியினர், இளைஞர்கள், பெண்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள், வேளாண்சார்ந்த மற்றும் வேளாண்சாரா துறைகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் இணைந்த குழு, கூட்டமைப்புகள் ஆகியோர் மிகுந்த பயன் அடைவார்கள். இத்திட்டத்திற்காக, இந்த ஆண்டு 172 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம், இத்திட்டத்தில் பணியாற்றுவதற்காக மாவட்ட செயல் அலுவலர்கள், இளம் வல்லுநர்கள், செயல் அலுவலர்கள், வட்டார அணித் தலைவர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் என 525 நபர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் 1930ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காலத்திலிருந்து, சரித்திரத்தில், ஒரே ஆண்டில் கிட்டத்தட்ட 17,600 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கி சரித்திரம் படைத்த அரசு அம்மாவின் அரசு. அதேபோல, இன்றைக்கு

பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பை இளைஞர்களுக்கு வழங்க வேண்டுமென்ற அடிப்படையிலே ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்ற அரசும் அம்மாவினுடைய அரசு என்பதை கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

"மரத்தில் படரும் கொடியே, உன்னை
வளர்த்தவரா இங்கு படரவிட்டார்!
மண்ணில் நடக்கும் நதியே, உன்னை
படைத்தவரா இந்த பாதை சொன்னார்!
உங்கள் வழியே, உங்கள் உலகு, இந்த
வழிதான் எந்தன் கனவு!"

என்ற புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பாடலுக்கு ஏற்ப, பெண்கள் யார் தயவும் இன்றி தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்காக, பெண்களின் நல்வாழ்வுக்காக மாண்புமிகு அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்ட திட்டம்தான் "மகளிர் சுயஉதவிக் குழுக்கள்" ஆகும். தமிழ்நாட்டில் பெரும் வெற்றியடைந்த திட்டங்களில் முக்கியமான திட்டம் மகளிர் சுய உதவி குழுத் திட்டமாகும்.

சுயஉதவிக் குழுக்களுக்கான வங்கிக்கடன் இணைப்புத் திட்டம் 1992ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தபட்டு வருகிறது. சுயஉதவிக் குழு – வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தின் மூலம் முறையான வங்கி மற்றும் நிதி சேவைகள் ஏழை மக்களை சென்றடைவதால், எண்ணற்ற குடும்பங்கள் வருமானம் ஈட்டக்கூடிய பல்வேறு தொழில்களை தொடங்கி நடத்திடவும், வீட்டின் வருமானத்தை உயர்த்தி, கடன் சுமையிலிருந்து மீளவும், குடும்ப சூழ்நிலையை நல்ல முறையில் அமைத்துக்கொள்ளவும் மற்றும் வறுமை சுழற்சியிலிருந்து விடுபடவும், பெண்கள் சொந்தக் காலில் நிற்பதற்கும் உதவிகரமாக உள்ளது.

புதியதாக சுமார் 1 இலட்சத்து 20 ஆயிரம் குழுக்கள் உருவாக்கப்பட்டது மட்டுமின்றி, இந்தத் திட்டத்தின் மூலம் கடந்த 2011ஆம் ஆண்டு முதல், இதுவரை 20 இலட்சத்து 64 ஆயிரத்து 678 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுமார் 57 ஆயிரத்து 876 கோடியே 71 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டு பல்வேறு தொழில்கள் இன்றைக்கு மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது இலக்காக குறிக்கப்பட்ட 50 ஆயிரம் கோடி ரூபாயை விட கூடுதலாகும். குறிப்பாக 2018–2019ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 95 ஆயிரத்து 612 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, 11 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக்கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மிகுதியாக 11,449 கோடி ரூபாய் வழங்கி மாண்புமிகு அம்மாவின் அரசு சாதனை படைத்துள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019–2020 நிதியாண்டில் 12,500 கோடி ரூபாய் வங்கிக்கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 5 ஆயிரத்து 247 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் இந்த இனிய விழாவில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 150 கோடி ரூபாய் அளவில் கடன் வழங்கப்படவுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், 110 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட சோழிங்கநல்லூர் – காரப்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்டம், 95 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட வேலூர் மாவட்டம், அரக்கோணம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், 73 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், 67 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட திருவொற்றியூர் – பாதாள சாக்கடைத் திட்டம் உட்பட சுமார் 550 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை இன்று துவக்கிவைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அதேபோல், 61 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொளத்தூர்–வில்லிவாக்கம் சந்திக்கடவு எண் 1இன் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் பணி, 49 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே வடபெரும்பாக்கம், ஆமுல்லவாயல் மற்றும் பர்மா நகரில் பாலம் அமைக்கும் பணி உட்பட 112 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டங்களுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டுவதிலும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணிபுரிந்து பணியிடையில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 279 நபர்களுக்கு பல்வேறு பதவிகளுக்கான கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் என்னால் இன்று வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை 33 ஆயிரத்து 509 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 47 ஆயிரத்து 552 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்கிறேன். மேலும், 22 ஆயிரத்து 687 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 906 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு, மாநிலத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் உண்மையான மக்கள் அரசு ஆகும். சாமானியர்களான நாங்கள் மக்களிடம் உண்மையை மட்டுமே எடுத்துரைப்போம்.

‘உண்மையே என்றும் உயர்வு தரும்’ என்ற நம்பிக்கையின் அடிப்படையில் செயல்படுகின்றோம் என்பதைக் கூறும்போது இங்கு எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரிலே ஒரு வயதான பெரியவர் இருந்தார். அவர் ஒரு பண்ணையில் வேலை பார்த்து வந்தார். அவர் தனக்கு இட்ட பணிகளை மட்டும் செய்துகொண்டு, நேர்மையுடன் பணியாற்றி வந்தார். அந்தப் பண்ணையில் “கந்தன்” என்ற ஒருவரும் பணிபுரிந்து வந்தார். இவர் அந்த பெரியவருக்கு நேர் எதிரான குணம் உடையவர். பண்ணையாரை பார்க்கும் பொழுதெல்லாம், நீங்கள் எங்க குடும்பத்துக்கு நிறைய உதவிகளை செய்திருக்கிறீர்கள். உங்களால்தான் என் குடும்பம் நன்றாக இருக்கிறது என்று முகஸ்துதிக்காக பல கருத்துக்களை போலிப் புன்னகையுடன் தெரிவிப்பார். ஆனால் பணிகளில் முழு ஈடுபாட்டுடன் செயலாற்ற மாட்டார். குறுக்கு வழியில் பண்ணையாரின் நன்மதிப்பை பெற எண்ணினார்.

ஒரு நாள் கந்தனிடம் பயிர்களுக்கு தெளிக்கக் கூடிய பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்கி வரச் சொன்னார் அந்தப் பண்ணையார். ஆனால் கந்தன் பெரியவருக்கு கெட்டப் பெயர் வாங்கி தரும் தீய எண்ணத்துடன், பண்ணையார் கூறியது போல் நல்ல பூச்சிக்கொல்லி மருந்தை வாங்காமல், போலிப் பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்கி வந்து, அதை பெரியவரிடம் கொடுத்து, பயிர்களுக்கு தெளிக்கும்படி கூறினான். ஆனால், பணிகளில் எப்போதும் கவனமாக இருக்கும் பெரியவருக்கு, அந்த மருந்தை பார்த்தவுடன் சந்தேகம் வந்தது. எனவே, அதனை பரிசோதனைக் கூடத்தில் கொடுத்து பரிசோதிக்கச் சொன்னார். அவர்களும், இது உண்மையான பூச்சிக் கொல்லி மருந்தே கிடையாது. இதனால் பயிர்களே அழிந்து போய் விடும் என்று தெரிவித்தார்கள். உடனே அதிர்ந்து போன பெரியவர், இதனை பண்ணையார் கவனத்திற்கு எடுத்துச் சென்றார்.

பண்ணையார் உடனே கந்தனை கூப்பிட்டு இது பற்றி விசாரணை செய்தார். விசாரணையில் கந்தன் உண்மையை ஒத்துக்கொண்டான். அதனால் பண்ணையார் அவனுக்கு தகுந்த தண்டனை தந்தார். எப்போதும் பணியில் உண்மையையும், உழைப்பையும் காட்டும் அந்த பெரியவரைப் பாராட்டி அவருக்கு வெகுமதி அளித்ததோடு மட்டுமல்லாமல், ஊதிய உயர்வும் அளித்தார் பண்ணையார்.

உண்மையாகவும், நேர்மையாகவும் பணியாற்றினால் கண்டிப்பாக பதவி உயர்வு உங்களைத் தேடி வரும் என்பதை இந்த கதை நமக்கு உணர்த்துகிறது.

இன்று நீங்கள் அனைவரும் மக்களிடம் நேரிடையாக அரசின் நலத்திட்டங்களைக் கொண்டு சேர்க்கும் உன்னதமான பணியினை செய்வதற்கான பணி நியமன ஆணைகள் பெற்றுள்ளீர்கள். நீங்கள் ஏற்றுக்கொண்ட இப்பணிக்கு, நேர்மையாகவும் சேவைப் மனப்பான்மையுடன் பணியாற்றி, வாழ்வில் உயர்நிலையை அடையவும், அதே நேரத்தில் அரசுக்கு நற்பெயரை பெற்றுத் தர வேண்டும் என்றும் அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு உள்ளாட்சி அமைப்பு என்பது மக்களின் அடிப்படைத் தேவைகளை முழுவதும் நிறைவேற்றக் கூடியதும், மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதுமான மிகப் பெரிய அமைப்பாகும். ஒரு மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்பு சிறந்து விளங்கினால் மக்களிடத்தில் நன்மதிப்பு கூடும். அந்த வகையில், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலிருந்தே இந்தத் துறை சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்து இந்தத் துறையில் பல்வேறு திட்டங்களை வகுத்தளித்து இன்றைக்கு கிராமங்களிலிருந்து நகரம் வரை மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுவதும் நிறைவேற்றப்படக்கூடிய நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசு மக்களுடைய அரசு, மக்களுக்குத் தேவையான திட்டங்களை அளிக்கின்ற அரசு. ஆகவே, உள்ளாட்சித் துறையின் மூலமாக மக்களுக்கு நிறைய பணிகள், மக்கள் மனம் நிறைய, பணிகள் நிறைவேற்றப்படும் என்ற செய்தியைச் சொல்லி, இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாக இருந்த துறையின் செயலாளர் அவர்களுக்கும், தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
31.10.2019 அன்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை.

மாண்புமிகு அம்மாவின் அரசு, முதலீட்டாளர்களை இருகரம் நீட்டி வரவேற்கும் அரசாக செயல்பட்டு வருகிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்திய தொழில் கூட்டமைப்பும், தமிழ்நாடு அரசும் இணைந்து நடத்தும் 18ஆவது Connect–2019 மாநாட்டினை இன்று துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவிலே கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும்

தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தகவல் தொழில்நுட்பவியல் துறையின் முதன்மைச் செயலாளர் டாக்டர்.சந்தோஷ்பாபு, இ.ஆ.ப., அவர்களே!

இந்த நிகழ்ச்சியை சீரும், சிறப்போடும் நடத்துவதற்கு உறுதுணையாக விளங்கிக்கொண்டிருக்கின்ற Chairman, CII Southern Region Mr. Sanjay Jayavarthanavelu அவர்களே!

Chairman, CII Tamil Nadu Mr. S.Chandramohan அவர்களே!

Chairman, CII Connect 2019 Mr. Suresh Raman அவர்களே!

Director, Software Technology Parks of India, Chennai Region Dr. Sanjay Tyagi அவர்களே!

Captains of Industries, Delegates and other Dignitaries, Friends from the Press and Media and Other Delegates,

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு நேர்வுகளில் கொள்கைகளை வகுத்தல், வகுக்கப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப முடிவுகளை மேற்கொள்ளுதல், தொழில் வளர்ச்சிக்கு உதவி பொருளாதாரத்தை உயர்த்துதல், பொது மக்களுக்கு பல்வேறு சேவைகளை அளித்தல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், கோப்புகளைக் கையாளுதல் மற்றும் சட்டம் ஒழுங்கினை பராமரித்தல் ஆகியவை ஒரு அரசின் செயல்பாடுகளில் முக்கியமானதாகும். ஆளுமையின் ஒவ்வொரு அம்சத்திலும், அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் பயன்பாடு திறம்பட செயல்படுவதுடன், குடிமக்களுக்கு மனநிறைவை

ஏற்படுத்தும் வகையில் பிரமிக்கத்தக்க அளவில் முன்னேறியுள்ளது. அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அந்த வகையில், தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு துறையும், முகமையும் மேற்கொண்ட பல்வேறு முன் முயற்சிகள் நல்ல பலனை தந்துள்ளன. பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்குச் சான்றாக, நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையின்படி, இந்தியாவில் அதிக புதுமைகளைப் படைக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடம் பெற்றுள்ளது. கடந்த கால சாதனைகளை நினைவுகூர்ந்திடவும், வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேலும் சாதனைகள் பல புரியவும் இந்த மாநாடு ஒரு நல்ல வழிகாட்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு 2001ஆம் ஆண்டு முதல் இணைந்து நடத்தி வரும் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக Connect மாநாடு திகழ்கிறது. தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் குறித்து நடத்தப்படும் இந்த வருடாந்திர மாநாடு மற்றும் கண்காட்சி தமிழ்நாட்டை உலகளாவிய ICT வரைபடத்தில் இடம்பெறச் செய்துள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2001 இல் Connectஇன் முதற் பதிப்பை தொடங்கி வைத்தார்கள். மேலும் 2002, 2005 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் கலந்துகொண்டு பெருமை சேர்த்தார்கள்.

மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும், மாண்புமிகு அம்மா அரசின் சார்பில் சென்ற ஆண்டு நடத்தப்பட்ட Connect 2018 நிறைவு நாள் நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டு உரையாற்றினேன் என்பதை இங்கே பெருமையுடன் சொல்ல விரும்புகிறேன்.

In my address in 2018 meet, I made an appeal to the Captains of Industry who were present, to extend continued support by way of fresh investments in Tamil Nadu. In response to my appeal, Tamil Nadu has already received 6,500 crore rupees as investments in the last one year. This has resulted in 60,100 new employments in Tamil Nadu. IT/ITeS sector exports have increased nearly 10 percent and employment has increased by 4 per cent in the last one year, for which I thank Captains of the Industry.

I request you to continue the same support in future also.

இந்த ஆண்டில் நடைபெறும் 18ஆவது பதிப்பான இந்த மாநாட்டின் மையப் பொருள் "இந்தியா 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கு இதயமாக இருப்பது தொழில்நுட்பம்" என்பதை அறிவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது தற்போதைய சூழலில் மிகவும் பொருத்தமானதாகும். இதற்காக இம்மாநாட்டு அமைப்பாளர்களை நான் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த ஆண்டின் துவக்கத்தில், நான், இந்த மாநாட்டின் மையப் பொருளின் அடிப்படையில், ஏற்கெனவே சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ்,

- "தேசிய மின் ஆளுமைப் பிரிவின் உதவியோடு திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் ஒன்று உருவாக்கப்பட உள்ளது. தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு தொழில்நுட்பத்துடன் கூடிய கட்டுப்பாடு மற்றும் கட்டளை மையம் ஒன்று நிறுவப்படும் என்றும்;
- அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சேவைகளை வெளிப்படைத் தன்மையுடன் செம்மையாக பெறும் பொருட்டு, மாநில குடும்ப தகவல் தொகுப்பு (State Family Database) ஒன்று உருவாக்கப்படும் என்றும்;

- வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பங்களில் ஒன்றான நம்பிக்கை இணையம் (Blockchain) மூலம் பரிவர்த்தனைகளில் உள்ள உண்மைத் தன்மையினை அறிந்திடும் வகையில் நம்பிக்கை இணைய கட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட்டு, அரசின் தரவுகள் அனைத்தும் பாதுகாப்பாக வைக்கப்படும் என்றும்;

- "மக்களைத் தேடி அரசு" என்ற திட்டத்தில் சட்டப்படியான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் குடிமக்கள் பெட்டகத்திலிருந்து விண்ணப்பிக்காமல் தானாகவே வழங்கப்படும்" என்ற அறிவிப்புகளை அறிவித்து அதனை செயலாக்கத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மக்கள் தங்களது எந்த ஒரு தேவைக்காகவும் அரசு அலுவலகத்திற்கு நேரில் செல்லாமல் தான் இருக்கும் இடத்திலிருந்தே அனைத்து சேவைகளையும் பெற வேண்டும் என்ற எனது கனவு நிறைவேறும்.

"தமிழ்நாட்டில் வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளன. இந்த அரசும் ஆதரவாகவும், வகை செய்பவராகவும் செயல்படுவதில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. நாங்கள் முதலீட்டாளர்களை அரவணைக்கும் மனப்பான்மையுடன் இருக்கும் மாநிலமாக இருப்போம். தமிழ்நாடு வழங்குகின்ற மாநிலமாக இருக்கும்" என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் முதலீட்டாளர்களை இருகரம் நீட்டி வரவேற்கும் அரசாக செயல்பட்டு வருகிறது என்பதை இங்கே பெருமையுடன், மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு சாதித்துள்ள சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- சென்னை இன்று இந்தியாவின் SaaS Capital of India என்று கூறும் அளவிற்கு பல புதிய தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னையில் தொடங்கப்பட்டு வருகின்றன. மிகப் பெரிய நிறுவனங்களும் தங்களுடைய கிளைகளை சென்னையில் திறந்துள்ளன. இதற்குக் காரணம் தமிழ்நாடு ஒரு அமைதியான மாநிலமாகவும், நவீன தொழில்நுட்பத் தேவைகளை நிறைவேற்றுகின்ற அளவிற்கு மனிதவள ஆற்றல் கொண்ட மாநிலமாகவும் விளங்குகிறது. இங்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மாணவர்கள் தங்கள் கல்வியை முடித்துவிட்டு, திறமைமிக்கப் பொறியாளர்களாக வெளி வருகின்றனர்.

- முழுவதும் கணினிமயமாக்கப்பட்ட அரசு சேவைகளை குடிமக்கள் அரசு இ–சேவை மையங்கள் மூலமாகவோ அல்லது தங்கள் மேசைக் கணினி அல்லது திறன்பேசி வாயிலாகவோ

தமது இருப்பிடத்திலிருந்தே பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- மாண்புமிகு அம்மா அவர்கள், 2 மற்றும் 3ஆம் நிலை பகுதிகளில் சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு வியாபாரக் குறியீடாக "எல்கோசெஸ்" என பெயரிட்டார். இவை, தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதைச் சார்ந்த சேவைகளுக்கான முதலீடுகளை ஈர்க்கும் ஒரு சிறந்த இடமாகத் திகழ்கிறது.

- மாணாக்கர்கள் தகவல் தொழில்நுட்பவியலில் தங்களது திறமையை வளர்த்துக்கொள்வதற்காக விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 54 இலட்சத்து 19 ஆயிரத்து 594 மடிக்கணினிகள் வழங்கப்பட்டு அறிவுபூர்வமான கல்வியை மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

- தமிழ்நாட்டில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் அதிக அளவில் உருவாவதை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு அரசு ICT-2018 கொள்கையை சென்ற ஆண்டு வெளியிட்டுள்ளது. இதில் 2 மற்றும் 3ஆம் நிலை பகுதிகளில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கான பல சலுகைகள் அறிவிக்கப்பட்டு உள்ளன.

- மாநிலத்தில் புதுமையான சூழல் அமைப்பு உருவாவதை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு தொழில் முனைவோர் மற்றும் கண்டுபிடிப்புக் கொள்கை, 2018 வெளியிடப்பட்டு உள்ளது.

- Tamil Nadu Government would be releasing the Electronics Hardware Manufacturing Policy, shortly. This New Policy would enable new start-ups, Companies which would bring lot of investments and lot of jobs and contribute largely to the economic development of the State.

- 2018–2019ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதி 1 இலட்சத்து

22 ஆயிரத்து 899 கோடி ரூபாயாகும். இதனால் 6 இலட்சத்து 50 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மென்பொருள் ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பில் தமிழ்நாடு, இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

- மாண்புமிகு அம்மாவின் கனவுத் திட்டமான குறைந்த விலையில் உயர்தர கேபிள் சேவைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 130 ரூபாயில் 200 சேனல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 26 இலட்சத்து 36 ஆயிரத்து 820 சந்தாதாரர்களுக்கு செட்டாப் பாக்ஸ்கள் விலையின்றி வழங்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு முழுவதும் தற்போது 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இ–சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் பல்வேறு துறைகளின் 120க்கும் மேற்பட்ட சேவைகளை வழங்கி வருகிறது. இதுவரை 4 கோடியே 81 இலட்சம் மக்கள் இதன் மூலம் பயன்பெற்றுள்ளனர்.

- அனைவருக்கும் வளர்ச்சி என்ற எண்ணத்தை ஈடேற்றிட இல்லந்தோறும் இணையம் என்ற கொள்கையை செயல்படுத்தும் வண்ணம், அரசின் அனைத்து சேவைகளையும் கிராம மக்களும் அடையும் வகையில், அனைத்து கிராம ஊராட்சிகளும், பாரத்நெட் திட்டத்தை ரூபாய் 1,815 கோடி செலவில் தமிழ்நாட்டில் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளும், கண்ணாடி இழை கட்டமைப்பு மூலம் இணைக்கப்படும். இதன்மூலம், அனைத்து கிராமங்களுக்கும் 1 Gbps அளவிற்கு குறையாமல் இணையதள வசதி வழங்கப்படும். இத்துடன் ரூபாய் 500 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசின் தமிழ்நெட் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து நகரப் பகுதிகளுக்கும்

அதிவேக இணையதள வசதி விரிவுபடுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டங்கள் அடுத்த 18 மாதங்களுக்குள் நிறைவேற்றப்பட உள்ளன.

தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் முதலீடுகளை அதிகரிக்கும் வழிமுறைகள், நிறுவனங்களின் நிதி நிலைமையை சீராக்கம் செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமல், அதிக அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கான கருத்துருக்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு கருத்தியல்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதித்து, தகவல் தொழில்நுட்பவியல் துறை மேலும் வளர்வதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

I take this opportunity to appeal to everybody present here, to extend your co-operation in establishing new IT Industries in emerging technologies like Blockchain,

Artificial Intelligence etc., and thereby increase employment opportunity to every family and provide efficient services to every citizen of Tamil Nadu.

இங்கு வருகை தந்த அனைத்து பிரதிநிதிகளுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்வதோடு, இந்த மாநாடு வெற்றி பெற என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***07.11.2019** அன்று இந்திய தொழில் கூட்டமைப்பும், தமிழ்நாடு அரசும் இணைந்து நடத்திய Connect 2019 மாநாட்டை துவக்கிவைத்து ஆற்றிய விழாப் பேருரை.*

5 ஆண்டு காலத்தில் தமிழகத்தை குடிசை இல்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டுவோம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற பணிகள் திறப்பு விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை சமர்ப்பிக்கின்றேன்.

நான் முதன்முதலாக சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் நங்கவள்ளி, எடப்பாடி, கொங்கணாபுரம் ஆகிய மூன்று ஒன்றியப் பகுதிகளிலும் முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தை தொடங்கி வைத்தேன். தமிழகம் முழுவதும்

234 சட்டமன்றத் தொகுதிகளிலும் முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக மனுக்களைப் பெற்று அதற்கு உடனடித் தீர்வு காண வேண்டுமென்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கு இரண்டு மாதத்தில் தீர்வு காணப்படும் என்ற அறிவிப்பை அப்பொழுது வெளியிட்டதன் அடிப்படையில், தற்பொழுது ஒன்றரை மாத காலத்திலே பெறப்பட்ட மனுக்களுக்கு தீர்வு கண்ட ஒரே அரசு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு.

இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாடு முழுவதும் 9 இலட்சத்து 72 ஆயிரத்து 216 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன. அதிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட மனுக்கள் ஏறக்குறைய 52.58 விழுக்காடு, அதாவது, 5,11,186 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பல்வேறு காரணங்களினால் தகுதியின்மையால் நிராகரிக்கப்பட்ட மனுக்கள் 45 விழுக்காடு, அதாவது, 4,37,492 மனுக்கள், நிலுவையில் உள்ள மனுக்கள் 2.42 விழுக்காடு, அதாவது 23,538 மனுக்கள். எங்களுடைய அரசினால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எந்தளவிற்கு துரிதமாக நடைபெற்று, முடிந்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். மனுக்களை பரிசீலித்து அதில் தகுதியானவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவே ஒரு எடுத்துக்காட்டாகும். மேலும், நிராகரிக்கப்பட்ட மனுக்களை மீண்டும் ஆய்வுக்குட்படுத்தி, தகுதியானவர்களின் மனுக்கள் ஏதும் இருந்தால் அதற்கும் தீர்வு காணத் தேவையான வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டுமென்ற உத்தரவை நான் வழங்கியிருக்கின்றேன்.

தமிழ்நாடு முழுவதும் 5 இலட்சம் நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை அரசால் வழங்கப்படுமென்று நான் அறிவித்ததன் அடிப்படையில், அதனை முதன்முதலாக சேலம் மாவட்டத்தில் தொடங்கியதோடு மட்டுமல்லாமல், அனைத்து மாவட்டங்களிலும்

உள்ள முதியோர்களுக்கும் உதவித்தொகை கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றோம். இதிலும், சொத்து மதிப்பு ரூபாய் 50 ஆயிரத்திற்கு மேல் இருந்தால் அந்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்கள். ரூபாய் 50 ஆயிரம் என்பது முந்தைய காலத்தில் இருக்கலாம், இன்றைய சூழ்நிலையை அதனை மாற்றியமைக்க வேண்டுமென்று அறிவுறுத்தினேன். அதனடிப்படையில், முதியோர் உதவித்தொகை பெறுபவர்களின் சொத்து மதிப்பு ரூபாய் 50 ஆயிரம் என்று இருந்த நிலையை மாற்றி ரூபாய் 1 இலட்சம் வரை இருக்கலாம் என நான் ஆணையிட்டிருக்கின்றேன். அதனை நம்முடைய அதிகாரிகள் உடனடியாக நடைமுறைப்படுத்துவார்கள். இதனடிப்படையில் நிராகரிக்கப்பட்ட மனுக்களும் பரிசீலிக்கப்படும்.

கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் பட்டா மாறுதல் வேண்டியும், புதிய பட்டா வழங்கக்கோரியும் பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு பட்டா மாறுதல் செய்து கொடுக்கப்படும், புதிய பட்டாக்கள் வழங்கப்படும். குடிசைகளில் வாழும் ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கின்றது. மேலும், ஏறக்குறைய 5 ஆண்டு காலத்தில் தமிழகத்தை குடிசைகள் இல்லாத மாநிலமாக எங்களின் அரசு உருவாக்கிக் காட்டும். இந்தியாவிலேயே தமிழகத்தை குடிசையில்லாத முதல் மாநிலமாக உருவாக்கிக் காட்டுவதற்குத்தான் நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். இந்த நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கும் அதிகாரிகளை உண்மையிலேயே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். உங்களோடு இருந்து பழகியவன். மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றிய காரணத்தினாலே மக்களுக்கு என்ன பிரச்சினை என்று உணர்ந்தவன். நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்,

கிராமத்திலிருந்து வந்தவர், கிராம மக்களின் தேவைகளை உணர்ந்தவர், மக்களுக்கு என்ன பிரச்சினை என்று உணர்ந்த காரணத்தினாலே, அரசின் திட்டங்களை துரிதமாக நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக்கூடியவர். இதனால், மற்ற மாவட்டங்களை புறக்கணிப்பதாக நினைத்துவிடக் கூடாது. தமிழகம் முழுவதும், அனைத்து மாவட்ட மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

வேளாண்மைத் துறையின் செயலாளர் மரியாதைக்குரிய ககன்தீப்சிங்பேடி அவர்கள் அரசின் திட்டங்களை அருமையாக, துரிதமாக செயல்படுத்தக்கூடிய சிறந்த செயலாளர். வருவாய்நிருவாக ஆணையர் மரியாதைக்குரிய திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் சேலம் மாவட்டத்தின் ஆட்சித் தலைவராகப் பணியாற்றியவர். இந்த மாவட்டத்தைப் பற்றி நன்கு தெரிந்தவர். தற்பொழுது வருவாய் நிருவாக ஆணையர் பதவியில் இருக்கின்றார். கொடுக்கப்பட்ட பணிகளை சிறப்பாக செயல்படுத்தக்கூடிய இதுபோன்ற அதிகாரிகள் இருப்பதால்தான் அரசின் திட்டங்களை விரைந்து செயல்படுத்த முடிகின்றது. அரசாங்கம், அதிகாரிகள் இரண்டும் சரியான முறையில் செயல்பட்டால்தான் திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியும். நம்முடைய அனைத்து அதிகாரிகளும் சிறப்பான முறையில் பணியாற்றுவதால்தான் இன்றைக்கு இந்திய அளவிலேயே அதிக தேசிய விருதுகளைப் பெறும் முதல் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். நான் விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். விவசாயத்திற்கு நீர் முக்கியம். தமிழகத்தில் இரண்டு, மூன்று ஆண்டுகாலமாக பருவமழை பொய்த்துவிட்டதால், விவசாயத்திற்கு மற்றும் குடிப்பதற்கு தேவையான நீர் கிடைப்பதில்லை. இந்த நிலை எதிர்காலத்தில் தமிழகத்தில் இருக்கக்கூடாது என்பதற்காகவும், பருவகாலங்களில் பொழிகின்ற மழைநீர், ஒரு சொட்டுகூட வீணாகாமல் பாதுகாக்கப்படவேண்டும்

என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் நீர் மேலாண்மை அமைப்பை உருவாக்கியிருக்கிறோம்.

ஏரிகள், குளங்கள் போன்றவற்றை தூர்வாருவதற்காக குடிமராமத்துத் திட்டத்தைத் தொடங்கி, அதை ஒரு மக்கள் இயக்கமாக எங்களுடைய அரசு உருவாக்கி, வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கிறது. நம்முடைய பகுதியில் மேட்டூர் அணை நிரம்புகிறபொழுது, உபரியாக வெளியாகின்ற அந்த நீரை பயன்படுத்தி, சேலம் மாவட்டத்தில் முதற்கட்டமாக மேட்டூர், ஓமலூர் மற்றும் எடப்பாடி சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த தாரமங்கலம், மேச்சேரி, நங்கவள்ளி, எடப்பாடி, கொங்கணாபுரம், சங்ககிரி, மகுடஞ்சாவடி ஆகிய ஒன்றியங்களில் பரீட்சார்த்த முறையில் ரூபாய் 615 கோடி செலவில் 100 ஏரிகள் நிரப்பப்படும் என்று அறிவித்திருந்தேன். இத்திட்டத்திற்கு வருகின்ற ஏப்ரல் மாதம் அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கப்படும். இத்திட்டம் ஓர் ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்படும். கடலில் கலக்கின்ற உபரி நீரை நாம் பயன்படுத்தவேண்டும் என்ற நோக்கில், நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக 100 ஏரிகளை நிரப்புகின்ற பணியை நாம் ஆரம்பித்திருக்கின்றோம். படிப்படியாக, தமிழகம் முழுவதும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

கோதாவரி – காவேரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபொழுது மேட்டூரிலிருந்து கரூர், மாயனூர் கதவணை வரை ஆற்றின் இரு கரைப் பகுதிகளிலும் 50 கிலோமீட்டர் நீளத்திற்கு நீரேற்று மூலமாக அனைத்து ஏரிகளும் நிரப்பப்படும். இதுவே எங்களுடைய இலட்சியம், இதை நிறைவேற்றியே தீருவோம். மத்திய நீர்வளத் துறை அமைச்சராக இருந்த திரு.நிதின் கட்கரி அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலின்பொழுது சேலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள், மீண்டும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டம்

நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார். ஆகவே, இன்றைக்கு மத்திய நீர்வளத் துறை அமைச்சர் இந்தத் திட்டத்தை கவனத்திலே எடுத்துக் கொண்டிருக்கின்றார். விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய கனவுத் திட்டம். அம்மா அவர்கள் மறைந்தாலும் அம்மாவின் அரசு அதைத் தொடர்ந்து செயல்படுத்தும். அந்த வகையில், கரூரிலிருந்து குண்டாறு வரை அந்தத் திட்டத்தை இணைக்கவிருக்கின்றோம். காவிரி—குண்டாறு இணைப்புத் திட்டத்தை எங்களின் அரசு நிறைவேற்றியே தீரும். அடுத்த ஜூலை மாதத்திற்குள் அதற்கு அடிக்கல் நாட்டப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே இதனைத் தெரிவித்தார்கள். எங்களுடைய அரசு, அம்மாவின் கனவுத் திட்டமாக காவிரி—குண்டாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக மத்திய அரசுக்கு அறிக்கையை அனுப்பியிருக்கின்றோம். இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அனுமதி கிடைத்தவுடன் மத்திய, மாநில அரசுகள் இணைந்து காவிரியிலிருந்து குண்டாறு வரையிலான இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவோம். இத்திட்டம் பல்வேறு கட்டங்களாக நிறைவேற்றப்படும். கரூர், மாயனூர் கதவணையிலிருந்து குண்டாறு வரை இணைக்கின்றபொழுது,

உபரிநீர் கால்வாய் வழியாக செல்வதால் புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்கள் செழிக்கும். வைகை அணை நிரப்பப்பட்டு இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் செழிக்கும். சேலம் மாவட்டம் மட்டுமன்றி தென் மாவட்டங்கள் முழுவதும் செழிக்க எங்களின் அரசு நடவடிக்கை எடுத்து, இத்திட்டத்தினை நிறைவேற்றியே தீரும்.

எண்ணற்ற திட்டங்களை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கும்பொழுது, எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் மட்டும் இந்த ஆட்சியில் எதுவும் நடைபெறவில்லை, இந்த ஆட்சி நடக்கின்றதா ? இல்லையா ? என்று கேள்வி கேட்கிறார். இவ்வளவு திட்டங்களையும் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம் திரு. ஸ்டாலின் அவர்களே. எங்கள் திட்டங்களெல்லாம் எதிர்காலத்திலும் விவசாயிகள் பயனடைகின்ற திட்டங்களாக இருக்கின்றது. எதிர்காலத் தமிழகம் ஒளிமயமானதாக இருக்க வேண்டும், வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர், குடிநீருக்குத் தேவையான நீர் முழுவதுமாக வழங்க வேண்டும், தமிழகத்தில் தண்ணீர் பஞ்சமில்லை என்ற சூழ்நிலையை உருவாக்குவது தான் எங்களுடைய இலட்சியம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் வாயிலாக சேலம் மாவட்டத்தில் 56,267 மனுக்கள் பெறப்பட்டதில் 26,712 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 27,010 மனுக்கள் பல்வேறு நிலைகளில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. தள்ளுபடி செய்யப்பட்டுள்ள மனுக்களையும் மறு ஆய்வு செய்து, தகுதியானவர்களுக்கு தேவையான உதவிகள் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 2,545 மனுக்கள் அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது, அதற்கும் தீர்வு காணப்படும் என்ற செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்பு செய்யப்பட்ட மனுக்களில் 26,712 மனுக்கள் எந்தெந்த வகையில் பெறப்பட்டது, அதற்கு எந்த

வகையில் தீர்வு காணப்பட்டது என்ற விவரங்களை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் மட்டும் 12,989 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை ஒரே நேரத்தில் வழங்குகிற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற விதமாக முதல்கட்டமாக, இந்தப் பணியை தொடங்கியிருக்கின்றோம். மேலும், இது விரிவுபடுத்தப்படும். ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கும், ஏழை, எளிய மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கும் அதிகாரிகள் நேரடியாகச் சென்று மனுக்களைப் பெற வேண்டும். முதியோர்களிடத்திலிருந்து நேரடியாக மனுக்கள் பெறப்பட்டு தகுதியான முதியோர் அனைவருக்கும் முதியோர் உதவித்தொகை வழங்கப்படும்.

பட்டா மாறுதல் சார்ந்த 7,734 மனுக்களுக்கும், நகர உட்கட்டமைப்பு சார்ந்த 2,841 மனுக்களுக்கும் பொது விநியோக திட்டத்தைச் சார்ந்த 91 மனுக்களுக்கும், சமூகநலத் துறை சார்ந்த 106 மனுக்களுக்கும், அடிப்படை வசதிகள், பொது சுகாதாரம், போக்குவரத்துத் துறை சார்ந்த 192 மனுக்களுக்கும், வேளாண்மை, கால்நடை, மீன்வளத் துறை சார்ந்த 181 மனுக்களுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்நலம் சார்ந்த 81 மனுக்களும், கல்வித் துறை சார்ந்த 131 மனுக்களுக்கும், முன்னாள் இராணுவ வீரர்களின் நலன் சார்ந்த 2 மனுக்களுக்கும், சட்டம் ஒழுங்கு சார்ந்த 284 மனுக்களுக்கும், இதர கோரிக்கைகள் குறித்த 2,080 மனுக்களுக்கும், என மொத்தம் 26,712 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

நிராகரிக்கப்பட்டுள்ள 29,555 மனுக்களும் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தகுதியான மனுக்களுக்குத் தீர்வு காணப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே,

இது மக்களின் அரசு. நீங்கள் வைக்கின்ற கோரிக்கைகளையும் அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்ற அரசு. எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, எட்டிக்கோட்டையில் பி.எட்.கல்லூரி கொடுத்தார்கள். நங்கவள்ளியில் பாலிடெக்னிக் கல்லூரி அமைக்கப்படும். நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகவும் அமைத்துக் கொடுத்திருக்கிறோம்.

மக்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற கிராமச் சாலைகளெல்லாம் சீர் செய்யப்பட்டு வருகிறது. உயர்மட்டப் பாலம், ரயில்வே மேம்பாலம், ஆற்றுப்பாலம் ஆகியவைகளையும் அமைத்துக் கொடுத்திருக்கிறோம். ஓடையின் குறுக்கே பல்வேறு இடங்களில் பாலங்கள் கட்டப்பட்டு வருகிறது என்பதனையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

வருவாய்த் துறையில் முதியோர், விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு உதவித்தொகைகளும், வீட்டுமனைப் பட்டா, நகர நிலைப் பட்டா ஆகியவைகளும் இன்றைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில், எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் பெறப்பட்ட மனுக்களில் 1,600 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலமாக முதலமைச்சர் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் 110 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் மூலம் 400 பயனாளிகளுக்கு ஏறக்குறைய ரூபாய் 7 கோடி அளவிற்கு வீடு கட்டுவதற்கு மானியமும் வழங்கப்படுகிறது.

மகளிர் உதவித்திட்டம் 224 ஊராட்சிஅளவிலான கூட்டமைப்புக்கு நிதியுதவியும், 444 உறுப்பினர்கள் கொண்ட 37 மகளிர் சுயநிதிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவியும், 1,363 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனமும் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. 2,034 மகளிருக்கு சுமார் 7 கோடியே 90 இலட்சத்து 37 ஆயிரம் கடனுதவியும் மற்றும் மானிய உதவியும் வழங்கியிருக்கிறோம்.

வேளாண்மைபொறியியல்துறையில் வேளாண்மை இயந்திர மயமாக்கல் உப இயக்கத் திட்டத்தின் கீழ் 2 விவசாயிகளுக்கு டிராக்டர், மானாவரி விவசாயத்தின் கீழ், ஒரு விவசாயிக்கு மதிப்புக்கூட்டு இயந்திர மானியம் என மொத்தம் 18 இலட்சத்து 4 ஆயிரத்து 300 மதிப்பிலான வேளாண் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், 100 பயனாளிகளுக்கு ரூபாய் 39 இலட்சத்து 9 ஆயிரத்து 500 செலவில் 100 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

வனத்துறையில், தமிழ்நாடு காடுவளர்ப்பு திட்டத்தின் கீழ், சிறுதொழில் தொடங்குவதற்கு 52 பயனாளிகளுக்கு 8 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் வாயிலாக 20 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும், உயர்கல்வித் துறையின் மூலமாக வனவாசி மற்றும் சேலம் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் பயிலும் 644 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 79 இலட்சத்து 3 ஆயிரத்து 800 மதிப்பிலான விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறையில் 25 விவசாயிகளுக்கும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 25 விவசாயிகளுக்கும் ரூபாய் 14 இலட்சத்து 43 ஆயிரத்து 400 மதிப்பிலான பல்வேறு மானிய உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு 37 ஆயிரத்து 400 மதிப்பிலான விலையில்லா 4 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுத் துறையின் மூலமாக 467 பயனாளிகளுக்கு பயிர்க்கடன் உதவி, 150 பயனாளிகளுக்கு மத்திய காலக் கடனுதவி, 119 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி என மொத்தம் 736 பயனாளிகளுக்கு ரூபாய் 6 கோடியே 26 இலட்சத்து 3 ஆயிரம் கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் மூலம் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், 9 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சமூக நலத்துறையின் சார்பாக, 42 பயனாளிகளுக்கு 1 இலட்சத்து 89 ஆயிரம் மதிப்பிலான 42 விலையில்லா தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இன்றையதினம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மொத்தம் 5,723 பயனாளிகளுக்கு ரூபாய் 25 கோடியே 89 இலட்சத்து 42 ஆயிரத்து 200 மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து எடப்பாடி மற்றும் கொங்கணாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 450 குடியிருப்புகளுக்கு மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் ரூபாய் 47 கோடியே 53 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டப் பணிக்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சார்பில் வீட்டுமனை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், எடப்பாடி – குமாரபாளையம் சாலை அருகில் ரூபாய் 30 கோடியே 36 இலட்சம் மதிப்பீட்டில் உயர் வருவாய் பிரிவில் 167 மனைகளும், மத்திய வருவாய் பிரிவில் 283 மனைகளும், நலிவடைந்த வருவாய் பிரிவில் 254 மனைகளும் என மொத்தம் 704 வீட்டுமனைகள் மேம்படுத்தும் பணிக்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், ரூபாய் 9 கோடியே 37 இலட்சத்து 71 ஆயிரம் மதிப்பிலான 109 புதிய திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

சேலம் மாநகராட்சியின் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், ரூபாய் 3 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா பூங்கா மறுசீரமைக்கும் பணிக்கும், ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் 20 அங்கன்வாடி மையங்களை மறுசீரமைக்கும் பணிகளுக்கும்,

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில் மேச்சேரி, ஓலப்பட்டி கிராமத்தில் ரூபாய் 8 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் வணிக மையம் கட்டும் பணிக்கும்,

நெடுஞ்சாலைத் துறையின் நபார்டு கிராம சாலைகள் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆறகளூர்—பெரியேரி சாலையில் வசிஷ்ட நதியின் குறுக்கே ரூபாய் 5 கோடியே 99 இலட்சம் மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட பாலம் கட்டும் பணிக்கும்,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ், மேட்டூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர தீவிர சிகிச்சை பிரிவு கட்டடம் கட்டும் பணிக்கும் என இவ்விழாவில் மொத்தம் ரூபாய் 112 கோடியே 35 இலட்சத்து 71 ஆயிரம் மதிப்பீட்டில் 116 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகின்ற எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 327 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் புதிதாக கண்டறியப்பட்டுள்ள எடப்பாடி ஒன்றியத்தில் 23 குடியிருப்புகளுக்கும்,

கொங்கணாபுரம் ஒன்றியத்தில் 28 குடியிருப்புகளுக்கும் என மொத்தம் 51 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் ரூபாய் 9 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் நபார்டு மற்றும் கிராம சாலைகள் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மகுடஞ்சாவடி – குமாரபாளையம் சாலை எடப்பாடியில் பிரிந்து செல்லும் கவுண்டனேரி சாலையில் பொன்னியாறு ஓடையின் குறுக்கே ரூபாய் 1 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலமும்,

தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டைமேடு – எருமக்காரன் வளவு சாலையில் சின்னாங்காடு ஓடையின் குறுக்கே ரூபாய் 1 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலமும்,

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் காடையாம்பட்டியில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு தென்னை நாற்றுப் பண்ணை பாதுகாப்புக் கூடக் கட்டடமும் இன்றைய தினம் திறக்கப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவுத் துறையின் சார்பில் 24 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் இன்றைய தினம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நான் துவக்கி வைத்துள்ளேன்.

ஆகமொத்தம், இன்றைய தினம் நடைபெற்ற இவ்விழாவில் ரூபாய் 18 கோடியே 88 இலட்சத்து 45 ஆயிரத்து 800 மதிப்பீட்டில் முடிவுற்ற 43 திட்டப்பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைய தினம் நடைபெற்ற விழாவில், 5,723 பயனாளிகளுக்கு சுமார் 25 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 116 திட்டப் பணிகளுக்கு

ஏறக்குறைய ரூபாய் **112** கோடியே **34** இலட்சம் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. முடிவுற்ற **43** திட்டப் பணிகள் ஏறக்குறைய ரூபாய் **18** கோடி **88** இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்கள் நலன் பேணிக் காக்கின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, ஏழை, எளிய மக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காக தொடர்ந்து பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதற்கு பொதுமக்கள் தங்கள் நல்லாதரவை வழங்க வேண்டுமென்றுச் சொல்லி, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை இங்கே ஏற்பாடு செய்த மாவட்ட நிருவாகத்திற்கு நன்றியை தெரிவித்து, இதேபோல், சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் இதேபோன்ற நிகழ்ச்சி நடைபெறும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
09.11.2019 *அன்று சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்தில் முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கி, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்து ஆற்றிய உரை.*

குருநானக்கின் வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றி நடப்போம்!

இந்த இனிய நாளில் கூடியிருக்கின்ற அனைவருக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவரும், 10 சீக்கிய மத குருக்களில், முதன்மையானவருமான குருநானக் தேவ் ஜி–யின் 550ஆவது பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்வதில் நான் பெருமைப்படுகின்றேன், மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

குருநானக் அவர்களின் பிறந்தநாள், ஒவ்வொரு வருடமும் நவம்பர் 12ஆம் நாள் “குருநானக் ஜெயந்தி” மற்றும் “குருநானக் தேவ் பிரகாஷ் திவஸ்” என விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை வழங்கிய சீக்கிய சகோதர சகோதரிகளுக்கு எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகில் ஏறக்குறைய 270 இலட்சம் சீக்கியர்கள் வாழ்கின்றனர். இது உலக மக்கள்தொகையில் 0.39 சதவீதம் ஆகும். இந்தியாவில் 190 இலட்சம் சீக்கியர்கள் வாழ்கின்றனர். இது இந்திய மக்கள் தொகையில் 2 சதவீதம் ஆகும். சீக்கியர்கள் கொள்கை ரீதியாக, நம்பகமான, விசுவாசமான, தேசபக்தி மிகுந்த கடின உழைப்பாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் சீக்கியர்களின் பங்கு மிக முக்கியமானது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

சீக்கிய மதம் நாடு, மொழி மற்றும் இனப்பாகுபாடுகளைத் தாண்டி, மனித இனத்திற்கு சிறந்த நெறிமுறைகளை வழங்கியுள்ளது. மதசார்பற்ற வாழ்க்கையை ஆன்மிக வாழ்க்கையோடு இணைந்து வாழ வேண்டும் எனவும், இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதை அறிந்து, இறைவனை அடைய முயல்வதே மனித வாழ்வின் குறிக்கோள் எனவும் சீக்கிய மதம் போதிக்கிறது.

மனித வாழ்க்கையில் எந்த ஒரு மனிதனையும் பொருளாதார ஏற்றத்தாழ்வு பார்க்காமல், சமமாகக் கருத வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது. இதனைப் போதிக்கும் வகையில் அனைத்து குருத்வாராக்களிலும் நடத்தப்படும் “லங்கார்’, அனைவருக்கும் ஒரே வகையான உணவு வழங்கும் நிகழ்ச்சியானது சிறப்புமிக்கது.

குருநானக் தேவ்ஜி 1499ஆம் ஆண்டு தன்னுடைய 30ஆவது வயதில் ஞானம் பெற்று தெய்வீக நிலையை அடைந்தார். தன்னுடைய போதனைகளால் மக்களை நல்வழிப்படுத்தி, அவர்களிடையே நிலவி வந்த மூடப் பழக்கவழக்கங்களைக் களைந்தார். பெண்கள் சமுதாயத்தின் கண்கள் எனவும், அவர்களைப் போற்றி மதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறார்.

சமத்துவம், சகோதரத்துவம், நற்குணம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் தனித்துவம் வாய்ந்த ஆன்மீக, சமூக, அரசியல் தளத்தை உருவாக்கி நேர்மையாக வாழவேண்டும் என குருநானக் போதித்துள்ளார்.

குருநானக்கின் வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றி நடப்போம் எனக் கூறி, குருநானக் ஜெயந்தி நாளான இன்று அவரை வணங்கி, நான் பங்கேற்பதற்கு வாய்ப்பு வழங்கிய அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மற்றும் தமிழகத்தில் வாழும் சீக்கிய சகோதரர்கள், பல்வேறு கோரிக்கைகளை என்னிடம் வைத்துள்ளார்கள். அவற்றுள் இராமேஸ்வரத்தில், மகான் குருநானக் அவர்கள் இராமேஸ்வரத்திற்கு புனித யாத்திரை மேற்கொண்ட நினைவைப் போற்றும் வகையில் 'மையம்' ஒன்று அமைப்பதற்கு இடம் தேவை என்று கேட்டுள்ளீர்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு அரசால் மையம் ஒன்று அமைக்க இடம் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற கோரிக்கைகள் அனைத்தும் அரசினுடைய பரிசீலினையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் வாழ்கின்ற அனைத்து சீக்கிய சகோதர, சகோதரிகளுக்கும் தமிழக மக்கள் என்றைக்கும் துணை நிற்பார்கள், தமிழ்நாடு அரசும் அவர்களுக்குத் துணை நிற்கும் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 12.11.2019 அன்று*
*மகான் குருநானக் அவர்களின் **550**ஆவது ஜெயந்தி விழாவில்*
ஆற்றிய உரை.

குடிமராமத்து திட்டம் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை பொதுப்பணித் துறை அதிகாரிகளுடைய ஆய்வுக் கூட்டம் நடைபெறுவது வழக்கம். அதன் அடிப்படையில், பொதுப்பணித் துறை சார்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற பணிகள் குறித்து ஆய்வுப் பணி மேற்கொள்வதற்காக, இந்த ஆலோசனைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த ஆலோசனைக் கூட்டத்திலே, இந்த துறையின் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு பாசன மேலாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தின் திட்ட இயக்குநர் திரு. விபு நய்யர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களை

பாதுகாத்தல் மற்றும் நதிகள் சீரமைத்தல் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் மற்றும் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் செயற் பொறியாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நீர் மேலாண்மை மிக முக்கியமான ஒன்று. அந்த நீர் மேலாண்மையை சிறப்பான வகையிலே அரசு கையாள வேண்டும் என்பதற்காகத்தான், இந்த ஆலோசனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஆலோசனைக் கூட்டத்தின் மூலமாக, மாண்புமிகு அம்மாவுடைய அரசு அறிவித்த திட்டங்கள், எந்த அளவிற்கு பணி நடைபெற்று கொண்டு இருக்கின்றன, அந்தப் பணியினுடைய விவரங்கள், அதையெல்லாம் ஆராய்ந்து அதற்குண்டான நடவடிக்கைகள் எடுப்பதற்குத்தான் இந்த ஆலோசனைக் கூட்டம்.

ஏற்கெனவே சட்டமன்றத்தில் சட்டமன்ற 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் இங்கே நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன, நடந்துகொண்டு இருக்கின்றன. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், குடிமராமத்துத் திட்டம். இந்த குடிமராமத்து திட்டத்தை பொறுத்தவரைக்கும், மிகச் சிறந்த திட்டம் என்று மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. விவசாயிகளிடத்தும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. பருவ காலங்களில் பெய்து வரும் மழைநீர் முழுவதும் சேமித்து வைக்க வேண்டும் என்பதற்காக ஒரு சிறப்புத் திட்டமாக, மக்களோடு மக்கள் இயக்கமாக இதை உருவாக்கி இந்த குடிமராமத்து திட்டத்தை, கடந்த மூன்றாண்டுகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த நடப்பாண்டை பொறுத்தவரைக்கும், சுமார் 500 கோடி ரூபாயில் 1,829 ஏரிகள் குடிமராமத்து திட்டத்தின் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, இன்றைக்கு பல ஏரிகளுடைய பணிகள் நிறைவு பெற்று இருக்கின்றன.

சில இடங்களில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் இந்த கூட்டத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன.

அத்திக்கடவு – அவிநாசி திட்டம், இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலக்கட்டத்திலே கனவுத் திட்டமாகும். அந்தப் பகுதி மக்கள் எண்ணியிருந்த அந்தக் கனவுத் திட்டத்தை அம்மா மறைந்த பிறகு, அம்மாவுடைய அரசு, தொடர்ந்து செயல்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்டு, அந்த திட்டம் இப்பொழுது நடைபெற்று வருகிறது. அந்தப் பணியின் தற்போதைய நிலை குறித்து ஆராயப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோல, பல திட்டங்கள் குறிப்பாக தடுப்பணைகள், மூன்றாண்டு கால திட்டமாக ஆயிரம் கோடி ரூபாயில் தடுப்பணைகள் கட்டப்படும் என்று அறிவித்தோம். அதன் வாயிலாக அந்தப் பணிகள் இப்பொழுது நடைபெற்று கொண்டு இருக்கின்றன. அதன் விவரத்தையும், அதேபோல், நதியின் குறுக்கே, ஓடையின் குறுக்கே, தடுப்பணை கட்டுவதற்காக அறிவிக்கப்பட்ட அந்த திட்டத்தையும் எவ்வாறு நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்பதை எல்லாம் ஆய்வு செய்வதற்காக இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***15.11.2019** அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை கட்டடங்கள் மற்றும் நீர்வள ஆதாரத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய தொடக்க உரை.*

மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு 33 ஆண்டுகால கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் உதயமானது தென்காசி மாவட்டம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

பொதிகையின் தென்றல் போல இதமான தமிழ் மணம் வீசும் தென்காசி வாழ் பெரியோர்களே!

நெஞ்சில் வீரமும், வாழ்வில் அறமும் தங்களது இரு கண்களாகக் கொண்ட தாய்மார்களே!

குற்றாலத்தின் ஆர்ப்பரிக்கும் நீர்வீழ்ச்சி போல இங்கு திரண்டு இருக்கும் எழுச்சிமிகு இளைஞர் பட்டாளங்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்காசி பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை, 33 ஆண்டு கால கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து இன்றைக்கு தென்காசி மாவட்டம்

உதயமாகியிருக்கின்றது. இந்த புதிய மாவட்டத்தை இன்றைய தினம் தொடங்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தென்காசி வரலாற்றில் இன்று முக்கியமான திருநாளாகும். தலைமுறைகள் ஏங்கிய கனவு, இன்று நனவாகி உள்ளது. இந்த இனிய நாளில் உங்கள் அனைவரையும் காண்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

“என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்” என்று பாடினார் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அந்த வகையில், மலை வளம், காடு வளம், நீர் வளம், பயிர் வளம், தமிழ் வளம், வரலாற்று வளம் என பல்வேறு வளங்களும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு மாவட்டமாக உருவெடுத்துள்ளது இந்த தென்காசி மாவட்டம். குறிஞ்சி, முல்லை, மருதம் என மூவகை நிலமும் கொண்ட இந்த முத்தான மாவட்டத்தை உருவாக்கியதில் மாண்புமிகு அம்மாவின் அரசு பெருமை கொள்கிறது, மகிழ்ச்சி அடைகிறது.

மக்களின் விருப்பங்கள் மற்றும் தேவைகளைக் கருத்தில்கொண்டு, அவற்றுக்கு முன்னுரிமை அளித்து, அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும், புரட்சித்தலைவி அம்மா அவர்களைப் போலவே, மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் அறிவிப்புகளை தமிழக சட்டசபையில் அறிவித்து, அதனைச் செயல்படுத்தி வருகிறது என்பதை இங்கே பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். “அடித்தட்டு மக்களின் உணர்வுகளையும் அறிந்து, உள்ளாட்சி நிருவாகம் அமைய வேண்டியது அவசியம்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அந்தவகையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலையும் விரைவில் நடத்த இருக்கிறது மாண்புமிகு அம்மாவின் அரசு. அதற்குண்டான நடவடிக்கையில் மாநில தேர்தல் ஆணையம் முனைப்போடு

செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. புதிதாக மாவட்டங்கள் உருவாக்கப்படுவதற்கும், உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படுவதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. 2018ஆம் ஆண்டில் ஏற்கெனவே புதியதாக மறுவரையறுக்கப்பட்டு வெளியிடப்பட்ட வார்டுகளின் அடிப்படையிலேயே தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். இதுகுறித்து தேர்தல் ஆணையம் பலமுறை அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. மாநில தேர்தல் ஆணையம் பல மாவட்டங்களுக்குச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சந்தித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், சிலர் இதற்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எந்த முட்டுக்கட்டை வந்தாலும், விரைவாக உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கான பணிகள் மாநிலத் தேர்தல் ஆணையத்தால் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதுகுறித்த செய்திகள் வந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், முந்தைய ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட மாவட்டம். சுதந்திரத்திற்குப் பின்னர், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பு வகித்த காலத்தில், 1986ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து தூத்துக்குடியை தலைநகரமாகக் கொண்டு புதிய மாவட்டமாக தூத்துக்குடி மாவட்டத்தை உருவாக்கினார். அதைத் தொடர்ந்து, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் பல்வேறு புதிய மாவட்டங்களைத் தொடங்கினார்கள். மரியாதைக்குரிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும் பல்வேறு புதிய மாவட்டங்களை உருவாக்கி, இன்றைக்கு நிருவாகம் சிறப்பாக இருப்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய அரசு

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஜுலை மாதம் நான் தென்காசியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியிலே கலந்துகொண்டபோது, பலதரப்பட்ட மக்களால் பல ஆண்டுகளாக எழுப்பப்பட்டு வந்த புதிய தென்காசி மாவட்ட கோரிக்கை அரசின்பரிசீலனையில் உள்ளது என்று நான் தெரிவித்தேன். அதன்படி, ஜுலை மாதம் 18ஆம் தேதி சட்டப்பேரவை விதி 110இன்கீழ் தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்ற ஒரு அறிவிப்பை நான் சட்டமன்றத்தில் வெளியிட்டேன். அந்த அறிவிப்பிற்கிணங்க, புதிய தென்காசி மாவட்டம் தோற்றுவிக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

இயற்கைஎழில்கொஞ்சும் சுற்றுச்சூழல்கொண்ட மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் தென்காசி மாவட்டம் அமைந்துள்ளது. குற்றால அருவி அருகாமையில் உள்ளதால் அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் ஒரு நகரமாக தென்காசி உள்ளது. இந்த ஊர், பருவமழைத் தூறலுக்கு பெயர் பெற்றது. மக்கள் இதனை சாரல்மழை என்றும் அழைப்பதுண்டு. இதனைக் கொண்டாடும் வகையில் ஆண்டு தோறும் "சாரல் விழா" தமிழ்நாடு அரசால் கொண்டாடப்படுகின்றது.

இந்த மேற்குத் தொடர்ச்சி மலைதான் இப்பகுதியில், பொதிகை மலை என அழைக்கப்படுகிறது. இந்தப் பொதிகை மலையின் பெருமையைக் கூறும்போது, இராமாயணத்தில் நடந்த நிகழ்வு ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

இலங்கைக்குச் சென்று சீதை இருக்கும் இடத்தைக் கண்டறிந்து வரும்படி அனுமனுக்கு இராமன் கட்டளையிடுகிறார். அப்போது, அனுமனுக்கு அறிவுரை கூறும்போது 'அனுமனே, நீ இலங்கைக்குச்

செல்லும்போது, பொதிகை மலை வழியாகச் சென்று விடாதே! உன்னை வெல்லக்கூடியவர் அங்கே இருக்கிறார் என்றார். அதிர்ச்சியடைந்த அனுமன், 'அப்படிப்பட்ட வல்லமை மிக்கவர் யார்? என்று கேட்கிறார்.' "பொதிகை மலைச் சாரலில் எப்போதும் பாடிக் கொண்டிருக்கும் அகத்தியர்தான் அவர். நீ போகும் போது அவர் பாடலில் மயங்கி, அங்கேயே தங்கி விட்டால், சீதை இருக்குமிடத்தை யார் கண்டுபிடிப்பது?" என்றார் இராமர். அப்படிப்பட்ட பழமையும், பெருமையும் மிக்கது இந்த பொதிகை மலை. அப்படிப்பட்ட இசைச்சாரலைத் தன்னகத்தே கொண்ட மாவட்டம்தான் இன்று புதிதாகத் தொடங்கப்பட்ட தென்காசி மாவட்டமாகும்.

முன்னொரு காலத்தில் செண்பக மரங்கள் நிறைந்த செண்பகப் பொழிலை சுற்றியுள்ள பகுதிகளை ஆட்சி செய்த பராக்கிரம பாண்டிய மன்னனின் கனவில் தோன்றிய சிவபெருமான், தெற்கில் உள்ள என்னுடைய பக்தர்கள் சிலர், வடக்கில் உள்ள காசிக்கு பாதயாத்திரை செய்து எளிதாக வந்தடைய முடியவில்லை என்றும், அதனால் அதற்கு நிகரான ஒரு நகரத்தைக் கட்டி தென் பகுதி மக்களும் என் அருள் பெற வழிபாட்டுத் தலம் அமைக்க ஆணையிட்டார். அதனை ஏற்று, பராக்கிரம பாண்டிய மன்னரால் கட்டப்பட்டதுதான் தென்காசி கோயில் ஆகும். இந்தக் கோயிலின் பெயராலேயே இந்த ஊரும் தென்காசி என்று அழைக்கப் பெற்றது.

ஹரியும், சிவனும் ஒன்றே என உலகுக்கு உணர்த்த விரும்பிய கோமதியம்மன், இறைவனை வேண்டி ஒற்றைக் காலில் தவமிருந்தாள். அன்னையின் தவத்தில் மகிழ்ந்த சிவபெருமான், சங்கரநாராயணராக சங்கரன்கோவிலில் காட்சி அளித்தார். இந்த வைபவமே "ஆடித்தபசு" திருவிழாவாக ஆண்டுதோறும் சங்கரன்கோவிலில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டைப்பகுதி பல்வேறு போராட்டங்கள் மூலம் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது.

அப்போராட்டங்களை முன்நின்று நடத்தி தன்னலம் பாராமல் உழைத்த அனைத்து பெரியோர்களையும் நினைவுகூரும் வண்ணம், மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த நவம்பர் 1ஆம் நாள் “தமிழ்நாடு நாள்” விழாவாக சீருடனும், சிறப்புடனும் கொண்டாடியதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

வீரகேரளம் புதூர் பற்றி சிறப்பித்துக் கூற விரும்பிய தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள், “தமிழ் காத்த புலவர்களுக்கு அடைக்கலம் வழங்கிய ஊற்றுமலை ஜமீனைக் கொண்ட வீரகேரளம் புதூர்”, என்றார்.

நெல்லை மாவட்டம் பரந்து விரிந்து இருப்பதால், மக்கள் தங்கள் அடிப்படை வசதிகளுக்காக மாவட்டத் தலைநகரான திருநெல்வேலிக்கு சுமார் ஒன்றரை மணி நேரம் வரை பயணிக்க வேண்டியுள்ளது. பொதுமக்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்வது தவிர்க்க முடியாதது என்பதால், அவர்களுக்கு இந்தப் பயணம் பொருட்செலவு மட்டுமல்லாமல், கால விரயத்தினையும் ஏற்படுத்துகிறது. எனவே, மக்களின் நன்மையைக் கருத்தில்கொண்டும், அவர்களின் **33** ஆண்டுகால கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும் உதயமானது தான்

இந்தத் தென்காசி மாவட்டம். இம்மாவட்டத்தின் சிறப்பு விவரங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- தென்காசி நகரம் இந்த மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கும்.
- இந்த மாவட்டத்தின் பரப்பளவு 2,916.13 சதுர கிலோ மீட்டர்.
- புதிதாக தொடங்கப்பட்ட இந்த தென்காசி மாவட்டத்தின் மக்கள் தொகை 14 இலட்சத்து 7 ஆயிரத்து 627.
- இம்மாவட்டத்தின் வருவாய்க் கோட்டங்கள், தென்காசி மற்றும் சங்கரன்கோவில். புதிதாக சங்கரன்கோவில் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தென்காசி, செங்கோட்டை, கடையநல்லூர், சிவகிரி, வீரகேரளம் புதுர், சங்கரன்கோவில், திருவேங்கடம், ஆலங்குளம் ஆகிய 8 வட்டங்களும், 30 பிர்க்காக்களும், 251 வருவாய் கிராமங்களும் இந்த மாவட்டத்தில் உள்ளடங்கி உள்ளன.
- உள்ளாட்சி நிருவாகத்தைப் பொறுத்தமட்டில், கடையநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில், செங்கோட்டை, தென்காசி ஆகிய நகராட்சிகளும், கடையம், கடையநல்லூர் உட்பட 10 ஊராட்சி ஒன்றியங்களும், அவற்றில் 224 கிராம ஊராட்சிகளும் மற்றும் குற்றாலம், சிவகிரி உட்பட 18 பேரூராட்சிகளும் இந்த மாவட்டத்தில் உள்ளடங்கி உள்ளன.
- சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியின் ஒரு பகுதி, வாசுதேவநல்லூர், கடையநல்லூர், தென்காசி, ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியின் ஒரு பகுதி என 5 சட்டமன்றத் தொகுதிகள் இந்த மாவட்டத்தில் உள்ளடங்கி உள்ளன.

இந்த மாவட்டத்தில் பேரூராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், தாலுக்காக்கள், கோட்டங்கள் என்று இன்றைக்கு உருவாக்கப்பட்டு இந்த மாவட்டம் இன்றையதினம்

தொடங்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

- புகழ்பெற்ற குற்றாலக் குறவஞ்சி எழுதிய திரிகூடராசப்பக் கவிராயர், ரசிகமணி டி.கே.சி., தியாகி சட்டநாதக் கரையாளர், வீரன் வாஞ்சிநாதன் ஆகியோர் இம்மாவட்டத்தில் பிறந்து பெருமைப்படுத்தியவர்கள்.
- சுதந்திர போராட்ட வரலாற்றில் முக்கிய பங்காற்றிய பாளையக்காரர்களில் வீரன் பூலித்தேவனும், தளபதி ஒண்டிவீரனும் முதன்மையானவர்கள். அவர்களையும் பெற்றுத் தந்தது இந்த மாவட்டம்தான்.
- விவசாய பெருங்குடி மக்களின் நலனுக்காக, ராமநதியின் வெள்ள நீரினை தென்காசி, ஆலங்குளம் வட்டங்களில் உள்ள ஜம்புநதியின் பாசனப் பகுதிகளுக்கு திருப்பும் திட்டத்திற்கான நிருவாக ஆணைகள் வழங்கப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.
- செண்பகவல்லி அணைக்கட்டு மற்றும் கன்யாமதகு கால்வாய் சீரமைப்பு தொடர்பாக மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நானே கேரளாவிற்கு சென்று, கேரள முதலமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்து நீராதார பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்து வருகின்றேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கே வருகின்றபொழுது விவசாய சங்கத்தைச் சேர்ந்த ஒரு நிருவாகி செண்பகவல்லி அணைக்கட்டுப் பிரச்சினையை தீர்த்து வையுங்கள் என்று சொன்னார். விவசாயிகளின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு எங்களுடைய அரசு

முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு இதுபோன்ற மக்கள் நலன் காக்கும் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

வேளாண்துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் காரணமாக, கடந்த எட்டு ஆண்டுகளில் ஆறாவது முறையாக மாநிலத்தின் உணவு உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி சாதனை படைத்த அரசு அம்மாவின் அரசு என்பதை நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அகில இந்திய அளவில் ஒப்பந்த சாகுபடி முறைக்கென்று, பிரத்யேகமாக எந்த சட்டமும், எந்த மாநிலத்திலும் இதுவரை இயற்றப்படாத நிலையில், தமிழ்நாடு அரசுதான் முதன் முதலில் தனிச் சட்டம் ஒன்றை வடிவமைத்துள்ளது என்பது தனிச்சிறப்பாகும். இது விவசாயிகளுக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய வரலாற்றுச் சாதனையாகும்.

‘‘கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கு மேல் உயர்கல்வி பயில வகை செய்தல் எனது நோக்கம்’’ என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை துவக்கினார்கள். மாண்புமிகு அம்மா வழியில் வந்த எங்களுடைய அரசும், 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் துவக்கி இன்றைக்கு ஒரு சாதனை படைத்த அரசாக திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இதன் காரணமாக, இன்றைக்கு தமிழகத்திலே உயர் கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்தியாவிலேயே அதிகளவில் உயர் கல்வி பயிலக்கூடிய முதல்

மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை நாம் பெற்றிருக்கின்றோம். கிட்டத்தட்ட 49 சதவிகிதம் பேர் தமிழகத்தில் உயர்கல்வி படித்துக் கொண்டிருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 2011 இல் முடிவு பெற்று, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்திலே நான் உயர்கல்விக்கு முன்னுரிமை கொடுப்பேன் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில், புதிய கல்லூரிகளை உருவாக்கினார்கள். அப்படி உருவாக்கியதன் விளைவு இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையில் இந்திய அளவிலேயே முதல் மாநிலம் என்ற பெருமையைப் பெற்ற அரசு எங்களுடைய அரசு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியிலே நாங்கள் சென்னையில் நடத்தினோம்.

3 இலட்சத்து 431 கோடி ரூபாய் தொழில் முதலீட்டை ஈர்த்தோம்.

304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டோம். இதன் வாயிலாக ஏறக்குறைய 10 இலட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித்தந்த அரசு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மகிழ்ச்சியோடு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்க விரும்புகின்றேன். எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியில் புதிய தொழில்கள் வரவில்லை என்றும், அதனால் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை என்றும் பொய்யான செய்தியை பரப்பி வருகின்றார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற விதத்திலே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2015ஆம் முதன்முதலாக உலக முதலீட்டாளர் மாநாட்டை

சென்னையிலே நடத்தினார்கள். அதன் வழியிலே எங்களுடைய அரசும் சென்னையிலே 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாட்டை நாங்கள் நடத்தியதன் விளைவாக, தொழில் முதலீட்டாளர்கள் வெற்றிகரமாக இன்றைக்கு தமிழகத்திலே தொழில் தொடங்கக்கூடிய நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

நிலத்தடி நீரை செறிவூட்டி வேளாண் பணிகளை மேற்கொள்ள வகை செய்யும் குடிமராமத்துத் திட்டம், அற்புதமான திட்டம். தமிழகம் மட்டுமல்ல இந்தியத் திருநாடே வியக்கின்ற அளவிற்கு குடிமராமத்துத் திட்டத்தை வெற்றிகரமாக நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். தமிழகத்திலே பருவமழை நன்றாகப் பொழிந்திருக்கின்றது. நான் வருகின்ற வழியிலே பார்த்தேன். ஏரிகள், குளங்கள் எல்லாம் நிரம்பியிருக்கின்றன. அந்த ஏரிகள், குளங்கள் முழுவதும் நிரம்புவதற்கு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கண்ட கனவை, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா கண்ட அந்தக் கனவை எல்லாம் நிறைவேற்றுகின்ற விதமாக, இன்றைக்கு நீர் மேலாண்மைத் திட்டம் என்ற அற்புதமான திட்டத்தை தமிழகத்திலே துவக்கி, குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக கிராமங்களில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், ஊரணிகள், குட்டைகள் அனைத்தும் இன்றைக்கு தூர்வாரப்பட்ட காரணத்தினாலே பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் தேங்கி நிற்கின்ற காட்சியை இப்பொழுது நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட சாதனைகளைப் படைத்த அரசு எங்களுடைய அரசு. குடிமராமத்துத் திட்டத்திற்காக முதற்கட்டமாக 2016–2017ஆம் ஆண்டில் ரூபாய் 100 கோடி ஒதுக்கியிருந்தோம். 2017–2018ஆம் ஆண்டில் அம்மாவினுடைய அரசு ரூபாய் 328 கோடியை ஒதுக்கியது. 2018–2019ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட ரூபாய் 500 கோடி ஒதுக்கியிருக்கின்றோம். அந்தப்

பணிகள் எல்லாம் முடிவுற்றுள்ளன. இன்னும் சில பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

வருகின்றகாலத்தில் விடுபட்டுள்ள ஏரிகளும் குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்டு அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து தமிழகத்தில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகள் அனைத்தும் தூர்வாரப்படும் என்ற செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதனுக்கு உயிர் எப்படி முக்கியமோ அதேபோல், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், பொதுமக்கள் குடிப்பதற்கும் நீர் மிக முக்கியம். ஆகவே, உயிராக இருக்கின்ற நீரை சேமிப்பது நமது தலையாய கடமை. அதுதான் எங்களுடைய இலட்சியம். அந்த இலட்சியத்தில் நாங்கள் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கின்றோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, கிராமங்களில் சிறு குளங்கள், ஊரணிகள், குட்டைகள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அந்த ஊரணிகள், குளங்கள், குட்டைகளை எல்லாம் தூர்வார வேண்டுமென்பதற்காக, ரூபாய் 1,250 கோடி நிதி ஒதுக்கிய ஒரே அரசு அம்மாவின் அரசு. இதன் விளைவாக, ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படுகின்ற ஏரிகள் தூர்வாரப்பட்டு தண்ணீர் தேங்கி, குடிப்பதற்கு, விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. குடிமராமத்துத் திட்டத்தை நிறைவேற்றிய ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை அனைத்துத் தமிழர்களின் இல்லங்களிலும், சிறப்பாக தைப் பொங்கல் கொண்டாட வேண்டுமென்பதற்காக கடந்த ஆண்டு தைப்பொங்கலன்று எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கிய ஒரே அரசு அம்மாவின் அரசு. அதிலும் நாங்கள்தான் சாதனை படைத்தோம்.

இதைக்கூட பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். ஆனால், நீதியரசர்கள் ஏழைகளுக்குக் கொடுப்பதைத் தடுக்க வேண்டாமென்று நல்ல தீர்ப்பை வழங்கிய காரணத்தினாலே அந்த ஆண்டு தைப் பொங்கல் திருநாளை தமிழக மக்கள் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

இன்றைக்கு மண்வளம் குன்றிப்போயிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு பல்வேறு இடங்களில் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படுகின்ற பிளாஸ்டிக் பல்வேறு இடங்களில் குவியல், குவியலாக இருக்கின்றன. தமிழகத்தில் இப்படிப்பட்ட நிலைகள் மாற வேண்டும் என்பதற்காக ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படுகின்ற நெகிழியை தடைசெய்து அதை நடைமுறைப்படுத்திய அரசு அம்மாவின் அரசு. இன்றையதினம், பாரதப் பிரதமர் அவர்களும், இந்தியா முழுவதும் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழியை தடை செய்ய வேண்டும், அதை பயன்படுத்த வேண்டாம் என்று அறிவித்திருக்கின்றார்கள். கேரள முதலமைச்சர் அவர்கள், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி

கேரள மாநிலத்தில் தடை செய்யப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். நெகிழித் தடையை நாம் முதன்முதலாக கொண்டுவந்ததைப் பின்பற்றி, இந்தியாவிற்கு ஒரு வழிகாட்டியாக அமைந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். வருங்கால சந்ததியினரின் நலனைக் கருத்தில்கொண்டு, நெகிழி ஒழிப்பை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்று இந்தத் தருணத்தில் உங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

2017–2018 முதல் 2019–2020 முடிய மூன்றாண்டுகளில், சட்டமன்ற விதி எண். 110இன் கீழ் தமிழகத்தில் பல்வேறு நலத் திட்டங்களை தொடங்க வேண்டும் என்பதற்காக அறிவிக்கப்பட்ட 453 அறிவிப்புகளில் 368 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிட்ட ஒரே அரசு அம்மாவின் அரசு. இதுபோன்ற புதிய திட்டங்கள் வாயிலாக நாட்டு மக்களுக்கு நன்மைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் சட்டமன்ற விதி எண்.110இன் கீழ் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளையும் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் செல்கின்ற பக்கம் எல்லாம் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருந்தபொழுதும், நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து மூன்றாண்டு காலத்திலும் சட்டப்பேரவையில் சட்டமன்ற விதி எண்.110இன் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள் என்னவாயிற்று என்று கேட்கிறார். அதற்கெல்லாம் விளக்கம் அளிக்கின்ற விதத்திலே, நாட்டு மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இந்தச் செய்தியை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். 453 அறிவிப்புகள் நான் வெளியிட்டேன், அதில் 88 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன, 280 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் உள்ளன. 74 அறிவிப்புகளுக்கு, திட்டப் பணிகளுக்கான

ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 9 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன, 2 அறிவிப்புகள் சம்பந்தமாக வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. ஆனால், வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் இன்றைக்கு தவறான பிரச்சாரத்தை தமிழகத்தில் பரப்பி வருகின்றார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற விதமாகத்தான் இந்த விளக்கத்தை நான் இங்கே தெரிவித்திருக்கின்றேன்.

நான் பல்வேறு மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செல்கின்றபோது அங்கே இருக்கின்ற தாய்மார்கள், ஏழை எளிய மக்கள் என்னிடத்திலே கொடுக்கின்ற கோரிக்கை மனுக்களில் பெரும்பாலானவை முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டும், பட்டா மாறுதல் செய்துதர வேண்டும் என்பதுதான். இதற்கெல்லாம் தீர்வு காண வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தை நான் அறிவித்தேன். அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர்களும், மாவட்ட அமைச்சர்களும் கிராமங்களுக்கேசென்று, மனுக்களைப் பெற்றுத் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டதன்அடிப்படையில், தமிழகம் முழுவதும் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக 9 இலட்சத்து 72 ஆயிரத்து 216 மனுக்கள் வரப்பெற்றன, இது வரலாற்றுச் சாதனை. ஏழை, எளிய மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்று எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். ஆகவே, இதை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகக் கருதுகின்றோம். பல ஆண்டுகாலமாக தீர்க்கப்படாத பிரச்சினைகளை தீர்த்து வைக்க எங்களுடைய அரசு முயற்சி செய்திருக்கிறது, அதன் வாயிலாக பெறப்பட்ட 9,72,216 மனுக்களில், தகுதியான 5,11,186 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. 23,538 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக் கொள்ளப்படாத 4,37,491 மனுக்களை மீண்டும் பரிசீலனை

செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கிறேன். அதில் தகுதியான மனுக்கள் இருந்தால், அவற்றிற்கும் நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டுமென்றும், ஏழை, எளிய மக்களால் கொடுக்கப்பட்ட மனு எந்தக் காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டது என்ற விவரத்தையும் மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டுமென்ற உத்தரவையும் நான் வழங்கியிருக்கின்றேன்.

முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான சொத்து மதிப்பு ரூ.50,000க்குள் இருக்கவேண்டும், அதற்குமேல் சொத்து இருந்தால் முதியோர் உதவித்தொகை நிராகரிக்கப்படும் என்ற விதிமுறைகள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான சொத்து மதிப்பை ரூ.50,000லிருந்து ரூபாய் 1 இலட்சமாக உயர்த்தி, அறிவிப்பைத் தந்து அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கின்றோம். ஆகவே, ஏழை, எளிய மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற அரசாக எங்களுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விழைகின்றேன். முதலமைச்சர் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக தென்காசி மாவட்டத்தில் மட்டும் 4,433 மனுக்கள் பெறப்பட்டன, இதில் 2,835 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தீர்வு காணப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் மாவட்ட மக்கள் மருத்துவ வசதி பெறவேண்டும் என்பதற்காக தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை கொண்டு வரவேண்டுமென்று இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்தார்கள். அம்மா வழியில் வந்த எங்களுடைய அரசு அதை நிறைவேற்றுவதற்காக முழு மூச்சோடு பாரதப் பிரதமர் அவர்களோடு தொடர்பு கொண்டு, பல நேரங்களில் நான் நேரடியாக பாரதப் பிரதமரை சந்திக்கின்றபொழுதெல்லாம்

எடுத்துச் சொன்னதன் விளைவாக, மதுரை மாவட்டம், தோப்பூரில் ரூபாய் 1,500 கோடி மதிப்பீட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை பாரதப் பிரதமர் அவர்களின் திருக்கரங்களால் துவங்க அடிக்கல் நாட்டப்பட்டது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற மிகப்பெரிய சாதனைகளை அம்மாவின் அரசு நிகழ்த்திக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நீங்கள் பாரதீய ஜனதா கட்சியோடு கூட்டணி வைத்து நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டீர்கள், மத்திய அரசிடமிருந்து எந்தத் திட்டத்தை பெற்றுத் தந்தீர்கள் என்று இன்றைக்கு பலர் கேட்கின்றார்கள். நாங்கள் கூட்டணி வைத்து ஐந்து மாதங்கள் தான் ஆகிறது. அந்த ஐந்து மாத காலத்தில், தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தியதன் காரணமாகவும், பாரதப் பிரதமரிடத்தில் நேரடியாக நான் கூறியதன் காரணமாகவும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சரிடத்தில் பலமுறை வலியுறுத்தியதன் விளைவாகவும், நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் அதைத் தொடர்ந்து பின்பற்றியதன் காரணத்தினாலும், தமிழகத்தில், ஒரே நேரத்தில், திருப்பூர், நீலகிரி, இராமநாதபுரம், திண்டுக்கல், நாமக்கல், விருதுநகர் ஆகிய இடங்களில் 6 மருத்துவக் கல்லூரிகளைப் பெற்றுத் தந்த ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. இந்த 6 புதிய மருத்துவக் கல்லூரிகளைத் துவக்கியதன் விளைவாக 900 மாணவர்கள் ஒரே நேரத்தில் மருத்துவப் படிப்பு படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்த ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. மேலும், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், திருவள்ளூர் ஆகிய 3 மாவட்டங்களிலும் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதி வழங்க வேண்டும் என்றும் அதற்குண்டான நிதியை ஒதுக்க வேண்டுமென்றும் பாரதப் பிரதமரிடத்திலும், மத்திய சுகாதார அமைச்சரிடத்திலும் கோரிக்கை வைத்திருக்கின்றோம். அதுவும் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. நாங்கள் மத்திய

அரசோடு இணக்கமாக இருந்த காரணத்தினால் தான் இவ்வளவு பெரிய திட்டங்களை நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம்.

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்திய அரசுக்கு அடிமை அரசு என எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு பொய்யான பிரச்சாரத்தை சொல்லி வருகிறார்கள். அவர்கள் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியிலே இருந்தார்கள், அப்பொழுதுதான் அடிமையாக இருந்தார்கள். தமிழகத்திற்கு அவர்கள் எந்தத் திட்டத்தைப் பெற்றுத் தந்தார்கள்? எவ்வளவு நிதியைப் பெற்றுத் தந்தார்கள்? எதுவுமே இல்லை. குடும்பம்தான் வளர்ந்தது, குடும்பம்தான் பதவி சுகத்தை அடைந்தது, குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகாரத்திற்கு வர முடிந்தது. ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அப்படியல்ல. தமிழகத்திற்கு நன்மை பயக்கின்ற திட்டத்தை ஆதரிப்போம், தமிழக மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் திட்டம் எதுவாக இருந்தாலும், அதை எதிர்க்கக்கூடிய மனநிலை இருக்கும் ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதை நாங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, எங்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பை பயன்படுத்தி, மத்திய அரசிடத்தில் இணக்கமான சூழ்நிலையை உருவாக்கி, பாரதப் பிரதமர் அவர்கள் இன்றைக்கு பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி வழங்கி, அந்தத் திட்டங்களெல்லாம் நடைமுறைப்படுத்துகின்ற காட்சியை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு தவறான பிரச்சாரத்தை, பொய்யான பிரச்சாரத்தை மக்களிடத்தில் பரப்பி வருவதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற விதமாக இந்தத் திட்டங்களெல்லாம் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது என்பதை புள்ளிவிவரத்தோடு குறிப்பிட விரும்புகின்றேன்.

கீழடி கிராமத்தில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் அகழாய்வு செய்து கண்டெடுக்கப்பட்ட 6,720 தொல் பொருட்களை பொதுமக்கள் பார்வையிட்டு பயனடையும் வகையில், உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் கீழடி அகழாய்வு தொல் பொருட்கள் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை காட்சிப்படுத்த சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கொந்தகை கிராமத்தில் ஒரு புதிய உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் 12 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். எதை, எந்த நேரத்தில் செயல்படுத்தவேண்டும் என்று எண்ணிப் பார்த்து செயல்படுத்துகின்ற ஒரே அரசு, அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்று பொதுப்பணித் துறையின் சார்பில் சங்கரன்கோவில் தாலுகா, பனையூர் கிராமம், நிசபநதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணை உட்பட 12 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள், பள்ளிக்கல்வித் துறை சார்பில் 3 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மேல்நிலைப் பள்ளி உட்பட 28 கோடியே 68 இலட்சம் ரூபாய்

மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை நான் இன்று திறந்து வைத்துள்ளேன்.

பொதுப்பணித் துறை சார்பில் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரியின் கூடுதல் கட்டடம் உட்பட 12 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள 6 பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை 34 ஆயிரத்து 559 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 47,655 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன என்பதனையும், 24 ஆயிரத்து 90 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7,909 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன என்பதனையும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதையெல்லாம் எதற்காக சொல்கிறேனென்றால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து, நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை தமிழ்நாட்டிற்கு செய்த திட்டங்கள், அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கினோம், எவ்வளவு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது என்ற செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்திருக்கின்றேன். இதையெல்லாம் எதிர்க்கட்சிகள் தெரிந்துகொண்டு பேசவேண்டும் என்றும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

திருநெல்வேலியில் நடைபெற்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவின் போது அறிவிக்கப்பட்ட 47 அறிவிப்புகளில், இதுவரை 8 திட்டங்கள் முடிக்கப்பட்டும், 36 பணிகளுக்கான அரசாணைகள் வெளியிடப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலும் உள்ளன. 3 அறிவிப்புகள் மட்டும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட மக்களுக்கும் நலன் பயக்கும் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருவதை, திட்டங்களின் பயன்களை நுகர்ந்த மக்களாகிய நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஆனால் ஒரு சிலர், இந்த அரசைப் பற்றி தினந்தோறும் ஏதாவது குறைகளை சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். இங்கு ஒரு கதை எனக்கு ஞாபகம் வருகிறது.

ஓர் ஊரில் ஒரு முனிவர் இருந்தார். ஒரு நாள் அவரைப் பார்ப்பதற்காக ஒருவன் வந்தான். வந்தவன், "நான் ஒரு பாவி. என் பாவத்திற்கு மன்னிப்பு கிடைக்குமா ?" என்று முனிவரிடம் கேட்டான். அவன் மீது இரக்கம் கொண்ட முனிவர், "நீ என்ன பாவம் செய்தாய் என்று சொல் பிறகு மன்னிப்பை பற்றி பேசலாம்", என்று சொன்னார்.

"நான் பிறரைப் பற்றி அவதூறு பேசினேன், பல காலமாக இப்படி அவதூறு பேசிக் கொண்டிருக்கிறேன், எனக்கு மன்னிப்பு கிடைக்குமா ?" என்று கேட்டான். "உன் வீட்டில் தலையணை இருக்கிறதா ?" என்று முனிவர் கேட்டார்.

பாவமன்னிப்பைத் தேடி வந்தவன் குழம்பிப் போனான். பாவமன்னிப்பைக் கேட்டால், உன் வீட்டில் தலையணை இருக்கிறதா என்று கேட்கிறாரே முனிவர் என்று குழப்பம் அடைந்தான்.

வீட்டிலிருந்த தலையணை எடுத்து வந்த அவனிடம் அதிலுள்ள பஞ்சுகளை நாலாபக்கமும் பறக்கவிடு என்றார் முனிவர். அவர் கூறியபடி அவனும் தலையணையில் உள்ள பஞ்சுகளை நாலா பக்கமும் பறக்க விட்டான். பின்பு முனிவரிடம் சென்று, "நீங்கள் கூறியபடி எனது பாவத்திற்கு பரிகாரம் செய்து விட்டேன். இப்பொழுது மன்னிப்பு அருளுங்கள்" என்று கேட்டான். "பஞ்சை பறக்க விட்டால் பாவம் தீரும் என்று எப்பொழுது நான் சொன்னேன் ? பறக்க விட்ட பஞ்சை எல்லாம் மீண்டும் எடுத்துவா – அப்போதுதான்

உன் பாவம் தீரும்'' என்று முனிவர் சொன்னார். பதறிப்போன அந்த மனிதன், ''நாலா பக்கங்களிலும் பறந்துபோன பஞ்சை நான் எப்படி சேகரிப்பேன். பறக்க விடப்பட்ட பஞ்சை ஒன்றாக சேர்ப்பது இயலாத காரியம்'' என்று குழம்பிப் போனான்.

''பறக்க விடப்பட்ட பஞ்சை எப்படி மறுபடியும் சேகரிக்க முடியாதோ, அப்படித்தான் நீ பரப்பி இருக்கிற அவதூறுகளையும் உன்னால் திரும்பப் பெற இயலாது. அதனால் உனக்கு பாவ மன்னிப்பு என்றைக்கும் கிடையாது, நீ போகலாம்'' என்று சொல்லி முனிவர் அவனை அனுப்பி விட்டார்.

அந்த மனிதனைப் போல மாண்புமிகு அம்மா அவர்களை பற்றியும், மாண்புமிகு அம்மாவின் அரசைப் பற்றியும் குறை கூறியவர்கள் அன்றும் இருந்தார்கள். இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வாறு குறை கூறுவதையும், அவதூறாக பேசுவதையும் தவிர, உருப்படியான காரியம் எதையும் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் செய்யவில்லை. எதிர்க்கட்சியாக இருக்கும் போதும் செய்வதில்லை. எனவே தான், பாவ மன்னிப்பு அளிக்க முடியாது என்று முனிவர் கூறியது போலவே, மக்களும் அவர்களுக்கு மன்னிப்பு அளிக்காமல் தகுந்த தண்டனையை தற்போது நடந்து முடிந்த இடைத்தேர்தல்கள் மூலம் அவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் செல்கின்ற இடங்களிலெல்லாம் இந்த அரசு என்ன சாதனை படைத்திருக்கிறது ? நாட்டு மக்களுக்கு என்ன திட்டங்களை கொடுத்திருக்கின்றது ? இந்த அரசினால் மக்களுக்கு என்ன பயன் ? என்று விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள், பழி சுமத்திக் கொண்டிருக்கின்றார்கள். அப்படி பழிசுமத்துபவர்களுக்கும், பொய்பிரச்சாரம் செய்கின்ற வர்களுக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு என்னென்ன திட்டங்களை தமிழகத்தில் நடைமுறைப்படுத்தியிருக்கிறது என்ற விவரங்களை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த பெண்கள் திருமண வயதை அடைகின்றபொழுது, அந்தக் குடும்பத்தில் நிலவுகின்ற பொருளாதார சூழ்நிலையின் காரணமாக திருமணம் தடைபடுகின்றது. எனவே அவர்களின் திருமணத்தை அரசு உதவியின் மூலமாக உரிய நேரத்தில் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தாயுள்ளம் கொண்ட இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தை துவக்கினார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக 2011–2012 முதல் 2018–2019 நிதியாண்டு வரை 11,45,910 பயனாளிகளுக்கு சுமார் ரூபாய் 1,500 கோடி மதிப்பிலான 5,260.72 கிலோ கிராம் தங்கம் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. இதன் மூலம் இந்த அரசு ஏழை, எளிய மக்களின் மீது எவ்வளவு அன்பு கொண்டுள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திருமண உதவித் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு சுமார் ரூபாய் 3,955 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக தாலிக்குத் தங்கத்துடன் திருமண உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி ரூபாய் 5,455 கோடியாகும். இந்தத் திட்டத்தின் வாயிலாக ஏழை, எளிய மக்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இதைவிட சிறந்த திட்டமென்று எது இருக்கின்றது ? இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மனதில் உதித்த இந்தத் திட்டம், இந்திய அளவிலே ஒரு சிறப்பான திட்டமாகும். அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்ற அரசு அம்மாவினுடைய அரசு. 2019–2020ஆம் ஆண்டில் 1,04,795 பயனாளிகளுக்கு 838.36 கிலோ கிராம் தங்கம் சுமார் ரூபாய் 291.20 கோடி மதிப்பில் வழங்கியிருக்கின்றோம். அதற்காக திருமண உதவித் திட்டத்தின் கீழ் ரூபாய் 415.21 கோடி நிதியுதவி வழங்கியிருக்கின்றோம்.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்றப் பொதுத் தேர்தலின் போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தேர்தல் அறிக்கையில், நான் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் உழைக்கும் மகளிருக்கு மானிய

விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். ஒரு இருசக்கர வாகனத்திற்கு ரூபாய் 20,000 மானியமாக வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அம்மா வழியில் வந்த அம்மாவின் அரசு, அது போதாது என்று கருதி, அம்மா இருசக்கர வாகனம் வாங்குவதற்கு ரூபாய் 25,000 மானியம் வழங்கியது. அதன் வாயிலாக ரூபாய் 362 கோடி மதிப்பீட்டில் 1,54,592 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கி சாதனை படைத்த அரசு எங்களுடைய அரசு.

ஏழை, எளிய மக்கள் தங்களுடைய கிராமங்களிலேயே தகுந்த சிகிச்சை பெறுவதற்காக 254 ஆரம்ப சுகாதார நிலையங்களை துவக்கி வைத்த அரசு எங்களுடைய அரசு. அதேபோல 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன.

கடந்த 7 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் 6. அதேபோல சிவகங்கை, திருவண்ணாமலை, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கரூர், கோவை–ESI மற்றும் புதுக்கோட்டை, இவையெல்லாம் தற்போது தொடங்கப்பட்டது.

கடந்த 8 ஆண்டுகளில் 2.38 இலட்சம் பயனாளிகள் அம்மா சஞ்சீவி கிட் பெற்றிருக்கிறார்கள். ஏழை, எளிய தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகள் கூட நலமோடு, சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள், 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் என்ற அற்புதமான திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் மூலம் 17.70 இலட்சம் பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இந்த மண்ணிலே பிறக்கின்ற குழந்தைகள், அம்மாவினுடைய நலத் திட்டங்களை பெறுகின்றது என்று சொன்னால் எந்தளவிற்கு மக்களுடைய பிரச்சினைகளை அம்மாவின் அரசு அணுகுகின்றது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் **60.48** இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூபாய் **5,236.88** கோடி நிதியுதவி வழங்கியிருக்கின்றோம். இதன் காரணமாக, குழந்தை பேறுகாலத்தில் உயிரிழக்கும் தாய்/சேய் விகிதத்தில் மருத்துவத் துறையில் **2030** இல் எய்த வேண்டிய இலக்கினை இப்போதே தமிழ்நாடு அடைந்திருக்கின்றது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியாவிலேயே தமிழகம் தொடர்ந்து முதலிடம் பெற்றுவருவதோடு, உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக நான்காவது முறையாக பரிசு பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

வேளாண்மைத் துறையில், தொடர்ந்து “கிருஷி கர்மான்” விருதை பெற்றுக் கொண்டிருக்கின்றோம். விலையில்லா ஆடுகள், விலையில்லா கறவை மாடுகள் ஆகியவைகள் வழங்குவதில் சாதனை படைத்திருக்கின்றோம். கிராம மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துகின்ற அரசு எங்களுடைய அரசு என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

வேளாண் மக்களின் உபதொழிலாக இருப்பது கால்நடை வளர்ப்பு. கால்நடைகளுக்கு நோய்வாய்ப்பட்டால், அதற்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு, அம்மா ஆம்புலன்ஸ் சேவையை துவக்கியதன் மூலமாக தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. கால்நடைகள் நோய்வாய்ப்பட்டால், குறிப்பிட்ட தொலைபேசிக்கு நீங்கள் தொடர்பு கொண்டால், உடனடியாக அம்மா ஆம்புலன்ஸ் வந்து அந்த கால்நடைக்கு சிகிச்சை அளித்து குணமளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்த அரசு அம்மாவினுடைய அரசு.

கல்வித் துறை சிறக்க வேண்டும் என்பதற்காக கடந்த 8 ஆண்டுகளில் 43,584 புதிய ஆசிரியர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர் காலிப் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டிருக்கின்றன. புதிதாக 248 ஆரம்பப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 117 துவக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 1,079 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக, உயர்கல்வி படிப்போரின் எண்ணிக்கை உயர்ந்து இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

கிராமங்களில் வாழ்கின்ற ஏழை, எளிய குடும்பங்களிலிருந்து வருகின்ற மாணவ, மாணவிகள் சிறந்த மாணவர்களாக, அறிவுபூர்வமான மாணவர்களாக இருப்பார்கள். ஆகவே, உயர்கல்வி படிப்பதற்கும், சிறந்த கல்வி கற்பதற்கும் மடிக்கணினி அவசியம் தேவை. ஆனால், பொருளாதார சூழ்நிலை காரணமாக அந்த மடிக்கணினி வாங்க முடியாத ஒரு சூழ்நிலை. ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மாணாக்கர் அறிவுபூர்வமான, விஞ்ஞானக் கல்வி பெற வேண்டுமென்பதற்காக ரூபாய் 12 ஆயிரம் மதிப்பிலான மடிக்கணினியை 48,54,134 மாணாக்கர்களுக்கு ரூபாய் 6857.52 கோடியில் வழங்கிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. உலகளவில் எங்கும் இதுபோன்று விலையில்லா மடிக்கணினி கொடுப்பது கிடையாது.

எங்களுடைய அரசு உள்ளாட்சித்தேர்தலை தள்ளிப் போடுவதற்காக பல்வேறு சூழ்ச்சிகளை செய்து கொண்டிருப்பதாக பத்திரிகை மற்றும் ஊடகங்களின் வாயிலாக ஒரு தவறான செய்தியை எதிர்க்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர். தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் ஆரம்பித்த நாள் முதல் 1996ஆம் ஆண்டு வரை கவுன்சிலர்கள் மூலமாகத்தான் மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும்

பேரூராட்சித் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் முறை நடைமுறையில் இருந்து வந்தது.

1996ஆம் ஆண்டு வரை மன்ற உறுப்பினராக தேர்தெடுக்கப்பட்டவர்கள் தான் மாநகர மேயர், நகராட்சி சேர்மன், பேரூராட்சித் தலைவர் ஆகியோரை தேர்ந்தெடுத்தனர். அந்த நடைமுறை தான் பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால், திரு.கருணாநிதி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், திரு.ஸ்டாலின் சென்னை மாநகராட்சியின் மேயராக வரவேண்டுமென்பதற்காக 1996ஆம் ஆண்டு நேரடியாக, மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் முறையை கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழகம். மீண்டும், 2006ஆம் ஆண்டு அதனை மாற்றியமைத்ததும் திராவிட முன்னேற்றக் கழகம் தான். அப்பொழுது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர் இப்பொழுது இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள். அப்பொழுது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு.ஸ்டாலின் அவர்கள் 31.08.2006 அன்று மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறைக்கு பதில், மறைமுகமாக தேர்ந்தெடுக்க சட்டமுன்வடிவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தினார். இன்றைக்கு மறைமுகத் தேர்தலை எதிர்த்து கண்டனம் தெரிவிக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அன்றைய தினம் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து மறைமுக தேர்தல் கொண்டு வரவேண்டுமென்பதற்காக சட்டமன்றத்திலே அந்தத் தீர்மானத்தை அறிமுகப்படுத்தினார். 31.08.2006 அன்று திரு.ஸ்டாலின் கூறுகையில், அசாம், குஜராத் என்று பல மாநிலங்களைப் பட்டியலிட்டு அங்கெல்லாம் மறைமுகத் தேர்தல் மூலம் தான் தலைவரை தேர்ந்தெடுக்கின்றார்கள் என்று கூறி தீர்மானத்தை நிறைவேற்றக் கோரினார். மேலும், திரு.ஸ்டாலின்

அவர்கள் 31.08.2006 அன்று தீர்மானத்தின் மீது பேசும்போது "மேயர் ஒரு கட்சியைச் சார்ந்தவராகவும், அதேபோல், மெஜாரிட்டியாக வரக்கூடிய உறுப்பினர்கள் வேறு கட்சியைச் சார்ந்தவர்களாகவும் வந்துவிடுகின்ற காரணத்தினால் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை அவையிலே வைத்து, மன்றக் கூட்டத்திலே வைத்து, அதை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலைக்கு அது தள்ளப்படுகிறது. அதனால் மக்களுடைய பிரச்சினைகள் தேக்கம் அடையக்கூடிய நிலை இருக்கின்ற காரணம் ஒரு பக்கம், மேலும், உதாரணத்திற்கு விழுப்புரம், விருத்தாச்சலம் நகராட்சிகளில், 2001 தேர்தல் நடந்ததற்குப் பிறகு இதுவரையில் ஆகஸ்டு 2006 வரை அந்த இரண்டு நகராட்சிகளிலும் முறையாக கூட்டங்கள் நடைபெறவில்லை, முன்வைத்து நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானங்களும் அங்கே முழுமையாக நிறைவேற்றப்பட முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிலைகளையெல்லாம் கருத்திலே கொண்டுதான் இப்பொழுது இந்த முறையை நாங்கள் அமல்படுத்தியிருக்கின்றோம்" என்று கூறி தீர்மானத்தை நிறைவேற்றித் தரக் கோரினார். 2019ஆம் ஆண்டிலும், பெங்களூர்,

மும்பை, ஹைதராபாத் போன்ற நகரங்களில் மறைமுகத் தேர்தல் மூலம் தான் மேயர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 2016 மாநகராட்சி மேயர் பதவியில் மறைமுக தேர்தல் நடத்துவது குறித்து 22.06.2016 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமுன்வடிவு தீர்மானத்தில் திமுக எம்.எல்.ஏ. மா.சுப்பிரமணியம் 23.06.2016 பேசும்பொழுது குறுக்கிட்டுப் பேசி இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறியதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் 23.06.2016 சட்டமன்றத்தில் பேசிய அந்த உரை: “மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கொள்கை முடிவு எடுக்கும்பொழுதும், பின்னர் அதை மாற்றிக்கொள்வதும் மாநில அரசின் உரிமை. ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில்கூட அவர்கள் ஒரு கொள்கை முடிவு எடுத்து, பின்னர் அதை மாற்றியிருக்கின்றார்கள். உதாரணத்திற்கு, மீத்தேன் எரிவாயு திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதே திமுக அரசு தான். இப்பொழுது அதை அவர்களே எதிர்ப்பதாகக் கூறுகிறார்கள். அது கொள்கை முடிவில் ஏற்பட்ட மாற்றமில்லையா ? அதுபோலத்தான் ஏற்கெனவே எங்கள் ஆட்சியில் ஒரு முடிவு எடுத்திருந்தாலும் இன்றைக்கு ஒரு கொள்கை மாற்றம் ஏற்படுகின்றது” என்ற விளக்கத்தை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அன்றே சட்டமன்றத்தில் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றார்கள். அம்மா அவர்கள் கூறியது: மீத்தேன் மட்டும். ஆனால், அவர்கள் மத்தியில் ஆட்சியில் இருக்கும்பொழுது கையெழுத்துப் போட்டுவிட்டு இங்கு இரட்டை வேடம் போடுவதை நாம் சொல்லிக் கொண்டேயிருக்கலாம். மீத்தேன், இயற்கை எரிவாயு அனுமதி, நீட் தேர்வு, ஜல்லிக்கட்டுக்குத் தடை, நியூட்ரினோ ஆய்வுக்கு அனுமதி போன்ற மக்கள் நலனுக்கு எதிரான கொள்கை முடிவுக்கு அங்கே மத்தியில் அனுமதி தந்துவிட்டு, தற்போது மக்கள் அதனை மறந்துவிட்டார்கள் என்று எதிர்ப்பு நாடகம் நடத்துகிறார்கள். ஆகவே, எங்களைப் பொறுத்தவரைக்கும், உள்ளாட்சித் தேர்தல் நடைபெற வேண்டுமென்பதுதான் எண்ணம்.

அதை நடைமுறைப்படுத்துவது மாநிலத் தேர்தல் ஆணையம். உச்சநீதிமன்றத்தில் மாநிலத் தேர்தல் ஆணையம் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கின்றது. ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரைக்கும் தேர்தல் நடக்க வேண்டும், உறுதியாக நடக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்தே இல்லை என்பதை தெளிவுபடுத்துகின்றேன்.

அதுமட்டுமல்ல, தோல்விபயத்தால்தான் இப்படிப்பட்ட மாற்றத்தைஏற்படுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், நீங்கள் அப்பொழுது கொண்டுவந்தது சரியா? கிராமப்புறங்களில் சொல்வதைப்போல "மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்" என்று திரு.ஸ்டாலின் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர்கள் கொண்டு வந்தால் அது சரியான திட்டம் என்கிறார்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவந்தால் அது தவறான திட்டம் என்கிறார். ஆகவே, வேண்டுமென்றே, பொய்யான, தவறான செய்தியை பரப்பி, உள்ளாட்சித் தேர்தலை தடை செய்வதற்கு திரு.ஸ்டாலின் முயற்சி செய்து கொண்டிருக்கிறார். அது நிச்சயம் முடியாது. உச்சநீதிமன்றம் அளிக்கின்ற ஆலோசனையின்பேரில் மாநில தேர்தல் ஆணையம் இந்தத் தேர்தலை நடத்தும் என்று இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள அம்மா அரசின் சாதனைகள் பலவற்றை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

வீரவாஞ்சிநாதன் மற்றும் மாவீரன் ஒண்டிவீரன் ஆகியோருக்கு தமிழக அரசு சார்பில் புதிதாக நினைவு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாநகராட்சியில் அம்ருத் திட்டத்தின் கீழ், ரூபாய் 289 கோடியில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பல்வேறு இடங்களில் தடுப்பணை கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளீர்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், அரசின் பரிசீலனையில் இருக்கின்ற சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

திருநெல்வேலிமாவட்டம், அம்பாசமுத்திரம்வட்டம், திருப்புடைமருதூர் கிராமம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திருநெல்வேலிமாவட்டம், திருநெல்வேலிவட்டம், இராஜவள்ளிபுரம் கிராமம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூபாய் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திருநெல்வேலிமாவட்டம், பாளையங்கோட்டைவட்டம், திருவண்ணநாதபுரம்கிராமம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே சுமார் ரூபாய் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர் முழுதையும் தடுத்து நிறுத்தி, நிலத்தடி நீர் உயர வேண்டுமென்ற அடிப்படையில் ஆங்காங்கே தடுப்பணைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதன் மூலமாக, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே மூன்று இடங்களில் தடுப்பணை கட்ட அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்ற விவரத்தை சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டம், சூளங்கோடு கிராமம் அருகே பழையாற்றிலிருந்து வரும் நீர் முழுதும் உபரியாக கடலில் கலக்கின்றது. ராதாபுரம் கால்வாய், தோவாளை கால்வாயின்

கடைமடைப் பகுதிக்கு போதுமான நீர் வரத்து கிடைக்கவில்லை. ராதாபுரம் கால்வாய் பகுதியில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்கான தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. எனவே, தற்போது பழையாற்றின் கடைசி அணைக்கட்டிலிருந்து உபரியாக கடலுக்குச் செல்லும் 922 மில்லியன் கனஅடி நீரில் 645 மில்லியன் கனஅடி நீரை நீரேற்று மூலம் ராதாபுரம் கால்வாய் பகுதியில், நிலத்தடி நீர்மட்ட உயரவும், மேலும் ராதாபுரம் கால்வாயின் ஆயக்கட்டுப் பகுதியான 15,980 ஏக்கர் நேரடிப் பாசனமும், 1,020 ஏக்கர் மறைமுகப் பாசனமும் மற்றும் 52 குளங்கள் பாசன வசதி பெறும் இத்திட்டத்தில் 2 மின் மோட்டார் பம்பு மூலம் தண்ணீர் நீரேற்றம் செய்யப்படும். இந்தத் திட்டத்திற்குத் தேவையான மின்சாரம் சூரிய மின்சக்தி மூலம் பெறப்படும். இத்திட்டத்தை செயலாக்கம் செய்வதற்கு நிலஎடுப்புப் பணி ஏதும் தேவையில்லை. இத்திட்டம் தோராயமாக ரூபாய் 170 கோடியில் நிறைவேற்றப்படும்.

தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம் நில எடுப்புப் பிரச்சினைகள் இருந்த காரணத்தினாலே காலதாமதம் ஆயிற்று. நிலை ஒன்று, நிலை இரண்டு ஆகிய இரண்டிலும் சுமார் 94 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

2020க்குள் முதல் மற்றும் இரண்டாம்நிலை முழுவதும் நிறைவேற்றப்படும். நிலை மூன்றில் 48 பணிகள் முடிக்கப் பட்டிருக்கின்றன. நிலை நான்கில் பணி துவங்கப்பட்டு, டிசம்பர், 2020இல் முடிக்கப்படும். தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம் 2020ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்பட்டு தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 561.88 கோடி மாநில அரசின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 32 கிராமங்களும் 13,481 ஹெக்டேர் நிலங்களும், தூத்துக்குடி

மாவட்டத்தில் 18 கிராமங்களில் 9,559 ஹெக்டேர் நிலங்களும் என மொத்தம் 23,040 ஹெக்டேர் நிலங்கள் பயிர் செய்யப்படும் நிலையை எங்கள் அரசு உருவாக்கித் தரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது தோற்றுவிக்கப்பட்டுள்ள தென்காசி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக இங்கே சில அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தென்காசி மாவட்டம், சங்கரன்கோயிலில் இருபாலர் பயிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ரூபாய் 8 கோடியே 60 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளத்தில் ரூபாய் 9 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்படும்.

மழை நீரை முறையாக சேமித்து, பாசன பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, தென்காசி மாவட்டத்தில் சித்தாறு உபவடி நிலத்தில் 22.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தென்காசி, கடையநல்லூர், செங்கோட்டை, ஆலங்குளம், கீழப்பாவூர் மற்றும் மேலநீலிதநல்லூர் ஆகிய ஒன்றியங்களில், சுமார் 6,000 ஹெக்டேர் பாசன நிலங்கள் பயனடையும் வண்ணம், 395 நீர்ப்பாசன கட்டமைப்புகள் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் விரைவில் முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

கடையநல்லூர்வட்டம், சிந்தாமணிகிராமத்தில் கோட்டமலை யாற்றின் குறுக்கே 1 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும். கடையநல்லூர் வட்டம், சிந்தாமணி கிராமம், கோட்டமலையாற்றின் குறுக்கே ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் படுகை அணை அமைத்து

வண்ணநேரி, சகலநேரி, மலையடிகுறிச்சி ஆகிய குளங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படும். கடையநல்லூர் வட்டம், சிந்தாமணி கிராமம் கோட்டமலையாற்றின் குறுக்கே 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் படுகையணை அமைத்து, தாருகாபுரம், சிறுகுளம் மற்றும் அதனைச் சார்ந்த குளங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

வீரகேரளம்புதூர் வட்டம், வீராணம் பெரிய குளத்திலிருந்து செல்லும் காசிக்குவாய்தான் வழங்குகால்வாயிலிருந்து காவலாக்குறிச்சி பெரியகுளத்திற்கு புதிய கால்வாய் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சிவகிரி வட்டம், இராயகிரி கிராமம் உள்ளாற்றின் குறுக்கே 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைத்து மேலகரிசல் குளத்திற்கு தண்ணீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும். சிவகிரி வட்டம், தென்மலை கிராமம் உள்ளாற்றின் குறுக்கே 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைத்து கன்னசேம்பல் குளத்திற்கு தண்ணீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

இது தவிர, இம்மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைகளை மேலும் சிறப்பாக நிறைவேற்றும் வகையில், சங்கரன்கோவில், புளியங்குடி மற்றும் திருவேங்கடம் பேரூராட்சிகளுக்கான 18.39 MLD கூட்டுக் குடிநீர்த் திட்டம் 147 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஆலங்குளம் மற்றும் சங்கரன்கோவில் ஒன்றியங்களைச் சேர்ந்த 147 ஊரகக் குடியிருப்புகளுக்கான 12.43 MLD கூட்டுக் குடிநீர்த் திட்டம் 31.32 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கீழப்பாவூர் பேரூராட்சி, பாப்பாக்குடி, கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான 9.27 MLD கூட்டுக் குடிநீர்த் திட்டம் 47 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்கள் விரைவில் மக்களின்

பயன்பாட்டிற்கு வரும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொண்டு, பல்வேறு திட்டங்களை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அண்மையில் நடைபெற்று முடிந்த நாங்குநேரி, விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல்களும் இன்றைக்கு தமிழகத்தில் சிறப்பான ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற சான்று வழங்கிய தேர்தல். இந்த ஆட்சியிலே ஒன்றும் நடைபெறவில்லை, இந்த ஆட்சியிலே மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கு இந்தத் தேர்தல் மூலமாக இந்த ஆட்சி சிறப்பான ஆட்சி, நாட்டு மக்களுக்கு நல்லது செய்கின்ற ஆட்சி என்று சான்று வழங்கியது இந்த சட்டமன்ற தேர்தல் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 22.11.2019 அன்று*
தென்காசியில் நடைபெற்ற விழாவில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட
தென்காசி மாவட்டத்தினை தொடங்கி வைத்து, முடிவுற்ற திட்டப்
பணிகளைத் துவக்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.

நாட்டுக்காக, விடுதலைக்காக, சமூக நீதிக்காக, மக்களுக்காக வாழ்ந்து மறைந்த தலைவர் திரு.இராமசாமி படையாட்சியார்!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழும்போதே வரலாறாக வாழ்ந்த மரியாதைக்குரிய திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் நினைவாக அன்னாருக்கு நினைவு மண்டபம் அமைத்து, அதன் திறப்பு விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது என்றால், அந்த வளர்ச்சிக்கு உரமாக இருப்பது பல விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகங்கள் தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அப்படிப்பட்ட தியாகசீலர்களில் ஒருவர்தான் திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள்.

மரியாதைக்குரிய திரு.எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்கள் 1918ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் நாள் பிறந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, நாடு விடுதலை பெற அரும்பாடுபட்டவர். நாடு விடுதலை அடைந்த பின்னர், 1952ஆம் ஆண்டு "தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி" என்ற ஒரு கட்சியை திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள் துவக்கினார். 1952ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், இவரது உழைப்பாளர் கட்சியின் சார்பாக போட்டியிட்ட 19 வேட்பாளர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மக்களவைத் தேர்தலிலும் இக்கட்சி 4 இடங்களில் வெற்றிபெற்றது.

ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்டமக்கள் நலனிலும், முன்னேற்றத்திலும் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்ட திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள், 1954ஆம் ஆண்டு முதல் 1957ஆம் ஆண்டு வரை பெருந்தலைவர் காமராசர் அவர்களது அமைச்சரவையில் அமைச்சராகப் பணிபுரிந்தவர். 1980 மற்றும் 1984ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்களில் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றினார்.

ஏழை, எளிய மக்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் தங்களது உரிமையைப் பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில், திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள் மிகவும் சமயோசிதமாகவும், நகைச்சுவையாகவும் அதே நேரம் தன் கருத்தை ஆணித்தரமாகவும் பேசுவதில் வல்லவர். தன்மானத்தை எந்தக் காலத்திலும் விட்டுக் கொடுக்காமல், அஞ்சாமல் பேசுபவர்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்ற திருக்குறளுக்கு ஏற்ப, திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள் சொன்னதைச் செய்தார், செய்ய முடியும் என்பதை மட்டுமே சொன்னார்.

காட்சிக்கு எளியவராகவும், மக்கள் அவரை எந்த நேரத்திலும் சந்திக்கக்கூடியவராகவும் திகழ்ந்த மக்கள்தலைவரான திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களைப் பற்றி ஒரு சம்பவத்தை கூற விரும்புகிறேன்.

‘‘திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள் ஓய்வில்லாமல் ஒரு வாரம் முழுக்க சுற்றுப்பயணம் செய்து பொதுமக்களை சந்தித்து விட்டு மிகவும் களைப்புடன் வீடு திரும்பினார்.

அப்போது வாசலில் ஒரு குரல் – ‘‘ஐயாவைப் பார்க்க வேண்டும்’’.

குரலைக் கேட்டு வெளியே வந்த அவரது உதவியாளர், ‘‘ஐயா ரொம்ப களைப்பாக இருக்கிறார். தொந்தரவு செய்யாதே! காலையில் வந்து பார்’’ என்று அந்த நபரின் மேல் எரிந்து விழுந்தார்.

அவர்களுடைய பேச்சு உள்ளேயிருந்த படையாட்சியாரின் காதில் விழுந்தது. உடனே அவசரமாக வெளியே வந்தார். வாசலில் நின்று கொண்டிருக்கும் மனிதரை உள்ளே அழைத்து, அவரை உட்கார வைத்து, அவருடைய கோரிக்கையைப் பொறுமையுடன் கேட்டு ஆவன செய்வதாகக் கூறி மகிழ்ச்சியுடன் வழியனுப்பி வைத்தார்.

அந்த நபர் தன்னை சந்தித்துவிட்ட திருப்தியில் சந்தோஷத்துடன் செல்வதை பார்த்துக் கொண்டிருந்த அவர், தனது உதவியாளரை அழைத்தார்.

‘‘உனக்கு கொஞ்சமாவது யோசனை இருக்கிறதா? அந்த நபர் வெளியூரிலிருந்து என்னை பார்ப்பதற்காக வந்திருக்கிறார். இந்த நேரத்தில் என்னை அவர் சந்திக்காமல் காலையில் சந்திப்பதாக இருந்தால், இரவு தங்குவதற்கும், சாப்பாட்டிற்கும் எவ்வளவு செலவாகும் என்று யோசித்துப் பார்த்தாயா? அதற்கு அவரிடம் போதுமான பணம் இருக்குமா?’’ என்று கேட்டார்.

‘‘இப்போது அந்த நபர் என்னைச் சந்தித்துவிட்ட திருப்தியில் எவ்வளவு நேரமானாலும் தனது இல்லத்திற்கு போய் சேர்ந்து

விடுவார்! இனிமேல் இந்த மாதிரியான தவறை செய்யாதே! யார் வந்தாலும் எந்த நேரத்தில் வந்தாலும், எனக்கு தெரிவிக்க வேண்டும்'' என்று உரிமையுடன் தனது உதவியாளரைக் கடிந்து கொண்டார்.

இந்த சம்பவத்திலிருந்து திரு. இராமசாமி படையாட்சியார் அவர்கள், மக்களை அணுகிய விதத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

உதவி வேண்டும் என்று யார் கேட்டுப் போனாலும், அவர்களுடைய குறையை நிவர்த்தி செய்கின்ற ஒரு மாமனிதராக மரியாதைக்குரிய படையாட்சியார் திகழ்ந்தார்.

``வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக் கூடாது'' என்ற ஆன்றோர் வாக்கிற்கேற்ப, பல்வேறு நன்மை பயக்கும் செயல்களை, எந்தவித ஒளிமறைவுமின்றி மக்களுக்காக தனது சொந்தப் பணத்திலிருந்து செயல்படுத்தியவர்தான், மரியாதைக்குரிய திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள். அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- கடலூரில் இரயில் இருப்புப் பாதை அமைப்பதற்கு தனது நிலத்தை தானமாக வழங்கினார்.

- கடலூர் பேருந்து நிலையம், மருத்துவமனை மற்றும் ITI அமைப்பதற்கு தனது நிலங்களை வழங்கி பெருமைபடுத்தியவர் மரியாதைக்குரிய இராமசாமி படையாட்சியார் அவர்கள்.

- தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும் என்பார்கள். அதுபோல, திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் சந்ததியினர், தனது தந்தையை விட அதிகமாக தற்போது உள்ள பேருந்து நிலையத்திற்கு தகுந்த வழியில்லாத காரணத்தினால், சுமார் 20 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்களுக்குச் சொந்தமான நிலத்தை தானமாக அளித்துள்ளார்கள். இதை நினைக்கும்போது உண்மையிலேயே பெருமையாக இருக்கிறது.

- வன்னியர்குல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பெருக "ஓராசிரியர் வேலை" என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அதன்படி கிட்டத்தட்ட ஒரு கிராமத்தில் 20 மாணாக்கர்களுக்கு மேல் இருந்தும், பள்ளிக்குச் செல்ல முடியாமல் இருந்தால், பஞ்சாயத்துக் கட்டடத்தில் ஆரம்பப் பள்ளிப் பாடத்தைச் சொல்லித் தர வேண்டும் என்றும், அந்த ஆசிரியர்களுக்கு பஞ்சாயத்து நிருவாகமே ஊதியம் தர வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. பிற்காலத்தில் இந்த ஓராசிரியர் பள்ளியில் படித்த மாணவர்கள்தான் தமிழ்நாட்டில் பல்வேறு பதவிகளில் பொறுப்புள்ள அதிகாரிகளாக உருவெடுத்தனர்.

அவர் ஆற்றிய பணிகளை சிறப்பிக்கும்வகையில், திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று நான் 29.06.2018 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தேன். அதன்படி அன்னாரது பிறந்த நாள் விழா அரசால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

"தியாகிகளான தலைவர்களாலே,
சுதந்திரம் என்பதை அடைந்தோமே!
ஒரு சிலர் மட்டும் அனுபவிக்காமல்

பலருக்கும் பயன்தரச் செய்வோமே!
ஊருக்கு உழைச்சாலே,
ஏழை உரிமையை மதிச்சாலே
பெருமைகள் தேடி வரும்''

என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பாடலுக்கு ஏற்ப, நாட்டுக்காகவும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும் பாடுபட்ட மரியாதைக்குரிய திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் பணிகளை மேலும் சிறப்பிக்கும் வகையில், மாண்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 19.07.2019 அன்று அன்னாரது ''திருவுருவப் படம்'' என்னால் திறந்து வைக்கப்பட்டு, பெருமைப்படுத்தப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வன்னியர்குல சான்றோர் பெருமக்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் பெருமைக்கும், புகழுக்கும் சிறப்பு சேர்க்கும் வகையில், அவர் பிறந்த கடலூர் மாவட்டத்தில் அரசு சார்பாக நினைவு மண்டபமும், அந்த நினைவு மண்டபத்தில் அவரது முழு உருவச் சிலையும் அமைக்கப்படும் என்று 19.07.2018 அன்று மேட்டூரில் நடைபெற்ற ஒரு விழாவில் நான் அறிவித்தேன்.

இரண்டே மாதத்தில் அதனை செயல்படுத்தும் விதமாக, கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பத்தில் 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நினைவு மண்டபம் அமைக்க 1.5 ஏக்கர் அரசு நிலம் ஒதுக்கி, 14.09.2018 அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இந்த மண்டபத்தினை அமைக்கும் பணிகள் துரிதமாக முடிக்கப்பட்டு, இன்று நான் திறந்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1980ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டினை 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தினார். அது முதல்

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீடு உட்பட 69 சதவீத இட ஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது.

தமிழ்நாட்டில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்திட சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா அவர்கள், 1993ஆம் ஆண்டு சட்டம் இயற்றி அதனை அரசியலமைப்பு சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்து, அரசியலமைப்பு பாதுகாப்பு பெற்றுத் தந்தார்கள்.

சமூக நீதிக்கு ஆபத்து வரும் நேரங்களில் எல்லாம் அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுத்து, அதனை களைய உரிய நடவடிக்கைகளை எடுத்து வரும் அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசுதான் என்பதை இங்கே பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

வாக்குறுதி கொடுத்ததோடு மட்டும் நிற்காமல், அதனை உடனடியாக நிறைவேற்றும் ஆட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதை பலமுறை நிரூபித்தும் காட்டியிருக்கிறோம். மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் மற்றும் இதயதெய்வம் புரட்சித்தலைவி

அம்மா ஆகியோரிடம் பயிற்சி பெற்ற நாங்கள், “சொன்னதைச் செய்வோம், சொல்வதைத்தான் செய்வோம்” என்ற கொள்கையின் அடிப்படையில், செயல்பட்டு வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் உள்ளிட்ட தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் எண்ணற்ற திட்டங்களை வழங்கி, தமிழ்நாட்டை ஒரு முன்னோடி மாநிலமாக்க தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல மரியாதைக்குரிய சட்டத் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள், “யாருமே கேட்காமல் நான் அறிவித்தேன்” என்று குறிப்பிட்டார்கள், அது உண்மை தான். சட்டமன்றத்திலே பலருடைய படங்கள் இருந்தன. நான் பார்க்கின்றபொழுதெல்லாம் இவ்வளவு பெரிய சமுதாயத்தினுடைய தலைவர் படம் இல்லையே என்று எண்ணி, உடனடியாக சட்டமன்றத்திற்குள்ளே இந்த மிகப் பெரும்பான்மையான சமுதாயத்தினுடைய தலைவர் படம் இருக்க வேண்டுமென்று எண்ணி மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்களிடத்திலும், எங்களுடைய வன்னியர் குல அமைச்சர்கள் மரியாதைக்குரிய சி.வி.சண்முகம், மரியாதைக்குரிய திரு.கே.பி.அன்பழகன் அவர்கள், மரியாதைக்குரிய திரு. எம்.சி.சம்பத் அவர்கள், மரியாதைக்குரிய திரு.துரைக்கண்ணு அவர்கள், மரியாதைக்குரிய திரு. கே.சி.வீரமணி அவர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பலரிடமும் கலந்து பேசி அங்கு முழுவுருவ படம் ஒன்றை நாங்கள் திறந்து வைத்திருக்கின்றோம், அந்த மக்களுக்குப் பெருமை சேர்த்திருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள் இடஒதுக்கீடுக்காகப் போராடிய தலைவர், சுதந்திரத்திற்காகப் போராடிய தலைவர், சமூக நீதிக்காக போராடிய தலைவர். அப்படிப்பட்ட மாமனிதருக்கு இந்த காலகட்டத்தில் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அருளாசியோடு மணிமண்டபத்தை திறந்து வைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு உங்கள் சார்பாக ஆண்டவனுக்கும், புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். எத்தனையோபேர் பிறக்கின்றார்கள், வாழ்கின்றார்கள், இறக்கின்றார்கள். ஆனால், சமூகத்திற்காக பாடுபவர்கள் ஒரு சிலர் தான். அப்படிப்பட்ட ஒரு சிலரை நாம் கண்டு அவர்களுக்கு புகழ் சேர்த்தால் தான் இதற்குப் பின்னால் வருகின்ற சமுதாயம் நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும். அதற்காக இப்படிப்பட்ட தலைவர்களுக்கு புகழ் சேர்ப்பதற்காக இந்த மணிமண்டபத்தை நாம் உருவாக்கியிருக்கின்றோம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் காலத்திலும் சரி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் காலத்திலும் சரி, அம்மா அவர்களின் மறைவிற்கு பிறகு எங்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள், சமூக நீதி காத்தவர்கள், மக்களுக்காக வாழ்ந்து மறைந்த தியாகிகளுக்கு மணிமண்டபங்கள் அமைத்திருக்கின்றோம், சிலைகள் அமைத்திருக்கின்றோம். அந்த வகையில், ஒரு வரலாற்றைப் படைக்கின்ற அளவிற்கு இந்த அரசு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மரியாதைக்குரிய ஐயா பெரியவர் ராமதாஸ், மரியாதைக்குரிய முன்னாள் மத்திய அமைச்சரும், மாநிலங்களவை உறுப்பினருமான திரு.அன்புமணி ராமதாஸ் அவர்களும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் மரியாதைக்குரிய சி.வி.சண்முகம் அவர்களும் சில

கோரிக்கைகள் வைத்தார்கள். அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

அம்மாவின் அரசு உடனடியாக இந்தச் சமுதாய மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளை செய்யும், செய்யும் என்று இந்த நேரத்தில் தெரிவித்து, நாட்டுக்காக, விடுதலைக்காக, சமூக நீதிக்காக, மக்களுக்காக வாழ்ந்து மறைந்த தலைவர் திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் நினைவு மண்டபத்தினை திறந்து வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தக் கடலூர் மாவட்டத்தில் மிகத் திரளாக குழுமி இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், இந்த மேடையிலே வீற்றிருக்கின்ற முன்னோடி தலைவர்களுக்கும், வருகை தந்திருக்கின்ற பல்வேறு அமைப்புகளின் தலைவர்களுக்கும், பல்வேறு வகுப்பைச் சேர்ந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
25.11.2019 அன்று கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பத்தில்
அமைக்கப்பட்டுள்ள திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின்
நினைவு மண்டபத்தினை திறந்துவைத்து ஆற்றிய விழாப் பேருரை.

கிராமப்புற மக்கள் பொருளாதார மேம்பாடு அடைய, ஆய்வின் அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சிப் பகுதி வாழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கை, சுமார் 50 ஆண்டு காலக் கோரிக்கையான விழுப்புரம் மாவட்டத்தைப் பிரித்து, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் தொடங்க வேண்டுமென்பதனை ஏற்று, இன்றையதினம் விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரித்து கள்ளக்குறிச்சி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

‘‘மாவட்டப் பிரிவினைகள், நிருவாக வசதிகளை முன்னிட்டு ஏற்படுகின்றன என்றாலும், மாவட்டம் வளர்ந்தாக வேண்டும், கல்வி, தொழில் ஆகியவை சிறந்தோங்க வேண்டும் என்ற அடிப்படையில்

தான் உருவாக்கப்படுகின்றன'' என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கூறினார்கள்.

ஒரு மாவட்டம் பிரிக்கப்படுகிறது என்றால், தமிழ்நாட்டின் வரைபடத்தில் சில கோடுகளை மாற்றி வரைவது அல்ல. மாறாக, நிருவாக சீர்திருத்தத்தில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கி இருக்கிறது என்று பொருள். மக்களுக்குத் தொண்டு செய்யக்கூடிய ஓர் அரசு, அந்த மக்களிடம் நெருங்கிச் சென்று, அவர்களின் தேவைகளை அறிந்து நடவடிக்கை எடுக்கிறது என்று பொருள். ஒரு பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை அங்கீகரிப்பது என்பது, வெறும் வரவு செலவு கணக்கை மட்டுமே வைத்து தீர்மானிக்கக்கூடியது அல்ல. தங்களுக்கென ஒரு தனி அடையாளம் வேண்டுமென்ற அப்பகுதி மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு தருவதாகும். அம்மக்களின் கருத்திற்கிணங்கவும், நிருவாக வசதிகளுக்காகவும், அரசின் நலத் திட்டங்கள் கடைக்கோடியிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் விரைந்து சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும்தான் புதிய மாவட்டங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில்தான், மக்கள் குறைகளை எளிதாக நிவர்த்தி செய்வதற்கு வசதியாக 5 புதிய மாவட்டங்களை ஒரே ஆண்டில் தொடங்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைச் சாரும். இதுவரை, ஒரே ஆண்டில் 5 மாவட்டங்கள் தொடங்கப்பட்ட வரலாறு கிடையாது. அந்த வரலாற்றைப் படைத்த அரசு அம்மாவினுடைய அரசு.

இப்பகுதியிலுள்ள மக்களின் வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், விழுப்புரம் மாவட்டத்தின் தெற்கு–மேற்குப் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு புதிய மாவட்டமாக, இன்று தமிழ்நாட்டின் 34ஆவது மாவட்டமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் உங்கள் முகமலர்ச்சியோடு, மாண்புமிகு அம்மா அவர்களின் அருளாசியோடு அம்மாவின் அரசால் தோற்றுவிக்கப்படுகிறது. இப்புதிய மாவட்டத்தின் மக்களுக்கு முதலில் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாலாற்றுக்கு வடக்கில் இருப்பது வடஆற்காடு மாவட்டம் என்றும், தெற்கில் இருப்பது தென்ஆற்காடு மாவட்டம் என்றும் இருந்தது. 1993ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் தென் ஆற்காடு மாவட்டத்திலிருந்து பிரித்து விழுப்புரம் மாவட்டம் உருவாக்கப்பட்டது. இன்று மாண்புமிகு அம்மாவின் அரசால் விழுப்புரம் மாவட்டத்திலிருந்து கள்ளக்குறிச்சி தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி புதிய மாவட்டமாக உருவாவதால், மாவட்டத்திற்கான அரசு அலுவலக வளாகம், மாவட்ட மருத்துவமனை, பல்வேறு துறைகளின் மாவட்ட அலுவலகங்கள் என ஒரு மாவட்டத்திற்கு உரிய அனைத்து வசதிகளையும் பெறும். இதனால், இது வரை மக்கள் தங்களது தேவையினை நிறைவேற்றிக் கொள்ள அரசு அலுவலகங்களுக்கு நீண்ட தூரம் பயணம் செய்யும் நேரம் குறைந்து, எளிதில் அரசு அலுவலகங்களை அணுக வழிவகை செய்யப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்டமும், மக்களும் வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கிச் செல்ல இது ஏதுவாக இருக்கும்.

பழம் பெருமைகளைக் கொண்டது இம்மாவட்டம். உதாரணமாக, ஏறத்தாழ 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்கிடையே, தென்பெண்ணை ஆற்றங்கரையில் ஒரு நாடு அமைந்திருந்தது. மலைகள் அதிகம் கொண்டது என்பதால் மலையமா நாடு என்று அழைக்கப்பட்டது. அம்மலை நாடு பெண்ணையாற்றின் உதவியால் பல வளங்களும் பெற்று சிறந்திருந்தது. திருக்கோவிலூரை தலைநகரமாகக் கொண்ட அம்மலையமா நாட்டை காரி என்ற சிற்றரசன் ஆண்டு வந்தான். அவன் முதலில் முள்ளூருக்கும், முள்ளூர் மலைக்கும் தலைவனாகி, பிறகு மலை நாட்டிற்கே அரசன் ஆனான். சிறந்த கல்விமானான காரி, ஊர்கள் தோறும் கல்விக் கூடங்கள் பல அமைத்தான். ஆண், பெண் பேதமின்றி மக்கள் கல்வியறிவு பெற ஏற்பாடு செய்தான். காரி, கல்வி மட்டுமன்றி, போர்ப் பயிற்சியிலும் வலிமை

கொண்டவனாக விரும்பினான். வில், வேல் போன்ற படைக்கல பயிற்சிகளிலும் பங்கேற்று வலிமை உடையவனாக விளங்கினான். அதனால் மூவேந்தர்களும், தங்களுக்கு வேண்டிய பொழுதெல்லாம் அவனைப் படைக்குத் துணையாக அழைப்பர். காரி எப்பக்கமோ, அப்பக்கமே வெற்றி என்ற நிலையில் காரியின் போர்த்திறன் பெரிதும் போற்றப்பட்டது. கல்வி, வீரம் மட்டுமன்றி, நெஞ்சின் ஈரத்திலும் நிகரில்லாத வள்ளலாக காரி திகழ்ந்தான். போரில் செய்த உதவிகளின் பொருட்டு, மூவேந்தர்களும் அவனுக்கு பல பொருட்களை பரிசாக வழங்கினார்கள். அவ்வாறு பெற்ற செல்வத்தை ஒருபோதும் தன்னுடையதாகக் கொண்டதில்லை காரி. அனைத்தும் பிறருடையது என்ற எண்ணம் கொண்டிருந்தான். அத்தகைய சிறப்பு வாய்ந்த காரி மன்னர் ஆட்சி செய்த ஊர் தான் திருக்கோவிலூர் ஆகும்.

அதே போல, சின்ன சேலம், தமிழ்நாட்டின் வட மாவட்டங்களையும், மேற்கு மாவட்டங்களையும் இணைக்கும் பிரதான நகரமாக உள்ளது. இந்த சின்ன சேலம் பேரூராட்சியில் பல நவீன அரிசி ஆலைகள் உள்ளன. மேலும், இப்பேரூராட்சிப் பகுதியில் அதிக அளவு நெல் அறுவடை இயந்திரங்கள் உள்ளதால், தமிழ்நாடு, ஆந்திரா, கருநாடகா மற்றும் கேரள மாநிலங்களுக்கு நெல் அறுவடை இயந்திரங்கள் இப்பகுதியில் இருந்து தான் செல்கின்றன.

இம்மாவட்டத்தின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- புதிய கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் தலைநகராக கள்ளக்குறிச்சி நகராட்சி விளங்கும்.
- கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் மக்கள் தொகை 13,70,281 .
- மாவட்டத்தின் பரப்பளவு 3,520.37 சதுர கிலோ மீட்டர்.
- கள்ளக்குறிச்சி மற்றும் திருக்கோவிலூரில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் இயங்கும்.

- மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்ன சேலம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, கல்வராயன் மலை ஆகிய **6** வட்டங்களும், **23** உள் வட்டங்களும், **558** வருவாய் கிராமங்களும் அமைந்துள்ளன.
- இம்மாவட்டத்தில் திருக்கோவிலூர் (பகுதி), கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை (பகுதி), ரிஷிவந்தியம் என **5** சட்டமன்றத் தொகுதிகள் உள்ளடங்கியுள்ளன.
- கள்ளக்குறிச்சி, சின்ன சேலம் உட்பட **9** ஊராட்சி ஒன்றியங்களும், சின்ன சேலம், சங்கராபுரம் உட்பட **7** பேரூராட்சிகளும், **406** கிராம ஊராட்சிகளும் அமைந்துள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள இயற்கை எழில் கொஞ்சும் கல்வராயன் மலையானது கிழக்குத்தொடர்ச்சி மலைத்தொடரின் ஒரு பகுதியாகும். மேலும், பச்சைமலை, ஜவ்வாது மற்றும் சேர்வராயன் மலைகள் ஆகியவற்றுடன், இவை காவேரி ஆற்று வடிநிலத்தை பாலாற்றின் வடிநிலத்திலிருந்து பிரிக்கும் எல்லைகளாக அமைந்துள்ளன. கல்வராயன் மலையின் வட பகுதி சின்ன கல்வராயன் மலை என்றும், தென் பகுதி பெரிய கல்வராயன் மலை என்றும் அழைக்கப்படுகிறது. மணியாறு மற்றும் முக்தா ஆறு இணையும் இடத்தில் மணிமுக்தா அணை கட்டப்பட்டுள்ளது. இம்மலையில்தான் கோமுகி நதி உற்பத்தியாகி, அந்நதியின் குறுக்கே கோமுகி அணை கட்டப்பட்டுள்ளது. கோமுகி அணையைச் சுற்றி 15 ஏக்கர் நிலப்பரப்பில் அழகிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் நீராட மேகம், பெரியார் மற்றும் புண்ணிம்பாடி போன்ற அருவிகள் உள்ளன. மலையில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கப்பட்டு, படகு குழாம் உருவாக்கப்பட்டுள்ளது. இது போன்று சுற்றுலாப் பயணிகளை கவரும் பல்வேறு அம்சங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன.

இம்மாவட்டத்தில் மணிமுக்தா மற்றும் கோமுகி அணைகளின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 16,300 ஏக்கர் நிலங்கள் பயனடைகின்றன. இதில் நெல் மற்றும் கரும்பு, கடலை, எள் மற்றும் காய்கறிகள் போன்ற பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இதனால் இம்மாவட்டத்தில் கோமுகி சர்க்கரை ஆலை, மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலை, தியாகதுருகம் சர்க்கரை ஆலை என பல சர்க்கரை ஆலைகளும், நவீன அரிசி ஆலைகள் போன்ற பல தொழிற்சாலைகளும் நிறைந்துள்ளன. மேலும், இங்கே அரசின் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளிலும், புதிய காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மலையோர கிராமங்களிலும் சுவைமிக்க விளாம் பழங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இது போன்ற எண்ணற்ற இயற்கை வளங்களைக் கொண்ட இந்த மலைப்பகுதிகளை, வருங்காலங்களில், தேவைகளுக்கு ஏற்ற வகையில் மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மலைவாழ் மக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளனர். மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும், மாண்புமிகு அம்மாவின் அரசும் மலைவாழ் மக்களின் நலனுக்கு முன்னுரிமை அளித்து நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- கல்வராயன் மலையில் வாழும் பழங்குடியின மக்களுக்கான திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்த ஒரு திட்ட அலுவலரும், அலுவலகமும் 2017இல் முதன் முறையாக ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் மலைவாழ் மக்களுக்கான திட்டங்கள் விரைந்து சென்றடைவது உறுதி செய்யப்பட்டது.

- பி.எட்., மற்றும் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்த பழங்குடியின இளைஞர்களைக் கொண்டு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, அவர்கள் கல்வியில் முன்னேற்றம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- இம்மாவட்ட பழங்குடியின மக்கள் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்குகொள்ள ஏதுவாக 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம் ஒன்று வெள்ளிமலையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதிய கள்ளக்குறிச்சி மாவட்டம் தோற்றுவிக்கப்படுவதன் மூலம், மலைவாழ் மக்கள் வாழுகின்ற மலைப் பிரதேசமான கல்வராயன் மலையை உள்ளடக்கிய ஒரு புதிய வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக கட்டடம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும். அது மட்டுமல்லாமல், சுகாதாரத்துறை மூலமாக, கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், 3.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாய் சேய் நலப் பிரிவு அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் 1.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டும் பல்வேறு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், கடந்த 2011 முதல் 2018 வரை 1,074 கி.மீ. நீள சாலைகள் மற்றும் 12 பாலப் பணிகள் 671 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. என்றைக்கும் இல்லாத

அளவில் இந்தப் பகுதியில் 12 பாலங்கள், அதுமட்டுமல்லாமல், 1,074 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் சீர் செய்யப்படுகிறது என்று சொன்னால் எந்தளவிற்கு திறமையுள்ள அரசு அம்மாவின் அரசு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தற்போது நடப்பாண்டில், 403 கி.மீ. நீள சாலைகள் மற்றும் 4 பாலப் பணிகள், 528 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்தப் பகுதி மக்கள் வைத்த கோரிக்கையான சாலைகள் மேம்பாடு, புதிய பாலங்கள் போன்றவை அம்மாவினுடைய அரசால் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், 60,92,071 தாய்மார்களுக்கு 5 ஆயிரத்து 265 கோடியே 46 இலட்சம் ரூபாய் மகப்பேறு நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 31,57,462 பயனாளிகளுக்கு 5 ஆயிரத்து 767 கோடியே 27 இலட்சம் ரூபாய் மருத்துவ நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

திருமண உதவித் திட்டத்தின் கீழ், 12,36,871 பயனாளிகளுக்கு 1,752 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 5,988 கிலோ தங்கமும், நிதியுதவியாக 4 ஆயிரத்து 315 கோடியே 83 இலட்சம் ரூபாய் நிதியும் என மொத்தம் 6 ஆயிரத்து 68 கோடியே 37 இலட்சம் ரூபாய் நிதியுதவியும், தாலிக்கு தங்கமும் அம்மாவினுடைய அரசால் வழங்கப்பட்டுள்ளன.

இதையெல்லாம் எதற்காக குறிப்பிட விரும்புகிறேன் என்று சொன்னால், வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சித் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்களும் இந்த ஆட்சியில் நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் பெறவில்லை என்ற ஒரு தவறான, பொய்யான குற்றச்சாட்டை செல்கின்ற

இடங்களிலெல்லாம் பேசி வருகின்றார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கும்பொழுதும் சரி, அம்மாவின் மறைவிற்குப் பிறகும் அம்மாவினுடைய திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் மக்களுக்குக் கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை புள்ளிவிவரங்களுடன் நாங்கள் குறிப்பிடுகிறோம்.

விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 333 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் 90,675 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மலைப் பகுதியில் உள்ள மக்கள் அதிக அளவிலான கறவை மாடுகளைக் கோரியிருந்தனர். அதன் அடிப்படையில், அதிக அளவிலான கறவை மாடுகள் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஆயிரத்து 343 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் 10,41,164 பயனாளிகளுக்கு 41 இலட்சத்து 64 ஆயிரத்து 656 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழிலாக விளங்கிக் கொண்டிருக்கிறது. உபதொழிலாகத் திகழ்கின்ற கால்நடை

வளர்ப்பு செய்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகளின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா கொண்டு வந்த திட்டத்தை நாங்கள் முழுமையாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். கிராமப்புறத்தில் இருக்கின்ற பெண்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக கோழி வளர்ப்புத் திட்டத்தை துவக்கியிருக்கின்றோம். அதன் வாயிலாக 2,40,000 மகளிருக்கு தலா 25 நாட்டுக் கோழிகளைக் கொடுத்திருக்கின்றோம். கிராமப்புறத்தில் உள்ள மக்களுக்கு எந்தெந்த வழிகளில் உதவி செய்தால் அவர்கள் பொருளாதார மேம்பாடு அடைய முடியும் என்று ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை துவக்கி வைத்து நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். 2018–2019 ஆம் ஆண்டில் 1,50,000 நபர்களுக்கு வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும் வழங்கி சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு. அதேபோல, இன்றைக்கு 15,000 நபர்களுக்கு தலா ஒரு கறவை மாடு வழங்கி அந்த குடும்பத்தை வாழ வைத்த அரசு அம்மாவினுடைய அரசு. 2018–2019 ஓராண்டில் மட்டும் ஏழை மகளிருக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக அம்மா கொண்டு வந்த இந்தத் திட்டத்தின் வாயிலாக, இந்த ஓராண்டில் மட்டும் 4,05,000 மகளிர் பயன்பெற்றிருக்கிறார்கள். திரு.ஸ்டாலின் அவர்களே போகும் பக்கமெல்லாம் குறிப்பிடுகின்றீர்களே, உங்களுடைய ஆட்சியில் என்ன செய்தீர்கள் ? ஏழை மக்கள் முன்னுக்கு வரவேண்டும், இந்த நாடு வளர வேண்டுமென்று சொன்னால், பொருளாதாரம் மேம்பாடு அடையவேண்டுமென்று சொன்னால், கிராமப் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமப் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்கு எங்களது அரசு அம்மா வழியைப் பின்பற்றி இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலிலே, நான் மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் உழைக்கும் மகளிருக்கு

அம்மா இருசக்கர வாகனம் மானிய விலையில் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்தார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அம்மா மறைந்துவிட்டார்கள். ஆனால், அம்மா மறைந்தாலும், அம்மாவால் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை அம்மா அரசு நிறைவேற்றி வருகிறது. அந்த வகையில், 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுகளில் 1,62,494 மகளிருக்கு இரு சக்கர வாகனம் வாங்க 389 கோடியே 54 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தேர்தல் நேரத்தில் கொடுக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் சிந்தாமல், சிதறாமல் மக்களுக்கு வழங்கி வருகிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று பொதுப்பணித் துறையின் சார்பில் 12.27 கோடி ரூபாய் மதிப்பிலான 22 பணிகள் உட்பட 24 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 52 பணிகளை நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக திறந்து வைத்துள்ளேன். நெடுஞ்சாலைத் துறை சார்பில் 121 கோடி ரூபாய் மதிப்பிலான 164 பணிகள் உட்பட மொத்தம் 195 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள 519 பணிகளுக்கு நான் இன்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டியுள்ளேன். இன்று 5,873 பயனாளிகளுக்கு 23.59 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற விழாவாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது கள்ளக்குறிச்சி மாவட்ட தொடக்க விழா மட்டுமல்லாமல், இந்தப் பகுதி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாகவும் இருந்து கொண்டிருக்கிறது.

உளுந்தூர்பேட்டை வட்டம், சேந்தமங்கலம் கிராமத்தில் ஒரு கசிவுநீர் குட்டை அமைக்கும் பணி 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. சின்ன சேலம் வட்டம், கோமுகி அணையின் மேல்புறத்தில் கல்படை ஆற்றின் குறுக்கே

சிறிய அணையும், பொட்டியம் ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய அணையும் அமைத்து கூடுதல் நீர்த்தேக்கம் ஏற்படுத்தப்பட உள்ளது. திருக்கோவிலூர் வட்டம், அன்றாயநல்லூர் கிராமம் அருகே பெண்ணையாற்றில் வெள்ளக் காலங்களில் வரும் வெள்ள நீரை பயன்படுத்தி, கோரையாறு மற்றும் மலட்டாறு பகுதிகளில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

“சொன்னதை செய்வோம், செய்வதைத் தான் நாங்கள் சொல்வோம்” என்ற மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த நாங்கள், செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றி மட்டுமே மக்களிடம் எடுத்துரைத்து நிறைவேற்றுவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பறம்புமலை பாரிக்கு இணையான பரங்கிமலை பாரியான மாண்புமிகு புரட்சித்தலைவர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது அம்மாவினுடைய அரசு. இது மகத்தான அரசு என அனைத்து தரப்பு மக்களால் பாராட்டப்படுகின்றது என்பதை இங்கே பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

“மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்” என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கோட்பாட்டில் உள்ள நாங்கள், சொன்னதைச் செய்வோம், செய்வதைத் தான் சொல்வோம். அவ்வாறு சட்டமன்றத்தில் நான் அறிவித்த அறிவிப்புகளுக்கு இணங்க, தற்போது இந்தப் புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

விழுப்புரம் மாவட்டம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட மக்களின் பிரதான தொழில் விவசாயம். இரண்டு மாவட்ட மக்களும் பயன் பெறுகின்ற வகையில் அம்மாவின் அரசால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மாவின் அரசால் திண்டிவனம் அருகே பிரம்மாண்டமான உணவுப் பூங்கா ஒன்று உருவாக்கப்படவுள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள்,

பழங்களை நியாயமான விலையில் உணவுப் பூங்காவில் விற்பதன் மூலம் நல்ல இலாபம் கிடைக்கும். தமிழ்நாட்டில், மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களும் உணவுப் பூங்காவில் ஆன்–லைன் மூலம் பெறப்பட்டு, அதற்குண்டான தொகை விவசாயிகளுக்கு அவர்களுடைய மாவட்டத்திலேயே வழங்கப்படும். ஏறக்குறைய 10 மாவட்டங்களில் இந்த உணவுப் பூங்கா அமைக்கத் திட்டமிட்டு, நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

குடிமராமத்துத் திட்டம் அம்மா அரசின் பிரதானத் திட்டம். நான் விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக 2016–2017ஆம் ஆண்டு குடிமராமத்துத் திட்டம் தொடங்கப்பட்டு 2017–2018, 2018–2019 என ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட அளவில் ஏரிகளை தேர்ந்தெடுத்து முழுக்க, முழுக்க விவசாயிகளின் பங்களிப்போடு நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதனால், தற்பொழுது, பருவகாலங்களில் பொழிகின்ற மழை நீர், ஒரு சொட்டுகூட வீணாகாமல் ஏரிகள், குளங்கள், குட்டைகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நிலையைக் காண முடிகிறது. மேலும், இதனால் கிடைக்கும் வண்டல் மண்ணை, விவசாயிகள் அதிகாரிகளிடம் சான்றிதழ் பெற்று இலவசமாக எடுத்துச் சென்று தங்கள் நிலங்களுக்கு இயற்கை உரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு முன்பு ஒரு டிராக்டர் மண்கூட உங்களால் எடுத்துச் செல்ல முடியாது என்று இருந்த நிலையை மாற்றி, இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை விவசாயிகளுக்கு அர்ப்பணித்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.

மேலும், மழை நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் தேவையான நீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக, மூன்றாண்டு காலத் திட்டமாக ரூபாய் 1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இந்த இரண்டாண்டுகளில் ரூபாய் 600 கோடி மதிப்பீட்டில் நதிகள், ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வேளாண் பெருமக்களுக்குத் தேவையான புதிய, புதிய திட்டங்களை அம்மாவின் அரசு தான் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அம்மாவின் அரசு வேளாண் பெருமக்களின் அரசு, விவசாயிகளின் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற அரசு என்பதை நாங்கள் செயல்களில் காண்பித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ரூபாய் 9,163 கோடி வட்டியில்லா பயிர்க் கடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால், அம்மாவின் அரசு ஓராண்டில் மட்டும் ரூபாய் 10 ஆயிரம் கோடி வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கியுள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விவசாயிகளுக்குத் தேவையான டிராக்டர், பவர் டிரில்லர், போன்றவற்றை மானிய விலையில், வழங்குகின்றோம். சொட்டு நீர் பாசனக் கருவி வாங்குவதற்கு, ஒரு ஹெக்டேர் நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், ஒரு ஹெக்டேருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கி வருகின்ற அரசு அம்மாவின் அரசு. இந்த அரசு, திட்டங்களை அறிவிப்பதோடு மட்டுமல்லாமல், அதனை நடைமுறைப்படுத்துகின்ற அரசு. விவசாயிகள், சூரிய சக்தி மூலமாக இயங்கும் மின் மோட்டார் வாங்குவதற்கு மானியம் வழங்கிய அரசு அம்மாவின் அரசு.

கடந்த வருடம் அமெரிக்கன்படைப்புழு தாக்கியதால் மக்காச்சோளப் பயிர்கள் வீணாகி, அதனை பயிர் செய்த விவசாயிகள் வருமானம் இழந்து கடுமையாக பாதிப்படைந்ததற்கு ரூபாய் 182 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கிய அரசு அம்மாவின் அரசு. இந்த ஆண்டு, தமிழ்நாடு முழுவதும் மக்காச்சோளம் பயிர் செய்துள்ள நிலங்களில் உள்ள அமெரிக்கன் படைப்புழு தாக்குதலைத் தடுப்பதற்காக, ரூபாய் 49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான மருந்து தெளிக்கப்பட்டது.

இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேனென்றால், இப்பொழுது இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எதையும் படிக்கவும் மாட்டார், எதுவும் தெரியவும் தெரியாது. போகும் இடத்திலெல்லாம் பொய்யாகப் பேசுவார், என்னைப் புளுகு என்று சொல்கிறார். நாங்கள் செய்த சாதனைகளை புள்ளிவிவரத்துடன் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் புளுகவில்லை, பொய் சொல்லவில்லை. பொய் சொல்ல வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது. நாங்கள் உண்மையைப் பேசுகின்றோம், உண்மையாக செயல்படுகின்றோம். மக்களுக்கு என்ன தேவையென்று அறிந்து நடவடிக்கை எடுக்கின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை நாங்கள் நடைமுறையில் சாதித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டமும், சேலம் மாவட்டமும் இணைகின்ற இடத்தில் பால்வளம் மற்றும் மீன்வளம் நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பம் உள்ளடங்கிய உலகத்தரம் வாய்ந்த பல்துறை பல்நோக்குடன் கூடிய ஆசியாவிலேயே மிகப்பெரிய நவீன கால்நடைப் பூங்கா 1,866 ஏக்கரில் உருவாக்கவிருக்கிறோம். இந்தத் திட்டத்தின் உள்கட்டமைப்பு வசதிக்காக மட்டும் ரூபாய் 1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதில், முதற்கட்டமாக ரூபாய் 396 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இவ்வளாகத்தில் முதற்கட்டமாக கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமையவுள்ளது. விவசாயிகள் வளர்க்கின்ற பசு அதிகளவில் பால் கொடுக்கும் வகையில், அதாவது 10 லிட்டர் பால் கொடுக்கும் பசு 25 லிட்டர் பால் கொடுக்கும் வகையில், இந்த ஆராய்ச்சி நிலையம் மூலமாக ஆய்வு செய்து, நம்முடைய சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவாறு விவசாயிகளுக்கு கலப்பினப் பசுக்களை உருவாக்கித் தருவதுதான் எங்களுடைய இலட்சியம். அதற்குத்தான் முதற்கட்டமாக ரூபாய் 82 கோடி ஒதுக்கி, இந்தக் கல்லூரி கட்டுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். கால்நடைகளை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை

ஏற்படுத்துகின்றோம். தொழில் முனைவோர்களுக்கு கால்நடை வளர்ப்பு குறித்து பயிற்சி வகுப்புகள், கால்நடைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்படும். உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து கால்நடை பராமரிப்பு மற்றும் விலங்கின அறிவியல் தொழில்நுட்பங்கள், உயர்தர ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இந்த கால்நடை பூங்காவில், வாகன நிறுத்த இட வசதி, குழந்தைகள் பூங்கா, கண்காட்சியகம், வண்ண மீன் கண்காட்சியகம் மற்றும் விற்பனைக் கூடம், உணவகம் போன்ற வசதிகளும், கால்நடை உற்பத்திப் பொருட்களான பால், பால் பொருட்கள், முட்டை, மீன், இறைச்சி விற்பனை வளாகங்களும் அமைக்கப்படும். இந்தத் திட்டம் விரைவாக தொடங்கப்படும்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள், உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுமா ? என்ற ஐயத்தை உருவாக்கிக் கொண்டேயிருக்கின்றார். மாநிலத்தேர்தல் ஆணையத்தால் உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதற்கான அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1996ஆம் ஆண்டு வரை மேயர் பதவிக்கு மறைமுகத் தேர்தல்தான் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது திரு.ஸ்டாலின் முதன்முதலாக நேரடித் தேர்தலைச் சந்தித்தார் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறார். அதற்குப் பிறகு 2006ஆம் ஆண்டு நேரடியாக நடைபெற்ற தேர்தலை மறைமுகத் தேர்தலாக அறிவித்ததும் எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் தான். அவரே மறைமுகத் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக, தெளிவாக சட்டமன்றத்தில் பதிலளித்திருக்கிறார். இப்பொழுது ஏன் மறைமுகத் தேர்தலை சந்திக்கத் தயங்குகிறார் ? மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் கவுன்சிலர்கள் தானே பேரூராட்சித் தலைவர்களையும், நகர்மன்றத்

தலைவர்களையும், மேயர்களையும் தேர்ந்தெடுக்கின்றார்கள். இதில் என்ன தவறு இருக்கின்றது ? அவர்கள் கொண்டு வந்தால் சரி என்றும், நாங்கள் கொண்டு வந்தால் தவறு என்று சொல்கிறார். இதில் எந்தவிதத்தில் தவறு இருக்கிறது. அவ்வாறு தவறு என்று சொன்னால், உங்களால் 2006ஆம் ஆண்டு கொண்டு வந்ததும் தவறா ? இதுபோன்ற தவறான திட்டத்தைத்தான் நடைமுறைப்படுத்தினீர்களா ? அது சரியென்றால், இதுவும் சரியென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இம்மாவட்ட மக்களின் நலனைக் கருதி, சில புதிய அறிவிப்புகளை மங்களகரமான இந்தத் திருநாளில் இங்கே வெளியிடுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

- கள்ளக்குறிச்சி நகரத்திற்கு 23 கி.மீ. நீள சுற்றுவட்டச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இந்த நகரத்திலுள்ள போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக சுற்று வட்டச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.
- உளுந்தூர்பேட்டை வட்ட மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு, தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- ரிஷிவந்தியத்தில் அரசு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். புதிய கல்லூரி அங்கே உருவாக்கப்படும்.
- கள்ளக்குறிச்சிவட்டம், கொங்கராயப்பாளையம் – கண்டாச்சி மங்கலம்கிராமம் அருகே மணிமுக்தா ஆற்றில் 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓர் தடுப்பணை அமைக்கப்படும்.
- உளுந்தூர்பேட்டைவட்டம் கிழக்கு, மருதூர்கிராமம் அருகே கெடிலம் ஆற்றில் 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும்.
- சங்கராபுரம்வட்டம், பூட்டைகிராமம் அருகே மணி நதியில் 2 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும்.

- உளுந்தூர்பேட்டைவட்டம், கூ.கள்ளக்குறிச்சிகிராமம் அருகே நரியன் ஓடையில் 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும். இத்தடுப்பணைத் திட்டங்களினால் சுமார் 665 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.
- உளுந்தூர்பேட்டை பேரூராட்சி 3.68 எம்.எல்.டி பாதாள சாக்கடைத் திட்டம், 38.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நான் வருகின்றபொழுது, தைப்பொங்கல் வரவிருப்பதால், இந்த ஆண்டு என்ன செய்யப் போகின்றீர்கள் என்று பொதுமக்கள் என்னிடத்தில் கேள்வி எழுப்பினார்கள். உங்களது கோரிக்கை அரசின் பரிசீலினையில் இருந்து கொண்டிருக்கிறது, அதுகுறித்த நல்ல அறிவிப்பை நான் இப்பொழுது செல்லும் விழாவில் அறிவிப்பேன் என்று கூறினேன். தைப்பொங்கல் பண்டிகை தமிழர்களின் தனிச் சிறப்புமிக்க பண்டிகை. தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் தமிழ் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டும். தமிழர் மரபையும், பாரம்பரியத்தையும் அடையாளப்படுத்தும் இவ்விழா, தமிழ் மக்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டும். எனவே தான், சென்ற ஆண்டு, வறட்சியின் பாதிப்பு ஏழை மக்களை பாதிக்காத வண்ணம், பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்காக அம்மாவின் அரசு, அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள அனைத்து குடும்பத்திற்கும் தலா ஆயிரம் ரூபாய் ரொக்கமும், பொங்கல் பரிசுத் தொகுப்பும் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள்ளது. விவசாயிகள் தங்களிடம் உள்ள பணத்தை இடுபொருள்களுக்கும், பிற பணிகளுக்கும் செலவழித்துவிட்ட நிலையில், அவர்கள் போதிய வருவாய் இன்றி சிரமப்படும் ஏழைக் குடும்பங்கள் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை இந்த ஆண்டும் சிறப்பாகக் கொண்டாட, சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் அரிசி அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும், குடும்பத்திற்குத்

தலா 1,000 ரூபாயுடன், 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை அத்துடன் கரும்பு, முந்திரி, திராட்சை உட்பட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றுகின்ற ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஆகவே, புதிதாக தொடங்கப்பட்ட கள்ளக்குறிச்சிமாவட்டம் உதயமாவதற்கு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
__26.11.2019__ அன்று கள்ளக்குறிச்சியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தினை தொடங்கி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளைத் துவக்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.

சட்டக்கல்லூரியின் மாணவர்களாகிய நீங்கள்தான் வருங்காலத்தில் நீதியையும், சட்டத்தையும் பாதுகாக்க வேண்டியவர்கள்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

விழுப்புரத்தில் சட்டக்கல்லூரி வளாக திறப்பு விழா, டாக்டர் எம்.ஜி.ஆர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டடத் திறப்பு விழா மற்றும் விழுப்புரம் நகராட்சி நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி”.

நேராக நின்று சரியான எடை காட்டும் தராசின் முள்ளைப்போல், நடுநிலைமையோடு வாழ்வதே சான்றோர்க்கு அழகாகும் என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். திருவள்ளுவரின் இந்த வாக்கு நீதித் துறைக்கு மிகவும் பொருத்தமாகும். மக்களாட்சியை தாங்கிப் பிடிக்கின்ற நான்கு தூண்களில் நீதித் துறையும் ஒன்று. நாடு அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் திகழ்வதில் நீதித் துறையின் பங்கு மகத்தானது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையின் அடிப்படையில் நமது நாட்டில் நீதி நிருவாகம் இயங்கி வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதி நிருவாகத்தை வலிமையாகக் கட்டமைக்கக்கூடிய இடமாக சட்டக்கல்லூரிகள் விளங்குகின்றன. சட்டக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள்தான், எதிர்காலத்தில் சிறந்த சட்ட வல்லுநர்களாகவும், நீதிபதிகளாகவும் உச்சநிலைக்கு அடைகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தான் நடித்த படங்களுக்கு 'நீதிக்குப் பின் பாசம்', 'நீதிக்கு தலைவணங்கு' என்று நீதிக்கு பெருமை சேர்க்கும் பெயர்களை வைத்தது, அவர் தர்மத்தின் மீதும், நீதியின் மீதும் வைத்திருந்த நம்பிக்கையை பறை சாற்றுகிறது. தன்னுடைய திரைப்படங்களில் சட்டம், நீதி, நேர்மை, வாய்மை பற்றிய வசனங்களையும், பாடல்களையும் அவர் நிச்சயம் இடம் பெறச் செய்துவிடுவார்.

'தவிதவிக்கிற ஏழைக்காகத் திட்டம் போடணும் – பொருளை சரிசமமாக பங்கு வைக்க சட்டம் போடணும்' என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப, அவர் முதலமைச்சர் ஆன பிறகு சிறப்பாக ஆட்சி நடத்தியும் காண்பித்தார்.

"ஏழை மக்களுக்கு அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை உறுதிப்படுத்துவது நமது பொறுப்பாகும்" என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதற்கு ஏற்ப டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் தான் ஆசியாவிலேயே

மிகக் குறைவான கட்டணத்தில் தரமான சட்டக்கல்வியை வழங்கி வருகிறது.

அம்மாவின் அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர், அதாவது மே 2011–க்கு முன்னர் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் ஆகிய 7 அரசு சட்டக்கல்லூரிகள் மட்டுமே தமிழகத்தில் செயல்பட்டு வந்தன.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பு ஏற்ற பின்னர், தேசிய அளவில் மிகச்சிறந்த சட்டக்கல்வி வழங்கும் பொருட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் 79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி ஒன்று மாண்புமிகு அம்மா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு ஐந்தாண்டு இளநிலை சட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றது முதல், சட்டக் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், 2017–2018ஆம் கல்வியாண்டு முதல், விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் தலா ஒரு அரசு சட்டக்கல்லூரி துவக்கப்பட்டு, கல்லூரிக்கு ஒன்றுக்கு 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் வீதம் நிதி ஒப்பளிக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டில் செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரியில் முதுநிலை சட்டப்படிப்பும், 2017ஆம் ஆண்டில் வேலூர் அரசு சட்டக்கல்லூரியில் புதிதாக 5 ஆண்டு சட்டப் படிப்பும் தொடங்கப்பட்டது.

மேலும், 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரிகளில் புதிதாக தமிழ்வழிப் பயிற்று வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

நீதியரசர் திரு.பி.சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் செயல்பட்டு வந்த சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரியினை இடமாற்றம் செய்து **2018–2019**ஆம் கல்வியாண்டு முதல் திருவள்ளூர் மாவட்டம், பட்டறை பெரும்புதூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கம் ஆகிய இடங்களில் இரு கல்லூரிகளாக துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

2019–2020ஆம் கல்வியாண்டு முதல் சேலம், நாமக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் **3** ஆண்டு மற்றும் **5** ஆண்டு சட்டப் படிப்புகளுடன் தலா ஒரு அரசு சட்டக்கல்லூரி துவக்கப்பட்டு அக்கல்லூரிகள் செயல்பட்டு வருகிறது.

2019–2020ஆம் கல்வியாண்டு முதல் புதுப்பாக்கம், விழுப்புரம் மற்றும் தருமபுரி அரசு சட்டக்கல்லூரிகளில் முறையே 'Climate Change Laws', 'Information Technology and Cyber Security Laws', 'Corporate Governance Laws' போன்ற முதுநிலை சட்ட மேற்படிப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, இவ்வரசு பொறுப்பு ஏற்பதற்கு முன்னர் இருந்த அரசு சட்டக்கல்லூரிகளின் எண்ணிக்கை **7** என்பது, இரு மடங்காக உயர்த்தப்பட்டு, தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் **14** அரசு சட்டக்கல்லூரிகளும், **1** தேசிய சட்டப் பள்ளியும் மற்றும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகமும் செயல்பட்டு வருகின்றன.

தற்போது செயல்பட்டு வரும் **14** அரசு சட்டக்கல்லூரிகளில் **(5** ஆண்டு மற்றும் **3** ஆண்டு**)** இளநிலை சட்டப்படிப்பில் மொத்தம் **11** ஆயிரத்து **206** மாணவர்களும், முதுநிலை சட்டப்படிப்பில் **420** மாணவர்களும் என மொத்தம் **11** ஆயிரத்து **626** மாணவர்கள் இன்றைக்கு சட்டம் பயின்று வருகின்றனர்.

விழுப்புரம் மற்றும் அதனை சுற்றியுள்ள திருவண்ணாமலை, கடலூர் ஆகிய 85 இலட்சத்துக்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட 3 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அரசு சட்டக்கல்லூரி ஏதும் அருகில் இல்லை என்பதாலும், சட்டம் பயில விருப்பமுள்ள இம்மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் சட்டம் பயில வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்திலும், அம்மாவட்ட மக்களின் நீண்ட கால கோரிக்கையினை ஏற்று, விழுப்புரம் நகரத்தில் 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் புதிதாக அரசு சட்டக்கல்லூரி துவக்கப்பட்டு, 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு இளநிலை சட்டப் படிப்பு மற்றும் முதுநிலை சட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரிக்கான உட்கட்டமைப்பு மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கென 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்புச் செய்தும், மாணவர்களுக்கு பாடங்களைப் போதித்திடவும் மற்றும் நிருவாகப் பணிகளைக் கவனித்திடவும் தேவையான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

இக்கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் வரையில், கல்லூரி தற்காலிகமாக செயல்படுவதற்கு விழுப்புரம் நகரத்தில், பழைய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் தெரிவு செய்யப்பட்டு, அக்கட்டடத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரி செவ்வனே செயல்பட்டு வருகின்றது.

விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு சாலாமேடு கிராமத்தில் 1.93 ஹெக்டேர் பரப்பு நிலம் தெரிவு செய்யப்பட்டு, மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம், 70 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தற்போது கட்டப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தில்,

- 24 வகுப்பறைகள்,
- சுமார் 400 மாணவர்கள் பங்குபெறும் கருத்தரங்கக் கூடம்,
- சுமார் 400 மாணவர்கள் கலந்துகொள்ளும் காணொலிக் காட்சி அறை,
- சொற்பொழிவு அறை,
- மாணவ, மாணவிகளுக்கென தனித்தனி ஓய்வு அறைகள்,
- கணினி ஆய்வகம்,
- உள்விளையாட்டரங்கம் மற்றும்
- சர்வதேச தரத்தில் மாதிரி நீதிமன்ற அரங்கம், நவீன தரத்தில் கல்லூரி அலுவலகம் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய நிருவாகத் தொகுதிக் கட்டடங்கள்,
- அதிவேக இணைய வசதிகளுடன் கூடிய கம்பியில்லா மண்டலம் அடங்கிய நூலகக் கட்டடங்கள் மற்றும்
- கலையரங்கம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

தற்போது, இக்கல்லூரியில், மூன்றாண்டு சட்டப் படிப்பில், 240 மாணவர்கள், 5 ஆண்டு சட்டப்படிப்பில் 240 மாணவர்கள், முதுநிலை சட்டப்படிப்பில் 20 மாணவர்கள் என மொத்தம் 500 மாணவர்கள் இந்த கல்லூரியிலே சட்டம் பயின்று வருகின்றனர்.

சட்டம் பயிலும் மாணவர்களுக்கு, வழக்கறிஞர் பணி மற்றும் நீதித் துறையினைத் தவிர, உலகமயமாக்கலின் சூழலால் வணிகச்சட்டம், சுற்றுச்சூழல் சட்டம், தகவல் தொழில்நுட்ப சட்டம் ஆகிய துறைகளில் வேலைவாய்ப்புகளும், வங்கி மற்றும் நிதி சார்ந்த துறைகளில் சட்ட வல்லுநர்களின் தேவை அதிகமாக உள்ளதால், வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளும், குடிமைப் பணிக்கான போட்டித் தேர்வு, அரசுத் துறைகளுக்கு போட்டித் தேர்வுகளிலும் தேர்வு செய்யப்பட்டு, வேலைவாய்ப்புகளை அள்ளித் தரும் அட்சய பாத்திரமாக சட்டப் படிப்பு இன்றைக்கு மாறி வருகின்றது.

தற்போது மாறிவரும் சூழலுக்கு ஏற்ப புதிய சட்டங்கள் மற்றும் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் சட்ட திருத்தங்கள் ஆகியவற்றை மாணவர்கள் கல்லூரியில் பயிலும்போதே உடனுக்குடன் தெரிந்து கொள்ள ஏதுவாக ஒவ்வொரு கல்லூரியிலும் அதிநவீன வசதியுடைய இணைய வசதிகள், நவீன நூலகங்கள் மற்றும் சர்வதேச தரத்திலான மாதிரி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்களது வழக்காடும் திறமையை மேம்படுத்திட பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி அரசு தரமான சட்டக் கல்வியினை வழங்கி வருகிறது.

- “கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி பயில வகை செய்தல் எனது நோக்கமாகும்” என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை துவக்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த அம்மாவின் அரசும், 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கியுள்ளதுடன், 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் தமிழகத்திலே துவக்கியது. இதன் காரணமாக, உயர்

கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவீதம் 49 என உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக இன்று விளங்கி வருகிறது.

- உயர் கல்வி நிறுவனங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு மிகுந்த கவனம் செலுத்தி பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், விழுப்புரத்தில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணி 4.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- 2017–2018ஆம் கல்வியாண்டில் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட்டு, தற்காலிக கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கல்லூரிக்கென நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு 7.98 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப் பணிகள் முடிவுற்று, கல்லூரியில் இன்று முதல் வகுப்புகள் துவங்கப்பட உள்ளன என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.
- இந்த இனிய நாளில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.
- தமிழ்நாட்டில் விரைந்து வளர்ச்சியடைந்து வரும் நகராட்சிகளில் சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள விழுப்புரம் நகராட்சியும் ஒன்றாகும்.
- இந்நகராட்சி 01.10.1919 அன்று மூன்றாம் நிலை நகராட்சியாகத் தொடங்கப்பட்டு, 02.03.1988 அன்று முதல் தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, கடந்த 30.09.2019இல் நூற்றாண்டு நிறைவு பெற்றது. வரலாற்றுச் சிறப்புமிக்க நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் விழுப்புரம் நகராட்சி நிருவாகம் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் என்

மனமார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

- இந்தியாவில் அதிக நகரமயமான பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக திகழ்கிறது. அதற்கு முக்கியக் காரணம், மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையும், திட்டங்களும்தான். மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றதில் இருந்து, நகராட்சி உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் மிகுந்த சிரத்தை எடுத்து பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில்,

- விழுப்புரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டங்கள், இதர திட்டங்கள் மற்றும் மாநகராட்சி பொது நிதியின் கீழ், 17.40 கி.மீ. நீளத்திற்கு 9.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 46 சாலைப் பணிகள்,

- 29.50 இலட்சம் ரூபாய் செலவில் தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள்,

- 83 இலட்சம் ரூபாய் செலவில் 49 ஆழ்துளைக் கிணறுகள்,

- 1.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கான வாகனம்,

- 4.70 கோடி ரூபாய் செலவில் குப்பையில் இருந்து உரம் தயாரிக்கும் பணிகள்,

- 3.49 கோடி ரூபாய் செலவில் பயோ–மைனிங் முறையில் உரக் கிடங்கில் உள்ள குப்பைகளை இறுதியாக்கம் செய்து அகற்றும் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஏற்கெனவே நான் சட்டப் பேரவை விதி 110இன்கீழ் 18.07.2019 அன்று அறிவித்தவாறு, வரலாற்றுச் சிறப்புமிக்க நூற்றாண்டு விழா கொண்டாடும் விழுப்புரம் நகராட்சி புதிய அலுவலகக்

கட்டடம் கட்டுதல், காய்கறி சந்தை அமைத்தல், பழைய பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்யும் பணி, புதிய சாலைகள், வடிகால் வசதிகள், தெரு விளக்குகள் ஆகியவற்றை அமைக்கும் பணிகள், நகராட்சி பகுதிகளில் குளங்கள், பூங்காக்களை மேம்படுத்தும் பணி போன்ற பணிகளுக்காக சிறப்பு நிதியாக மாண்புமிகு அம்மாவின் அரசு 50 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது தவிர, இன்று விழுப்புரம் மாவட்டத்தில் சட்டத்துறை, உயர் கல்வித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 92.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவடைந்த 29 பணிகளை திறந்து வைத்தும், 278.53 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 541 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

கல்லூரி மாணவர்களுக்கு கல்வி போதிப்பது என்பது சவாலான காரியம்தான் என்றாலும், சட்டக்கல்லூரி ஆசிரியராகிய நீங்கள் வெறும் வகுப்பறை ஆசிரியராக மட்டுமல்லாமல், மாணவர்களின் உற்ற தோழனாகவும், நல்ல வழிகாட்டியாகவும், சிறந்த முன்மாதிரியாகவும் இருந்து அவர்களை நெறிப்படுத்த வேண்டும்.

சட்டக்கல்லூரியின் மாணவர்களாகிய நீங்கள்தான் வருங்காலத்தில் நீதியையும் சட்டத்தையும் பாதுகாக்க வேண்டியவர்கள். எனவே, மாணவப் பருவத்தில் இருக்கும் நீங்கள் எவ்வித கவனச் சிதறலுக்கும் இடம் கொடுக்காமல், கல்வியில் முழு கவனத்தையும் செலுத்தி, வருங்காலத்தில் சிறந்த வழக்கறிஞர்களாகவும், நீதிமான்களாகவும் உருவாக வேண்டும் என உங்களை எல்லாம் வாழ்த்துகின்றேன்.

வருங்காலத்தில் சிறந்த நீதிபதிகளாக உருப் பெறவுள்ள நீங்கள், உங்களிடம் வரும் வழக்குகளை நன்கு ஆராய்ந்து, சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்ற கொள்கையினை கடைபிடித்து சிறந்த தீர்ப்புகளை வழங்கி, நீதியை நிலைநிறுத்த வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நான் சொன்ன அனைத்து திட்டங்களுமே, இந்த மாவட்டத்தின் மண்ணின் மைந்தர் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள், ஒவ்வொரு முறையும் என்னை சந்திக்கின்றபோது, ஏதாவது ஒரு கோரிக்கை வைப்பார். சட்டக்கல்லூரி அமைக்க கோரிக்கை வைத்தார். அதற்கு மேலாக, விழுப்புரம் நகராட்சி நூற்றாண்டு விழாவை கொண்டாட சிறப்பு நிதி வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அவருடைய கோரிக்கையினை ஏற்று சட்டமன்றத்திலே நூற்றாண்டு விழா காணுகின்ற விழுப்புரம் நகராட்சிக்கு சிறப்பு நிதியாக 50 கோடி ரூபாய் நான் அறிவித்தேன்.

மேலும், இந்த மாவட்டம் வளர்வதற்கும், இந்த மாவட்டத்திலே இருக்கின்ற மாணவச் செல்வங்களுக்கு சிறந்த கல்வி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே மரியாதைக்குரிய சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார். இந்த மாவட்டத்தை பொறுத்தவரைக்கும், கிராமங்கள் நிறைந்த பகுதி, விவசாயிகள் நிறைந்த பகுதி. ஆகவே, அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற அந்த விவசாயிகளுடைய குழந்தைகள் சட்டம் பயில வேண்டும், உயர்கல்வி பயில வேண்டும் என்பதற்காகத் தான் இவ்வளவு செலவு செய்து, இவ்வளவு அற்புதமான கட்டடத்தை உங்களுக்குக் கொடுத்து, சட்டம் பயில்வதற்கு அரசு துணை நிற்கின்றது. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலவும் துணை நிற்கின்றது. நீங்கள் சிறப்பான கல்வி கற்று, நீங்கள் உயர்ந்த நிலையை எட்ட வேண்டும். நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லது செய்ய வேண்டும் என்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்,

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் விழுப்புரத்தில் **26.11.2019** அன்று நடைபெற்ற சட்டக்கல்லூரி வளாகத் திறப்பு விழா டாக்டர் எம்.ஜி.ஆர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டடத் திறப்பு விழா மற்றும் விழுப்புரம் நகராட்சி நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.*

புரட்சித்தலைவி அம்மாவின் வழித்தோன்றலாய் நடக்கும் இந்த ஆட்சியில் மக்களுக்கு எல்லா வளங்களும் தானாக வந்து சேரும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற இந்தப் பகுதி மக்கள் மற்றும் மாவட்ட அமைச்சர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, இன்றைக்கு வேலூர் மாவட்டத்திலிருந்து பிரித்து புதியதாக திருப்பத்தூர் மாவட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின்போதும் இது சம்பந்தமாக பல தரப்பினரிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்தன. அதனை பரிசீலனை செய்வதாக நான் அப்போது தெரிவித்திருந்தேன்.

அதன்பின் மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளின் விளைவாக, நான் கடந்த சுதந்திர தின விழா உரையில், திருப்பத்தூர் மாவட்டம் புதிதாக உருவாக்கப்படும் என்று

அறிவித்ததற்கிணங்க, இன்று இம்மாவட்டம் உதயமாகி உள்ளது என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இனிய வேளையில், புதிய மாவட்டத்தின் சிறப்பு அம்சங்கள் சிலவற்றைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

ஆதியூர் முதல் கோடியூர் வரை 8 திசைகளில் 10 திருத்தலங்கள் இருந்ததால் "திருப்பத்தூர்" என்று பெயர் வந்தது என்றும், திருப்பத்தூரை பல மன்னர்கள் ஆண்ட காலத்தில் பிரம்மபுரம், திருப்பேரூர், திருவனபுரம் என பல பெயர்களில் திருப்பத்தூர் அழைக்கப்பட்டது என்றும், 14ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்கள் திருவனபுரம் என்ற பெயரை திருப்பத்தூர் என்று மாற்றி உள்ளதாகவும் ஒரு ஆராய்ச்சி தகவல் கூறுகிறது. திருப்பத்தூர் நகரம் ஜவ்வாது மலை, ஏலகிரி மலை என இரண்டு பெரிய மலைகளால் சூழப்பட்ட பகுதி ஆகும். ஜவ்வாது மலை, இயற்கை எழில் கொஞ்சும் அருவிகள், நீரோடைகள், காடுகள் என காண்போரை மெய் சிலிர்க்க வைக்கும் ரம்மியமான மலையாகும். இம்மலையின் பீமன் அருவியும், அமிர்தி உயிரியல் பூங்காவும் சுற்றுலாத் தலங்களாக விளங்குகிறது.

ஜவ்வாது மலையில் இருந்து செய்யாறு, ஆரணியாறு, கமண்டல நாகநதி ஆறு, மிருகண்டா நதி ஆகிய ஆறுகள் உற்பத்தியாகின்றன. இம்மலைவாழ் மக்களில் பெரும்பாலானவர்கள் மலையாளி என்ற பழங்குடி இனத்தவர்கள் ஆவர். இவர்களது முக்கியத் தொழில் வேளாண்மை ஆகும். இம்மலை மிகச் சிறந்த சந்தன மரங்கள் விளையும் பூமி. இதனால் ஆசியாவிலேயே 2ஆவது பெரிய சந்தனக் கிடங்கு திருப்பத்தூரில் அமைக்கப்பட்டது. சந்தனம் விளையும் ஜவ்வாது மலையை ஒட்டி அமைந்துள்ளதாலும், பெரிய சந்தனக் கிடங்கு உள்ளதாலும் திருப்பத்தூரை 'சந்தன மாநகர்' என அழைக்கப்படுவதும் உண்டு.

இம்மாவட்டத்திலுள்ள ஆம்பூர் நகரில் தயாரிக்கப்படும் "பிரியாணி" உலகப் பிரசித்தி பெற்றது. இங்கு தோல் தொழிற்சாலைகள் அதிகம்

அமையப் பெற்று, அந்நியச் செலாவணி அதிகம் ஈட்டித் தருவதோடு மட்டுமல்லாமல், இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பையும் அளித்து வருகிறது.

ஜோலார்பேட்டை இரயில் நிலையம், திருவனந்தபுரம், பெங்களூர், மும்பை போன்ற நகரங்களை இணைக்கும் முக்கியச் சந்திப்பாக விளங்குகிறது.

ஆங்கிலேயர் ஆட்சியில், 1790ஆம் ஆண்டிலேயே திருப்பத்தூர் மாவட்டம் உருவாக்கப்பட்டு, அதன் முதல் ஆட்சித் தலைவராக கிண்டர்ஸ்லே அவர்கள் நியமிக்கப்பட்டு, 03.04.1792 வரை அப்பொறுப்பில் இருந்தார்.

அதன் பின்னர், ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம் உருவாக்கப்பட்டு, அதன் தலைநகராக திருப்பத்தூர் இருந்தது. ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட கலெக்டர் அலுவலகம், இன்று இரயில்வே நிலையமாக உள்ளது.

கால மாற்றத்தில் சேலம் மாவட்டம், சித்தூர் மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் ஆகிய மாவட்டங்களின் ஒரு பகுதியாக இருந்த திருப்பத்தூர், இன்று மாண்புமிகு அம்மாவின் அரசால், ஒரு புதிய மாவட்டமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், ஆற்காட்டிலிருந்து மைசூருக்குச் சென்ற ஆங்கிலப் படைகள், வழியில் திருப்பத்தூர் சென்றடைந்தது. அங்கு அவர்கள் தாகம் தணிக்க பொது கிணற்றை நாடியுள்ளனர். ஆனால், தாய் மண்ணின் மீதிருந்த பற்றாலும், ஆங்கிலேயர் மீது இருந்த வெறுப்பு உணர்வாலும், அவர்களுக்கு தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்களை அளிக்க மறுத்துவிட்டதோடு மட்டுமல்லாமல், இரவில் ஆங்கிலப் படைகள் செல்லும் பாதையில் கற்களையும், மரங்களையும் வெட்டிப் போட்டு எதிர்ப்பு தெரிவித்த தேசப்பற்றுமிக்க மக்கள் வாழும் மாவட்டம்தான் திருப்பத்தூர் மாவட்டமாகும்.

இந்த இனிய வேளையில் திருப்பத்தூர் மாவட்டத்தை பற்றிய சில நிருவாக செய்திகளையும் குறிப்பிட விரும்புகிறேன்:—

இன்று உருவாகியுள்ள திருப்பத்தூர் மாவட்டத்தின் தலைநகரம், திருப்பத்தூர் நகரம். மாவட்டத்தின் பரப்பளவு 1,798 சதுர கிலோ மீட்டர். மாவட்டத்தின் மக்கள்தொகை 11 இலட்சத்து 11 ஆயிரத்து 812 பேர் ஆகும்.

வருவாய் நிருவாகத்தைப் பொறுத்தமட்டில், திருப்பத்தூர் மற்றும் வாணியம்படி என இரண்டு வருவாய் கோட்டங்களும், திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், நாட்ராம்பள்ளி ஆகிய 4 வட்டங்களும், 15 உள் வட்டங்களும், 195 வருவாய் கிராமங்களும் இம்மாவட்டத்தில் உள்ளன.

உள்ளாட்சி நிருவாகத்தைப் பொறுத்தமட்டில், ஆம்பூர், திருப்பத்தூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை என நான்கு நகராட்சிகளும், நாட்ராம்பள்ளி, திருப்பத்தூர் உட்பட 7 ஊராட்சி ஒன்றியங்களும், ஆலங்காயம், நாட்ராம்பள்ளி மற்றும் உதயேந்திரம் என 3 பேரூராட்சிகளும், 207 கிராம ஊராட்சிகளும் உள்ளன. இத்தருணத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலையும் விரைவில் மாண்புமிகு அம்மாவின் அரசு நடத்த இருக்கிறது என்ற தகவலை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

புதியதாக மாவட்டங்கள் உருவாக்கப்படுவதற்கும், உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படுவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஆனால் வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு புதிய மாவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்ட காரணத்தினால் உள்ளாட்சி தேர்தல் நடைபெறாது என்ற ஒரு பொய்யான கருத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், அது தவறு. 2018ஆம் ஆண்டில் ஏற்கெனவே புதியதாக மறுவரையறை செய்யப்பட்டு வெளியிடப்பட்ட வார்டுகளின் அடிப்படையிலேயே தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பொதுவாக பெரும்பாலான இடங்களில் அரசு அலுவலகங்கள், பல்வேறு பகுதிகளில் இயங்கும். இதனால் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாவார்கள். பொதுமக்கள் சிரமப்படாமல் அரசு அலுவலகங்களை நாடுவதற்கு வகை செய்யும் வண்ணம், திருப்பத்தூரில் மட்டும் அனைத்து அரசு அலுவலகங்களும் திருப்பத்தூர் மெயின் ரோட்டை ஒட்டியவாறு 20 ஏக்கர் பரப்பளவில் ஒரே இடத்தில் அமைத்துத் தரப்படும்.

திருப்பத்தூரில் அமைந்துள்ள பிரம்மேஸ்வரர் கோயில், ஆம்பூரில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் ஆகியவை இம்மாவட்டத்தில் பிரபலமான திருக்கோயில்கள் ஆகும். இம்மாவட்டத்தில் ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி பகுதிகளில் ஏராளமான பள்ளிவாசல்கள் உள்ளன.

பொதுவாக ‘ஏழைகளின் ஊட்டி’ என்று அழைக்கப்படும் ஏலகிரி மலை திருப்பத்தூரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இந்த ஏலகிரிமலை கடல்மட்டத்திலிருந்து 1,700 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இது ஒரு முக்கிய கோடை வாசஸ்தலமாக விளங்கி சுற்றுலாப் பயணிகளை மிகவும் ஈர்க்கின்றது. அதே போல ஏலகிரி மலையில் உள்ள ஜலகாம்பாறை அருவி, பூங்கனூர் ஏரி, சிறுவர் பூங்கா ஆகியவை சுற்றுலாப் பயணிகளை கவரும் இடங்களாக திகழ்கின்றன.

திருப்பத்தூர் ஜவ்வாது மலையில் அமைந்துள்ள காவலூர் விண்வெளி ஆராய்ச்சிமையம் திருப்பத்தூருக்கு பெருமை சேர்க்கிறது. தெற்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய விண்வெளி ஆராய்ச்சிமையம், 100 ஏக்கர் நிலப்பரப்பில், விஞ்ஞானி வைனு–பப்பு பெயரில் செயல்பட்டு வருகிறது. பல்வேறு அறிஞர்கள் படித்த மற்றும் பணியாற்றிய இஸ்லாமியகல்லூரி இந்த மாவட்டத்தில்தான் உள்ளது. இது போன்று எண்ணற்ற சிறப்புகளை உள்ளடக்கியது இந்த மாவட்டமாகும்.

புதியதாக திருப்பத்தூர் மாவட்டம் தொடங்கப்படுவதனால், இப்பகுதியில் முக்கியத் தொழிலான வேளாண்மை, தோல் தொழிற்சாலைகள் தவிர, பிற தொழில்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். ஆகையால், இப்பகுதி மென்மேலும் வளர்ச்சி அடையும். மொத்தத்தில் இம்மாவட்டம் ஏனைய மாவட்டங்களுக்கு இணையாக எல்லா வளமும், வளர்ச்சியும் பெற்று முதன்மை மாவட்டமாக உயரும் என்று நான் உறுதிபடக் கூறுகிறேன். இதற்கு அம்மாவின் அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

09.09.2017 அன்று நடைபெற்ற எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில்வாணியம்பாடிவட்டத்தில்அமைந்துள்ளஆண்டியப்பனூர் ஒடை நீர்தேக்க அணையை சுற்றுலாப் பயணிகளும், பொதுமக்களும் கண்டு களித்திடும் வகையில் சுற்றுலாத் தலமாக மேம்பாடு செய்யப்படும் என நான் அறிவித்தேன். எனது அறிவிப்பிற்கிணங்க, இந்தப் பகுதியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்திட 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இந்தத் தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆம்பூரில், ஆம்பூர் நகராட்சி 24.32 எம்.எல்.டி. குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, 31.10.2019 அன்று என்னால் துவக்கிவைக்கப்பட்டுள்ளது.

மேலும், திருப்பத்தூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, வெலக்கல்நத்தம் சாலை மேம்பாலம் 23.45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், நாட்றம்பள்ளி சாலை தாமலேரிமுத்தூர் சாலை மேம்பாலம் 16.38 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கட்டப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது. கடந்த 2011 முதல் 2018 வரை 747 கி.மீ. நீளச் சாலைகள் மற்றும் 56 பாலப் பணிகள் 468 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு மக்களுடைய

பயன்பாட்டிற்கு கொண்டு வந்த அரசு அம்மாவின் அரசு. நடப்பாண்டில் 246 கி.மீ. நீள சாலைகள் மற்றும் 40 பாலப் பணிகள் 550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித்துறையின் சார்பில், குடிமராமத்து திட்டத்தின் கீழ் 26 ஏரிகள், சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மாவின் அரசால் புனரமைக்கப்பட்டுள்ளன. 13ஆவது நிதிக்குழு திட்டத்தின் கீழ், 1.71 கோடி ரூபாய் செலவில் 7 ஏரிகள் புனரமைக்கும் பணிகளும், 3.06 கோடி ரூபாய் செலவில் 8 ஏரிகள் புதுப்பிக்கும் பணிகளும் நடைபெற்றுள்ளன. இது தவிர, நபார்டு திட்டத்தின் கீழ் 2.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மகப்பேறு மற்றும் குழந்தை நல மருத்துவத்தில் அதிக அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, 18 கோடி ரூபாய் செலவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில், மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையத்தை ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தும் பணிகளும், 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையம் அமைக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிராமம் மற்றும் நகர்ப்புரங்களில் உள்ள மகளிர் மேம்பாட்டினை கருத்தில்கொண்டு, இம்மாவட்டத்தில் 6,500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 2011 முதல் இது வரை 688 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டதைப் போலவும், அந்தக் குழுக்களுக்கு அதிகக் கடன் கொடுத்த அரசு திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பது போலவும் பொய்யான தகவலை தமிழகம் முழுவதும் செல்லும் இடங்களில் எல்லாம் பரப்பி வருகிறார். ஆனால், இதயதெய்வம்

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை ஒரு குழுவாக அமைத்து சுயஉதவிக் குழு ஏற்படுத்தப்பட்டு, அக்குழுக்களுக்கு கேட்கின்ற அளவிற்கு நிதியைக் கொடுத்து சுயமாகத் தொழில் தொடங்கி, அவர்கள் சொந்தக் காலில் நிற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்த அரசு அம்மாவின் அரசு என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம். அதன் விளைவாக, 2011ஆம் ஆண்டு முதல் இன்று வரை சுமார் 688 கோடி ரூபாய் இந்த மாவட்டத்தில் மட்டும் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்கியிருக்கின்றோம்.

2016ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில், மாண்புமிகு அம்மா அவர்கள், நான் மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் மானிய விலையில் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பை கொடுத்தார்கள். ஆனால், அம்மா அவர்கள் மறைந்தாலும், அம்மா அவர்கள் வழியில் நடைபெறும் எங்களின் அரசு அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் 2,269 உழைக்கும் மகளிருக்கு 5.68 கோடி ரூபாய் மானியம் வழங்கி திட்டத்தை நிறைவேற்றிய அரசு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாவட்டத்தில் ஏழை, எளிய விவசாய பெருமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்த, விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த 8 ஆண்டுகளில் 1,805 பயனாளிகளுக்கு 7.76 கோடி ரூபாய் செலவில் கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல், 22,638 பயனாளிகளுக்கு 29.69 கோடி ரூபாய் செலவில் விலையில்லா வெள்ளாடு / செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டு மக்கள் பயன் அடைந்துள்ளனர். அம்மா

அவர்கள் அறிவித்த அனைத்து திட்டங்களையும் சிந்தாமல், சிதறாமல் மக்களுக்குக் கொடுத்து, ஏழை, எளிய மக்களை பொருளாதார மேம்பாடு அடையச் செய்கின்ற ஒரே அரசு அம்மாவின் அரசு.

கடந்த 8 ஆண்டுகளில், கே.வி.கொரட்டி, வாணியம்பாடி, நாட்றம்பள்ளி, மட்றம்பள்ளி, கந்தலி, ஜோலார்பேட்டை, உதயேந்திரம், பள்ளிகொண்டா ஆகிய பகுதிகளில் சுமார் 62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு, தடையில்லா மின்சாரம் மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு விவசாயியான நான் முதலமைச்சராக உள்ள நிலையில், வேளாண் துறையில் நான் முன் எடுத்த திட்டங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்:—

நாட்டின் வளர்ச்சிக்கு தங்குதடையில்லாத மின்சாரம் மிகவும் முக்கியம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில், நான் முதலமைச்சராக பொறுப்பேற்று, மூன்றே ஆண்டுகளில் தடையில்லா மின்சாரம் கொடுத்து, தமிழகத்தை மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டுவேன் என்று அறிவித்ததுடன், சட்டமன்றத்திலும் சூளுரைத்தார்கள். அதேபோல, மூன்றே ஆண்டுகளில் தடையில்லா மின்சாரம் வழங்கி, இன்றைக்கு நாட்டில் தொழில் வளம் பெருகவும், பொதுமக்களுக்குத் தேவையான மின்சாரத்தைக் கொடுத்த ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 8 ஆண்டுகளில் ஆறாவது முறையாக மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி சாதனை படைத்துள்ளது. இதன் காரணமாக 2011—2012ஆம் ஆண்டு முதல் 2017—2018ஆம் ஆண்டு வரை, மாண்புமிகு அம்மாவின் அரசு வேளாண்மைத் துறையில் 5 முறை தேசிய விருதான “கிருஷி

கர்மான்'' விருதினை பெற்று சாதனை படைத்து, வேளாண்மைத் துறையில் முத்திரை பதித்துள்ளது.

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், புதிய பயிர்களையும், பகுதிகளையும் அறிவிக்கை செய்து, இத்திட்டம் கூடுதல் பரப்பளவில், அதிக வேளாண் பெருமக்கள் பயன் பெறும் வகையில், இந்த ஆண்டு 634 கோடியே 74 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வேளாண் பெருமக்களுக்காக 7 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீட்டு நிதியாக இந்தியாவிலேயே அதிகமாக பெற்றுத் தந்த அரசும் எங்களுடைய அரசு தான்.

2018ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் அமெரிக்கன் படைப்புழுவின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர்களை பாதுகாக்க அம்மாவின் அரசு உடனடி நடவடிக்கை எடுத்ததுடன், பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு ஏறக்குறைய 186 கோடி ரூபாய் நிவாரணமும் வழங்கி சாதனை படைத்துள்ளது. இந்த ஆண்டு, தமிழ்நாடு முழுவதும் மக்காச்சோளம் பயிர் செய்துள்ள நிலங்களில் உள்ள அமெரிக்கன் படைப் புழுத் தாக்குதலைத் தடுப்பதற்காக அரசே அதற்கான மருந்தை தெளித்து, விவசாயிகள்

அதிக விளைச்சல் பெற வழிவகை செய்த அரசு அம்மாவின் அரசு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அகில இந்திய அளவில் ஒப்பந்த சாகுபடி முறைக்கென்று, பிரத்யேகமாக எந்த சட்டமும், எந்த மாநிலத்திலும் இதுவரை இயற்றப்படாத நிலையில், தமிழ்நாடு அரசுதான் முதன் முதலில் தனிச் சட்டம் ஒன்றை வடிவமைத்துள்ளது என்பது தனிச்சிறப்பாகும்.

இந்த மாவட்டத்தின் முன்னாள் அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் பல்வேறு தவறான கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். எனவே, இந்த நேரத்தில் தென்பெண்ணையாற்று பாசன விவசாய பெருமக்களின் உரிமையை நிலைநாட்ட மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் நடவடிக்கையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

கருநாடக அரசு, மார்கண்டேய நதியில் அணை கட்டுவதற்காக கட்டுமானப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டதால், அதனை தடுத்து நிறுத்தக் கோரி **03.07.2019** அன்று ஓர் இடைக்கால மனு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் அனுபவம் வாய்ந்த மூத்த வழக்கறிஞர் மூலம் திறமையான வாதங்கள் எடுத்து வைக்கப்பட்டது. எனினும், உச்சநீதிமன்றம் **14.11.2019** அன்று வழங்கிய தீர்ப்பில், தமிழ்நாட்டின் இடைக்கால மனுவை ஏற்றுக்கொள்ளாமல் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரு நடுவர் மன்றத்தை அமைக்க மத்திய அரசை 4 வார காலத்திற்குள் அணுகுமாறு உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு தொடர்ந்த அசல் வழக்கு இன்னும் நிலுவையில்தான் உள்ளது. இதன் அடுத்த கட்ட விசாரணை **10.1.2020** அன்று எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. உச்சநீதிமன்றம் தென்பெண்ணையாறு பிரச்சினையில் **14.11.2019** அன்று வழங்கிய தீர்ப்பின் மீது சட்ட வல்லுனர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து ஆலோசனை பெறப்பட்டவுடன் தென்பெண்ணையாற்று நீரினை சார்ந்துள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நலனை பாதுகாக்கவும்,

தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டவும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொள்ளும்.

இதுமட்டுமல்லாமல், மத்திய அரசினால் கொண்டுவரப்பட இருந்த அணை பாதுகாப்பு சட்ட மசோதாவில் தமிழகத்தின் நீராதார உரிமைகளை பாதிக்கும் அம்சங்கள் இருந்ததாலும், அதனால் தமிழ்நாட்டில் வேளாண் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதனாலும் அச்சட்ட மசோதாவினை தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி மட்டுமே இயற்றப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி சமீபத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் புதுதில்லிக்குச் சென்று மத்திய நீர்வளத் துறை அமைச்சரை நேரடியாகச் சந்தித்து வேண்டுகோள் வைத்ததன் அடிப்படையில் அச்சட்ட மசோதா தற்போது பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யாமல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது என்பதனை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளின் உணர்வுகளை நன்கு உணர்ந்த ஒரு விவசாயியின் தலைமையிலான அரசால், விவசாயிகளுக்காக இது போன்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களும், வேளாண் பெருமக்களின் உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இங்கே பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

இன்று நடைபெறும் இந்த விழாவில், கருவூலம், சுகாதாரம் மற்றும் ஊரகவளர்ச்சித் துறைகளின் சார்பில் 37 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 176 கட்டடங்களை நான் திறந்து வைத்துள்ளேன். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 19.68 கோடி ரூபாய் மதிப்பிலான 39 பணிகள் உட்பட மொத்தம் 27 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 43 பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். அதேபோல, 7,977 பயனாளிகளுக்கு 94.37 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்று என்னால் வழங்கப்பட்டுள்ளன.

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய நெகிழியை தடை செய்து, அதனை நடைமுறைப்படுத்தி வருகிறது மாண்புமிகு அம்மாவின் அரசு. வருங்கால சந்ததியினரின் நலனைக் கருத்தில்கொண்டும், அவர்களின் சுகாதாரமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையிலும், இதை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் இந்த நேரத்தில் நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுமக்களின் நலனில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் அரசியலுக்கு அப்பாற்பட்டு மாண்புமிகு அம்மாவின் அரசின் செயல்பாடுகளை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் நலனை நினைத்து செயல்படும் ஒரு நாட்டில், அனைத்து வளங்களும் ஒருசேர இருக்கும் என்று ஆன்றோர்கள் கூறுவார்கள்.

அதை நினைக்கும்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு விழாவில் எடுத்துரைத்த கதை ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

ஓர் அரசர் மிகவும் நேர்மையாக ஆட்சி நடத்தி வந்தார். அவருடைய நாடு எல்லா வளங்களோடு சிறப்பாக இருந்தது. ஒரு நாள் இரவு அரசர் தமது நாட்டின் கோட்டையை சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அரண்மனைக்குள் இருந்து ஒரு பெண் வெளியே போவது தெரிந்தது. “அம்மா நீங்கள் யார் ? இந்த நள்ளிரவு நேரத்தில் ஏன் வெளியே போகிறீர்கள் ?” என்று கேட்டார். அந்தப் பெண் சொன்னாள். “நான்தான் திருமகள். மகாலட்சுமி ஆகிய நான், ஒரே இடத்தில் நிரந்தரமாக இருப்பதில்லை. இங்கே தங்கி, நீண்ட நாட்கள் ஆகிவிட்டது. ஆகவே இப்போது வெளியே போகிறேன்” என்று மகாலட்சுமி சொன்னதும், “சரி உங்கள் விருப்பம் தாயே; நீங்கள் போகலாம்”, என்று மன்னர் சொல்லிவிட்டார். சிறிது நேரம் கழித்து இன்னொரு பெண் அரண்மனையை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தாள். “அம்மா நீங்கள் யார் ?” என்று மன்னர் கேட்டார். “நான் கலைமகள். திருமகள் இல்லாத இடத்தில் நான்

இருக்க இயலாது. ஆகவே நான் போகிறேன்'' என்று கலைமகள் சொல்லவும். ''சரி தாயே சென்று வாருங்கள்'' என்று மன்னர் சொல்லி விட்டார். இன்னும் சிறிது நேரத்தில் மூன்றாவது பெண் வெளியேறிக் கொண்டிருந்தாள். ''அம்மா நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள்'' என்று மன்னர் கேட்டார். ''நான் தான் மலைமகள். எப்போது திருமகளும், கலைமகளும் வெளியேறி விட்டார்களோ, அப்போது இந்த அரண்மனையில் வீரத் திருமகளான எனக்கு என்ன வேலை?'' என்று கூறி வெளியேறி விட்டாள். சிறிது நேரம் கழித்து நான்காவதாக ஒரு பெண் வெளியேறிக் கொண்டிருந்தாள் ''அம்மா நீங்கள் யார்?'' என்று கேட்டார் மன்னர். ''நான்தான் தர்ம தேவதை'' என்றாள் அந்தப் பெண். உடனே அரசர் அந்தப் பெண்ணின் காலில் விழுந்து, ''தாயே! யார் போனாலும் போகட்டும், நீங்கள் போகக் கூடாது. தர்மம் வெளியேறிவிட்டால் என் சாம்ராஜ்யம் அழிந்து போகும். ஆகவே நீங்கள் மட்டும் இங்கேயே தங்கி விடவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். சரி என்று சொல்லிவிட்டு தர்ம தேவதை அரண்மனைக்குள் சென்று விட்டாள். சிறிது நேரத்தில் வெளியே போன மலைமகள், ''தர்மம் உள்ள இடத்தை விட்டுவிட்டு வெளியே இருக்க முடியாது; ஆகவே வந்து விட்டேன்'' என்று அரண்மனைக்குள் போய்விட்டாள். அவளைத் தொடர்ந்து கலைமகளும் ''உண்மையும், நீதியும் இருக்கும் இடத்தில்தான் நானும் இருப்பேன்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்து விட்டாள். ''அரசே! எங்கே உண்மை இருக்கின்றதோ, எங்கே தர்மம் இருக்கின்றதோ, எங்கே நீதி இருக்கின்றதோ, அங்கு தான் நான் இருப்பேன். இவை இல்லாத இடம், தீயவர்களின் வேட்டைக் காடாகிவிடும். ஆகவேதான், நானும் இங்கேயே வந்து விட்டேன்'' என்று திருமகள் சொன்னாள். சத்தியம் எங்கு வாழ்கிறதோ அங்கு அனைத்து வளங்களும் தானாகவே வந்து சேரும்.

சத்தியத்தாய் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழித் தோன்றலாய் உண்மையின் வழியில் நடக்கும் இந்த ஆட்சியில்,

மக்களுக்கு அனைத்து வளங்களும் தானாகவே வந்து சேரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா வழியிலே அம்மாவினுடைய அரசு செயல்படுகின்ற விதமாக இன்றைக்கு, கிராமத்திலிருந்து நகரம் வரை ஏழை, எளிய மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்பதற்காக முதலமைச்சர் சிறப்புக் குறைதீர்க்கும் திட்டம் என்ற ஒரு அறிவிப்பை நான் அறிவித்தேன். அந்த அறிவிப்பின் மூலமாக மாவட்டந்தோறும் மனுக்கள் வாங்கப்பட்டன. அதன் விவரத்தை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

மாநிலம் முழுவதும் 9,72,216 மனுக்கள் பெறப்பட்டன. அதில் 5,11,186 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 23,538 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக்கொள்ளப்படாத 4,37,492 மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்து அதில் தகுதியான மனுக்கள் இருந்தால் அவற்றின் மீதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளோம். ஏழை, எளிய மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமென்பதற்காக, எங்களுடைய அதிகாரிகளே நேரடியாகச் சென்று முதலமைச்சர் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டம் என்ற திட்டத்தின் மூலமாக மனுக்களைப் பெற்று, தகுதியான மனுக்கள் அனைத்திற்கும் தீர்வு காணுகின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

உழைக்க முடியாத, வயது முதிர்ந்த முதியோர்களுக்கு இந்த ஓராண்டில் மட்டும் 5 இலட்சம் நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்து, தமிழ்நாடு முழுவதும் முதியோர் கொடுக்கின்ற மனுக்களை ஆராய்ந்து, தகுதியான 5 இலட்சம் முதியோர்களுக்கு ரூ.1,000 உதவித்தொகையாக கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு அரிசி குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு ரூ.1,000 பொங்கல் பரிசு வழங்கப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்து, அதை நிறைவேற்றிய அரசு அம்மாவினுடைய அரசு. அதே வழியில், இந்த ஆண்டு சுமார் 2 கோடியே 5 இலட்சம் அரிசி குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு ரூ.1,000 தைப் பொங்கல் பரிசு வழங்கப்படும் என்ற அறிவிப்பை நான் ஏற்கெனவே கள்ளக்குறிச்சி மாவட்ட தொடக்க விழாவில் அறிவித்தேன். அந்த நிகழ்ச்சி, முதற்கட்டமாக நாளை, சென்னை கோட்டையில் தொடங்க இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். தைப் பொங்கல் பரிசாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, கரும்பு, முந்திரி, திராட்சை, ஏலக்காய் போன்ற பரிசுப் பொருட்களும் அதோடு சேர்த்து வழங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். அதேபோல, நிறைய திட்டங்களை அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகாவில் ஜவ்வாது மலையில் 42 கிராமங்கள் அமைந்துள்ளன. இம்மலை கிராமத்தில் வாழும் மலைவாழ் மக்களின் கல்வி, மருத்துவம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திருப்பத்தூர் நகரை இணைக்கும் மட்றப்பள்ளி, புதூர்நாடு சாலை பெரும்பங்கு வகிக்கின்றது. திருப்பத்தூர் சிங்காரப்பேட்டை சாலை, எஸ்.எச் 18 ஏ கிலோ மீட்டர் 7/8இல் பிரிந்து செல்லும் மட்றப்பள்ளி–புதூர்நாடு சாலை கிலோ மீட்டர் 0/0லிருந்து 20/930 சாலை 3.75 கிலோ மீட்டர் அகலமுள்ள மாவட்ட நகர சாலையாகும். இச்சாலை கிலோமீட்டர் 0/0லிருந்து 8/0 வரை சமதள சாலையாகும். கிலோமீட்டர் 8/0லிருந்து 20/930 வரை மலைச் சாலையாக உள்ளது. புதூர்நாடு கிராமம் வழியாக நெடுவாசல், சிங்காரப்பேட்டை வரை வனச்சாலை அமைந்துள்ளது. இவ்விரண்டு சாலைகள் வழியாக மலைவாழ் மக்கள் திருப்பத்தூர் மற்றும் சிங்காரப்பேட்டை அடைய, விவசாய விளைபொருட்களை

சந்தைப்படுத்த, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளைப் பெற்று தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்கின்றனர். இந்த சாலையை விரைந்து அம்மாவினுடைய அரசால் ரூ.25 கோடி மதிப்பீட்டில் சீர்செய்யப்படும் என்ற அறிவிப்பை இந்த நேரத்தில் வெளியிட விரும்புகின்றேன்.

உங்கள் மாவட்ட மாண்புமிகு அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் கேட்டுக்கொண்ட இந்தத் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. சேலம், திருப்பத்தூர், வாணியம்பாடி தேசிய நெடுஞ்சாலை ஏ.பள்ளிப்பட்டி முதல் அரூர் வழியாக ஊத்தங்கரை வரையுள்ள 44 கிலோமீட்டர் நீளச் சாலையை இருவழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக தரம் உயர்த்த சுமார் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு முதற்கட்டப் பணி துவங்கப்பட்டுவிட்டது. இதன் தொடர்ச்சியாக, ஊத்தங்கரை முதல் திருப்பத்தூர் வழியாக வாணியம்பாடி வரையிலுள்ள 45 கிலோ மீட்டர் நீளச் சாலையை இருவழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக சுமார் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது, அனுமதி கிடைத்தவுடன் இந்தச் சாலை விரிவுபடுத்தி சீர்செய்யப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்புதிய மாவட்டத்தின் வளர்ச்சிக்காக சில அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

திருப்பத்தூர்வட்டம், இருனாம்பட்டுகிராமம் அருகே 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும். இதனால் இருணாம்பட்டு மற்றும் ஆசனாம்பட்டு கிராமங்கள் பயன்பெறும்.

ஆம்பூர்வட்டம், வெங்கிலிகிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே 3.83 கோடி ரூபாய் மதிப்பில் தரைமட்ட தடுப்பு சுவர் அமைக்கப்படும்.

ஆம்பூர்வட்டம், வண்ணான்துறைகிராமம் அருகே கானாற்றின் குறுக்கே 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும்.

இம்மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க தக்க நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படும்.

ஆம்பூர் அரசு மருத்துவமனையில் புறநோயாளிக்கான மருத்துவ வார்டு, தீவிர சிகிச்சைப் பிரிவு (ICU Unit) 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

ஆம்பூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் CEMONC Center 10 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

வாணியம்பாடி அரசு மருத்துவமனை வளாகத்தில் CEMONC Center 10 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

வாணியம்பாடியில் தோல் பதனிடும் தொழிலை மேம்படுத்திட புதிய பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம் (Skill Development Center) கட்டப்படும்.

திருப்பத்தூர், ஏலகிரி மலையில் ஒரு புதிய உள் விளையாட்டு அரங்கம் கட்டப்படும்.

ஏலகிரியில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் தாவரவியல் பூங்கா அமைக்கப்படும்.

நான் அறிவித்த அனைத்து அறிவிப்புகளும் உங்கள் மாவட்டத்தின் வளர்ச்சிக்கான அறிவிப்புகள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே ஆண்டில் 5 புதிய மாவட்டங்களைத் தோற்றுவித்த பெருமை அம்மாவின் அரசைச் சாரும். அதுமட்டுமல்ல, இதுவரை, தமிழக வரலாற்றில் ஒரே நாளில்

இரண்டு மாவட்டங்களைத் தொடங்கிய வரலாறு கிடையாது, அந்த வரலாற்றுச் சாதனையைப் படைத்த அரசு அம்மாவின் அரசு தான். இவ்வாறு புதிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டதன் விளைவாக மாவட்ட நிருவாகம் சிறப்பாக செயல்படுவதற்கு ஏதுவாக இருக்கும்.

இயற்கை எழில் வாய்ந்த மலை சூழ்ந்த, குளு குளுவென்ற சீதோஷண நிலையில் இன்று புதியதாக திருப்பத்தூர் மாவட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டம் விரைந்து உதயமாவதற்கு உறுதுணையாக இருந்ததற்கும், இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 28.11.2019 அன்று*
திருப்பத்தூரில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட, திருப்பத்தூர்
மாவட்டத்தினைத் தொடங்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு
அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளைத் துவக்கிவைத்து,
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.

இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் அரசு அம்மாவினுடைய அரசு!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டைப் பகுதி மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் வகையில் இன்று 36ஆவது மாவட்டமாக உருவாகும் இராணிப்பேட்டை மாவட்ட துவக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

“நமது சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் நல்லிணக்கமான முறையில் சீரான முன்னேற்றம் பெற உத்தரவாதம் தரப்பட வேண்டும். மக்களின் நல்வாழ்வையே இலக்காகக் கொண்டு நிருவாக இயந்திரம் இயங்க வேண்டும். இதுவே எங்களுடைய அரசியல் சமுதாயத் தத்துவமாகும்” என்றார் பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசும், மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் எங்கள் அரசும் மக்கள் நலனுக்காக செயல்படும் அரசு ஆகும். மக்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்றும், அரசின் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு விரைவாக சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை விரைந்து செயல்படுத்தி வருகிறது.

அவற்றில் ஒன்றுதான் பெரிய மாவட்டங்களை பிரித்து, புதிய மாவட்டங்களை உருவாக்குவதாகும். சமீபத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின்போது, இராணிப்பேட்டையைத் தலைமை இடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்தேன்.

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்,' என்று முழங்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். "மக்களை நாடிச் செல்கின்ற அரசுதான் மாண்புமிகு அம்மாவின் அரசு". அந்த வகையில், இப்பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற, மாண்புமிகு அம்மாவின் அரசு உங்களை நாடி வந்திருக்கிறது.

கடந்த சுதந்திர தின உரையில், இராணிப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் ஏற்படுத்தப்படும் என்ற ஒரு அறிவிப்பினை நான் வெளியிட்டேன். அந்த அறிவிப்பு இப்போது செயல்வடிவமாகி உங்களையும், என்னையும் மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறது.

இங்குள்ள சோளிங்கர் நகரில் புகழ்பெற்ற யோக நரசிம்மர் ஆலயம் உள்ளது. யோகத்திலிருந்து நரசிம்மர் கண் விழிக்கும் மாதமான கார்த்திகை மாதத்தில், இந்த மாவட்ட தொடக்க விழா நடைபெறுவது, விழித்த நிலையில் இருக்கும் நரசிம்மரை தரிசிக்க வருகை தரும் பக்தர்களுக்கு மட்டுமல்ல, இந்த மாவட்டத்திற்கே ஒரு யோகமாக நாள் என்று நான் கருதுகிறேன்.

இந்த இனிய நேரத்தில், இந்த புதிய மாவட்டத்தோடு தொடர்புடைய சில வரலாற்று நிகழ்வுகளை இங்கே சுட்டிக்காட்டுவது சிறப்பானதாக அமையும் என்று நினைக்கிறேன்.

செஞ்சிக்கோட்டைமீது ஆற்காடுநவாபுகள் நடத்திய படையெடுப்பில், ராஜாதேசிங்கு வீரமரணம் அடைந்தார். அப்போதைய வழக்கப்படி அவரது இறுதிச் சடங்கின்போது, தேசிங்கு ராஜாவின் மனைவி உடன்கட்டை ஏறினார். இந்த நிகழ்வால் பாதிக்கப்பட்ட ஆற்காடு நவாப் சதாத்துல்லா கான், ராணியின் தியாகத்தை நினைவுகூரும் வகையில், ஆற்காட்டின் மறுகரையில் இராணிப்பேட்டை என்ற நகரை உருவாக்கினான் என்றும், இராணிப்பேட்டை அருகில் 9 இலட்சம் பயன் தரும் பழ மரங்களை நட்டு நவ்லாக் எனும் பகுதி உருவாக்கப்பட்டது என்பதும் வரலாறு ஆகும்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இராணிப்பேட்டை இராணுவப் பேட்டையாகவும் திகழ்ந்திருக்கிறது. இதற்குச் சான்றாக இன்றும் இராணிப்பேட்டையில் பல கட்டடங்கள் காட்சியளிக்கின்றன. ஆங்கிலேயர்களின் இராணுவத்தில் இடம் பெற்றிருந்த பெரிய குதிரைப்படை இந்த இராணிப்பேட்டையில்தான் நிறுத்தப்பட்டிருந்தது. முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர் காலங்களில் சென்னை மற்றும் பெங்களூரில் இருந்த இராணுவத்திற்கு உதவியாக மிகப் பெரிய இராணுவம் இங்கே நிலை நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், இராணுவத்தினர் சென்னையில் இருந்து பெங்களூருக்கும், பெங்களூரிலிருந்து சென்னைக்கும் செல்லும்போது இங்குதான் கூடாரம் அமைத்து, தங்கும் இடமாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

1856ஆம் ஆண்டு சென்னை இராயபுரத்திலிருந்து வாலாஜா வரை அமைக்கப் பெற்ற இரயில் பாதை தான், தென்னிந்தியாவின் முதல் இரயில் போக்குவரத்தாகவும், இந்தியாவின் இரண்டாவது இரயில் போக்குவரத்தாகவும் வரலாற்றில் பதிவாகி இருக்கிறது.

தற்போது இந்த மாவட்டத்தில் உள்ள வாலாஜா தான் தமிழ்நாட்டின் முதல் நகராட்சியாகும். மாநிலத்தில் மிகப்பெரிய நவலாக் தென்னைப் பண்ணை, புகழ்பெற்ற கால்நடை நோய்த்தடுப்பு மருந்து ஆராய்ச்சி மையம் ஆகியவை இராணிப்பேட்டைக்குப் பெருமை சேர்க்கின்றன. இத்தனைச் சிறப்புகளைக் கொண்ட இராணிப்பேட்டைக்கு, இன்று இன்னொரு சிறப்பும் சேர்கிறது. அது என்னவென்றால், இன்றிலிருந்து இராணிப்பேட்டை தமிழ்நாட்டின் 36ஆவது மாவட்டம் என்ற புகழை அடைந்திருக்கிறது.

இந்த இனிய வேளையில், புதிய இராணிப்பேட்டை மாவட்டத்தின் நிருவாக அமைப்புகளை குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

இம்மாவட்டத்தின் தலைநகராக இராணிப்பேட்டை நகரம் விளங்கும். மாவட்டத்தின் பரப்பளவு 2,234 சதுர கிலோ மீட்டர். மாவட்டத்தின் மக்கள்தொகை 12 இலட்சத்து 10 ஆயிரத்து 277 பேர் ஆகும். மாவட்டத்தின் வருவாய்க் கோட்டங்கள் இராணிப்பேட்டை மற்றும் அரக்கோணம். அரக்கோணத்தில் புதிய வருவாய்க் கோட்டம் அமைக்கப்படும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவின்போது நான் அறிவித்தேன், இப்பொழுது அதை நாங்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம். வாலாஜா, ஆற்காடு, நெமிலி, அரக்கோணம் ஆகிய வட்டங்களும், 18 உள் வட்டங்களும், 330 வருவாய் கிராமங்களும் உள்ளன. அரக்கோணம், காவேரிப்பாக்கம், நெமிலி, ஆற்காடு, திமிரி, சோளிங்கர் மற்றும் வாலாஜா ஆகிய 7 ஊராட்சி ஒன்றியங்கள் இந்த மாவட்டத்தில் உள்ளடங்கியுள்ளன. ஆற்காடு, சோளிங்கர், அரக்கோணம், மேல் விஷாரம், இராணிப்பேட்டை ஆகிய நகராட்சிகளும், அம்மூர், கலவை உட்பட 9 பேரூராட்சிகளும், 288 கிராம ஊராட்சிகளும் இந்த மாவட்டத்தில் உள்ளடங்கியுள்ளன.

அந்நியச்செலாவணியை அதிகம் ஈட்டிக்கொடுக்கும் மாவட்டமாக இராணிப்பேட்டை மாவட்டம் திகழ்கிறது. இது

முழுக்க, முழுக்க தொழில் நகரம் என்றால் மிகப் பொருத்தமாக இருக்கும். மத்திய அரசின் 'மகாரத்னா' அந்தஸ்து பெற்ற பெல் தொழிற்சாலை மற்றும் அதைச் சார்ந்த 500க்கும் மேற்பட்ட குறு, சிறு தொழிற்சாலைகள், நூறாண்டு புகழ் வாய்ந்த "பாரி" (Parry) பீங்கான் தொழிற்சாலை, சாமே டிராக்டர் தொழிற்சாலை, சிப்காட் மற்றும் சிட்கோ தொழிற்பேட்டை, தோல் மற்றும் ரசாயன தொழிற்சாலைகள் என ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும், வேலைவாய்ப்புகள் கொடுக்கும் மாவட்டமாக இந்த இராணிப்பேட்டை மாவட்டம் திகழ்கிறது.

அறுகோணம் என்று முற்காலத்தில் அழைக்கப்பட்டு வந்த இப்பெயர் அரக்கோணம் என்று மருவிவிட்டதாகக் கூறுவர். சென்னைக்கு அடுத்த முக்கிய இரயில்வே சந்திப்பு அரக்கோணத்தில் உள்ளது. தெற்கு ஆசியாவிலேயே மிக நீளமான ஓடுபாதை கொண்ட கடற்படை விமான தளம் ஐ.என்.எஸ். ராஜாளி அரக்கோணத்தில் அமைந்துள்ளது. இவற்றைத் தவிர மேலும் பல சிறப்புகளை இம்மாவட்டம் பெற்றுள்ளது. இன்னும் பல சிறப்புகளை எதிர்காலத்தில் பெறவுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

தொழில் துறையில் ஒரு முன்னோடி மாவட்டமாக விளங்கும் இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு அம்மாவின் அரசு செய்த சாதனைகள் சிலவற்றை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

கடந்த 2011 முதல் 2018 வரை 1,106 கி.மீ. நீளச் சாலைகள், 9 பாலப் பணிகள் 568 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 221 கி.மீ. நீள சாலைகள் மற்றும் 6 பாலப் பணிகள் 515 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

37 புதிய பள்ளிக் கட்டடங்கள் 48.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. நெமிலி, இராணிப்பேட்டை பகுதிகளில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் 2.62 கோடி

ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் 14 புதிய கால்நடை மருந்தகங்கள் 3.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 69 ஏரிகள் 17.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புனரமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் நடைபெற்று நீர் வள ஆதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, குடிமராமத்து திட்டத்தின் மூலமாக 70 ஏரிகள் 12.43 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும், 10.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 8 ஆண்டுகளில் இப்பொழுது புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இராணிப்பேட்டை மாவட்டத்தில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ் 81,362 பயனாளிகளுக்கு ஏறக்குறைய 99.44 கோடி ரூபாய் செலவில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் கடந்த 8 ஆண்டுகளில் 28 பள்ளிகள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு, மாணாக்கர்கள் கல்விபயில வழிவகைஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. வாலாஜாவில் உள்ள அறிஞர் அண்ணா அரசு பெண்கள் கலைக் கல்லூரிக்கு 8.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. அரக்கோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உயர்வகுப்பு கட்டடம் 7.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள சோளிங்கர், காவேரிப்பாக்கம், நெமிலி, பனப்பாக்கம், தக்கோலம், திமிரி, விளாப்பாக்கம், கலவை மற்றும் அம்மூர் ஆகிய பேரூராட்சிகளில் 1,392 குடிநீர் திட்டப் பணிகள் 75.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மகளிரின் பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில், 7,557 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 756.50 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு மாண்புமிகு அம்மாவின் அரசினால்

வழங்கப்பட்டுள்ளது. அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1,868 பணிபுரியும் மகளிருக்கு 4.65 கோடி ரூபாய் மானியத்தில் இரு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே, தொழில் நகரமாக விளங்கும் இராணிப்பேட்டையில், மேலும் புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதிக அளவில் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொள்ளும் என்பதை இங்கே கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு நிருவாக வசதிக்காக புதிய மாவட்டங்களை உருவாக்கியது மட்டுல்லாமல், அரசின் ஒவ்வொரு துறையிலும் பல்வேறு சாதனைகளை புரிந்து வருகிறது. அவற்றில் கல்வித் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு சாதித்த சாதனைகள் சிலவற்றை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு.ஸ்டாலின் அவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் பல்வேறு கூட்டங்களிலும், ஊடகத்திலும் இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை, மக்களுக்கு இந்த ஆட்சியின் மூலம் எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்று வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு தவறான செய்தியை பரப்பி வருகின்றார்கள். அதனால்தான் இவ்வளவு புள்ளிவிவரங்களையும் உங்களிடம் நான் எடுத்து வைக்கின்றேன். அரசின் சாதனைகளை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலும், அம்மாவின் மறைவிற்கு பின், அம்மாவின் அரசு தொடர்ந்து செயல்படுத்திய திட்டங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, 12ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் 28 ஆயிரத்து 957 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து சாதனை படைத்துள்ளது. அனைத்துத் துறைகளைக் காட்டிலும் அதிக நிதி ஒதுக்கீடு பெற்ற துறை கல்வித் துறை தான். ஒரு மாநிலம் கல்வி வளர்ச்சியில் சிறந்தால் மற்ற அனைத்து வளங்களும் தானாகவே ஏற்படும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு கல்வித் துறையில் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் பயனாக பள்ளி செல்லாக் குழந்தைகள் எண்ணிக்கையும், இடைநிற்றல் விகிதமும் பெருமளவில் குறைந்துள்ளது என்பதை இங்கு பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘‘கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி பயில வகை செய்தல் எனது நோக்கமாகும்’’ என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தான் முதலமைச்சராக இருந்த காலத்தில், தமிழ்நாட்டில் 65 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கல்லூரிகளை

துவக்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசும், புதிதாக 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்திருக்கின்றது. இதன் காரணமாக, தமிழகத்தில் உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவீதம் 49 ஆக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 2011ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்கும்பொழுது உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 34 சதவிகிதமாக இருந்தது, தற்பொழுது, அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள், அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு அம்மாவின் அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளின் காரணமாக உயர்கல்விக் கற்பவர்களின் எண்ணிக்கை இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்றது என்று பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்களில் உள்ள இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக, அவர்கள் நல்ல உடல் நலத்தோடு, ஆரோக்கியத்தோடு இருக்க வேண்டுமென்பதற்காக, தமிழ்நாட்டிலுள்ள 12,524 ஊராட்சிகள், 528 பேரூராட்சிகளில் அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் என்ற அற்புதமான திட்டம் அம்மாவின் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆண்டு 76 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் வாலிபால், கபடி, கிரிக்கெட் அல்லது கால்பந்து விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள் அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல், திறந்தவெளி உடற்பயிற்சி மையங்கள் அமைத்தல், போட்டிகள் நடத்துதல் ஆகிய பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். கல்வித் துறை மட்டுமல்லாமல், அனைத்துத் துறைகளிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு சாதித்த சாதனைகள் மூலம் தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது.

எங்கள் அரசு இஸ்லாமிய பெருமக்களுக்கு பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறது. மத நல்லிணக்கத்தில் நாட்டுக்கே உதாரணமாக விளங்கும் தமிழ்நாட்டில் உள்ள இஸ்லாமியப் பெருமக்கள் பயனடையும் வகையில், ஹஜ் புனிதப் பயணத்திற்கான மானியத்தை மத்திய அரசு நிறுத்தினாலும், அம்மா இருந்தபொழுது தொடர்ந்து வழங்கியதைப்போல, அம்மாவின் அரசும் ஆண்டுதோறும் 6 கோடி ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்து வழங்கி வருகிறது. ஹஜ் குழுவிற்கான நிருவாக மானியத்தை 30 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 3 ஆயிரத்திற்கும் அதிகமான பள்ளிவாசல்களுக்கு நோன்புக் கஞ்சி தயாரிக்க 5,145 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. நாகூர் தர்கா சந்தனக் கூடு திருவிழாவிற்கு தேவைப்படும் சந்தனக் கட்டைகளை அரசே ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. மாவட்ட காஜிக்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. உலமாக்களின் மாதாந்திர ஒய்வூதியம் 1,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் வஃபு நிறுவனங்களில் பழுது பார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 3 கோடி ரூபாய் தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டு உள்ளது. 2011 முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் சிறுபான்மையின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக தமிழ்நாடு சிறுபான்மையின பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக 215.22 கோடி ரூபாய் குறைந்த வட்டியில் கல்விக் கடன், தனி நபர் மற்றும் சிறுகடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுபோன்று பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு சார்பில், இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 34.80 கோடி ரூபாய் மதிப்பிலான 152 பணிகள் உட்பட 62 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 171 பணிகளை நான் இந்த நிகழ்ச்சியின்

வாயிலாக திறந்துவைத்துள்ளேன். ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 13 கோடி ரூபாய் மதிப்பிலான 35 பணிகள் உட்பட மொத்தம் 14 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள 37 பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

அதேபோல, 8,688 பயனாளிகளுக்கு 89.73 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக ஒரே கட்டத்தில் வழங்கி உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள்நலனுக்காக பாடுபடுவதுபோல் நடித்துக் கொண்டிருக்கும் சுயநல எண்ணம் கொண்ட சிலர், மாண்புமிகு அம்மா அரசின் இந்த சாதனைகளைக் கண்டு அஞ்சுகிறார்கள். அரசின் சாதனைகளை மறைத்து, தாங்கள்தான் உண்மையான மக்கள் தலைவர்கள் என்று போலியாக பேசி மக்களை நம்ப வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

“நாளொரு மேடை – பொழுதொரு நடிப்பு
அவன்பேர் மனிதனல்ல,
நாவில் ஒன்று நினைவில் ஒன்று–
அதன்பேர் உள்ளமல்ல”

என்ற பாடலை இங்கே நினைவுகூற விரும்புகிறேன். அதுபோல் மக்களுக்கு நன்மை செய்ய துடிப்பது போல் நடிப்பவர்களின் சுயரூபம் மக்களுக்கு ஒரு நாள் கண்டிப்பாகத் தெரிய வரும். அன்று மக்கள் அவர்களைத் தெரிந்துகொண்டு தக்க பாடம் புகட்டுவார்கள். இதுதான் சட்டமன்ற இடைத்தேர்தல் முடிவுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

விக்கிரவாண்டி, நாங்குநேரி சட்டமன்ற தொகுதிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தினிடமும், காங்கிரஸினிடமும் இருந்தன. நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபொழுது பொய்யான வாக்குறுதிகளை வாரி இறைத்தும், நிறைவேற்ற முடியாத

வாக்குறுதிகளைக் கொடுத்தும், தமிழகத்தில் 38 இடங்களிலும், பாண்டிச்சேரியில் 1 இடத்திலும் என 39 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையில் அமைக்கப்பட்ட கூட்டணி வெற்றி பெற்றது. பின்னர், நிறுத்தி வைக்கப்பட்ட வேலூர் நாடாளுமன்றத் தேர்தல் மத்திய தேர்தல் ஆணையத்தால் மீண்டும் நடத்தப்பட்டது. அப்பொழுது, எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் நாங்கள் கிட்டத்தட்ட 39 இடங்களில் இலட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம், அதைவிடக் கூடுதல் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்று தலைக்கனத்துடன் பேசினார். ஆனால், பொய் வாக்குறுதி கொடுத்து வெற்றி பெற்று விட்டீர்கள், உங்களால் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியாது, எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று எண்ணி, தள்ளி வைக்கப்பட்ட வேலூர் நாடாளுமன்றத் தேர்தலில் தக்க பாடத்தை புகட்டியவர்கள் இந்த ஒன்றுபட்ட வேலூர் மாவட்ட மக்கள்.

வேலூர் நாடாளுமன்றத்தில் இருந்த 6 சட்டமன்றத் தொகுதிகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், 70 நாட்களில், 3 சட்டமன்றத் தொகுதிகளில் அதிக வாக்கு பெற்று சாதனை படைத்தது. மீதமுள்ள 3 சட்டமன்றத் தொகுதிகளில் தான் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வாக்குகளை பெற்றது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால்,நாடாளுமன்றப்பொதுத்தேர்தலின்போது நடைபெற்ற குடியாத்தம் சட்டமன்ற இடைத்தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் ஏறக்குறைய 28,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பின்னர், வேலூர் நாடாளுமன்றத் தேர்தலில் குடியாத்தம் தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 12,000 வாக்குகள் அதிகம் பெற்றது. 70 நாட்களில் மக்களிடம் மன மாற்றம் ஏற்பட்டு, உண்மையைப் பேசிய காரணத்தினால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்தார்கள். பொய் பேசிய காரணத்தினால் மிகப்பெரிய தண்டனையை திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கொடுத்தார்கள்.

2016ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்தபொழுது அணைக்கட்டுத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. வேலூர் நாடாளுமன்றத் தேர்தலில்போது நடைபெற்ற பொழுது, அதில் உள்ளடங்கியிருக்கின்ற அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைவிட இரட்டை இலை 9,020 வாக்குகளை அதிகம் பெற்றது. இனி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாழ்வில்லை, திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் கூட்டணிக் கட்சித் தலைவர்களும், பொய் பேசி, செயல்படுத்த முடியாத திட்டங்களைச் சொல்லி, மக்களை ஏமாற்றி பெற்ற வெற்றி என்று அன்றைய தினமே மக்கள் தீர்மானித்துவிட்டார்கள். அதன்பின்னர் நடைபெற்ற விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகமும், நாங்குநேரி சட்டமன்ற இடைத் தேர்தலில் காங்கிரசும் போட்டியிட்டதில், விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் 45,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். காங்கிரஸ் கோட்டை என்று வர்ணிக்கப்பட்ட நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியில், கூட்டணி பலம் குறைவாக இருந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர், கூட்டணி அமைத்து போட்டியிட்டதன் விளைவாக 34,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். வட, தென்

மாவட்டங்களில் நாங்கள் வெற்றி பெற்றோம். 2021ஆம் ஆண்டு வரவிருக்கிற சட்டமன்றத் தேர்தலிலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், கூட்டணிக் கட்சிகளும் மிகப்பெரிய வெற்றி பெறும்.

திரு.ஸ்டாலின் அவர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாது என்று கூறி வருகிறார். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றபொழுது, உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்குண்டான அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டதென்று மாநிலத் தேர்தல் ஆணையம் தெளிவாகத் தெரியப்படுத்திவிட்டது. இதுதொடர்பாக, இன்றையதினம் சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது. ஆனால் வேண்டுமென்றே, திட்டமிட்டு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்களும், அவர்களுடைய கூட்டடணிக் கட்சியினரும் ஒன்றாக இணைந்து தவறான, பொய்யான செய்தி வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள், அது உண்மையல்ல, மக்களைக் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக, மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தலை அறிவிக்கின்ற நிலையில் இருக்கின்றார்கள் என்பதை பத்திரிகைகள் வாயிலாக நாம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். மாநில தேர்தல் ஆணையம் நிச்சயமாக உள்ளாட்சித் தேர்தலை நடத்தும் என்று நம்புகிறோம். உள்ளாட்சித் தேர்தலை நடத்தும் மாநிலத் தேர்தல் ஆணையம் தன்னாட்சி பெற்ற அமைப்பு. நீதிமன்றத்தின் ஆலோசனைப்படி உள்ளாட்சித் தேர்தலை நடத்துகின்றார்கள். ஆனால், திரு.ஸ்டாலின் வேண்டுமென்றே திட்டமிட்டு, நீதிமன்றத்தை நாடப் பார்க்கின்றார். கொள்ளைப்புறத்தின் வழியாக இந்தத் தேர்தலை நிறுத்தப் பார்க்கின்றார். 2016லும் இதுபோலத்தான். மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தபொழுது, தேர்தல் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டது. அப்பொழுது, அதில் இட ஒதுக்கீடு சரியில்லை என்று கூறி நீதிமன்றம் சென்று அந்த நேரத்தில் அதற்கு இடையூறாக இருந்ததும் திராவிட

முன்னேற்றக் கழகம் தான். ஆனால், வெளியில் பேசும்பொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தேர்தலைக் கண்டு அஞ்சுவதாகச் சொல்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்தக் காலத்திலும், எந்தத் தேர்தலையும் கண்டு அஞ்சிய வரலாறு கிடையாது. பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காலங்களிலும் எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்ற ஒரே கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சி. இதனை பல காலகட்டங்களில் நாங்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் தேர்தலைச் சந்திக்க பயப்படுகிறார். மற்றவர்களைத் தூண்டிவிட்டு நீதிமன்றம் சென்று, ஏதாவது குட்டையைக் குழப்பி இந்தத் தேர்தலை நிறுத்த முயற்சிக்கின்றார்.

முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் நேரடித் தேர்தலை மறைமுகத் தேர்தலாக மாற்றிவிட்டார்கள் என்றும் சொல்கிறார். 1996ஆம் ஆண்டு திரு.ஸ்டாலின் அவர்களுக்காக நேரடித் தேர்தலைக் கொண்டுவந்தது திராவிட முன்னேற்றக் கழகம் தான். மீண்டும் 2006இல் திரு.ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுது நேரடித் தேர்தல் மறைமுகத் தேர்தலாக நடத்தப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்து உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. அவர்கள் கொண்டு வந்தால் அது சரி. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்தால் அது தவறு. இது எந்தவிதத்தில் சரி ? மக்கள் வாக்களித்து, தேர்ந்தெடுத்த கவுன்சிலர்கள் தான் பேரூராட்சி, நகராட்சித் தலைவர்களையும், மேயர்களையும் தேர்ந்தெடுக்கின்றார்கள். நீங்கள் ஏன் அஞ்சுகிறீர்கள் ? எப்படித் தேர்தல் வந்தாலும் எதிர்கொள்வோம் என்று சவால் விட்டுக் கொண்டிருந்தீர்களே ? அந்தச் சவால் இப்பொழுது என்னவாயிற்று ? மாநிலத் தேர்தல் ஆணையம் எப்பொழுது தேர்தலைக் கொண்டு வந்தாலும் அதை எதிர்கொள்ள

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். அம்மா அரசைப் பொறுத்தவரைக்கும் மக்கள் பணி செய்வதுதான் எங்கள் கடமை.

இன்று புதிதாக தொடங்கப்பட்டுள்ள இராணிப்பேட்டை மாவட்டம் ஏற்கெனவே தொழில்கள் நிறைந்த மாவட்டமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. இலட்சக்கணக்கான நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரக்கூடிய மாவட்டமாக இராணிப்பேட்டை மாவட்டம் விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்த வகையில், புரட்சித்தலைவி அம்மாவின் அரசு, 2019 ஜனவரி மாதம் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையிலே நடத்தி 304 புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு, 3 இலட்சத்து 431 கோடி ரூபாய் தொழில் முதலீட்டை ஈர்த்திருக்கிறது. இந்தத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாக ஈர்க்கப்பட்ட முதலீடுகள் வருகின்றபொழுது, தமிழகத்தில் சுமார் 10 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்படும். வருகிற 30ஆம் தேதி கூட 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடவிருக்கின்றோம் மற்றும் 3 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட இருக்கின்றோம். வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சித் தலைவரும், அவருடைய கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற கட்சித் தலைவர்களெல்லாம், நீங்கள் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினீர்களே, எவ்வளவு தொழிலை ஈர்த்தீர்கள் என்று கேட்கிறார்கள். நாங்கள் வெளிப்படையாக சொல்லிக்கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு தொழில் முதலீட்டாளர்கள் எல்லாம் தமிழ்நாட்டை நாடிக் கொண்டிருக்கிறார்கள். பெரிய, பெரிய தொழில் தமிழகத்தில் வருவதற்கு உரிய நடவடிக்கையை எங்களுடைய அரசு எடுத்து வருகிறது. அந்த சாதனைகளைத்தான் நாங்கள் தெரிவித்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி வெற்றி கண்டார்கள்.

அதன் தொடர்ச்சியாக, அம்மாவின் வழியிலே வந்த அம்மாவின் அரசு சென்னையிலே தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி வெற்றி கண்டிருக்கிறது. இதன் மூலம், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாகும், தமிழகம் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும். இந்தியாவிலேயே முதன்மை தொழில் மாநிலமாக உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் அரசு அம்மாவினுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டுவோம்.

தமிழகம் முழுவதும் குடிமாராமத்துத் திட்டத்தின் மூலமாக ஏரிகள், குளங்கள், குட்டைகளை சீர்செய்து கொண்டிருக்கிறோம். ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ரூபாய் 1,250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆங்காங்கே இருக்கும் ஏரிகள், குளங்கள், குட்டைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, பொதுப்பணித் துறையின் கீழ் வருகின்ற ஏரிகளும் தூர்வாரப்படுகின்றன. 2016–2017இல் ரூ.100 கோடியும், 2017–2018இல் சுமார் ரூ.328 கோடியும் குடிமராமத்துத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2018–2019இல் ரூ.500 கோடி இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஏரிகள், குளங்கள் அனைத்தும் தூர்வாருவதற்கான நடவடிக்கைஎடுத்த ஒரேஅரசு அம்மாவினுடைய அரசு. முழுக்க முழுக்க விவசாயப் பங்களிப்புடன் இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் பல ஆண்டுகாலமாக தூர்வாரப்படாமல் இருந்தது. அதனால் மழைக்காலங்களில் பெய்கின்ற மழைநீர் கடலில் கலந்து வீணாகின்றது. அப்படி மழைக்காலங்களில் பெய்கின்ற மழைநீர் முழுவதையும் சேமித்து வைக்க வேண்டும் என்பதற்காக இந்த குடிமராமத்துத் திட்டத்தை விவசாயிகளை பயன்படுத்தி செய்துகொண்டிருக்கிறோம். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. வேளாண் மக்களும், பெருமக்களும் வரவேற்கின்றார்கள். பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் சேமித்து வைக்கப்பட்டு வறட்சியான காலங்களில்

நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயத்திற்கும், குடிப்பதற்கும் தேவையான நீர் கிடைக்கின்றது.

அதேபோல, ஓடை மற்றும் நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதற்கு ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த 2 ஆண்டுகளில் ரூ.600 கோடி செலவில் தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகின்றன. எங்கெல்லாம் தடுப்பணைகள் கட்டவேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றார்களோ, அங்கெல்லாம் தடுப்பணைகள் கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் இருக்க வேண்டுமென்பதற்காக, எங்களுடைய அரசு, நீர் மேலாண்மைத் திட்டத்தை உருவாக்கி, அதற்காக ஒய்வு பெற்ற 2 தலைமைப் பொறியாளர்கள், 3 கண்காணிப்புப் பொறியாளர்களை நியமிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் சென்று, எங்கெங்கெல்லாம் நீர் வீணாகின்றது என்பதை கணக்கிட்டு, ஆய்வு மேற்கொண்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்து, அதன் மூலமாக தடுப்பணைகள் கட்டுகின்ற நிகழ்வும் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிய ஒரே அரசு அம்மாவின் அரசு. பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக விவசாயிகளின் பயிர் சேதம் அடைந்துவிட்டால் அல்லது வறட்சியால் பாதிக்கப்பட்டுவிட்டால், அந்த விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக, இரண்டாண்டுகளில் ரூ.7,000 கோடி இழப்பீட்டுத் தொகையை பெற்றுத்தந்த ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. இந்தியாவிலேயே, பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு இழப்பீட்டைப் பெற்றுத்தந்த முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை நாம் பெற்றிருக்கின்றோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு, ஒரே நேரத்தில் 6 மருத்துவக் கல்லூரிகளை நமக்கு வழங்கியது. மேலும்,

3 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமரிடத்தில் கோரிக்கை வைத்தோம். அதையும் ஏற்று, நேற்றைய தினம், 3 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கி, ஒரே ஆண்டில், மொத்தம் 9 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை துவக்கிய வரலாற்றுச் சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு.

மத்திய அரசுக்கு நீங்கள் அடிமையாக இருக்கின்றீர்கள், மத்திய அரசுக்கு கூஜா தூக்குகின்றீர்கள் என்று திரு.ஸ்டாலின் பேசுகிறார். காங்கிரஸ் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகம் அந்த அமைச்சரவையில் அங்கம் வகித்திருந்தது. அந்த காலகட்டத்தில் தமிழகத்திற்கு எத்தனை மருத்துவக் கல்லூரிகளை கொண்டு வந்தீர்கள் ? எத்தனை திட்டத்தை கொண்டு வந்தீர்கள் ? அதற்காக எவ்வளவு நிதியைப் பெற்றீர்கள் ? ஒன்றுமே கிடையாது. அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் வலம் வந்தார்கள், அதிகாரத்தைப் பெற்றார்கள். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அப்படியல்ல. தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை நன்கு உணர்ந்து, மத்திய அரசிடமிருந்து எதைப் பெற முடியுமோ அதை கேட்டுப் பெற்று இன்றைக்கு தமிழ்நாட்டை வளம் பெறுகின்ற மாநிலமாக உருவாக்குவற்கும் நாங்கள் இரவு, பகல் பாராமல் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். அதற்கு எங்களுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் துணை நிற்கின்றார்கள். ஆகவே, ஒரே நேரத்தில் 9 மருத்துவக் கல்லூரிகளைப் பெற்றதன் மூலம், தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு 1,350 மாணவர்கள் புதிதாக மருத்துவப் படிப்பு படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிய அரசு, அம்மாவினுடைய அரசு. ஆகவே, மத்திய அரசும், மாநில அரசும் இணக்கமாக இருந்தால்தான், தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான திட்டங்களைப் பெறமுடியும். எனவே தமிழகத்திற்கு

தேவையான திட்டங்கள், நிதிகளைப் பெறுவதற்கு நாங்கள் மத்தியிலே ஒரு இணக்கான உறவு வைத்திருக்கின்றோம். ஆனால் நீங்கள் ஐந்தாண்டு காலம் பாரதீய ஜனதாவோடு மத்தியிலே ஆட்சிப் பொறுப்பில் இருந்தீர்கள். அப்பொழுதெல்லாம், பாரதீய ஜனதா கட்சி நல்ல கட்சி என்று வர்ணித்தீர்கள், புகழ் பாடினீர்கள். இன்னும் சொல்லப்போனால், முரசொலி மாறன் ஓராண்டுகாலம் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வந்தார். இலாகா இல்லாத மந்திரியாக, பாரதீய ஜனதா அரசு கொடுத்திருந்தது. அப்பொழுதெல்லாம் பாரதீய ஜனதா கட்சி, சிறந்த கட்சி என்று புகழ் பாடினீர்கள். ஆனால் இன்று என்ன ?

நாங்கள் இப்பொழுதுதான், நாடாளுமன்றத் தேர்தலில் தான் இந்தக் கூட்டணியில் அங்கம் வைத்தோம். நாங்கள் கூட்டணி வைத்து ஏறக்குறைய சுமார் 5 மாத காலம் தான் ஆகிறது. அந்த 5 மாத காலத்தில் இவ்வளவு திட்டங்களை நாங்கள் பெற்றிருக்கின்றோம். மதுரையில், எய்ம்ஸ் மருத்தவமனையைக் கொண்டு வந்திருக்கின்றோம், தமிழகத்தில் 9 புதிய அரசு மருத்துவக்கல்லூரிகளை கொண்டு வந்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல, சென்னையில் மெட்ரோ இரயில் திட்டத்திற்கு நிதி வேண்டும் என்று கேட்டிருக்கின்றோம். அதுவும் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. பல்வேறு புதிய சாலைகளுக்கு மத்திய அரசு அனுமதி கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு மாண்புமிகு அம்மா வழியிலே நடந்துகொண்டிருக்கும் எங்களுடைய அரசு மத்திய அரசோடு இணக்கமாக இருந்து தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற அடிப்படையில் நாங்கள் இருக்கின்றோம். ஆனால், நீங்கள் மத்தியில் ஆட்சிப்பொறுப்பில் இருக்கின்றபொழுது மத்தியில் காங்கிரஸுடனும் அங்கம் வகித்தீர்கள், பாரதீய ஜனதாவுடனும் அங்கம் வகித்தீர்கள். காங்கிரஸிலும் அமைச்சராக இருந்தீர்கள், பாரதீய ஜனதாவிலும் ஆட்சியில் இடம் பெற்றிருந்தீர்கள். பச்சோந்தி அடிக்கடி நிறம் மாறும்.

ஆனால் பச்சோந்தி கூட கொஞ்சம் நேரம் கழித்து தான் நிறம் மாறும். ஆனால், திமுக உடனுக்குடன் மாறும், நிறம் மாறும், கொள்கையற்ற கட்சி. நீங்கள் பேசுவதற்கு என்ன தகுதியிருக்கிறது? எங்களைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டின் நலன், தமிழ்நாட்டு மக்கள் தான் முக்கியம். தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை கிடைப்பதற்காக போராடுவோம், வாதாடுவோம், நிதியைப் பெறுவோம், நல்லது செய்வோம். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டிச் சென்றிருக்கிறார்கள். அந்த வழியைப் பின்பற்றி, நாங்கள் இந்த நாட்டு மக்களுக்காக எங்களை அர்ப்பணித்துக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேடையிலே வீற்றிருக்கும் அமைச்சர் பெருமக்கள் சிறப்பான முறையிலே செயல்பட்டதன் விளைவாக, துறை வாரியாக அதிக விருதுகளைப் பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பெற்றிருக்கின்றது. மின் துறை, போக்குவரத்துத் துறை, சமூக நலத்துறை, உள்ளாட்சித் துறை, கல்வித் துறை போன்றவற்றில் தேசிய விருதுகளை பெற்றிருக்கின்றோம். வேளாண்மைத் துறையில் தொடர்ந்து கிருஷி கர்மான் விருதைப் பெற்றிருக்கின்றோம். நிருவாகம் சிறப்பாக இருக்கின்ற காரணத்தினால் தான் இவ்வளவு விருதுகளைப் பெற்று இருக்கின்றோம் என்பதை தெரிவிக்க விழைகின்றேன்.

நீண்டகாலமாக அமைச்சராக இருந்த திரு. துரைமுருகன் மாவட்டத்தை பிரிப்பதினால் எந்தப்பயன் கிடைக்கப் போகிறது? ஒன்றும் கிடைக்காது என்று சொன்னார். அப்படி கிடைக்கவில்லையென்றால், மறைந்த முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதலமைச்சராக இருந்த காலத்தில், பல்வேறு மாவட்டங்களை பிரித்து இருக்கிறார். அப்படியென்றால், அதெல்லாம் தேவையில்லையா? நீங்கள் பிரித்தால் சரி, நாங்கள் பிரித்தால் தவறா? புதிய மாவட்டங்களை உருவாக்குவதினால்,

பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை எளிதில் அணுகி, தங்களுடைய பிரச்சினைகளுக்கு நிவாரணம் காணமுடியும்.

முதலமைச்சர் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் கீழ் மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் நடவடிக்கை எடுக்க அம்மாவின் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாடு முழுவதும் ஏறக்குறைய **9,72,216** மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் பல மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே, மக்களை அணுகி அவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்ற ஒரே அரசு அம்மாவின் அரசு.

தமிழ்நாடு முழுவதும் **5** இலட்சம் முதியோர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்படும். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை பெறுவதற்கு அனுமதிக்கப்பட்ட தொகையை **2** இலட்சத்திலிருந்து **5** இலட்சமாக உயர்த்தியது அம்மாவின் அரசு.

புதிதாக உருவாக்கப்பட்ட இராணிப்பேட்டை மாவட்டம் சீரும், சிறப்போடும், தொழில்வளம் மிகுந்த மாவட்டமாக உருவாக வேண்டும் என்று வாழ்த்தி, சில அறிவிப்புகளை இங்கே வெளியிட விரும்புகிறேன்.

நெமிலி வட்டம், வேகாமங்கலம் அருகே பாலாற்றின் குறுக்கே **30** கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். இதன் மூலம் இதனைச் சுற்றியுள்ள வேகாமங்கலம், மாமண்டூர், பனமுகை மற்றும் அரியூர் கிராமங்கள் பயன்பெறும்.

அரக்கோணம் வட்டம், அருகில்பாடி கிராமம் அருகே கல்லாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், வாலாஜா வட்டம், பல்லேரி அருகே பொன்னை ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், வாலாஜா வட்டம், பூட்டுத்தாக்கு கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே தரைமட்ட தடுப்புச் சுவர் ஆகியவை அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, சோளிங்கர் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

மேல்விஷாரம் ஆரம்ப சுகாதார நிலையம் 1.60 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

வாலாஜா வட்டம், சிப்காட் பகுதி–3 விரிவாக்கப் பகுதியில் 23 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு மேம்பாடு செய்யப்படும்.

இராணிப்பேட்டையில் தனியார் பங்களிப்புடன் கூடிய (PPP) மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

இந்த மாவட்டம் சீரும், சிறப்போடும் விளங்குவதற்கு அம்மாவினுடைய அரசு துணை நிற்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த மாவட்டம் உதயமாவதற்குக் காரணமாக இருந்த மாண்புமிகு மாவட்ட அமைச்சர் பெருமக்கள், அவர்களுக்கு துணைநின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உயர் அதிகாரிகள், மாவட்டத்தில் பணிபுரிகின்ற அலுவலர்கள், வருகை தந்துள்ள அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***28.11.2019** அன்று இராணிப்பேட்டையில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட இராணிப்பேட்டை மாவட்டத்தினைத் தொடங்கிவைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளைத் துவக்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.*

தமிழகத்திலே ஏழை, எளிய மக்களின் துன்பங்களை களைவதுதான் எங்களுடைய இலட்சியம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்ட எல்லையிலிருந்து விழா நடைபெறும் இடம் வரை, ஏறக்குறைய 7 கிலோ மீட்டர் தூரமும் மக்கள் வெள்ளமாகக் குழுமி வரவேற்ற காட்சியைக் கண்டபோது, மக்கள் ஆரவாரத்தோடு, எழுச்சியோடு இருப்பதைப் பார்க்கின்றபொழுது, இந்த மாவட்டத்தைப் பிரிப்பதற்கு எந்தளவிற்கு வரவேற்பு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

செங்கல்பட்டுப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து பிரித்து தமிழ்நாட்டின் 37ஆவது மாவட்டமாக உதயமாகும் செங்கல்பட்டு

மாவட்டத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்குகொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசின் நலத் திட்டங்களை செவ்வனே செயல்படுத்துவதிலும், சமுதாய முன்னேற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும், இயற்கை சீற்றங்கள் ஏற்படும்போது மக்களை நாடிச் சென்று உதவிக்கரம் நீட்டுவதிலும், மாண்புமிகு அம்மா அவர்களைப் போலவே, மாண்புமிகு அம்மாவின் அரசும் தமிழ்நாட்டு மக்களுக்காகவே பணியாற்றி வருகின்றது.

“மக்களுக்கு சேவைகள் விரைந்து கிடைத்திட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், புதிய மாவட்டங்களை உருவாக்குதல், புதிய கோட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்குதல், ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக கிராம நிருவாக அலுவலர்களை நியமித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் பெரிய மாவட்டங்களைப் பிரித்து, புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளது. அதன் அடிப்படையில், சட்டமன்ற விதி 110இன் கீழ் 18.07.2019 அன்று என்னால் அறிவிக்கப்பட்டு, இன்று புதிய செங்கல்பட்டு மாவட்டம் தொடங்கப்படுகிறது என்பதை இங்கே பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் நாட்டின் சுதந்திரத்திற்கு முன்பு, செங்கல்பட்டு நகரத்தைத் தலைமை இடமாகக்கொண்டு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்பட்டன. நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, செங்கல்பட்டு மாவட்டத்தின் நிருவாகப் பிரிவு தலைமையகம் மட்டும் சைதாப்பேட்டையில் உள்ள பனகல் மாளிகையில் செயல்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சர் ஆன பிறகு, 1968ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமையிடத்தை

காஞ்சிபுரத்திற்கு மாற்றினார். பின்னர் செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் என இரண்டாக பிரிக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், பரந்து, விரிந்த மாவட்டமாக இருப்பதால், செய்யூர், மதுராந்தகம், திருப்போரூர், பல்லாவரம் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் தேவைகளை விரைந்து பூர்த்தி செய்துகொள்ள செங்கல்பட்டை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும் என பல ஆண்டுகளாக இந்த மாவட்ட மக்கள் கோரிக்கை வைத்து வந்தனர்.

"மக்களை நாடி அரசு" என்ற புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கைக்கு வடிவம் கொடுக்கும் வகையில், ஒவ்வொரு பகுதியின் மீதும் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், அரசின் நலத்திட்ட உதவிகள் விரைவில் மக்களை சென்றடைய வேண்டும் என்றும், மாண்புமிகு அம்மாவின் அரசு, காஞ்சிபுரம் மாவட்டத்தை பிரித்து புதிதாக செங்கல்பட்டு மாவட்டத்தை மக்களின் கோரிக்கையை ஏற்று இன்றைக்கு தொடங்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்க விரும்புகின்றேன்.

புதிய செங்கல்பட்டு மாவட்டத்தின் சிறப்பு அம்சங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகராக செங்கல்பட்டு நகரம் விளங்கும். இம்மாவட்டம் 2,945 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்டுள்ளது. இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 25 இலட்சத்து 56 ஆயிரத்து 244 ஆகும்.

இம்மாவட்டத்தில் செங்கல்பட்டு, மதுராந்தகம், தாம்பரம் ஆகிய மூன்று வருவாய் கோட்டங்களும், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், செங்கல்பட்டு, செய்யூர், திருப்போரூர், தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் ஆகிய 8 வட்டங்களும், 40 உள் வட்டங்களும்,

636 வருவாய் கிராமங்களும் உள்ளடங்கியுள்ளன. மதுராந்தகம், செங்கல்பட்டு, மறைமலை நகர், பல்லாவரம், தாம்பரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய 8 நகராட்சிகளும், அச்சரப்பாக்கம், லத்தூர் உட்பட 8 ஊராட்சி ஒன்றியங்களும், மாமல்லபுரம், சிட்லப்பாக்கம் உட்பட 12 பேரூராட்சிகளும், 359 கிராம ஊராட்சிகளும் உள்ளடங்கியுள்ளன.

இங்குள்ள நீர்நிலைகளில் செங்கழுநீர்மலர் பூத்துக் குலுங்கியதால் செங்கழுநீர்பட்டு என்று முதலில் அழைக்கப்பட்டு, பின்னர் அதுவே செங்கல்பட்டு என்று மருவியது என்று கூறுவர். செங்கல்பட்டு, பல்லவர் காலத்தில் உருவான பழமையான நகரமாகும். இங்கு மூன்று பக்கம் மலைகளும், ஒரு பக்கம் கொளவாய் ஏரியும் உள்ளது. இம்மாவட்டத்தில் ஏரிகள் அதிகமாக உள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் ஏரி தமிழ்நாட்டிலுள்ள பெரிய ஏரிகளில் ஒன்றாக விளங்கி வருகிறது. இம்மாவட்டத்தில் வேளாண்மைக்கு இணையாக அதிக அளவில் தொழிற்சாலைகளும், கல்வி நிறுவனங்களும் இடம் பெற்றுள்ளன. கல்பாக்கம் அணுமின் நிலையம் இம்மாவட்டத்தில்தான் உள்ளது.

பல்லவர்களின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட மாமல்லபுர கற்கோயில்கள், தமிழர்களின் கலை நுணுக்கத்தை பறைசாற்றும்படியாக அமைந்துள்ளன. பல்லவர் காலத்துக்குப் பிறகு, விஜயநகர அரசர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஒரு திருமால் கோயிலும் மாமல்லபுரத்தில் உள்ளது. கோவர்த்தன சிற்பத் தொகுதியின் மீது அமைக்கப்பட்ட கிருஷ்ண மண்டபம், அர்ச்சுனன் தபசு, கடற்கரைக் கோயில், ஐந்து ரதக் கோயில்கள் மற்றும் சிற்பங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க படைப்புகளாகும். ஒரு முறை நரசிம்மவர்மன் என்ற மாமல்லர் தனது தந்தையுடன் உலா சென்றபோது ஒரு பாறையின் மீது யானையின் படம் வரைந்தார். அதைப் பார்த்த பிறகுதான் அவர் தந்தைக்குப் பாறைகளில் அழியாக் கோயில்கள் கட்ட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதனால் அவர் பெயரையே அந்த நகருக்கு இட்டார்.

மாமல்லபுர நினைவுச் சின்னங்களை உலகப் பண்பாட்டுச் சின்னம் என்று 1984இல் யுனெஸ்கோ அறிவித்தது. மகாபலிபுரத்தில் மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களும், அப்போதைய சீன பிரதமரும் 1956ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6ஆம் நாளில் வருகை புரிந்துள்ளனர். ஏறக்குறைய 63 வருடங்களுக்குப் பிறகு 11.10.2019 மற்றும் 12.10.2019 ஆகிய தினங்களில் மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபர் ஆகியோரிடையே வரலாற்று சிறப்புமிக்க சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்வுக்கான அனைத்து பாதுகாப்பு மற்றும் வரவேற்பு போன்ற ஏற்பாடுகள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன. ஆகவே, உலகத் தலைவர்கள் சந்தித்த பகுதி தமிழ்நாட்டில் உள்ள மாமல்லபுரம் என்னும் மாபெரும் பெருமையை நாம் பெற்றுள்ளோம்.

மன அமைதி தரும் ஸ்ரீ அகோர வீரபத்திரர் கோயில் இருக்கும் ஹனுமந்தபுரம், நலம் யாவும் தரும் ஸ்ரீநந்தீஸ்வரர் இருக்கும் நந்திவரம், நரசிம்மர் கோயில் இருக்கும் சிங்கப்பெருமாள் கோயில், நித்ய கல்யாண பெருமாள் வீற்றிருக்கும் திருவிடந்தை, குளத்திலிருந்து சங்கு வெளிப்படும் திருக்கழுக்குன்றம், ஹயக்கிரீவர் கோயில் இருக்கும் செட்டிபுண்ணியம், சிவன்கோயில் இருக்கும் அச்சரப்பாக்கம் ஆகிய திருக்கோயில்கள் இந்த மாவட்டத்தின் பெருமையை இன்றைக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், மதுராந்தகம் பகுதியில் அடை மழை பெய்து, மதுராந்தகம் ஏரி உடைந்து விடும் சூழ்நிலை வந்ததாகவும், அப்போது ஆங்கிலேய மாவட்ட ஆட்சித் தலைவர் ஏரியை பலப்படுத்தும் முயற்சி எடுக்க அப்பகுதிக்கு வந்தார் என்றும், அச்சமயம் அருள்மிகு கோதண்டராமரே அந்த ஏரியை பாதுகாத்து வருகின்றதை அவர் கண்டதாகவும் வரலாறு கூறுகிறது. எனவே அக்கோயில் “ஏரி காத்த ராமர் கோயில்” என்று பெயர் பெற்றது.

தென்திருவேங்கடம் என்று அழைக்கப்படும் திருமலை வையாவூர் இந்த மாவட்டத்தில் தான் உள்ளது. இங்கு உள்ள மலை

மீது அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். முருகப்பெருமான் நிலம், ஆகாயம், கடல் ஆகிய மூன்று பகுதிகளில் நின்று அசுரனை போரிட்டு வெற்றி கண்டார். இவ்வகையில் அசுரர்களின் ஆணவத்தை விண்ணில் நின்று முருகப்பெருமான் அடக்கி, ஒடுக்கிய இடமே இம்மாவட்ட திருப்போரூரில் உள்ள திருத்தலம் ஆகும் என ஸ்தல வரலாறு கூறுகிறது.

இங்குள்ள வேடந்தாங்கலுக்கு கனடா, சைபீரியா, வங்காளதேசம், பர்மா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் பறவைகள் வருகின்றன. அக்டோபர் முதல் மார்ச் வரையிலான பருவத்தில் ஆயிரக்கணக்கான பறவைகள் இங்கு தங்கி இனப்பெருக்கம் செய்கிறது. எனவே, பறவைகள் சரணாலயத்திற்குப் புகழ்பெற்ற வேடந்தாங்கல், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது தமிழகத்திற்கு பெருமை சேர்க்கிறது. கோவளம் கடற்கரை, முட்டுக்காடு படகு குழாம், முதலியார்குப்பம் படகு குழாம், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா போன்ற சுற்றுலாத் தலங்களும் இம்மாவட்டத்தில் உள்ளன. இந்திய தலைநகருக்கு வெளியே, முதன்முறையாக இம்மாவட்டத்தில் உள்ள திருவிடந்தையில் 2018, ஏப்ரல் 11 முதல் 4 நாட்கள் “இராணுவக் கண்காட்சி–2018” சிறப்பான

முறையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, இக்கண்காட்சிக்கான அனைத்து ஆயத்த ஏற்பாடுகளையும் மேற்கொண்டதற்காக மத்திய அரசின் பாராட்டுதலையும் பெற்றது.

இதுபோன்ற எண்ணற்ற சிறப்புகளைக்கொண்ட மாவட்டம் செங்கல்பட்டு மாவட்டமாகும். இம்மாவட்டம், தென் மாவட்டங்களிலிருந்து தலைநகருக்கு செல்லும் நுழைவாயிலாகத் திகழ்வதால், இதனை Gateway of Chennai என்றும் அழைக்கலாம்.

செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த 2011 முதல் 2018 ஆம் ஆண்டு வரை 1,313 கி.மீ. நீள சாலைகள் மற்றும் 52 பாலப் பணிகள், 1,451 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் 1,409 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 215 கி.மீ. நீள சாலைகள், 10 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

செங்கல்பட்டில் கொளவாய் ஏரியினை மீட்டு எடுத்து செங்கல்பட்டு பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்தும் திட்டம், 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். செங்கல்பட்டு பகுதிக்கு வெள்ளத் தடுப்புக்கென முதல் கட்டமாக, 104 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டு, மணிமங்கலம் ஏரி உள்பட 5 ஏரிகளை ஆழப்படுத்தும் பணிகள் 6 மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுள்ளன. கீழ்கட்டளை வடிகால்வாயினை 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தி வெள்ளத் தடுப்பு சுவர் அமைத்து கீழ்கட்டளை, எஸ்.கொளத்தூர், பள்ளிக்கரணை போன்ற பகுதிகளில் வெள்ளம் சூழும் அபாயத்தை தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 2ஆவது கட்ட நிரந்தரப் பணிகள் 244 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முழுவீச்சில் துவங்கப்பட உள்ளன.

அதுபோன்றே, 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாம்பரம் பெரிய ஏரியின் கலங்களிலிருந்து மூடிய வெள்ள பெருவடிகாலும்,

11.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடையாறு மற்றும் வரதராஜபுரம் தாங்கல் ஏரியினை இணைத்து புதிய ஆற்றுப் படுகை நீர்தேக்கம் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணியினால் 80 மில்லியன் கன அடி வெள்ள நீரினை சேகரிக்க இயலும். மேலும், வெள்ள அபாயம் நீங்கி, விவசாயிகளின் நலன் காக்கப்படுவதுடன், குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்படும்.

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிரந்தரமாக வெள்ள அபாயத்தை தடுக்கும் வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் பொதுப்பணித் துறை மூலம் 282.79 கோடி ரூபாயில் 52 பணிகளும், நெடுஞ்சாலைத் துறை மூலம் 118.77 கோடி ரூபாயில் 80 பணிகளும், ஊரக வளர்ச்சித் துறை மூலம் 13.41 கோடி ரூபாயில் 121 பணிகளும், பேரூராட்சித் துறை மூலம் 13.88 கோடி ரூபாயில் 55 பணிகளும், நகராட்சி நிருவாகத் துறை சார்பில் 2.25 கோடி ரூபாயில் 6 பணிகளும் என மொத்தம் 431 கோடி ரூபாயில் 314 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதை பெருமையுடன் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடையாறு பகுதியில் ஒரத்தூர் கிளை ஆற்றில் வெள்ள அபாயத்தைக் குறைக்க ஏதுவாக சுமார் 60 கோடி ரூபாய் செலவில் அடையாற்றின் கிளை ஆறான ஒரத்தூர் மடுவின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த நீர்தேக்கத்தை ஒரத்தூர் ஏரி–ஆரம்பாக்கம் ஏரி மற்றும் ஒரத்தூர் அணைக்கட்டுடன் இணைத்து, 1.35 டி.எம்.சி. கொள்ளளவுடன் நீர் தேக்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

செங்கல்பட்டில் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் “மெடிபார்க்” திட்டத்திற்கு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்றுவருகிறது.இன்னும்6மாதத்தில்இத்திட்டம்துவங்கப்படும். இந்தத் திட்டம் நிறைவேறும்பொழுது, அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்கித்

தரும். மேலும், விபத்து மூலம் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில், 19.46 கோடி ரூபாய் மதிப்பில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையமும், 3.43 கோடி ரூபாய் மதிப்பிலான கேத்லேப் மையமும், 7 கோடி ரூபாய் மதிப்பிலான எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி உட்பட மொத்தம் 39 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு பணிகள் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே போன்று, தாம்பரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனைகளில் 8.83 கோடி ரூபாய் செலவில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏறக்குறைய 92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேசத் தரத்தில் இந்திய பாரம்பரிய மருத்துவ முறையான யோகா மற்றும் இயற்கை மருத்துவ மையம் ஒன்றினை அமைத்திட நான் சென்ற வாரம் அடிக்கல் நாட்டினேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்தத் தருணத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தொழில் வளம் நிறைந்த செங்கல்பட்டு மாவட்ட தொடக்க விழாவில், மாண்புமிகு அம்மாவின் அரசு தொழில் துறையில் சாதித்த சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

2015ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் 3 இலட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கான தொழில் முதலீடுகள், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஈர்க்கப்பட்டன. இதில் 270 நிறுவனங்கள் பணிகளை துவக்கி, பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. கையெழுத்து இடப்பட்ட ஒப்பந்தங்களில் இது ஏறக்குறைய 90 சதவிகிதமாகும். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை சார்பில் கையொப்பம் இடப்பட்ட 3,573 தொழில்

திட்டங்கள், பணிகளை துவக்கி பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. ஆனால், திரு.ஸ்டாலின் பல்வேறு குற்றச்சாட்டுகளை வைத்துக்கொண்டிருக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தவறான செய்தியை மக்களிடம் பரப்பி வருகிறது என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். உலக முதலீட்டாளர் மாநாடு என்று ஒரு மாநாட்டை நடத்தி, அதன் மூலம் கோடிக்கணக்கான முதலீடுகளை ஈர்த்துள்ளதாகக் கூறுகின்றீர்கள், எவ்வளவு முதலீடு தமிழகத்திற்கு வந்திருக்கிறது ? போடப்பட்ட ஒப்பந்தங்களில் எவ்வளவு நடைமுறையில் உள்ளது ? என்று கேட்கிறார். அதற்குத்தான் நான் விளக்கமளித்துள்ளேன்.

சமீபத்தில் நான், அமெரிக்கா, இங்கிலாந்து, துபாய் ஆகிய நாடுகளுக்கு அரசு முறைப் பயணமாக சென்றபோது, 8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 41 நிறுவனங்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, அதன் மூலம் 35,000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன. இதில் 2 திட்டங்களை நான் ஏற்கெனவே துவக்கிவைத்துள்ளேன். மேலும், 3 திட்டங்களை நாளை துவக்கிவைக்க உள்ளேன்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்கும் பொருட்டு உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளைப் பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாடு வாழ் தமிழ் மக்களை வரவேற்கவும், “யாதும் ஊரே” என்ற ஓர் புதிய திட்டத்தை கடந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின்போது நான் அறிவித்திருந்தேன். அதன்படி தமிழ்நாடு அரசின் சார்பில், நானே நேரடியாகச் சென்று, உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைத்திட, ஒரு உறவுப்பாலம் அமைக்கும் இந்த உன்னத முயற்சியை, அமெரிக்காவில் நான் துவக்கி வைத்தேன்.

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் மூலம் ஒற்றைச்சாளர அனுமதி, ஒற்றைச் சாளர அனுமதிகளை நேரடியாகக் கண்காணித்து

விரைவுபடுத்திட எனது தலைமையில் உயர்மட்டக் குழு, முதலமைச்சர் அலுவலகத்தில் முதலீட்டு எளிதாக்குதல் பிரிவு, மின்சார வாகனக் கொள்கை என தொழில் துறை மேம்பட பல திட்டங்களைத் தீட்டி சிறப்புற செயல்படுத்தி வருகிறோம் என்பதை இந்தத் தருணத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு தொழில் முதலீடுகளை அதிகரிப்பதற்கு இதுவரை நான் 48 வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க சாதகமாக உள்ள மாவட்டங்கள், அம்சங்களை எடுத்துரைத்துள்ளேன். இவற்றுக்கெல்லாம் முக்கியமான காரணம், நமது மாநிலம் தொடர்ந்து மின்மிகை மாநிலமாக திகழ்ந்து வருவதுதான். இவ்வாறு மின்மிகை மாநிலமாக தமிழ்நாடு முன்னேறியது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு இன்றைய தினம் அது நிறைவேற்றிக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இதுபோன்று, பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு சார்பில், இந்த நிகழ்ச்சியில், இன்று பொதுப்பணித்துறையின் சார்பில் 47 கோடி ரூபாய் மதிப்பிலான 3 பணிகள் உட்பட மொத்தம் 113.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 181 பணிகளை நான் திறந்து வைத்துள்ளேன்.

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 61.69 கோடி ரூபாய் மதிப்பிலான 110 பணிகள் உட்பட மொத்தம் 128 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 213 பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். அதேபோல, 8,624 பயனாளிகளுக்கு 67.79 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களுக்கு நன்மை பயக்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் அதே வேளையில், அரசின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதையே தொழிலாகக் கொண்ட சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களின் குணாதிசயங்கள் எப்படிப்பட்டவை என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். உண்மையிலேயே, மக்கள் பணி ஆற்றுபவர்களுக்கு உரிய பலன் தானாகவே வந்து சேரும். இதைச் சொல்லும்போது, கதை ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

ஒரு கோயில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தார்கள். அப்போது வானத்திலிருந்து ஒரு தங்கத் தட்டு கோயில் முற்றத்தில் விழுந்தது. "தகதக" என மின்னும் அந்த தங்கத் தட்டை கோயில் நிருவாகி ஒருவர் கையில் எடுத்தார். யாருக்கு அந்த தங்கத்தட்டு? கோயிலுக்கா, இல்லை பக்தர்களில் ஒருவருக்கா? என நிருவாகிக்கு ஒரு கேள்வி எழுந்தது.

கோயில் நிருவாகி அந்த தட்டில் ஒரு வாசகத்தை கண்டார். "அன்பில் சிறந்தவர் யாரோ, அவருக்கு ஆண்டவன் பரிசு" என்று எழுதப்பட்டிருந்தது. உடனே அந்த நிருவாகி, "நாளைக்கு பகலில் பக்தர்கள் வந்து தாங்கள் செய்த நற்செயல்களை விளக்கிச் சொல்லி, தட்டை பெற்றுக்கொள்ளலாம்", என்று அறிவித்தார். மறுநாள் ஏகப்பட்ட கூட்டம். ஒவ்வொருவரும் தங்களது நற்செயல்களை விவரித்தார்கள். ஒரு பணக்காரர் தன் சொத்தை ஏழைகளுக்கு வாரி வாரி வழங்குவதாகக் கூறினார். உடனே நிருவாகி, அந்த தட்டை அவரிடம் அளித்தார். "இவர் தானம் செய்தார் என்பதற்கு என்ன சாட்சி?" என்று கோயில் நிருவாகி நினைக்கும்போதே, அந்தப் பணக்காரரின் கையில் இருந்த தங்கத் தட்டு தகரமாக மாறி விட்டது. "ஓகோ! தகுதியில்லாதவர்கள் கைக்குப் போனால் தங்கத் தட்டு இப்படி தகரத் தட்டாக மாறிவிடும் போலும்!" என்று எல்லோரும் அங்கே பேசிக் கொண்டார்கள்.

அந்த ஊருக்கு பணக்காரர்கள் நிறைய பேர் வந்து தாங்கள் செய்த தான தர்மங்களை சொல்லி, தங்கத்தட்டை பெற முயன்றனர். ஆனால் தானம் செய்ததாக சொன்ன பல பணக்காரர்களின் கைகளுக்குப் போன தங்கத் தட்டு தகரத் தட்டாக மாறியது. சில நாட்கள் கழித்து, அக்கோயிலுக்கு எளிய மனிதர் ஒருவர் வந்தார். அவருக்கு இந்தத் தங்கத்தட்டு விவரம் எதுவுமே தெரியாது. கோயிலில் சாமி கும்பிட போன அவர், அங்கு அதிக அளவில் ஏழை எளிய மக்களைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். “இந்த நாட்டில் இவ்வளவு ஏழை மக்களா?” அந்த ஏழை மக்களில் கை, கால் இழந்தவர்கள், கண் பார்வை இழந்தவர்கள், வாய்பேச முடியாதவர்கள் இருப்பதைப் பார்த்து அவரது உள்ளம் உருகிற்று. அவர் ஆண்டவன் முன் இம்மக்களுக்கு விமோசனம் வேண்டி கோயிலுக்கு சென்றார். அப்பொழுது கூட்ட நெரிசலில் கோயில் நிருவாகி கையிலிருந்த தங்கத் தட்டை தவற விட்டார். அந்தத் தட்டு கோயிலின் உள்ளே வந்த நல்ல உள்ளம் கொண்ட அந்த எளிய மனிதரின் கையில் விழுந்தது. உடனே ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. தங்கத் தட்டு தகரத் தட்டாக மாறாமல் ஜொலித்தது. கோயில் நிருவாகிக்கு மட்டற்ற மகிழ்ச்சி! “ஐயா! நீங்கள் தான் உண்மையான அன்பின் வடிவம். இந்த தங்கத் தட்டுக்கு உரியவர் நீங்கள்தான்” என்று கூறினார்.

“மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்”, “மக்களை நாடி அரசு” என்று மாண்புமிகு அம்மாவின் அரசு, ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மக்களுக்காக அன்புள்ளத்துடன் உருகிய அந்த எளியவருக்கு தங்கத் தட்டு கிடைத்தது போல, மக்களுக்காக பணியாற்றும் நமக்கு, மக்கள் தங்கள் பேராதரவின் மூலம் அளித்த இடைத் தேர்தல்கள் வெற்றியைப் போல, வருகின்ற அனைத்து தேர்தல்களிலும் வெற்றி எனும் தங்கத்தட்டை அளிப்பார்கள் என்பது உறுதி.

இன்றையதினம் ஸ்டாலின் அவர்கள், நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், “உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடைபெறும்

என்று மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது. அந்த அறிவிப்பில், முறையாக வார்டு வரையறுக்கவில்லை, முறையாக அறிவிப்பு வெளியிடப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு முறையாக வார்டு வரையறுக்கப்படவில்லை. முதலமைச்சர் திடீரென்று, நேரடித் தேர்தலை ரத்து செய்து விட்டு வார்டு வாரியாக தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார். இதையெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, திட்டமிட்டு செயல்படுத்தி, தேர்தலை நிறுத்துவதாகத் தெரிகிறது" என்ற ஒரு பச்சைப் பொய்யைத் தெரிவித்திருக்கின்றார்.

1996ஆம் ஆண்டு வரை உள்ளாட்சித்தேர்தல், வார்டு வாரியாக நடைபெற்று, அதன் மூலமாகத்தான் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். 1996ஆம் ஆண்டு வரை மேயர் பதவிக்கு மறைமுகத்தேர்தல்தான் தமிழ்நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது நேரடித் தேர்தலை அறிமுகம் செய்தார்கள். அதற்குப் பிறகு 2006ஆம் ஆண்டு நேரடியாக நடைபெற்ற தேர்தலை மறைமுகத் தேர்தலாக அறிவித்ததும் அப்போதைய உள்ளாட்சித்துறை அமைச்சர், தற்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் தான். அவரே மறைமுகத் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக, தெளிவாக சட்டமன்றத்தில் பதிலளித்திருக்கிறார். அப்பொழுது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு.ஸ்டாலின் அவர்கள் 31.08.2006 அன்று மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறைக்கு பதில், மறைமுகமாக தேர்ந்தெடுக்க சட்டமுன்வடிவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தினார். 31.08.2006 அன்று திரு.ஸ்டாலின் கூறுகையில், அசாம், குஜராத் என்று பல மாநிலங்களைப் பட்டியலிட்டு அங்கெல்லாம் மறைமுகத் தேர்தல் மூலம்தான் தலைவரை தேர்ந்தெடுக்கின்றார்கள் என்று கூறி

தீர்மானத்தை நிறைவேற்றக் கோரினார். மேலும், திரு.ஸ்டாலின் அவர்கள் 31.08.2006 அன்று தீர்மானத்தின் மீது பேசும்போது “மேயர் ஒரு கட்சியைச் சார்ந்தவராகவும், அதேபோல், மெஜாரிட்டியாக வரக்கூடிய உறுப்பினர்கள் வேறு கட்சியைச் சார்ந்தவர்களாகவும் வந்துவிடுகின்ற காரணத்தினால் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை அவையிலே வைத்து, மன்றக் கூட்டத்திலே வைத்து, அதை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறது. அதனால் மக்களுடைய பிரச்சினைகள் தேக்கம் அடையாமல் இருப்பதற்கு இதைக் கொண்டு வருகிறோம். மேலும், உதாரணத்திற்கு விழுப்புரம், விருத்தாச்சலம் நகராட்சிகளில், 2001 தேர்தல் நடந்ததற்குப் பிறகு இதுவரையில் ஆகஸ்டு 2006 வரை அந்த இரண்டு நகராட்சிகளிலும் முறையாக கூட்டங்கள் நடைபெறவில்லை, முன்வைத்து நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானங்களும் அங்கே முழுமையாக நிறைவேற்றப்பட முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிலைகளையெல்லாம் கருத்திலே கொண்டுதான் இப்பொழுது இந்த முறையை நாங்கள்

அமல்படுத்தியிருக்கின்றோம்" என்று கூறி தீர்மானத்தை நிறைவேற்றித் தரக் கோரியிருந்தார். திரு.ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுது, வார்டு வாரியாகத் தேர்தல் நடத்துவது சிறப்பாக இருக்கும் என்று அவரே சட்டமன்றத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். எங்களைப் பொறுத்தவரை, வார்டு வாரியாகத் தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றோம். இதிலே என்ன தவறு இருக்கின்றது. நீங்கள் தெரிவித்தால் சரி, நாங்கள் அறிவித்தால் அது தவறா? மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் கவுன்சிலர்கள் தானே பேரூராட்சித் தலைவர்களையும், நகர மன்றத் தலைவர்களையும், மேயர்களையும் தேர்ந்தெடுக்கின்றார்கள். இதில் என்ன தவறு இருக்கின்றது? இதில் எந்தத் தவறும் கிடையாது. வேண்டுமென்றே, திட்டமிட்டு இந்தத் தேர்தலை தடை செய்வதற்காக, நிறுத்துவதற்காக திரு.ஸ்டாலின் அவர்கள் பொய்யான குற்றச்சாட்டை சொல்லி வருகின்றார். உண்மையிலே, இந்தத் தேர்தலைக் கண்டு அவர் அஞ்சுகிறார் என்றுதான் நான் நினைக்கின்றேன். பல கூட்டங்களிலும், செல்லும் இடங்களிலும், கிராமங்களிலும்,, நகரங்களில் பல்வேறு பகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு உள்ளாட்சித் தேர்தலை நடத்தவில்லை. எனவே, மக்களுக்கு முறையாக தண்ணீர் கிடைக்கவில்லை, கழிவுநீர் அகற்றப்படவில்லை, தெருவிளக்கு எரியவில்லை என்று குற்றச்சாட்டுக்களை சொல்லிக் கொண்டிருக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தேர்தல் நடத்த அஞ்சுகிறது என்று வீர வசனம் பேசிக் கொண்டிருக்கிறார், திரு.ஸ்டாலின். உள்ளாட்சித் தேர்தலை நடத்த தில் இருக்கிறதா? திராணி இருக்கிறதா? தெம்பு இருக்கிறதா? என்று கேட்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, தில் இருக்கிறது, தெம்பு இருக்கிறது, திராணி இருக்கிறது, துணிவு இருக்கிறது என்று நாங்கள் தெரிவிக்கிறோம். மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தலை அறிவித்தால்

அதை எதிர்கொள்ளக்கூடிய வலிமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் இருக்கிறது என்பதை தெளிவுபடுத்துகிறோம். நீங்கள் நொண்டிச்சாக்குச் சொல்லிக்கொண்டு நீதிமன்றத்தை நாடப் பார்க்கின்றீர்கள். இந்தத் தேர்தலை நிறுத்துவதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சிகள் எதுவும் பலிக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்பானது, மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருப்பது. ஒட்டுமொத்த தமிழ் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அமைப்பு. அந்த உள்ளாட்சித் தேர்தலை நிறுத்துவதற்குத்தான் இன்றையதினம் வழக்குத் தொடர நீதிமன்றம் சென்றிருக்கின்றார்கள். அதுகுறித்த சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வழக்கறிஞர் அமீத் திவாரி என்பவர் உச்சநீதிமன்றத்தில் 28.11.2019 அன்று உள்ளாட்சித் தேர்தல் தேதி அறிவிப்பை நிறுத்த வேண்டுமென்று இடைக்கால மனு தாக்கல் செய்துள்ளார். இன்றையதினம், இதனை நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வுக்குச் சென்று, மனுக்கள் பட்டியலிட்டு முறையாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முறையிட்டிருக்கிறார். ஆனால், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள், மனுக்கள் பட்டியலிட்டு முறையாக விசாரணைக்கு வரும்பொழுது, விசாரிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். இந்த வழக்கை உடனடியாக விசாரிக்க வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழக கோரிக்கையை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை. அந்த வழக்கு தள்ளிப் போடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், இந்தத் தேர்தலை நிறுத்துவதற்கு அவர் குறிப்பிட்ட காரணம், முற்றிலும் தவறான, பொய்யான காரணம். இந்தத் தேர்தலை சந்திக்க திமுக தலைவர் அஞ்சுகிறார் என்றுதான் நான் கருதுகிறேன். அதற்கான விளக்கத்தையும் நான் தருகின்றேன். இந்திய தேர்தல் ஆணையம் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் இனம் தொடர்பாக அறிக்கை

ஒன்றை வெளியிட்டது. தமிழ்நாட்டில் 1996, 2001, 2006 மற்றும் 2011 ஆகிய வருடங்களில் நடத்தப்பட்ட உள்ளாட்சித் தேர்தல்கள் 1991ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் வரையறுக்கப்பட்ட வார்டுகளின் அடிப்படையிலே நடைபெற்றது. 2016ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதற்கு அனைத்து ஆயத்தப் பணிகளும் நடத்தப்பட்டு வந்த நிலையில், 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புப்படி வார்டு மறுவரையறை செய்த பின்னரே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகம் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தவுடன், உச்சநீதிமன்றத்தில் திமுக மேல்முறையீடு செய்தது. இன்று வரை இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. மாநில தேர்தல் ஆணையம் செப்டம்பர் 2016இல் தேர்தல் அறிவிப்பு வெளியிட்டவுடன் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு முறையாக செய்யப்படவில்லை எனவும், அட்டவணையில் தேர்தல் நடத்த போதுமான கால அவகாசம் ஒதுக்கப்பட வேண்டும் எனவும் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஒரு வழக்கைத் தொடர்ந்தது.

1996, 2001, 2006 மற்றும் 2011 ஆகிய வருடங்களில் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களில் கடைபிடிக்கப்பட்ட அதே அட்டவணையின் நடைமுறையின்படி 2016 உள்ளாட்சித் தேர்தல் அட்டவணையும் வெளியிடப்பட்டது என்ற வாதத்தை மாநிலத் தேர்தல் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் எடுத்து வைத்தபொழுதும் அந்தத் தேர்தலை நீதிமன்றம் ரத்து செய்தது. இதன் பின்னர், தமிழ்நாடு அரசு 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஊரகப் பகுதி மற்றும் நகர்ப் பகுதி வார்டுகளை மறுவரை செய்ய ஆணையத்தை அறிவுறுத்தியது. அந்த ஆணையம் 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி ஊரகப் பகுதி மற்றும் நகர்ப் பகுதி வார்டுகளை மறுவரை செய்து ஒவ்வொரு வார்டின் வரைவு அறிக்கையை வெளியிட்டு, பொதுமக்களின் கருத்தையும் கேட்டது. இப்பணி முடிவுற்றப் பிறகு தான்

2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படியான வார்டு மறுவரை அரசிதழில் வெளியிடப்பட்டது. இதன் பின் தமிழ்நாடு அரசு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான விகிதாச்சாரப்படி இடஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு அனைத்துப் பணிகளையும் முறையாக செய்த பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு வழக்குகளைத் தொடுத்து, உள்ளாட்சித் தேர்தலை நடத்த விடாமல் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது. புதிதாக மாவட்டங்கள் தொடங்குவதற்கும் உள்ளாட்சி தேர்தல் நடத்துவதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இதற்காக 2018ஆம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் சந்தேகம் இருந்திருந்தால், அப்பொழுதே திராவிட முன்னேற்றக் கழகம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கலாம். ஆனால், அப்பொழுது செல்லவில்லை. வார்டு வரையறுக்கப்பட்ட பிறகு பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டது. பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும் வார்டு வரையறை செய்ததில் ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்கலாம் என்ற அறிவிப்பை கொடுத்தன் விளைவாக, எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆட்சேப மனுக்களின் கோரிக்கையை பரிசீலித்து, முறையாக வார்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது என்பதை தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது. இப்படி அனைத்தையும் முறையாக மாநிலத் தேர்தல் ஆணையம் செய்தும், தேர்தலைச் சந்திக்கத் தெம்பில்லாமல், திராணியில்லாமல், துணிவில்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார். மாநிலத் தேர்தல் ஆணையம் கேட்கும் உதவிகளை அரசு செய்து கொண்டிருக்கிறது.

ஏழை, எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம் என்பதற்காக, இந்த அரசு வலு பெற்றிருக்கிறது, உள்ளாட்சி அமைப்பை சிறப்பாக நடத்துவதற்காக இந்தத் தேர்தலை சந்திக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். கிராமங்களில் பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும்

ஆட்டுவார்; தூங்குபவரை எழுப்பலாம், தூங்குவது போல் நடிப்பவரை எழுப்ப முடியாது என்று சொல்வார்கள். அதைப் போலத்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இன்று உருவாகும் செங்கல்பட்டு மாவட்டம், பல்வேறு துறைகளிலும் மேலும் சிறந்து விளங்கும் வகையில், சில அறிவிப்புகளை நான் இங்கே வெளியிட விரும்புகிறேன்:—

1. மதுராந்தகம் வட்டம், இரும்புலிச்சேரி கிராமத்திற்கு அருகே பாலாற்றின் குறுக்கே 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். இதனால் தடுப்பணையை சுற்றியுள்ள நல்லாத்தூர், பொய்கைநல்லூர், இரும்புலிச்சேரி, புறஞ்சேரி, தண்டரை, நெரும்பூர், அட்டவட்டம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிணறுகளின் நிலத்தடி நீர் செறிவூட்டப்படும். இதன் மூலம் 1,340 ஹெக்டேர் நிலம் பயன்பெறுவதோடு, குடிநீர் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.

2. திருப்போரூர் வட்டம், பஞ்சன்திருத்தி கிராமத்திற்கு அருகே மானாமதி மடுவின் குறுக்கே 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும்.

3. அதேபோல, திருப்போரூர் வட்டம், பண்டிதமேடு கிராமத்திற்கு அருகே மானாமதி மடுவின் குறுக்கே 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். மேற்படி பஞ்சன்திருத்தி மற்றும் பண்டிதமேடு தடுப்பணைகளினால் 19 மில்லியன் கன அடி நீர் சேமிக்கப்பட்டு, மானாமதி, புன்னப்பட்டு, அகரம், காரணை ஆகிய கிராமங்களில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, வேளாண் மற்றும் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

4. மதுராந்தகம்வட்டம், செம்பூண்டிகிராமம் அருகே கிளியாற்றின் குறுக்கே 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். இதனால், இதனைச் சுற்றியுள்ள செம்பூண்டி, பசுவங்கரனை, ஓரத்தூர் ஆகிய கிராமங்கள் பயன்பெறும்.

5. மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபரின் மாமல்லபுரம் சந்திப்பிற்குப் பிறகு, உலகமே மாமல்லபுரத்தை உற்று நோக்குகிறது. அதனால் சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஏற்கெனவே உள்ள வசதிகளை நவீனப்படுத்தவும் மத்திய அரசின் துணையுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

6. குறுகிய கால அவகாசத்தில் மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயில், ஐந்து ரதம், அர்ஜுனன் தபசு பாறை சிற்பங்கள், சிற்ப அருங்காட்சியகம், கலங்கரை விளக்கம், புலிக்குகை உள்ளிட்ட வரலாற்று சின்னங்களை அனைவரும் கண்டுகளிக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர்சாதன வசதி கொண்ட பேருந்தை 50 ரூபாய் கட்டணத்தில் இயக்க உள்ளது. இந்தப் பேருந்துப் பயணத்தில் சுற்றுலாப்பயணிகள் மேற்கண்ட நினைவுச் சின்னங்களின் அருகே எங்கு வேண்டுமானாலும் ஏறி, மற்றொரு நினைவுச் சின்னத்தின் அருகில் இறங்கிக் கொள்ளலாம் என்பது சிறப்பு அம்சமாகும்.

7. செங்கல்பட்டுவட்டம் முருகமங்களம்கிராமத்தில் 151 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரதப் பிரதமரின் “அனைவருக்கும் வீடு” திட்டத்தின் கீழ் 1,260 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

8. செங்கல்பட்டுவட்டம், கீரப்பாக்கம்கிராமத்தில் 157 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரதப் பிரதமரின் “அனைவருக்கும் வீடு” திட்டத்தின் கீழ் 1,760 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றைய தினம், மாநிலத் தேர்தல் ஆணையத்தின் மூலமாக, அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அதில், திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு குற்றச்சாட்டைக் கூறியது. ஏற்கெனவே, உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் இடங்களிலெல்லாம் நீங்கள்

மின்னணு வாக்கு இயந்திரத்தை பயன்படுத்த வேண்டும் என்று நேற்றையதினம் திமுக சார்பில் கலந்துகொண்ட திரு.என்.ஆர்.இளங்கோ குறிப்பிட்டிருக்கிறார். 2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன் வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் வரிசை எண்.11இல் தேர்தல் சீர்திருத்தங்கள் என்ற தலைப்பில், வாக்குப் பதிவு இயந்திரங்களுக்குப் பதிலாக வாக்குச் சீட்டு முறையை மீண்டும் அமல்படுத்துதல் போன்ற முக்கிய சீர்திருத்தங்களை திமுக தொடர்ந்து வலியுறுத்தும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதுமட்டுமல்ல, 2019ஆம் ஆண்டு புது தில்லியில் நடத்தப்பட்ட, மக்களவைத் தேர்தலுக்கான அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மரியாதைக்குரிய திரு.டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள் கலந்துகொண்டு “மின்னணு வாக்கு இயந்திரங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை, வாக்குச்சீட்டு முறையை மீண்டும் அமல்படுத்துங்கள்” என்று தெரிவித்திருந்தார். நேற்றைய தினம் மாநில தேர்தல் ஆணையத்தால் கூட்டப்பட்ட கூட்டத்தில், வாக்குச் சீட்டுக்கு மின்னணு வாக்கு இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிய திரு.என்.ஆர்.இளங்கோ அவர்கள் கூறியுள்ளார். என்ன வேடிக்கை பாருங்கள், தமிழ் நாட்டில் கொள்கையில்லாத ஒரே கட்சி திமுக கட்சி தான்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல பச்சோந்தி அடிக்கடி நிறத்தை மாற்றிக்கொண்டேஇருக்கும். ஆனால், அதைவிட வேகமாக கொள்கையை மாற்றக்கூடிய ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழக கட்சி என்பதை நான் சொன்ன கருத்திலிருந்து உங்களுக்கு தெள்ளத் தெளிவாக புரிந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, வேண்டுமென்று திட்டமிட்டு ஏதாவது குழப்பத்தை உருவாக்கி, உள்ளாட்சித் தேர்தலைத் தள்ளிப்போட முயற்சிக்கின்றார், அது நிறைவேறாது. மாநிலத் தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரைக்கும், சரியான முறையில்

தேர்தல் நடைபெற வேண்டுமென்று எண்ணி, வார்டு வரையறை முழுமையாக செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், புதிய மாவட்டத்தைப் பிரித்ததினால் பிரச்சினை என்று சொன்னார். 2018இல் வரையறுக்கப்பட்ட அந்த வார்டு முறையைப் பின்பற்றித்தான் புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களிலும் தேர்தல் நடைபெறும் என்று தெளிவாக தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது. ஆகவே, இதில் எந்தக் குழப்பமும் கிடையாது, குழப்பமெல்லாம் திரு.ஸ்டாலினுக்குத் தான் இருக்கிறது, தேர்தல் ஆணையத்திடமும் இல்லை, மற்ற கட்சிகளுக்கும் இல்லை.

இன்றைக்கு தமிழகத்தில் மழைக்காலங்களில் பெய்கின்ற மழைநீர் ஆங்காங்கே தேங்கி வருவதால் கொசு அதிகமாக உற்பத்தியாகி, மக்களுக்கு மர்மக் காய்ச்சல்கள் வருகிறது. அதிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக அம்மாவினுடைய அரசு ஏழை மக்களுக்கு கொசுவலை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும். நைலான் துணியிலான அற்புதமான கொசுவலையை எங்களுடைய அரசு ஏழை மக்களுக்கு வழங்குமென்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன். அனைத்து மக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று என்று சிலர் கூறினார்கள். அதையும் அரசு விரைவில் பரிசீலிக்கும். தற்போது ஏழை மக்களுக்கு அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எல்லா குடும்பங்களும் தைப்பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட வேண்டுமென்பதற்காக அரிசி குடும்ப அட்டை வைத்திருக்கும் சுமார் 2 கோடியே 5 இலட்சம் குடும்பங்களுக்கு பொங்கல் சிறப்புப் பரிசாக ரூ.1,000 வழங்கப்படும் என்ற அறிவிப்பை வழங்கி, இன்றைக்கு காலை அதை துவக்கி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். தமிழகத்திலே ஏழை, எளிய மக்களின் துன்பங்களைக் களைவதுதான் எங்களுடைய இலட்சியம், அந்த இலட்சியப் பாதையிலே இன்றைக்கு வெற்றிநடை போட்டுக்

கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில், தமிழகம் குடிசையில்லாத தமிழகமாக உருவாக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம் ஏரிகள் நிறைந்த மாவட்டம், ஏரிகள் நிறைந்த இந்த மாவட்டத்தில் தான் முதன்முதலாக நான் குடிமராமத்துத் திட்டத்தை துவக்கி வைத்திருக்கின்றேன். இதன் மூலமாக, தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் பயன்பெறுவதற்காக இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீரை சேமித்து வைக்கும் திட்டம் குடிமராமத்துத் திட்டம். அதேபோல, தடுப்பணை மூன்றாண்டு கால திட்டமாக ரூ.1,000 கோடி ஒதுக்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். அதை நிறைவேற்றும் விதமாகத்தான், நான் வந்தவுடன் இங்கே குறும்படம் வாயிலாக அழகாகக் காண்பித்தார்கள். இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்த அறிவிப்பை நடைமுறைப்படுத்திய அரசு என்பதை புள்ளிவிவரத்தோடு, ஆதாரத்தோடு இன்றைக்கு வெளியிட்டு காண்பித்திருக்கின்றோம். மாண்புமிகு அம்மாவின் அரசு தடுப்பணை கட்டியதன் விளைவாக, தடுப்பணைகளிலே நீர் தேங்கியிருக்கும் காட்சியை நாம் பார்க்கின்றோம். இது மக்களுடைய அரசு, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒரே அரசு என்பதை நிரூபித்துக் காட்டிக்கொண்டிருக்கின்றோம்.

பல்லாண்டு காலமாக செங்கல்பட்டைச் சேர்ந்த மாவட்ட மக்கள் கோரிக்கை வைத்திருந்தார்கள். ஆகவே, காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பிரித்து செங்கல்பட்டு மாவட்ட நகரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை இன்றைக்கு தொடங்கியிருக்கின்றோம். இந்தப் பகுதி வேளாண் மக்கள் நிறைந்த பகுதி, தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி, இந்த அரசு எப்பொழுதும் இந்த மாவட்டத்திற்குத் துணை நிற்கும் என்று சொல்லி, செங்கல்பட்டு மாவட்டம் உருவாவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார்

அவர்களுக்கும், அவருக்குத் துணை நின்ற அரசு உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்தத் திட்டம் விரைந்து செயல்படுவதற்கு இங்கே இருக்கின்ற பொதுமக்களும், கழக முன்னோடி நிருவாகிகளும் தொடர்ந்து வலியுறுத்தியதன்பேரில், இன்றைக்கு புதிய மாவட்டம் விரைந்து தொடங்கப்பட்டிருக்கின்றது. இந்த மாவட்டம் அனைத்து வளங்களும் பெற்று சிறப்படைய வேண்டும் என்று வாழ்த்தி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***29.11.2019** அன்று செங்கல்பட்டில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட*
செங்கல்பட்டு மாவட்டத்தினைத் தொடங்கிவைத்து,
முடிவுற்ற திட்டப் பணிகளைத் துவக்கிவைத்து,
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.

நதிநீர், கழிவுநீர், குடிநீர் என அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டது மாண்புமிகு அம்மாவின் அரசுதான்!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,

கொடுங்கையூரில் நடைபெற்ற மூன்றாம் சுத்திகரிப்பு நிலையத் திறப்பு விழாவில், கோயம்பேடு பகுதியில் 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று நான் கூறியிருந்தேன். அதன்படி, இன்று கோயம்பேட்டில் 486 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலைய திறப்பு விழாவில் கலந்துகொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மழைநீர் சேகரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி வெற்றி கண்டார்கள். மாண்புமிகு அம்மாவின்

வழியிலேயே மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்துச் செல்லவும், நீர் நிலைகளின் கொள்ளளவை அதிகரித்து பாதுகாக்கவும், வேளாண்மைக்கு நீர் திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்யவும், கழிவுநீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி முறையில் உபயோகிப்பதை பெருமளவில் ஊக்கப்படுத்தவும் "நீர் வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்" என்ற தீவிர மக்கள் இயக்கத்தை 07.08.2019 அன்று நான் துவக்கி வைத்தேன்.

இந்த தீவிர இயக்கத்தில் மழைநீர் சேகரித்தல், குடிமராமத்து திட்டத்தின் மூலம் நீர்நிலைகளை பாதுகாத்து அதன் கொள்திறனை அதிகரித்தல், நிலத்தடி நீரை செறிவூட்டி, குடிநீர் வழங்குதலை நிலைப்படுத்துதல், பயன்படுத்தப்பட்ட நீரினை மறுசுழற்சி செய்து உபயோகப்படுத்துவதன் மூலம் நன்னீருக்கான தேவையைக் குறைத்தல், இதன் மூலம் மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சிக் கோட்பாட்டினை தீவிரமாகக் கடைபிடித்தல் போன்ற பல்வேறு வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், உபயோகிக்கப்பட்ட ஒவ்வொரு துளி நீரும் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் உபயோகத்திற்கு கொண்டுவர வேண்டும். பொதுவாக கழிவு நீரில் உள்ள அந்த அசுத்தத்தை நீக்கி அனைவரும் அந்த நீரை பருகக் கூடிய அளவிற்கு அந்த நீரை சுத்திகரிக்கும் சுத்திகரிப்பு நிலையத்தை இன்றைக்கு நாம் திறந்து வைத்திருக்கின்றோம்.

இந்த கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து தொழிற்சாலைகள் பயன்படுத்த தகுந்த நீராக மாற்றம் செய்யும் மறுசுழற்சி முறை தற்பொழுது நடைமுறையில் உள்ளது. இந்த கழிவு நீர் சுத்திகரிப்பு மூன்று நிலைகளில் நடைபெறுகிறது.

முதல்நிலை சுத்திகரிப்பில், கழிவுநீரை தற்காலிகமாக தேக்கி வைக்க வேண்டும். அதில் கடின திடப் பொருட்கள் யாவும் அடியில் படிந்தும், எண்ணெய் மற்றும் எளிய திடப்பொருட்கள் மேற்பரப்பில் மிதக்கும். அடியில் படிந்த மற்றும் மிதக்கும் பொருட்கள்

நீக்கப்பட்டு, எஞ்சிய தண்ணீர் இரண்டாம் சுத்திகரிப்புக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

இரண்டாம் நிலை சுத்திகரிப்பில் நுண்கிருமிகளை பிரித்து எடுத்து நீக்கப்படுகிறது.

மூன்றாம் நிலை சுத்திகரிப்பு என்பது வேதி முறையிலோ, வடிகட்டுதல் முறையிலோ, இரண்டு நிலைகளுக்கு பின்பும் சுத்திகரிக்கப்படுவதாகும். இவ்வாறு மூன்றாம் நிலை சுத்திகரிப்பிற்குப் பின்னர் கிடைக்கும் சுத்திகரிக்கப்பட்ட நீரை நன்னீருக்குப் பதிலாக நிலத்தடி நீரை அதிகரிப்பதற்கோ, விவசாயத்திற்கோ, தொழில் நிறுவனங்களுக்கோ அல்லது குடிப்பதற்கு கூட பயன்படுத்தலாம். இதன் மூலம் இப்பணிகளுக்காக வழங்கப்பட்டு வரும் நன்னீர் குறைக்கப்பட்டு, அந்த நன்னீர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் என்பதை இங்கே குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன்.

எனவேதான் மாண்புமிகு அம்மாவின் அரசு மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கழிவுநீர் மறுசுழற்சி மூலமாக தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் நீர் வழங்கும் முறை 1993ஆம் ஆண்டே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு, தற்போதும் பயன்பாட்டில் உள்ளது.

சென்னை மாநகரில் அதிகரித்து வரும் தொழிற்சாலைகளுக்கு தொடர்ந்து நீர் வழங்கும் பொருட்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, கோயம்பேடு மற்றும் கொடுங்கையூர் பகுதியில் தலா 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க முறையே 2012–2013 மற்றும் 2014–2015ஆம் ஆண்டுகளில் சட்டப்பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக, இந்தியாவிலேயே மிகப்பெரிய மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை 01.10.2019 அன்று கொடுங்கையூரில் நான் துவக்கி வைத்தேன். இதன் மூலம் வடசென்னை, மணலியிலுள்ள தொழிற்சாலைகளுக்கு மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, 486 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் 45 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன். இதன் மூலம் வடசென்னை மற்றும் ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தேவைகளுக்காக தற்பொழுது தினசரி வழங்கப்பட்டு வரும் 40 மில்லியன் லிட்டர் நன்னீருக்குப் பதிலாக சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்பட உள்ளது.

இவ்விரு நிலையங்கள் முழுமையாக செயல்படுவதன் மூலம் சென்னை மாநகரில் மொத்தமாக உருவாகும் கழிவுநீரில் 20 சதவீதம் அளவிற்கு மறுசுழற்சி செய்யப்படும். இதன்மூலம், நாட்டிலேயே அதிகபட்சமாக கழிவுநீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்தும் மாநிலமாக தமிழ்நாடு திகழும்.

தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நன்னீர் இனிமேல் சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படும். இத்துடன் ஏற்கெனவே சென்னை மாநகர் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் திட்டங்களின் மூலம் கிடைக்கும் நீரையும் பயன்படுத்தினால், சென்னை நகருக்கு பருவமழை பொய்த்தாலும், தொடர்ந்து குடிநீர் கிடைப்பதற்கு வழிவகை ஏற்படும் என்பதை உறுதியிட்டு கூறுகிறேன்.

நன்னீரைப் பாதுகாக்கும் பொருட்டு, கழிவுநீரை சுத்திகரித்துப் பயன்படுத்துவதற்கான இதுபோன்ற திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து செயல்படுத்தும்.

நதி நீர், கழிவு நீர், குடிநீர் என அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை பெருமையுடன் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

கடந்த சில நாட்களாக நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, 5 புதிய மாவட்டங்களை துவக்கி வைத்தும், மரியாதைக்குரிய இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் திறந்து வைத்தும், விழுப்புரத்தில் சட்டக்கல்லூரிக்கான கட்டட வளாகத்தை திறந்து வைத்தும், மக்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கியும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், ஏற்கெனவே முடிக்கப்பட்ட திட்டங்களை தொடங்கி வைத்தும், இன்று இந்த மூன்றாம் நிலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை தொடங்கி வைத்தும் உள்ளேன். இதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு குறைந்த கால அளவில் நல்ல பல அரிய திட்டங்களும், நலத்திட்ட உதவிகளும் கிடைத்துள்ளன என்பதை பெரு மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக் கொள்ளும் அதே சமயத்தில், ஒரு சம்பவத்தை நினைவு கூர விரும்புகிறேன்.

ஒரு வணிக நிறுவனத்தில் பணிபுரிந்த ஒருவர் பதவி உயர்வின் காரணமாக, அதே நிறுவனத்தின் தலைமையகத்திற்கு பணிமாற்றம் செய்யப்பட்டார். வந்து சேர்ந்திருக்கும் ஆள் எப்படிப்பட்டவர் என்பதை அறிய, தலைமையகத்தின் மேலாளர் பழைய மேலாளரிடம் பேசினார்.

"இந்த ஆள் எப்படிப்பட்டவர் ?" என்று கேட்டார்.

"கெட்டிக்காரர்" என்று பதில் சொன்னார் பழைய மேலாளர். "எத்தனை ஆண்டுகள் உங்கள் கிளையில் இவர் பணி செய்தார் ?" என்று கேட்டார் புதிய மேலாளர்.

"நான்கு வருடங்கள்" என்று பதில் சொன்னார் பழைய மேலாளர்.

"என்ன ? 4 வருடங்களா ? நான்கு மாதங்கள் என்றல்லவா இவர் எங்களிடம் கூறினார்" என்று திரும்ப கேட்டார் தலைமையகத்தின் மேலாளர்.

“அவர் சொன்னது உண்மைதான். ஆனால் அவர் பணி செய்தது நான்கு வருடங்கள் தான்” என்று நிதானமாகச் சொன்னார் பழைய மேலாளர்.

“எது உண்மை ? 4 மாதங்களா ? 4 வருடங்களா ?

ஏதாவது ஒன்றுதானே உண்மையாக இருக்க முடியும்” என்று தலைமையக மேலாளர் கேட்டார்.

“இல்லை ! இரண்டும் உண்மைதான்”.

அவர் நான்கு மாதங்கள்தான் இங்கு இருந்தார். ஆனால் நான்கு ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட வேண்டிய பணிகளை நான்கே மாதங்களில் திறம்பட செய்து முடித்தார்.

“இரண்டும் உண்மைதானே !” என்றார் பழைய மேலாளர்.

இதுபோன்று மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்று

நடந்து வருவதோ மூன்றாம் ஆண்டு,

நடத்தி முடிக்கப்பட்டதோ 30 ஆண்டுகளில் செய்து முடிக்க வேண்டிய பணிகள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இனிய தருணத்தில் நான் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் எளிய முறையில் கழிவு நீர் இணைப்பு பெறுவதற்கான அறிவிப்புகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வெளியிடுகின்றேன்.

சென்னை குடிநீர் வாரியத்தால் தற்சமயம் மக்கள் சாசனப்படி 30 நாட்களில் கழிவுநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போதைய நடைமுறையில் முழுத்தொகையும் முன்னரே செலுத்தி, அனைத்து ஆவணங்களும் பொதுமக்கள் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. கழிவுநீர் இணைப்புக்கான பணியினை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, காவல்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அனுமதி பெற வேண்டியுள்ளது. இதனால் காலதாமதம் ஏற்பட்டு பொதுமக்கள் சிரமப்படுகிறார்கள் என்று உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த நடைமுறையை எளிமைப்படுத்தும் நோக்கத்தோடு 2 புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளது.

1) அழைத்தால் இணைப்பு : இத்திட்டத்தில் சென்னை பெருநகரில் உள்ள தரை தளம் மற்றும் இரண்டு தளங்கள் வரையுள்ள கட்டடங்களுக்கு, பொதுமக்கள் சென்னை குடிநீர் வாரியத்திற்கு 45674567 தொலைபேசி மூலமாகவோ அல்லது இணையதளம் மூலமாகவோ பதிவு செய்தவுடன் எந்தவித ஆவணங்களும் இன்றி எளிய நடைமுறையில் கழிவு நீர் இணைப்பு வழங்கப்படும்.

2) இல்லந்தோறும் இணைப்பு : இத்திட்டத்தில் விரிவாக்கம் செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பாதாளச் சாக்கடை கட்டமைப்புகளுடன் கழிவுநீர் இல்லாத வீடுகளுக்கு சென்னை குடிநீர் வாரியமே தாமாக கழிவு நீர் இணைப்பு வழங்கும்.

மேற்படி இரண்டு திட்டங்களிலும் பொதுமக்கள், கழிவுநீர் இணைப்பு கொடுத்த பின்பு, சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கழிவுநீர் கட்டணத் தொகையை ஒரே தவணையில் முழுமையாகவோ அல்லது ஐந்து வருடத்திற்குள் 10 தவணைகளாகவோ, வரி மற்றும் குடிநீர் கட்டணத்துடன், செலுத்த ஏதுவாக இத்திட்டங்கள் 02.12.2019 முதல் நடைமுறைக்கு வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 29.11.2019 அன்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால், சென்னை, கோயம்பேட்டில் நிறுவப்பட்டுள்ள, நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட மூன்றாம் நிலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தைத் திறந்துவைத்து ஆற்றிய விழாப் பேருரை.*

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் ஒற்றைச் சாளர அனுமதிகளை நேரடியாக கண்காணித்து விரைவுபடுத்தப்படுகிறது!

Thiru. M.C.Sampath, Hon’ble Minister for Industries,

Dr. Nilofer Kafeel, Hon’ble Minister for Labour,

Thiru. K.Pandiarajan, Hon’ble Minister Tamil Official Language and Tamil Culture and Archaeology

Chief Secretary Thiru. K.Shanmugam I.A.S.,

Thiru. Satheesh Reddy, Chairman, DRDO

Captains of Industry,

Members of the Diplomatic community

Officers of Government of Tamil Nadu

Esteemed Guests,

Ladies and Gentlemen,

Press and Media,

At the outset I welcome you all to this meeting.

- Tamil Nadu is one of India's most industrialised States and its second largest State economy.
- My Honourable leader Dr. Puratchi Thalaivi Amma had a vision to make Tamil Nadu a world leader in manufacturing. In line with that vision, the first ever Global Investors Meet was held in 2015 which was a resounding success.
- Following the footsteps of Amma, my Government conducted the second edition of the Global Investors Meet in January this year, which saw investment commitments of over Rs.3 lakh crore.
- My Government has ensured a committed support for all the MoU projects. As a result, till date, 53 GIM 2019 MoU projects have commenced commercial production and 219 projects are under various stages of implementation.
- My Government has been working continuously to attract new investments.
- I am happy to inform that after the successful completion of Tamil Nadu Global Investors Meet 2019, in the past 10 months alone, Tamil Nadu has attracted 63 new MoU projects with an investment of Rupees Nineteen thousand crores and Eighty three thousand eight hundred new jobs. This includes investments from Japan, Germany, South Korea, USA and UAE.

என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஏற்ப தமிழ்நாட்டின் தொழில் துறையின் மேம்பாட்டிற்கு பல நல்ல திட்டங்களை எனது அரசு செயல்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் மூலம் ஒற்றைச்சாளர அனுமதி, ஒற்றைச் சாளர அனுமதிகளை நேரடியாகக் கண்காணித்து விரைவுபடுத்திட எனது தலைமையில் தனிக் குழு, முதலமைச்சர் அலுவலகத்தில் முதலீட்டு எளிதாக்குதல் பிரிவு, தண்ணீர் பிரச்சினைகளுக்குத் தீர்வாக குடிமராமத்து மற்றும் மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள் மட்டுமின்றி, இந்தியாவிலேயே மிகப்பெரிய கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள், புதிய உணவுப் பூங்காக்கள், பாதுகாப்பு மற்றும் வானூர்தி தொழில் பூங்கா, மின்சார வாகனப் பூங்கா, Start-ups எனப்படும் புத்தொழில்களை ஊக்குவிக்க தனிக் கொள்கை, தகவல் தொழில்நுட்பக் கொள்கை, வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை, மின்சார வாகனக் கொள்கை என தொழில்துறை மேம்பட திட்டங்கள் பல தீட்டி சிறப்புறச் செயல்படுத்தி வருகிறோம்.

- The highly skilled manpower and peaceful law and order make Tamil Nadu the preferred destination for investments.
- Tamil Nadu Skill Development Corporation in partnership with the industry, is setting up the Apex Skill Development Centres for imparting skill training. This will further improve the State’s position as the skill capital of India.
- The knowledge partnership with DRDO and IIT, Madras for the Tamil Nadu Defence Industrial Corridor will be very helpful to make Tamil Nadu an aerospace and defence manufacturing hub.
- Today I would like to announce a new initiative to help investors in the State. Industries Department and TNSDC will identify

the skill sets needed by the investors. TNSDC will train the youth according to such specific needs of the investors. The companies will have a say in the design of the programme and also in training. They can also select the suitable candidates from among those skilled under this programme.

- தமிழ்நாட்டில் தொழில் துவங்கும் முதலீட்டாளர்களுக்கு பயன்படும் வகையில் தொழில் துறையும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து செயல்படுத்த உள்ள புதிய திட்டத்தை இங்கே அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தொழில் நிறுவனங்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்றவாறு அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் மூலம் திறன் பயிற்சி வழங்கப்படும். இதற்கான பாடத்திட்டத்தையும், பயிற்சி நிறுவனத்தையும் சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனமே தேர்ந்தெடுக்கலாம். அவ்வாறு பயிற்சி பெற்றவர்களிலிருந்து உகந்த நபர்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

- இப்படியான பல நல்ல திட்டங்களால்தான் தமிழ்நாடு பல்துறை வளர்ச்சியில் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது.

- நாட்டின் முன்னணி இதழான இந்தியா டுடே நடத்திய ஆய்வில் ஒட்டுமொத்த செயல்பாட்டில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக, தொடர்ந்து இரண்டாவது முறையாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- ஃபிராஸ்ட் அண்ட் சல்லிவன் (Frost & Sullivan) நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கையில் ஒட்டுமொத்த செயல்பாட்டில் இரண்டாம் இடமும், முதலீடுகளை ஈர்ப்பதில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தையும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

- தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்கும் பொருட்டு உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளைப் பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாடு வாழ் தமிழ் மக்களுக்கு இரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்கவும், "யாதும் ஊரே" என்ற புதிய திட்டத்தை கடந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரின்போது அறிவித்திருந்தேன். அதன்படி, தமிழ்நாடு அரசின் சார்பில், நானே நேரடியாகச் சென்று, உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைத்திட, ஒரு புதிய உறவுப்பாலம் அமைக்கும் இந்த உன்னத முயற்சியை, அமெரிக்காவில் துவக்கிவைத்தேன். இந்த பயணத்தின்போது கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் DP World, M Auto ஆகிய திட்டங்கள் ஏற்கெனவே துவங்கப்பட்டுள்ளன. மூன்று திட்டங்கள் இன்று துவங்கப்பட்டுள்ளன.
- We are renewing our efforts to increase exports from Tamil Nadu by constituting high level Committee under the Chairmanship of Chief Secretary.

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து

என்ற குறளுக்கு ஏற்ப, தொழில் வளர்ச்சியை தொடர்ந்து ஊக்குவித்து புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பல தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

- இந்த ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் ரூபாய் 500 கோடி முதலீட்டில் 5,600 புதிய வேலைவாய்ப்புகளை அளிக்கும் வகையில் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற சால்காம்ப் (Salcomp) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

- தொழில் சிக்கல்கள் காரணமாக மூடப்பட்டுள்ள நோக்கியா நிறுவன தொழிற்சாலையினை வாங்கி, மின்னணு சாதன உற்பத்தியினை மேற்கொள்ளும் உடன்பாட்டை சால்காம்ப் (Salcomp) நிறுவனம் எட்டியுள்ளது.
- இது தவிர, உலக முதலீட்டாளர் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தப்படி நோக்கியா சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஃபாக்ஸ்கான் (Foxconn) நிறுவனம் ரூபாய் 2,500 கோடி முதலீட்டில் மின்னணு சாதன உற்பத்திக்கான பணிகளை துவக்கியுள்ளது. இதன் மூலம் 20,000 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.
- இவ்வாறு, முந்தைய காலங்களில் பல்வேறு காரணங்களால் செயல்படாமல் நின்ற தொழில் நிறுவனங்கள் கூட, தற்போது தமிழ்நாடு அரசின் தொடர் முயற்சிகளால் புத்துயிர் பெரும் சிறப்பான சூழல் உருவாகியுள்ளது.

My dear Investors,

I want to assure you that my Government is committed to fulfil Puratchi Thalavi Amma's vision of making Tamil Nadu the best global destination for investment and as the manufacturing hub of the world.

நன்றி!

வணக்கம்!

46ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி துவக்கம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இன்று சென்னை தீவுத் திடலில் 46ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை தொடங்கி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. வெல்லமண்டி நடராஜன் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பெஞ்சமின் அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய அரசு தலைமைச்செயலாளர் மரியாதைக்குரிய திரு. க.சண்முகம் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் திரு.சத்யா அவர்களே!

மரியாதைக்குரிய சட்டப் பேரவை உறுப்பினர், முன்னாள் டி.ஜி.பி. திரு.நடராஜ் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.வெங்கடேஷ் பாபு அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், வாரியத்தலைவர் திரு.பாலகங்கா அவர்களே!

மரியாதைக்குரிய திரு.ராஜேஷ் அவர்களே!

திட்ட விளக்கவுரை ஆற்றிய சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அசோக் டோங்ரே அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

கூட்டுறவுச் சங்க நிருவாகிகளே!

முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகளே!

வருகை தந்திருக்கின்ற சென்னை மாநகர காவல்துறை ஆணையர் அவர்களே!

காவல்துறை உயர் அதிகாரிகளே!

சுற்றுலாத் துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்களே!

அரசு உயர் அதிகாரிகளே!

நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி அமுதவல்லி அவர்களே!

கலைக் குழுவினர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! சுற்றுலாப் பயணிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இனிய நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

“ஒரு மலையில் பெருக்கெடுத்து ஓடும் ஆறு, பயனில்லாத இடங்கள் வழியாகப் பாய்ந்து கடலில் கலப்பதால் யாருக்கும் எவ்விதப் பயனும் இல்லை. அந்நீர் அணைகளில் தேக்கப்பட்டு, வாய்க்கால் வழியாக வயல்களுக்கு பாய்ந்தால் பயிர் செழிக்கும். உயிர்கள் வாழ

வழிவகை ஏற்படும்'' என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

பயிர்கள் செழிக்க, அணைகளில் நீர் தேக்கி வைப்பது எவ்வளவு முக்கியமோ, அதேபோல, அரசு செயல்படுத்தும் திட்டங்கள் மற்றும் மக்கள் நலப் பணிகள் பற்றிய விவரங்கள், அரசின் சாதனைகள் ஆகியவற்றை மக்களிடையே கொண்டு செல்லும் ஒரு கருவியாக செயல்படுவது பொருட்காட்சிகள்தான்.

பொங்கல் திருநாள் என்றாலே அதனுடன் சேர்ந்து நினைவுக்கு வருவது சென்னை தீவுத் திடலில் நடக்கும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி தான். இந்த ஆண்டு பொருட்காட்சி, கிறிஸ்துமஸ்க்கு முன்னரே தொடங்கி வைக்கப்பட்டிருப்பது கூடுதல் விசேஷமாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 1974ஆம் ஆண்டு முதல் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, 46ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி இன்று இனிதே துவங்குகிறது. இந்த ஆண்டு பொருட்காட்சியின் கருப்பொருள் "Tourism and jobs, a better future for all!" என்பதாகும். இப்பொருட்காட்சியில் மாநிலத்தின் 28 அரசுத் துறைகள், 14 மாநில பொதுத் துறை நிறுவனங்கள், ஒரு மத்திய அரசு நிறுவனம், 4 பிற மாநில அரசு நிறுவனங்கள், தமிழ்நாடு சட்ட உதவி மையம் மற்றும் 110 தனியார் அரங்குகள் இடம் பெற்றுள்ளன.

இப்பொருட்காட்சியில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்து கொண்டிருக்கும் ஆக்கபூர்வமான பணிகளையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களையும் மக்கள் எளிதில் புரிந்து கொண்டு பயன்பெறும் வகையில், அரசுத் துறை அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், குழந்தைகளுக்காகவும், பெரியவர்களுக்காகவும் பொழுதுபோக்கு அம்சங்களும் இந்தப் பொருட்காட்சியில் இடம்

பெற்றுள்ளன. இப்பொருட்காட்சியில் பனி உலகம், கடல்வாழ் மீன் அருங்காட்சியகம், லேசர் ஷோ (Laser show) கண்காட்சி ஆகிய சிறப்பு அம்சங்களும் இடம் பெற்றுள்ளன.

Tour என்ற ஆங்கில சொல்லானது, TORNOS என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பிறந்தது ஆகும். டோர்னஸ் என்ற லத்தீன் வார்த்தை சக்கரத்தை, அதாவது சுற்றி வருவதை குறிக்கிறது. இவ்வாறு லத்தீன் மொழியில் பிறந்த Tour என்ற சொல் ஆங்கில மொழியில் இணைந்தது. எனவே பல இடங்களுக்குச் சென்று பார்த்து விட்டு மீண்டும் தனது இருப்பிடம் வந்து சேர்வதைத்தான் இந்த Tour என்ற வார்த்தை குறிக்கிறது.

முன்னர் பணம் படைத்தவர்கள் மட்டுமே சென்று வந்த சுற்றுலா என்பது, தற்போது உலக மக்களின் தேவைகளில் ஒன்றாக மாறி வருகிறது. அதிசயமானவை, ஆர்வமூட்டக் கூடியவை, மனதை கவர்பவை, இயற்கைக் காட்சிகள் போன்றவற்றைக் காண மக்கள் விரும்புகின்றனர். தாங்கள் வசிக்கும் இடங்களிலிருந்து சென்று பிற இடங்களைக் காணும் ஆர்வமே சுற்றுலா தோன்றுவதற்கு அடிப்படை காரணமாகும். மக்கள் இன்பமாகவும், பயனுள்ளதாகவும்

ஒய்வு நேரத்தை செலவிட சுற்றுலாவை விரும்புகின்றனர். மக்களின் வாழ்க்கைத் தரம், போக்குவரத்தில் முன்னேற்றம், தரமான சாலைகள், விரைவான செய்தித் தொடர்பு வசதி போன்றவை சுற்றுலாவை ஒரு முக்கியமான தொழிலாக மாற்றியுள்ளன.

இன்றைய உலகில் சுற்றுலா ஒரு பயன்மிகு தொழிலாக விளங்குகிறது. சுற்றுலா மூலம் தனிநபர் பயனடைவது தவிர, நாட்டின் வருவாயும் அதிகரித்து, பொருளாதார வளர்ச்சி அடைந்து, பல துறைகளில் நாடு முன்னேற வழிவகுக்கிறது.

வேற்றுமையில் ஒற்றுமையைப்பேணும் இந்தியா போன்ற நாடுகளில், சுற்றுலா செல்லும் பயணி பிற மாநிலங்களில் வாழும் மக்களுடன் கூடிப் பேசி மகிழ முடிகிறது. நாட்டின் ஒரு பகுதியில் வாழும் மக்கள், பிற பகுதிகளுக்கு செல்லும்போது, ஒருமைப்பாட்டு உணர்வு வலுவடைகிறது. வெளிநாட்டிற்கு நாம் செல்லும்போதும், வெளிநாட்டினர் நம் நாட்டிற்கு வரும்போதும், புலவர் கனியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற கூற்றிற்கு ஏற்ப நாம் அனைவரும் உலகத்தின் குடிமக்கள் என்ற உணர்வு மேலோங்குகிறது.

தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கருத்தில்கொண்டு சுற்றுலாத் தலங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும், தொடர்ந்து புதிய சுற்றுலா மையங்களை தெரிவு செய்து அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கும், பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருவதால், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இதனால், தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் மிகவும் போற்றத்தக்க வகையில் கட்டடக் கலைகள், உயிரோட்டமுள்ள பாரம்பரிய இசை, நடனம், கிராமியக் கலை மற்றும் கவின் கலை ஆகியவை உள்ளன.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் இசை விழா நிகழ்ச்சியை கேட்டு ரசிப்பதற்கும், நாட்டியாஞ்சலி மற்றும் தமிழ்நாட்டிற்கே உரிய வீர விளையாட்டுகளை கண்டு களிப்பதற்கும், தமிழ்நாட்டில் உயர்தர மருத்துவம் பெறுவதற்கும், உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்வதற்கும் என பிற நாடுகள் மற்றும் மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வந்த வண்ணம் உள்ளனர்.

இது தவிர, ஆன்மிகம் மற்றும் பொழுதுபோக்கு சுற்றுலாத் தலங்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் உள்ளன. குறிப்பாக உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு போன்ற சுற்றுலாத் தலங்கள், உலகின் 2ஆவது நீளமான கடற்கரையான சென்னை மெரினா கடற்கரை, உலகிலேயே மூன்று கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி, சிற்பக் கலையில் சிறந்த மாமல்லபுரம், தமிழ்நாடு முழுவதும் நிறைந்து காணப்படும் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட கோயில்கள், ஒவ்வொரு மதத்தினரும் வழிபடும் வழிபாட்டு தலங்கள் ஆகியவை சுற்றுலாப் பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கின்றன.

யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்ட உலகப்பாரம்பரிய சின்னங்கள் அமைந்துள்ள மாமல்லபுரம், தஞ்சை பெரிய கோயில், தாராசுரம் திருக்கோயில், கங்கைகொண்ட சோழபுரம் திருக்கோயில் மற்றும் நீலகிரி மலை இரயில் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ளன.

2014, 2015, 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தை பெற்றுள்ளது. 2018ஆம் ஆண்டில் 39 கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள், 61 இலட்சம்

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் என சுமார் 40 கோடி சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர். ஆண்டுக்கு ஆண்டு தமிழ்நாட்டுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது, இந்தியாவிலேயே மிகவும் விரும்பத்தக்க சுற்றுலா தலங்கள் நிறைந்த மாநிலம் தமிழ்நாடு என்பதை உறுதிப்படுத்துகிறது.

சுற்றுலாத் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்திய சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 53 தங்கும் விடுதிகள் மற்றும் 14 சொகுசு பேருந்துகளுடன் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, முக்கிய சுற்றுலாத் தலங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்த, 2018–2019ஆம் ஆண்டில் 6 கோடியே 28 இலட்சம் ரூபாயும், சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக 10 கோடியே 64 இலட்சம் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 2 வோல்வோ பேருந்துகள் வாங்கியது உட்பட 20 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், காஞ்சிபுரத்தில் சுற்றுலா மேம்பாட்டிற்காக 16 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், வேளாங்கண்ணியில் சுற்றுலா மேம்பாட்டிற்காக 5 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முக்கியமான கடற்கரை சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த 99 கோடியே 91 இலட்சம் ரூபாய் நிதியில், கடற்கரை பகுதிகளில் நிலச் சீரமைப்பு, மின் விளக்கு வசதி, பொது கழிப்பிடங்கள், சாலையோர வசதிகள், கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம் தொகுதி–4ன் கீழ், 288 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலாத் தலங்களில் ஆற்றல்மிகு மின் விளக்குகள் அமைத்தல், ஒளிரும் வழிகாட்டு பலகைகள் அமைத்தல், சிதம்பரம், ஆலங்குடி மற்றும் வேதாரண்யத்தில் சுற்றுலாப் பயணியர் தங்கும் விடுதி கட்டுதல், காஞ்சிபுரத்தில் யாத்ரி நிவாஸ் கட்டுதல், கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு சென்று வர படகுகள் வாங்குதல் போன்ற பல்வேறு பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் வரும் 2020ஆம் ஆண்டில் முடிவடையும் வகையில் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, 1992ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்–ஜனவரி மாதங்களில் இந்திய நாட்டிய விழா மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. இவ்விழாவினை காண இந்தியாவின் பிற பகுதிகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர்.

தமிழ்நாட்டில் சிற்பங்கள், குகை கோயில்கள் அதிகம் உள்ள மாமல்லபுரத்தில் சமீபத்தில் மாண்புமிகு சீன நாட்டு அதிபரும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும் பேச்சு வார்த்தை நடத்தியது ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும். இதனைத் தொடர்ந்து, மாமல்லபுரத்தைக் காண சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஏற்கெனவே உள்ள வசதிகளை நவீனப்படுத்தவும் மத்திய அரசின் துணையுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதற்கென மத்திய அரசு தனது ஒப்புதலை சமீபத்தில் வழங்கியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 29.11.2019 அன்று செங்கல்பட்டு மாவட்ட துவக்க விழாவில், மாமல்லபுரத்திற்கு வரும் உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, மாமல்லபுரச் சுற்றுலா பேருந்து வசதியினை துவக்கி வைத்தேன். இதன் சிறப்பு அம்சம் என்னவென்றால், மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோவில், ஐந்து ரதம், அர்ஜுனன் தபசு பாறை சிற்பங்கள், சிற்ப அருங்காட்சியம், கலங்கரை விளக்கம், புலிக்குகை உள்ளிட்ட வரலாற்று நினைவுச் சின்னங்களை சுற்றுலாப் பயணிகள் சிரமமின்றி குறுகிய நேரத்தில் குளிர்சாதன வசதி கொண்ட பேருந்தில் 50 ரூபாய் கட்டணத்தில் கண்டு களிக்கலாம்.

இதுபோன்று எண்ணற்ற சாதனைகளை தமிழ்நாடு சுற்றுலாத் துறை நிகழ்த்தி வருகிறது என்பதைப் பெருமையுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். இதன் காரணமாக பசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் சங்கத்தின் சார்பில் ‘சிறந்த பாரம்பரிய சுற்றுலா மாநிலம்’ என்ற சர்வதேச விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

‘இந்தியா டுடே’ குழுமம் 2018ஆம் ஆண்டில் ‘சுற்றுலாவில் சிறந்த செயல்திறன் மிக்க மாநிலம்’ என தமிழ்நாட்டை தேர்வு செய்து விருது வழங்கியுள்ளது.

வேளாண்மைத் துறையில் 5ஆவது முறையாக கிரிஷி கர்மான் விருதைப் பெற்றுள்ள மாநிலம் தமிழ்நாடு, உள்ளாட்சித் துறையில் மத்திய அரசின் 99 விருதுகளைப் பெற்று சாதனையை படைத்த அரசு அம்மாவின் அரசு, உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் 5ஆவது முறையாக மத்திய அரசு விருதை தொடர்ந்து பெற்றுள்ளது,

சட்டம் ஒழுங்கிற்காக ‘இந்தியா டுடே’ பத்திரிகை விருது வழங்கியுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசின் ஒவ்வொரு துறையும் சிறந்த பணிகளுக்கான விருதுகளைப் பெற்ற மாநிலம் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது. இதன்மூலம், தமிழ்நாடு என்றால் விருது பெறும் முதன்மை மாநிலம் என்று அனைவரும் நினைக்கும் அளவுக்கு இந்திய அளவில் தமிழ்நாட்டின் நிலை உயர்ந்து நிற்கிறது என்பதை பெருமிதத்துடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்தும் சாதனைகள் பலரால் பாராட்டப்பட்டாலும், சிலர் ஒப்புக்கொள்ள மனமின்றி, நாம் வெற்றிகரமாக பயணிக்கும் பாதைகளில் தடைகளை ஏற்படுத்த முயன்று வருகிறார்கள். உலகத்திலே தாங்கள் தான் திறமைசாலிகள் என்று இவர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இவர்களின் திறமை எப்படிப்பட்டது என்பதை இங்கே ஒரு கதையின் மூலம் கூற விரும்புகிறேன்.

ஒரு நாட்டில் சிலர், அங்குள்ள மக்களை விட தாங்கள்தான் சிறந்த திறமைசாலிகள் என்று நினைத்துக்கொண்டிருந்தனர். ஒரு நாள் அவர்கள் சேர்ந்து வீடு ஒன்றினை கட்ட தீர்மானித்தனர்.

அந்த வீடு கட்டுவதற்கு மரத்தை தேர்ந்தெடுப்பதற்காக அவர்கள் காட்டிற்குள் செல்ல முடிவெடுத்தனர். அப்போது அவர்களில் அதிதிறமைசாலி என்று அழைக்கப்படும் ஒருவன், 'நான் குதிரை வண்டியில் போகிறேன், நீங்கள் பின்னால் வாருங்கள்', என்று கூறிச் சென்றான். அவன் செல்லும் பாதையில் குதிரை வண்டி ஒரு கல் மீது ஏறி, கவிழ்ந்தது. அவன் கையில் வைத்திருந்த கோடாரி சற்று தூரத்தில் விழுந்து, அவனும் ஒரு குழியில் விழுந்து விட்டான்.

குதிரை வண்டிக்கு பின்னால் வந்த மற்ற திறமைசாலிகள், வழியில் கோடாரி இருப்பதை பார்த்தனர். கோடாரியை எடுத்துச் சென்றவன் அவர்களில் சிறந்த திறமைசாலி என்பதால், கோடாரியை விட்டுச் சென்றதற்கு காரணம் இருக்கும் என்று நினைத்து,

அவர்களும் தங்கள் கைகளில் எடுத்துவந்த கோடாரிகளை அங்கேயே போட்டனர்.

காட்டிற்குள் சென்று மரத்தினை தேர்ந்தெடுத்தனர். ஆனால் அதனை வெட்டுவதற்கு அவர்களிடம் கோடாரி இல்லை. மரத்தை எப்படி வெட்டுவது என்று அந்த திறமைசாலிகள் சிந்தித்தனர்.

அப்பொழுது ஒரு திறமைசாலி சொன்னான், “நான் மரத்தின் மீது ஏறி கிளையை பிடித்துக்கொள்கிறேன். ஒருவன் எனது காலைப் பிடித்து தொங்க வேண்டும். அப்படியே நீண்ட சங்கிலி போல ஒருவர் காலை மற்றொருவர் பிடித்து தொங்கும்போது பாரம் தாளாமல் கிளை ஒடிந்து கீழே விழும்” என்றான். இதனை ஏற்றுக்கொண்ட மற்ற திறமைசாலிகளும் அப்படியே தொங்கினர். கிளையை பற்றிக் கொண்டிருந்த திறமைசாலி சொன்னான், “நான் இன்னும் பலமாக பற்றிக் கொள்கிறேன். அப்போது கிளை ஒடிந்து விழும்” என்று கூறிக்கொண்டே கையை அசைத்தான். அப்போது அவனது பிடி நழுவ, அனைவரும் கீழே விழுந்தனர். ஆனால் மரக் கிளையோ முறியவில்லை.

மரத்தை வெட்ட கோடாரிதான் முக்கியம் என்பதை நினைவில் கொள்ளாமல், அதனை வழியில் போட்டுவிட்டு, தேவையில்லாத யோசனைகளை செய்யும் இவர்களைப் போன்று, மக்களின் ஆதரவு என்ற கோடாரியை தேர்தல் நடத்தும் நேரத்தில் பயன்படுத்தாமல் வழக்கு தொடுத்து கால விரயம் செய்தவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியும். மக்களின் பேராதரவு என்ற கோடாரியை வைத்துக்கொண்டுள்ள உண்மையான திறமைசாலிகள் யார் என்பதும் மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்தப் பொருட்காட்சியில் நேர்த்தியாக அரங்கங்களை அமைத்த அரசுத் துறை நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், மத்திய, பிற மாநிலத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய நெகிழி பொருட்களை மாண்புமிகு அம்மாவின் அரசுதான் முதன் முதலில் தடை செய்தது. இதற்கு பொது மக்களாகிய நீங்கள் அளித்து வரும் ஆதரவு எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கின்றது.

இந்தப் பொருட்காட்சியில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழி பொருட்களை அறவே ஒதுக்கியும், அரங்கங்களை சுத்தமாக வைக்கவும், பொதுமக்களாகிய உங்களின் ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இனிய விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு விடை பெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்,*
22.12.2019 அன்று 46ஆவது இந்திய சுற்றுலா மற்றும்
தொழில் பொருட்காட்சி 2019–2020ஐ
தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

தமிழ்நாடு அகில இந்திய குடிமைப்பணி மற்றும் மத்தியப் பணி அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டி துவக்கம்

இந்த காலைப் பொழுதில் சிறப்பான நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே,

மரியாதைக்குரிய தலைமைச்செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., அவர்களே,

காவல்துறை தலைமைஇயக்குநர் மரியாதைக்குரிய திரு.திரிபாதி, இ.கா.ப., அவர்களே,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் மற்றும் உறுப்பினர் செயலர் திரு.ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., அவர்களே,

மற்றும் நிகழ்ச்சியில் பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் எம்.பி. அவர்களே, ஐ.ஏ.எஸ்., மற்றும் ஐ.பி.எஸ்., அந்தஸ்து உள்ள உயர் அதிகாரிகளே, மாணவ, மாணவிகளே,

இந்த நிகழ்ச்சியை கண்டு களிப்பதற்கு வருகை தந்து, அவர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் அளிக்கும் வகையில், விழாவிலே பங்கு பெற்றிருக்கின்ற அனைவருக்கும், ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கும், இரண்டு அணிகளுக்கு முதன்மை வகிக்கின்ற கேப்டன்களுக்கும், இந்த விளையாட்டிலே கலந்து கொண்டிருக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கும், என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டு என்பது உடல் ஆரோக்கியத்தையும், ஒரு கட்டுக்கோப்பான உடலையும் வளர்த்துக் கொள்வதற்கு மிக முக்கியம். அதுவும், உயர் அதிகாரிகளுக்கு பல்வேறு பணிச் சுமைகள் இருக்கிறது. அந்த பணிச்சுமைகள் எல்லாம் குறைய வேண்டுமென்று சொன்னால், விளையாட்டிலே நீங்கள் ஆர்வம் கொண்டு விளையாடுகின்றபொழுது, மனதில் இருக்கின்ற அழுத்தம் குறையும், மகிழ்ச்சி கூடும், உங்களது பணி சிறக்கும். எனவே, அதற்கு மிகமிக முக்கியம் விளையாட்டு. மாணவ, மாணவிகள்தான் விளையாட வேண்டும் என்பது கிடையாது. அது எந்த வயதானாலும் விளையாடலாம். விளையாடுவதற்கு உடல் ஆரோக்கியமும், உடல் வலிமையும் வேண்டும். ஆகவே, அந்த உடல் வலிமையையும், ஆரோக்கியத்தையும், கட்டுக்கோப்பான உடலையும் கொண்டு நேர்த்தியான ஒரு வாழ்க்கை வாழ்வதற்கு அவசியம் விளையாட்டு. அந்த விளையாட்டை இங்கே இருக்கின்ற உயர்அதிகாரிகள் மூலமாக இன்றைக்கு துவக்கியிருக்கின்றீர்கள். உங்கள் மூலமாக, நாட்டில் இருக்கின்ற இளைஞர்களும், பொதுமக்களும் பார்த்து, தாங்களும்

விளையாடி உடல் ஆரோக்கியத்தை பேண வேண்டும், மன அழுத்தத்தை குறைக்க வேண்டும், மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்து, அகில இந்திய குடிமைப்பணி மற்றும் மத்திய பணி அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டியை துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
04.01.2020 *அன்று சென்னை, காமராஜர் சாலையில் உள்ள*
மெரினா கிரிக்கெட் மைதானத்தில், தமிழ்நாடு அகில இந்திய குடிமைப்பணி
மற்றும் மத்தியப் பணி அலுவலர்களுக்கான
விளையாட்டுப் போட்டியினை துவக்கிவைத்து ஆற்றிய உரை.

தென் இந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரால் நடத்தப்படும் புத்தகக் காட்சிக்கு அரசு சார்பில் ரூ.75 இலட்சம் நிதிஉதவி

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரால் நடத்தப்படும் **43**வது சென்னை புத்தகக் காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

படைப்பாளர்களும், படிப்பாளர்களும் சூழ்ந்திருக்கின்ற அறிவுசார்ந்த இந்த இனிய விழாவிற்கு தலைமையேற்றுள்ள பத்மஸ்ரீ டாக்டர் நல்லி குப்புசாமி பெரியவர் ஐயா அவர்களே!

சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டுள்ள மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே!

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா அவர்களே!

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்பண்பாடுத் துறை அமைச்சர் திரு.கே.பாண்டியராஜன் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர், முன்னாள் அமைச்சர் திருமதி பா.வளர்மதி அவர்களே!

சிறப்புரை ஆற்றவிருக்கின்ற முன்னாள் கல்வி அமைச்சர் முனைவர் வைகைச் செல்வன் அவர்களே!

வரவேற்புரையாற்றிய "பபாசி" தலைவர், திரு.ஆர்.எஸ்.சண்முகம் அவர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.விருகை ரவி அவர்களே! திரு.கே.வி.ராமலிங்கம் அவர்களே! திரு.தென்னரசு அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே! முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களே!

கழகத்தினுடைய முன்னோடி பொறுப்பாளர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! விருது பெறும் பதிப்பாளர்களே! எழுத்தாளர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! நன்றியுரை ஆற்றவுள்ள "பபாசி" செயலாளர் திரு.எஸ்.கே.முருகன் அவர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டுதோறும், பொங்கல் திருநாளையொட்டி, மக்களின் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் சுற்றுலாப் பொருட்காட்சியும், அறிவுக்கு விருந்தளிக்கும் புத்தகக் காட்சியும் சென்னையில் ஒருசேர நடைபெறுவது ஒரு சிறப்பு அம்சமாகும்.

திரு.மாத்யூ அவர்களின் முயற்சியால், சில பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கம் தொடங்கப்பட்டது. புத்தக ஆர்வலர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அதிகமாக நூல்களை வெளியிடுவதற்காகவும், புத்தக வாசிப்பை பரவலாக்குவதற்காகவும், புத்தகங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் 24.08.1976 இல் ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தக் கூட்டமைப்பு, முதன்முதலில் 1977ஆம் ஆண்டு சென்னை புத்தகத் திருவிழாவை நடத்தியது. இந்தப் புத்தகக்காட்சி பெற்ற வரவேற்பினைத் தொடர்ந்து, இந்திய மொழிகளில் குறிப்பாக தமிழ் மற்றும் இதர தென்மொழிகளில் நூல்களை வெளியிடும் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இந்தக் கூட்டமைப்பில் சேர்ந்தனர் என்பதை அறிவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் புத்தகத்திற்கு என்று ஒரு பொருட்காட்சி தனியாக ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இது பெருமைப்படத்தக்க ஒரு விஷயமாகும். இந்தப் புத்தகக் காட்சி சென்னையில் மட்டுமல்லாமல், ஆண்டுதோறும், மதுரை மற்றும் கோவை ஆகிய இடங்களில் இந்த அமைப்பால் நடத்தப்பட்டு வருவது என்பது உண்மையிலேயே பாராட்டக்குரியது.

மக்களின் வாசிக்கும் பழக்கத்தை பரவலாக்கும் இந்தத் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் 43ஆவது புத்தகக் காட்சியை தொடங்கி வைப்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இந்தப் புத்தகக் காட்சி அனைத்து வயதினரும் கொண்டாடும் ஆனந்தத் திருவிழா. இந்தப் புத்தகக் காட்சி இன்று முதல் இம்மாதம் 21ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்தப் புத்தகக் காட்சியில் இடம் பெற்றுள்ள சிறப்பு அம்சங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ✶ கீழடி அகழ்வாராய்ச்சி பற்றிய தமிழக தொல்லியல் துறையின் சிறப்பு அரங்கம் 3,000 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ளது. கீழடி அகழ்வாராய்ச்சி அமைக்கப்பட்ட அரங்கு நம்முடைய மூதாதையர்கள் என்னென்ன பயன்படுத்தினார்கள், கிட்டத்தட்ட 2,500 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி வாழ்ந்தார்கள் என்ற வாழ்க்கையை நாம் எண்ணிப் பார்க்கின்ற அளவிற்கு, அப்பொழுதே நம்முடைய நாகரிகம் இன்றைய மக்கள் புகழ்கின்ற அளவிற்கு அந்தக் காலக்கட்டத்திலே இருக்கிறது என்று சொன்னால் நம்முடைய பெருமை, என் தமிழகத்தினுடைய பெருமை எந்தளவிற்கு இருக்கிறது என்பதை உணர்த்துகின்ற அளவிற்கு இந்தக் கீழடி அகழ்வாராய்ச்சி அப்படியே தத்ரூபமாக அரங்குகளை அமைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ✶ திருவள்ளுவர் மணற்சிற்பம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அப்படியே தத்ரூபமாக திருவள்ளுவரை உரித்து வைத்த மாதிரி மணலில் அந்தச் சிற்பக் கலையைச் செய்தவருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ✶ 15 இலட்சம் தலைப்புகளில், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடும் இலக்கியம், கலை, அறிவியல், தொழில் நுட்பம், வரலாறு, பொது அறிவு, விளையாட்டு, உணவு, உடல் நலம்

உள்ளிட்ட பல பிரிவுகளுக்கான புத்தகங்கள் இந்தக் காட்சியில் இடம்பெற உள்ளது.

- ✶ 10,000 மாணவர்கள் பங்குபெறும் "சென்னை வாசிக்கிறது" என்ற ஒரு புதிய நிகழ்வு இந்த ஆண்டு நடைபெற உள்ளது.
- ✶ இந்தப் புத்தகக் காட்சியில், அறிவு சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளும், மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி போன்ற பல்வேறு நிகழ்வுகளும் நடைபெறுகின்றன என்பதை அறிவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.
- ✶ உலகப் பொதுமறையான திருக்குறள், பல்வேறு உலக மொழிகளில் வெளிவந்துள்ள நூல்களின் முகப்பு அட்டவணையை காட்சிப்படுத்துதல் என பல்வேறு புதுமையான நிகழ்ச்சிகள் இந்தப் புத்தகக் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

"மனிதனின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்" என்றார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். புத்தகம் என்பது மனிதர்களிடையே வாய் திறந்து பேசாமல் பேசுகின்ற நண்பன். அதேபோல், நம்மை ஒருபோதும் ஏமாற்றாத சிறந்த நண்பன். மனிதனுக்கும், இந்த உலகத்துக்கும் இடையில் பிணைப்பை ஏற்படுத்துவது புத்தகங்கள் மட்டுமே. புத்தகம்

என்பது ஒரு அலங்காரப் பொருள் அல்ல. அது நம்மை நேர்மையான வழியில் வாழ்வதற்கு வழி நடத்துகின்ற தோழன். புத்தகங்கள் இல்லையெனில், மனிதகுலம் இத்தகைய வளர்ச்சியைக் கண்டிருக்க முடியாது. உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ, அதுபோலவே மனப் பயிற்சிக்கு புத்தக வாசிப்பு அடிப்படையானது. புத்தகத்தினை தனது உயிர் நண்பனாக ஏற்றுக் கொண்டவர்கள், புகழின் உச்சியில் அமர்ந்திருக்கிறார்கள். பலர் சாதனையாளர்களாகவும் மாறியிருக்கிறார்கள்.

‘அடிமைகளின் சூரியன்’ என போற்றப்பட்ட ஆபிரகாம் லிங்கன், புத்தகங்களைப் படித்தே உயர்ந்தவர். அத்தகைய பெருமைக்குரிய புத்தகக் காட்சி இன்றைக்கு திறக்கப்படுகிறது. ஜார்ஜ் வாஷிங்டன் வரலாறு என்ற புத்தகத்தை இரவல் வாங்கிப் படித்தவர், பிற்காலத்தில் அமெரிக்கா நாட்டின் அதிபராக உயர்ந்து சரித்திரம் படைத்திருக்கிறார்.

இலண்டன் நூலகத்தில், இருபது ஆண்டுகள், பல அரிய நூல்களை படித்து ஆய்வு செய்த காரல் மார்க்ஸ் அவர்கள் உலகின் பொதுவுடைமை தந்தையாக உயர்ந்தார்.

“காஞ்சிபுரத்தில் இருந்து, முதுகலை பட்டதாரியான ஓர் இளைஞன், சென்னை நோக்கிச் சென்றான். முடிவில் தமிழ்நாட்டின் முதல்வராக திரும்பினார்” என்று பேரறிஞர் அண்ணாவை புகழ்வார்கள். அவர் சென்னை கன்னிமாரா நூலகத்தில் உள்ள பெரும்பாலான புத்தகங்களை படித்தவர். நூலகம் திறக்கும்போது உள்ளே நுழைபவர், இரவில் அது மூடப்படும்போது தான் வெளியே வருவாராம்.

மறைந்த குடியரசுத் தலைவர் திரு.அப்துல் கலாம் அவர்களின் பதவிக் காலம் முடிந்தபின், அவர் சொந்த இடத்திற்கு எடுத்துச் சென்றது 1,000க்கும் மேற்பட்ட புத்தகங்களை மட்டும்தான். குடியரசுத் தலைவராக அவர் இருந்தபோதும், அவர் நேசித்ததும், வாசித்ததும் புத்தகங்கள்தான்.

நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள், தனது வாழ்க்கையை திருப்பிப் போட்ட புத்தகம் என, ஜான் ரஸ்கின் அவர்கள் எழுதிய Unto this last எனும் புத்தகத்தை குறிப்பிட்டதோடு, ‘‘அந்தப் புத்தகத்தை ஒரு பயணத்தின்போது படித்து முடித்தேன். அதன் தாக்கத்தால் அன்று இரவு முழுவதும் தன்னால் தூங்க முடியவில்லை,’’ என குறிப்பிட்டுள்ளார்.

‘‘விமானத்தில் போகாமல் பம்பாய்க்கு காரில் மூன்று நாள் பயணம் செய்தது ஏன் ?’’ என வினவியபோது ‘‘பத்து புத்தகங்கள் படிக்க வேண்டியிருந்தது,’’ என பதிலளித்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

‘‘எங்கே தங்க விரும்புகிறீர்கள் ?’’ என்று இலண்டன் தோழர்கள் கேட்டபோது, ‘‘எது நூலகத்திற்கு அருகில் உள்ளது,’’ என கேட்டார் பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள்.

தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது, அழுது புலம்பாமல், மன்னிப்புக் கடிதம் எழுதி உயிர்ப் பிச்சை கேட்காமல் தான் தூக்கிலிடுவதற்கு முன்பு வரை புத்தகத்தை படித்துக் கொண்டு இருந்தவர், மாவீரன் பகத்சிங் அவர்கள்.

தான் சிறையில் இருந்தபொழுது, ‘‘தமக்கு வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம், சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் தனக்கு அனுமதிக்க வேண்டும்’’ எனக் கேட்டவர் நெல்சன் மண்டேலா அவர்கள்.

‘‘தமிழ் இலக்கியங்களை—நூல்களை—ஒரு மாணவன் நூறு ஆண்டுகாலம் படித்தாலும், படித்து முடிக்க முடியாது. அந்த அளவிற்கு தமிழ் இலக்கியம் நம்மிடம் நிறைந்திருக்கிறது,’’ என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

நமது புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தனது இல்லத்திலேயே நூலகம் வைத்திருந்தார். அதில் 1,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள் இடம் பெற்றிருந்தன. அதனால்தான் பல்வேறு

மொழிகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் புலமைமிக்கவராக திகழ்ந்தார்கள். அதிகளவில் அவர் நூல்களை படித்ததன் காரணமாக, அவரால் சிந்தித்து உருவாக்கப்பட்டது தான் “தொலைநோக்குப் பார்வை 2023” என்ற திட்டமாகும். இதன் மூலம் அவர் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் சென்றார் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும்.

மக்களிடையே படிக்கும் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் நூலகத் துறையில், மாண்புமிகு அம்மாவின் அரசின் சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ✶ தமிழ்நாடு அரசினால் தற்போது 4,634 நூலகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மக்களிடம் புத்தகம் படிக்கும் பழக்கத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு நூலகர் தினம், நூலக தினம், தேசிய நூலக வார விழா, உலக புத்தக தினம் ஆகிய நிகழ்ச்சிகள் வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றன.
- ✶ மாநிலம் முழுவதும் உள்ள பொது நூலகங்களின் பயன்பாட்டிற்கு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ✶ மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2004ஆம் ஆண்டு கன்னிமாரா பொது நூலகத்தில் ஒரு நிரந்தர புத்தகக் கண்காட்சியை அமைத்தார். அக்கண்காட்சி கடந்த 16 ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வருகிறது.
- ✶ சிறந்த செயல்திறனைக் கொண்ட நூலகர்களை கௌரவிக்க ஆண்டுதோறும், எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது, நூலகங்கள் சிறப்பாக பராமரிக்கப்படுவதை ஊக்குவிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, நூலகங்களுக்கு கேடயம் வழங்குதல், நூலக ஆர்வலர் விருது ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

- ✶ மதுரை உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதி உதவியுடன் 5 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் நூல்கள் அடங்கிய ஒரு மாபெரும் நூலகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ✶ ஒரு இலட்சம் அரிய வகை உலகத் தமிழ் நூல்கள் சேகரிக்கப்பட்டு, இலங்கையில் உள்ள தமிழர்கள் பயன்பெறும் வகையில் யாழ்ப்பாணம் நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

- ✶ போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு தேவையான புத்தகங்கள், பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த உலக அளவிலான பத்திரிகைகள், இதழ்களை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகளுடன் அனைத்து மாவட்ட மைய நூலகங்களும், திறன்மிகு நூலகங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

- ✶ நூலக இயக்ககத்தின் மேம்பட்ட செயல்பாட்டிற்காக இந்த ஆண்டு 125 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு நூலகத் துறையில் செயல்படுத்தி வருகிறது.

திறன்பேசிகளில் மின்னூலாக வாசித்தல், ஒலிப் புத்தகம், காணொலி வழிக் கற்றல் என்ற நிலையை நாம் எட்டியிருந்தாலும், வீட்டுக்கொரு நூலகம் அமைக்க வேண்டும் என்ற சிந்தனை நம் மனதில் உருவாக வேண்டும். மனிதன் மிகச்சிறந்த வாய்ப்புகளை பெற வேண்டுமெனில், அவனது தனிமனித கோட்பாடுகள் கண்ணியமானவையாக உருவாக வேண்டுமெனில், புத்தக வாசிப்பை அனுதின சுவாசமாக மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

“தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.”

அதாவது தம்மை விட, எல்லாவற்றிலும் சிறந்த பெரியவர்களை துணையாய் கொண்டு அவர் வழி நடப்பது, வலிமை அனைத்திலும் பெரிய வலிமை ஆகும் என்றார் வள்ளுவர் பெருந்தகை. அதுபோல், புத்தகங்களின் துணை கொண்டு, அதில் கூறியுள்ள நெறிகளின் வழிநடப்பதே மக்களுக்கு, குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்கு சிறந்த வலிமையையும், எதிர்காலத்தையும் தரும்.

நாட்டிலுள்ள நூலகங்கள் மற்றும் அடிக்கடி நடைபெறும் புத்தகக் காட்சிகளுக்குச் சென்று புத்தகத் துறையில் ஏற்பட்டுள்ள பரிணாம வளர்ச்சியை அறிந்து கொண்டும், அன்றாடம் வெளியாகும் புத்தகங்களைவாங்கிப்படித்தும்தங்களதுதிறமையையும்,அறிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மக்களை, குறிப்பாக இளைய சமுதாயத்தினரை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் தனிநபர் மட்டுமல்லாமல், நாட்டின் சிந்தனை திறனும் உயர்வு பெறும்.

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் நடத்தும் புத்தகக் காட்சிக்கு ஆண்டுதோறும் மக்களின் வருகை உயர்ந்து வருவது, மக்களிடையே புத்தகம் வாசிக்கும் பழக்கம் அதிகரித்திருப்பதையே காட்டுகிறது. இந்த வருடம் நடைபெறும் 43ஆவது புத்தகக் காட்சியிலும் மக்கள் வருகை அதிகரித்து, இந்தப் புத்தகக் காட்சி நன்முறையில் நடைபெற்று, வெற்றி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விழாவில் அறிஞர் பெருமக்களை சிறப்பிக்கும் வகையில், அவர்கள் ஆற்றிய பணிகளுக்காக இன்று விருதுகள் வழங்கி சிறப்பித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். விருதாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 43ஆவது புத்தகக் காட்சியை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்திரை நான் பாராட்டி, அதே வேளையில் உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் மற்றும் இனிய பொங்கல் வாழ்த்துக்களையும் கூறுகிறேன். அதேபோல, இங்கே பேசுகின்ற இந்த நிகழ்ச்சியினுடைய செயலாளர் திரு.எஸ்.கே.முருகன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்தப் புத்தகக் கண்காட்சி சீரும், சிறப்போடும் இருப்பதற்கு அரசினுடைய நிதி தேவை என்று சொன்னார். அடுத்த ஆண்டிலிருந்து இந்த புத்தகக் கண்காட்சிக்கு அரசு சார்பாக 75 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்து, இந்தப் புத்தகங்கள் மூலமாக அறிவுபூர்வமான நிலையை உருவாக்க அற்புதமான களஞ்சியமாக திகழ்கின்ற இந்தப் புத்தகத் திருவிழாவில் நான் கலந்துகொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்,*
***09.01.2020** அன்று தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும்*
*பதிப்பாளர் சங்கத்தினரால் நடத்தப்படும் **43**ஆவது சென்னை*
புத்தகக் காட்சியை துவக்கிவைத்து ஆற்றிய உரை.

போலியோ நோயை முற்றிலும் ஒழிக்க அனைவரும் கைகோர்த்து செயல்படுவோம்!

தமிழ்நாட்டில் இன்று தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமை துவக்கி வைக்கும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று இருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் தலைமைச்செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப. அவர்களே,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்களே,

சுகாதாரத்துறை உயர் அதிகாரிகளே,

நிகழ்ச்சியிலே பங்குபெற்று இருக்கின்ற ரோட்டரி சங்கத்தின் நிருவாகிகளே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று தங்களுடைய குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்குவதற்காக வந்திருக்கின்ற அத்தனை தாய்மார்களுக்கும், வருகை தந்திருக்கின்ற அனைவருக்கும்,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் ஆண்டுக்கு இரண்டு முறை போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வந்தது. இன்றையதினம், தமிழகத்தில் போலியோ நோயால் பாதிக்கப்படுகின்ற குழந்தைகள் முழுவதுமாக இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினாலும், போலியோ நோய் வருவதற்கு முன்பு தடுக்க வேண்டும் என்ற காரணத்தினாலும், ஆண்டுக்கு ஒரு முறை போலியோ சொட்டு மருந்து குழந்தைகளுக்கு வழங்கி கொண்டு இருக்கின்றோம். குறித்த காலத்திலே வழங்கப்படுகின்ற காரணத்தினாலே, இன்றைக்கு தமிழகத்திலே 16 ஆண்டுகளாக போலியோ நோய் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து இருந்து கொண்டு இருக்கிறது.

இன்றையதினம் சுமார் 2 இலட்சம் பணியாளர்கள் இந்தப் பணியிலே ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். சுமார் 43,051 மையங்கள் இன்றைக்கு இந்த சொட்டு மருந்து வழங்குகின்ற இடமாக தேர்வு செய்யப்பட்டு அந்த மையங்களில் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. அதோடு சுமார் 70 இலட்சம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல, சுமார் 1,000 நடமாடும் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. தொலைதூரம் மற்றும் எளிதில் செல்ல முடியாத இடங்களுக்கு சுகாதாரத்துறையை சேர்ந்த அதிகாரிகள் நேரில்

சென்று அங்கிருக்கின்ற குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கிடவும், இந்த நோயை முற்றிலும் தடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் அரசு இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பேருந்து நிலையம், ரயில் நிலையம், விமான நிலையம் போன்ற பகுதிகளிலும் இந்த சொட்டு மருந்து வழங்குவதற்காக 1,652 பயணவழி மையங்கள் (Transit Booths) அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலே அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

போலியோ சொட்டு மருந்து முகாம் தமிழ்நாட்டில் சிறப்பாக நடைபெறுவதால் இன்றைக்கு தமிழ்நாடு போலியோ நோய் இல்லாத மாநிலமாக திகழ்ந்து கொண்டு இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்காங்கே இருக்கின்ற மையங்களுக்கு அழைத்துச் சென்று போலியோ சொட்டு மருந்தை தங்கள் குழந்தைகளுக்கு கிடைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, பூமியில் இருந்து இந்த போலியோ நோயை முற்றிலும் ஒழிக்க அனைவரும் கைகோர்த்து செயல்படுவோம் என உறுதியேற்போம்.

போலியோ நோய் குழந்தைகளுக்கு ஏற்பட்டுவிட்டால் அது வாழ்நாள் முழுவதும் அந்தக் குழந்தை கஷ்டப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அரசாங்கம் இதற்கு ஒரு நல்ல ஏற்பாட்டை இன்றைக்கு செய்திருக்கின்றது. இந்த நல்ல ஏற்பாட்டை பெற்றோர்கள் பயன்படுத்தி தங்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தை வழங்க வேண்டும் என்று அன்போடு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சி சீரோடும், சிறப்போடும் நடத்துவதற்கு உறுதுணையாக இருந்த சுகாதாரத் துறைக்கும், இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒளிபரப்புகின்ற ஊடகம் மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்ற அனைவருக்கும் உளமார என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***19.01.2020** அன்று முகாம் அலுவலகத்தில்,*
குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கி,
தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமை
தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

உலக மக்கள் அனைவருக்கும் பொருந்துவதால், திருக்குறள் உலகப் பொதுமறை என அழைக்கப்படுகிறது!

பசியில்லா தமிழ்நாடு கண்ட பசுமை நாயகி!

காவேரியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வி!

அறிவுப் பசியை போக்கிய கலைமகள்!

பெண்களை பொருளாதாரத்தில் தலைநிமிரச் செய்த திருமகள்!

அம்மா பிறந்ததால் தமிழ்நாடு மகிழ்ந்தது!

அம்மா ஆண்டதால் தமிழ்நாடு வளர்ந்தது!

என்று கூறி, எங்கள் அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு”

என மகாகவி பாரதியாராலும்,

“வள்ளுவனை பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே”

என பாவேந்தர் பாரதிதாசன் அவர்களாலும் புகழ்ந்து பாடப்பட்ட, தெய்வப் புலவர் திருவள்ளுவரின் பெருமையை உலகிற்கு பறைசாற்றும் வகையில், தமிழ்நாடு அரசால் கொண்டாடப்படும் “திருவள்ளுவர் திருநாள்” மற்றும் “தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா” நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்றுள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு மீன் வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்களே!

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களே!

மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின் அவர்களே!

நிகழ்ச்சியிலே முன்னிலை வகிக்கும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க.பாண்டியராஜன் அவர்களே!

மற்றும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே,

திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களே,

திரு. செல்லூர் கே. ராஜு அவர்களே,

திரு. பி. தங்கமணி அவர்களே,

திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களே,

திரு. கே.பி. அன்பழகன் அவர்களே,

டாக்டர் வி. சரோஜா அவர்களே,

திரு. இரா. காமராஜ் அவர்களே,

திரு. உடுமலை கே. இராதாகிருஷ்ணன் அவர்களே,

டாகடர் சி. விஜயபாஸ்கர் அவர்களே,

திரு. இரா. துரைக்கண்ணு அவர்களே,

திரு. வெல்லமண்டி என். நடராஜன் அவர்களே,

திரு. கே.சி. வீரமணி அவர்களே,

டாக்டர் நிலோபர் கபில் அவர்களே,

திருமதி வி.எம். ராஜலட்சுமி அவர்களே,

திரு. ஜி. பாஸ்கரன் அவர்களே,

திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்களே,

திருமதி எஸ். வளர்மதி அவர்களே,

அரசு தலைமைக் கொறடா திரு. எஸ். ராஜேந்திரன் அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா. வளர்மதி அவர்களே,

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

மரியாதைக்குரிய முன்னாள் மக்களவை துணைத் தலைவர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்களே,

முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே, மரியாதைக்குரிய திரைப்பட நடிகர் திரு. பிரபு அவர்களே,

மற்றும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற கலையுலக பெருமக்களே,

விருதுகளை பெற இருக்கின்ற விருதாளர்களே,

வெளிநாட்டிலிருந்து இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று இருக்கின்ற தமிழ் சொந்தங்களே,

வரவேற்புரை ஆற்றிய தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன் அவர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிஞர் பெருமக்கள் ஆற்றிய அரும் பணிகளுக்காக இன்று விருதுகள் பெறுகிறார்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துகளையும்,

மனமார்ந்த பாராட்டுகளையும் இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உயிரினங்களில் மொழி பேசும்வாய்ப்பு பெற்றது மனிதகுலம் மட்டும் தான். ஒவ்வொருவரது உள்ளத்திலும் ஊற்றெடுக்கும் எண்ணங்களை பிறரிடம் வெளிப்படுத்தி மொழிவதால் 'மொழி' என்னும் பெயர் வழங்கப்பெற்றது. உலகெங்கிலும் பரவியுள்ள மனிதகுலம், சுமார் ஏழாயிரம் மொழிகள் பேசுவதாக, மொழி ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இவற்றில் எழுத்து வடிவம் பெற்ற மொழிகள் குறைந்த அளவிலேயே உள்ளன.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்றார் மகாகவி பாரதியார் அவர்கள்.

"தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்றார் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

குமரி கண்டத்து நெடுவரலாறும், தொன்மையும், உலகின் மூத்த மொழியாகத் தமிழ் மொழியை ஆணித்தரமாக நிலைநிறுத்துகின்றன. இதனையே மொழி ஞாயிறு தேவநேயப் பாவணர் எழுதிய "ஞாலம் முதல் மாந்தன் கொள்கை' என்ற வரலாற்று இயல் ஆய்வுக் கட்டுரை வலியுறுத்துகிறது. கிரேக்கம், ஹீப்ரு, இலத்தீன் உள்ளிட்ட மொழிகள் பழமையானது என்றாலும், நிலையான புகழும், எப்பொழுது தோன்றியது என்று கணிக்க முடியாத அளவிற்கு தொன்மையான மூத்த மொழியாகவும் விளங்குவது, நமது தாய்த்திரு மொழியான தமிழ் மொழி தான்.

"இவள் என்று பிறந்தவள் என்று உணராத
இயல்பினளாம் எங்கள் தாய்"

என்று மகாகவி பாரதியார் தமிழ் மொழியின் தொன்மையை புகழ்ந்து பாடுகிறார்.

“தொன்மை, முன்மை, எளிமை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை” என 16 பண்புகளைக் கொண்ட மொழி நமது தமிழ் மொழியாகும் என்றார் தேவநேயப் பாவாணர் அவர்கள்.

தமிழ்மொழிக்கு எழுத்து, சொல், யாப்பு, அணி, பொருள், இலக்கணம் ஆகியன உண்டு. ஆகையால்தான் தமிழை ஐந்திலக்கணம் என்றனர். தமிழ் எழுத்துக்களின் ஒலிகள் மிக இயற்கையாகவும், எளிமையாகவும் அமைந்திருப்பதால் எவ்வித இடர்பாடுமின்றி வார்த்தைகளை ஒலிக்க இயலும். வேற்று மொழியில் இல்லாத அளவுக்கு தொல்காப்பியம் தொடங்கி பன்னூறு இலக்கிய இலக்கண நூல்கள் தமிழுக்கு வளம் சேர்க்கின்றன.

உலகிலுள்ள தொன்மையான மொழிகளில் ஏட்டளவிலும், பேச்சளவிலும் இன்றைக்கும் நிலைத்து வாழும் மொழி தமிழ் மொழி.

இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் மொழியின் தலை சிறந்த நூலான திருக்குறளை உலகுக்கு அருளியவர் தெய்வப் புலவர் என்று அனைவராலும் அழைக்கப்படும் திருவள்ளுவர். இன்று உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் திருக்குறளும் ஒன்று என்று சொன்னால் அது மிகையாகாது.

திருக்குறளில் வரும் பாடல்கள் அனைத்தும் “குறள் வெண்பா” வகையைச் சேர்ந்தவை. அக்காலத்தில் இவ்வகை வெண்பாக்களால் ஆன நூலும் இதுதான். குறள் வெண்பாக்களால் ஆனதால் ‘குறள்’ என்றும், அதன் உயர்வு கருதி “திரு” என்ற அடை மொழியையும் சேர்த்து, “திருக்குறள்” என்று பெயர் பெற்றது.

வாழ்வின் பயனை மக்கள் அடைவதற்கு வழிகாட்டிகளாக உலகின் பல்வேறு மொழிகளில் பல நூல்கள் உள்ளன. அவற்றில்

மூன்று நூல்கள், அதை இயற்றியவர்களின் அறிவுத் திறத்தையும், ஆராய்ச்சி நுணுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. முதலாவது, கௌதம புத்தருடைய நல்லுரைகளான 'திரிபீடங்கள்'. இரண்டாவது, புத்தருடைய காலத்துக்கு ஏறக்குறைய ஒத்த காலத்தில் சீனாவில் வாழ்ந்த கன்பூசியஸின் 'அனலெக்ட்ஸ்' என்னும் அறிவுரை நூல். மூன்றாவதாக, தமிழ்நாட்டில் வாழ்ந்த திருவள்ளுவரின் 'திருக்குறள்' ஆகும்.

'அறம், பொருள், இன்பம்' என்னும் முப்பொருளின் உண்மையை உலகுக்கு உணர்த்தும் ஒரு பொதுமறையாகவே திருக்குறள் போற்றப்படுகிறது. ஆறறிவு படைத்த மனிதன் வாழ வேண்டிய வாழ்க்கை நெறிகளை மிக அழகாக திருவள்ளுவர் இதில் வறையறை செய்துள்ளார். அவரவர் வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ற வகையில், இந்நூலில் அறநெறிகளை வகுத்துக் கூறியுள்ளார். உதாரணத்திற்கு, அறத்தை உணரத் தலைப்பட்டவர்களுக்கு இது ஒரு அறநூலாகவும், அறிவுத் திறனை வளர்க்க விரும்புவோர்க்கு ஒரு ஞான நூலாகவும், கவிச் சுவையை விரும்புவோர்க்கு ஒரு காவியமாகவும், வாழ்க்கை நெறியை விரும்புவோர்க்கு வாழ்க்கை வழிகாட்டி நூலாகவும் திகழ்கிறது.

ஈரடிகளில் உலகத் தத்துவங்களை சொன்னதால் இது "ஈரடி" நூல் என்றும், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டதால், இது "முப்பால்" என்றும் அழைக்கப்படுகிறது. உத்தரவேதம், பொய்யாமொழி, வாயுரை வாழ்த்து, தெய்வ நூல், பொது மறை, தமிழ் மறை, ஈரடி நூல், வான் மறை என்ற பல பெயர்களால் திருக்குறள் போற்றப்படுகிறது.

உலக மக்கள் அனைவருக்கும், எந்த காலத்திற்கும், பொருந்தும் வகையில் திருக்குறன் அமைந்துள்ளதால், இது உலகப் பொதுமறை என அழைக்கப்படுகிறது.

உலகப் பொதுமறையான திருக்குறள் மற்றும் அதனை உலகுக்கு அருளிய திருவள்ளுவரின் பெருமையை உலகறியச் செய்யவும்,

தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும், மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ❖ திருவள்ளுவரின் பெருமையினை உலகறியச் செய்யும் வகையில், ஆண்டுதோறும் தைத்திங்கள் 2ஆம் நாளை திருவள்ளுவர் தினமாக தமிழ்நாடு அரசு சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. அந்நாளில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், திருவுருவப் படத்திற்கு மலர் தூவியும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

- ❖ தமிழுக்குப் பெருமை சேர்த்திடும் வகையில், தம் வாழ்நாளில் தமிழ்ப் பணியாற்றி வருவதையே உயிர் மூச்சாகக் கொண்டுள்ள தமிழ் அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

- ❖ திருவள்ளுவர் பெயரில் திருவள்ளுவர் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

- ❖ திருக்குறளை கற்றுத் தெளிவதை விட, காட்சியில் கண்டால் எளிதில் மனதில் பதியும் என்பதால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி அரசு நிதி உதவியில் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் சென்னை, தரமணியில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. இதனை நாள்தோறும் மாணாக்கர்கள் மற்றும் வெளிநாட்டினர் கண்டு பயனடைந்து வருகின்றனர்.

- ❖ திருவள்ளுவர்கால எழுத்தில் மீண்டும் திருக்குறளைப் பார்த்தல் வேண்டும் என்ற அவாவை நிறைவேற்ற, திருக்குறளை வள்ளுவர் வாழ்ந்த கால வரிவடிவில் எழுதிட, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன் முயற்சியின் விளைவாக “திருவள்ளுவர் கால எழுத்தில் திருக்குறள்” என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் தமிழின் தொன்மையான வரிவடிவான தமிழியில் (தமிழ்–பிராமி) எழுதப்பட்டுள்ளது

என்பதை உலக மக்கள் அறிந்திடச் செய்தல் மட்டுமின்றி, காலத் தொன்மையையும் உலகிற்கு உணர்த்திட வழி செய்யும் இந்த நூல் 11.12.2018 அன்று என்னால் வெளியிடப்பட்டது.

❖ தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர், தமிழ் மூதாட்டி ஔவையார், கவிச்சக்கரவர்த்தி கம்பர், இளங்கோ அடிகளார், தமிழ் அறிஞர் ராபர்ட் கால்டுவெல், தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலை அடிகளார் மற்றும் தமிழ்த் தென்றல் திரு.வி.கல்யாணசுந்தரனார் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் மாலை அணிவித்தும், அவர்தம் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும், அவர்தம் தமிழ்த் தொண்டினையும், படைப்பாற்றல்களையும் மனதில் தாங்கி வணக்கம் செலுத்தும் அற்புத நிகழ்வு தொடர்ந்து அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

❖ பேறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டையும், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையும் நடத்தி தமிழுக்கு பெருமை சேர்த்தார்கள்.

❖ தஞ்சாவூரில் தமிழ்ப்பல்கலைக்கழகம் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால் 1981 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

❖ தமிழ் மொழியின் வளம் பற்றி உலக மக்கள் அறிவதற்கு ஏதுவாக, திருக்குறள் தவிர மீதமுள்ள பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை உலக மொழிகளான பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளிலும், இந்திய மொழிகளான இந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, 19.12.2019 அன்று என்னால் வெளியிடப்பட்டுள்ளது.

❖ தமிழ் மொழிக்கு பெருமை சேர்த்த தொல்காப்பியரின் சிலை 10.03.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- ❖ தமிழ் மொழிக்கு பெருமை சேர்ப்பது அதன் சொல் வளமே ஆகும். தமிழ் மொழியின் சொல் வளத்தை காப்பது, சொல் வளத்தை பெருக்குவது, பிற மொழி கலப்பைத் தவிர்க்க துணை நிற்பது போன்ற நோக்கங்களின் அடிப்படையில் ‘சொற்குவை’ என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என்று என்னால் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழில் உள்ள அனைத்துச் சொற்களையும் ஒரே தளத்தில் நிரல்படுத்தி வழங்குவதற்காக பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர்களின் ஆலோசனைகளைப் பெற்று சொற்குவை திட்டம் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க தமிழ்நாடு அரசின் சார்பில் 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ அமெரிக்க நாட்டின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக 1 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ மேலும், பல்வேறு பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- ❖ கழக ஆட்சிப் பொறுப்பேற்கும் போதெல்லாம், தமிழ் அறிஞர்களை பெருமைப்படுத்தும் விதமாக, அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விருதுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி வந்துள்ளது. அந்த வகையில், தமிழ் வளர்ச்சித் துறையில், 5ஆக இருந்த விருதாளர்களின் எண்ணிக்கை, தற்போது 72ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இது போன்று எண்ணற்ற சாதனைகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று விருதுகள் பெற்ற தமிழ் அறிஞர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பல தமிழ் அறிஞர்கள் தொடர்ந்து தமிழ்ப் பணியாற்றி அவர்களும் விருதுகள் பெற வேண்டும் என வாழ்த்துகிறேன். இதைக் கூறும் போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

சோலையூர் என்ற ஒரு ஊரில் மழை பெய்யாமல், மக்கள் பசியாலும், பட்டினியாலும் வாடி வந்தார்கள். அந்த நிலையில், ஊர் பெரியவர்கள் ஒன்று கூடி, அந்த ஊரில் உள்ள ஒரு செல்வந்தரிடம் வந்தார்கள். அவரிடம், "நம் ஊர் பசி, பஞ்சத்தில் சிக்கித் தவிப்பது தங்களுக்குத் தெரியும். பெரியவர்கள் பசியை பொறுத்துக் கொள்வார்கள். ஆனால், சிறுவர்கள் என்ன செய்வார்கள், பாவம் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்" என்று கூறினார்கள். அதற்கு, அந்த செல்வந்தர், "கண்டிப்பாக உதவி செய்கிறேன். நம் ஊரில் எத்தனை சிறுவர், சிறுமியர் உள்ளனர்" எனக் கேட்டார். அப்போது ஊர் பெரியவர் ஒருவர், "40 சிறுவர், சிறுமியர் உள்ளனர்" என்றார்.

உடனே செல்வந்தர், "அவர்களை நாள்தோறும் காலையில் என் வீட்டிற்கு வரச் சொல்லுங்கள், ஒரு கூடையில் 40 ரொட்டிகளை வைக்கச் சொல்கிறேன். அவர்கள் ஆளுக்கு ஒன்று எடுத்து பசி ஆறட்டும்" என்றார். அவ்வாறே தினமும் சிறுவர்கள் வந்து ஆளுக்கு ஒரு ரொட்டி எடுத்து தங்கள் பசியை போக்கிக் கொண்டனர். அவ்வாறு ரொட்டி எடுக்கும் போது பெரிய ரொட்டித் துண்டை எடுக்க அவர்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டனர். ஆனால் ஒரு சிறுமி மட்டும் ஒதுங்கி இருந்து, அனைவரும் எடுத்துக் கொண்ட பின் தனக்கான ரொட்டியை எடுத்துச் சென்றாள்.

சில நாட்கள் கழித்து, அதே போன்று ஒரு நாள் தனக்குக் கிடைத்த சிறிய ரொட்டியுடன் அச்சிறுமி தன் வீட்டிற்குச் சென்றாள். ரொட்டியை பிய்த்துப் பார்த்தபோது, அதற்குள்ளே ஒரு தங்கக் காசு இருந்தது. உடனே அச்சிறுமியின் தாயார், "இது செல்வந்தர் வீட்டு

தங்கக் காசு, தவறுதலாக ரொட்டிக்குள் வந்துவிட்டது. அதனை அந்த செல்வந்தரிடமே திருப்பிக் கொடுத்து விடு'' என்று கூறி அச்சிறுமியை செல்வந்தரிடம் அனுப்பினார். அவ்வாறே அச்சிறுமி தங்கச் காசை எடுத்துக் கொண்டு அந்த செல்வந்தரிடம் நடந்ததைக் கூறி திருப்பிக் கொடுத்தாள். அதற்கு செல்வந்தர், ''சிறுமியே உன் பொறுமைக்கு நான் கொடுத்த பரிசு இது, இதை நீயே வைத்துக் கொள்'' என்று கூறி, அந்த தங்கக் காசை சிறுமியிடமே திருப்பிக் கொடுத்தார். சிறுமியும் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்து தன் வீட்டிற்குச் சென்றாள்.

இதுபோன்று வளர்ந்துவரும் தமிழ்அறிஞர்களும் பொறுமையுடன் காத்திருந்து, தங்களது திறமையை நிரூபித்தால், அந்த சிறுமியைப் போல் உரிய நேரத்தில் உங்களுக்கும் விருது கிடைக்கும் என வாழ்த்தி,

இந்த நிகழ்ச்சியினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இறைவன் மனிதனுக்கு சொன்னது கீதை
மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்
மனிதன் மனிதனுக்கு சொன்னது திருக்குறள்''

எனக்கூறி விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
20.01.2020 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில்
நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும்
தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில்
ஆற்றிய உரை.

நாட்டின் விடுதலைக்காக ராணுவ ரீதியாக போராடிய மாவீரர் சுபாஷ் சந்திரபோஸ்

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்திய தேசிய ராணுவப் படையில் பணியாற்றிய தமிழர்களின் வீரத்தினைப் போற்றும் வகையில், “அடுத்த பிறவியில் நான் தமிழனாகப் பிறக்க வேண்டும்” என்று முழக்கமிட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களது திருவுருவச் சிலையை, ஆளுநர் மாளிகையில் அவரது பிறந்த நாளான இன்று திறந்து வைக்கும் விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவில், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்து விழாப் பேருரை ஆற்றவுள்ள மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவர் திரு. வெங்கைய நாயுடு அவர்களே!

தலைமையுரை ஆற்ற உள்ள மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்பு விருந்தினராக பங்கேற்றுள்ள மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. ப.தனபால் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற சென்னை பாரதீய வித்யாபவன் சேர்மன் திரு. ரவி அவர்களே!

பாரதீய வித்யாபவன் இயக்குநர் திரு.ராமசாமி அவர்களே!

வருகை தந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மரியாதைக்குரிய திரு.ஜெயக்குமார் அவர்களே!

மரியாதைக்குரிய திரு.பெஞ்சமின் அவர்களே!

மரியாதைக்குரிய திரு.பாண்டியராஜன் அவர்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற ஆற்காடு இளவரசர் அவர்களே!

முன்னாள் அமைச்சர் திரு.ஹெச்.வி.ஹண்டே அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கணேசன் அவர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

‘இந்தியா உடனடியாக சுதந்திரம் அடைய வேண்டும் என்றால் அதற்கு ஒரே வழி போர் மட்டுமே’ என தீர்மானித்து, இந்திய தேசிய ராணுவத்திற்கு புத்துயிர் அளித்து, ஆங்கிலேயரை எதிர்த்து, நாட்டின் விடுதலைக்காக ராணுவ ரீதியாக போராடிய மாவீரர்தான் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும் பிறந்த அதே வங்க மண்ணில், 1897–ஆம் ஆண்டு இதே நாளில், திரு.ஜானகிநாத் போஸுக்கும், திருமதி.பிரபாவதி தேவிக்கும் மகனாகப் பிறந்து, பிற்காலத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தன்னிகரற்ற தலைவராக விளங்கியவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள்.

அவர் தன்னுடைய பெற்றோர்களின் விருப்பத்திற்காக 1919ஆம் ஆண்டு ஐ.சி.எஸ். தேர்வுக்கு படிக்க லண்டன் சென்றார். இந்தத் தேர்வில் இந்தியாவிலேயே நான்காம் இடம் பெற்றார்.

இந்திய சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி அடைந்த சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கு கிடைத்த பெரும் பதவி – அரசு உத்தியோகம் ஆகியவை எல்லாம் ஆங்கிலேயர் முன் அவரை மண்டியிடச் செய்யவில்லை. மாறாக, ஆங்கிலேயர் ஆட்சியின் அடக்குமுறையின் காரணமாக, தனது ராஜினாமாக் கடிதத்தை மாண்டேகு பிரபுவிடம் அளித்தார். மதிப்பு மிக்க பதவியை வேண்டாம் என்று உதறித் தள்ளிய அவரைப் பார்த்து, “உன் பெற்றோர் வருத்தப்பட மாட்டார்களா?” என்று மாண்டேகு பிரபு கேட்டதற்கு, “என் தாய் தந்தையருக்கு வருத்தமாகத் தான் இருக்கும். ஆனால் என் தாய்நாட்டின் வருத்தம் அதை விடப் பெரியது” என்று சொல்லி அவருக்கு அதிர்ச்சி அளித்தார்.

பின்னர், நாட்டின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். வங்கத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்

திரு. சி.ஆர்.தாஸ் அவர்களை குருவாகக் கொண்டு தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார்.

வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருவதை எதிர்த்து நாடெங்கிலும் "புறக்கணிப்பு இயக்கம்" தொடங்கப்பட்டது. கல்கத்தாவில் சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் முழு வெற்றியைப் பெற்றது. இதைக் கண்டு வெகுண்ட ஆங்கிலேயே அரசு, தடையை மீறியதற்காக 1921ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் தேதி அவரை கைது செய்து ஆறு மாதம் சிறை தண்டனை அளித்தது. இதுதான் அவருக்கு கிடைத்த முதல் சிறை தண்டனையாகும்.

பின்னர் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களில் தீவிரமாக பங்கு கொண்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், அதிக அளவில் மக்களை சுதந்திரப் போராட்டங்களில் பங்கு பெறச் செய்தார். இதனால் நாளுக்கு நாள் மக்களிடையே சுதந்திர உணர்வு அதிகரித்து வந்தது. இவர், மக்கள் ஆதரவு பெற்ற ஒரு பெரும் தலைவராக பார்க்கப்பட்டார். இதனைக் கண்டு அஞ்சிய ஆங்கிலேய அரசு, அவரை கடல் கடந்து பர்மாவில் உள்ள சிறைக்கு மாற்றியது.

மேண்டலே சிறையின் காலநிலை நேதாஜியின் உடல் நிலைக்கு ஒத்து வராமல், அவருக்கு காசநோய் ஏற்பட்டது. அவரை விடுவிக்கக் கோரி நாடு முழுவதும் மக்கள் போராட்டம் நடத்தினர். இவரது உடல்நிலை ஆபத்தான நிலையை எட்டியதால், மன்னிப்புக் கேட்பது உள்ளிட்ட சில நிபந்தனைகளுடன் அவரை விடுதலை செய்ய நினைத்தது அன்றைய ஆங்கிலேய அரசு. ஆனால் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள், "நான் ஒன்றும் கோழையல்ல, மன்னிப்பு கேட்க. என்னை என் நாட்டுக்குள் வரக் கூடாது என்று சொல்ல இவர்கள் யார்? இந்த நிபந்தனைகளை என்னால் ஏற்க முடியாது" என்று சொல்லி விடுதலையாக மறுத்துவிட்டார். மரணத்தின் பிடியிலும் மங்காமல் ஒலித்த அந்த சிங்கத்தின் கர்ஜனையைக் கண்டு, ஆங்கிலேய அரசு அவரை விடுதலை செய்தது.

காங்கிரஸ் கட்சியில் வேகமாக வளர்ந்து வந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள், அக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்கும் நிலைக்கு உயர்ந்தார். குஜராத் மாநிலம் அரிபுரா நகரில் நடந்த தேசிய காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் தலைவரானதற்கு, ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் பாராட்டுக் கூட்டம் நடத்தி, அவருக்கு ‘‘நேதாஜி’’ என்ற பட்டத்தை அளித்தார். ‘‘மரியாதைக்குரிய தலைவர்’’ என்பது தான் இதன் அர்த்தம்.

நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஓராண்டு காலத்தில், அவர் மிகப் பெரிய விடுதலைப் போராளி என்று இந்திய மக்களின் இதயத்தில் இடம் பிடித்தார். அவரது சுற்றுப்பயணமும், பிரச்சாரமும், அனல் பறக்கும் பேச்சும், ஆங்கிலேய அரசுக்கு எதிராக மக்களின் உணர்வை வேகமாகத் தூண்டி விட்டது.

இதன் விளைவாக, 1939–ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் தலைமைக்காக நடந்த தேர்தலிலும் நேதாஜி அவர்கள் வெற்றி பெற்றார். ஆனால், கட்சியில் ஏற்பட்ட சில கருத்து வேறுபாடுகளால், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, ‘அகில இந்திய பார்வர்டு பிளாக்’ என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றைத் தொடங்கினார். அக்கட்சியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த பசும்பொன் தேவர் திருமகனார் துணைத் தலைவராக பொறுப்பேற்றார். ‘‘இந்தக் கட்சி விரைந்து செயல்பட்டு, இந்தியாவிற்கு சுதந்திரத்தை பெற்றுத் தரும்’’ என்றார் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள்.

நேதாஜியைப் பற்றி, காந்திஜி அவர்கள் குறிப்பிடுகையில், ‘நானும் சுபாஷும் இந்திய விடுதலைக்காக போராடுகிறோம். ஆனால் போராடும் வழிமுறைகள் வெவ்வேறு விதமானது’ என்று குறிப்பிட்டார்.

பின்னர் நேதாஜி அவர்கள், நமது நாட்டின் விடுதலைக்காக பிற நாடுகளின் உதவிகளைப் பெற எண்ணினார். அவரைக் கண்காணித்துக் கொண்டிருந்த ஆங்கிலேயரின் கண்களில் மண்ணைத் தூவி, தரை வழியாகவே பயணம் செய்து, ஆப்கானிஸ்தானையும், பின்னர் அங்கிருந்து பெருமுயற்சி எடுத்து ஜெர்மனியையும் அடைந்தார். நேதாஜி அவர்களை காணவில்லை என நாடே தவித்துக் கொண்டிருந்த வேளையில், ஜெர்மனியிலிருந்து நேதாஜி அவர்கள் முழங்க, மொத்த உலகமுமே இந்தப் போராளியை பார்த்து வியந்தது. தன் நாட்டின் சுதந்திரத்திற்காக தனி ஒரு மனிதனால் இவ்வளவு தூரம் செல்ல முடியுமா என உலகெங்கும் இவரது பெயர் ஒலிக்க இந்த நிகழ்வும் ஒரு காரணமாக அமைந்தது.

1941ஆம் ஆண்டு "சுதந்திர இந்திய மையம்" என்ற அமைப்பை தொடங்கிய நேதாஜி அவர்கள், "ஆசாத் ஹிந்த்" என்ற ரேடியோவையும் பெர்லினில் இருந்து தொடங்கியதோடு மட்டுமல்லாமல், இந்திய விடுதலைப் போரை மையப்படுத்தியும், உலகப் போர் பற்றிய செய்திகளையும் இதில் ஒலிபரப்பினார்.

இரண்டாம் உலகப் போரின்போது எங்கும் போர் விமானங்கள் குண்டுகள் வீசிக் கொண்டிருந்த நேரத்தில், எதற்கும் அஞ்சாமல், ஜெர்மனியில் இருந்து நீர்மூழ்கி கப்பல் வழியாக மூன்று மாதம் பயணம் செய்து ஜப்பானை அடைந்து, பின் சிங்கப்பூர் வந்தடைந்தார். அங்கு திரு. ராஷ் பிஹாரி தாஸ் அவர்களால் தொடங்கப்பட்டு, செயல்படாமல் இருந்த இந்திய தேசிய ராணுவத்திற்கு புது ரத்தம் பாய்ச்சி, அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். தனது சீரிய பேச்சால் ஒவ்வொரு இளைஞனையும் போரில் பங்கு பெறச் செய்தார்.

இந்தியா விடுதலை பெற்றால் தான், ஆசியாவில் உள்ள மற்ற நாடுகளும் விரைவில் விடுதலை அடைய முடியும் என்று அறைகூவல் விடுத்தார். இதனையடுத்து, தமிழ்நாட்டிலும், மலேசியாவிலும், பர்மாவிலும் இருந்த தமிழின மக்கள் ஆயிரக்கணக்கில் இந்திய

தேசிய ராணுவத்தில் தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல் இணைந்தனர். இவர்களில் பலர் இந்திய தேசிய ராணுவத்தின் உயர் பதவிகளிலும் இருந்தனர்.

நேதாஜி அவர்களின் போராட்டத்திற்கு தமிழர்கள் பல வழிகளில் உதவி புரிந்துள்ளனர். உதாரணத்திற்கு, தமிழ்நாட்டிலிருந்து பசும்பொன் தேவர் திருமகனாரால் சுமார் **600**க்கும் மேற்பட்ட தமிழர்கள் நேதாஜி அவர்களின் இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்தனர். அவரது இந்திய தேசிய ராணுவத்தில் பெண்கள் படைப் பிரிவுக்கு ராணி ஜான்சி என பெயரிட்டிருந்தார். அதன் தலைவியாக வீரத் தமிழ்ப் பெண்ணான கேப்டன் லட்சுமி இருந்தார். இந்தப் படையில் கேப்டன் ஜானகி தேவர் என்ற தமிழ்ப் பெண்மணியும் பெரும் பங்காற்றினார்.

பெரிய வியாபாரியான திரு. நாயுடு என்பவர், நேதாஜியின் விருப்பத்திற்கேற்ப, போரின்போது ஜெர்மனியில் தமிழ் வானொலி நிகழ்ச்சிகளை நடத்தினார். நேதாஜியின் சமையல்காரர், தமிழரான திரு.காளி. நேதாஜி சிங்கப்பூர் வந்தபோது அவரை வரவேற்றவர், திரு. சிதம்பரம் என்ற தமிழர்.

மேலும், மலேசியாவில் நேதாஜிக்கு ஆதரவாக “யுவ பாரதம்”, “சுதந்திர இந்துஸ்தான்” போன்ற தமிழ் இதழ்கள் வெளிவந்தன. நேதாஜி அவர்களின் தாரக மந்திரம் “ஜெய் ஹிந்த்” அதாவது வெல்க பாரதம். அதை நேதாஜிக்கு அறிமுகப்படுத்தியவர் செண்பகராமன் பிள்ளை என்ற வீரத் தமிழர்.

நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தின் வளர்ச்சியைக் கண்டு எரிச்சல் அடைந்த வின்ஸ்டன் சர்ச்சில், “மலேசியா ரப்பர் தோட்டத்தில் ரப்பர் பால் உறிஞ்சும் தமிழர்களின் ரத்தம் நேதாஜி மூளையில் கட்டியாக உள்ளது” என்றார். அதற்கு பதில் அளித்த நேதாஜி அவர்கள் “இந்த தமிழர்கள் தான் பின்னாளில் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ரத்தத்தை குடிப்பார்கள்” என்று கூறினார்.

இந்தியாவின் விடுதலைக்காக நேதாஜி அவர்கள் நடத்திய இந்திய தேசிய ராணுவம் மற்றும் காந்திஜி அவர்கள் நடத்திய பல்வேறு சுதந்திர போராட்டங்களில் தமிழர்களின் பங்கு மிகவும் மகத்தானது என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அனைத்துத் துறைகளிலும் உலகநாடுகள் வியக்கும் வண்ணம் நமதுநாடு முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இதனை மேலும் முன்னெடுத்துச் செல்ல, நேதாஜி அவர்களின் பிறந்த நாளான இன்று நாம் அனைவரும் உறுதி மேற்கொள்வோம். நாட்டின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த நேதாஜி அவர்களைப் போன்று, தன்னலம்கருதாது பொது நலனுக்காக தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்று இன்றைய இளைய சமுதாயத்தினரை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்த மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு எனது வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித்திரு நாடு!

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***23.01.2020** அன்று ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற*
நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் திருவுருவச் சிலை
திறப்பு விழாவில் ஆற்றிய உரை.

மத்திய அரசின் நல் ஆளுமை குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு முதலாவதாக வந்து சாதனை படைத்துள்ளது

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்திய தொழில் கூட்டமைப்பின் 125ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று சிறப்புரை ஆற்றவிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களே!

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்களே!

தொழில் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. முருகானந்தம் அவர்களே!

இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் திரு. விக்ரம் கிர்லோஸ்கர் அவர்களே!

தென்மண்டலத் தலைவர் திரு. சஞ்சய் ஜெயவர்த்தன வேலு அவர்களே!

இந்தியத் தொழில் கூட்டமைப்பின் தமிழகத் தலைவர் திரு. எஸ்.சந்திரமோகன் அவர்களே!

இந்தியத் தொழில் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர்கள் திரு. சேஷசாயி அவர்களே!

திரு. கோபாலகிருஷ்ணன் அவர்களே!

செல்வி ஷோபனா கமினேனி அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற தொழில் துறை தலைவர்களே!

அரசு அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

வளர்ச்சிப் பாதையை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் உற்ற தோழனாகவும், ஆலோசகராகவும் தொடர்ந்து திகழ்ந்து வரும் இந்தியத் தொழில் கூட்டமைப்பின் 125ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காலந்தோறும் மாறிவரும் அறிவியல், பொருளாதார மற்றும் தொழில்நுட்பச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, நம் நாடும், நாட்டின் தொழில் நிறுவனங்களும் வளர்ச்சி பெற்று புதிய உயரங்களை எட்ட CII அமைப்பு தொடர்ந்து ஊக்கமளித்து வருகிறது.

தொழில் துறையில் மட்டுமின்றி, அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக தொடர்ந்து திகழச் செய்ய வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய கொள்கையின்படி மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது.

2015 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் பாராட்டும் வகையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாடுகளை சிறப்பான முறையில் நடத்தியதில், இந்தியத் தொழில் கூட்டமைப்பு ஆற்றிய பங்கு மகத்தானது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மேலும், தொழில் துவங்குவதை எளிதாக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்ட பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை தமிழ்நாடு எங்கும் எடுத்து கூறியதில் இந்தியத் தொழில் கூட்டமைப்பின் பங்கு மகத்தானது, போற்றத்தக்கது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2001இல் தொடங்கி வைத்த Connect என்ற தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த கருத்தரங்கை, தமிழ்நாடு அரசும், CII–யும் இணைந்து இன்று வரை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் இயக்குநர் குழுவிலும் தொடர்ந்து இந்தியத் தொழில் கூட்டமைப்பு சீரிய பங்காற்றி வருகிறது.

எங்கள் அரசு தொழில் துறையை ஊக்குவிக்க பல தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கட்டட அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தொழிற்சாலைகளுக்கு உரிய காலத்திற்குள் அனுமதி வழங்கப்படாவிட்டால், சுய சான்றின் அடிப்படையில் கட்டுமானப் பணிகளைத் துவங்கலாம் என்ற திட்டம் தமிழ்நாட்டில் ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ளது.

தொழில் துறையை மேலும் ஊக்குவிக்கும் வகையில், பச்சை வகைப்பாடு தொழிற்சாலைகளை இயக்குவதற்கான இசைவாணையை நேரடியாக வழங்கும் "Direct CTO" திட்டத்தை

அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதன்படி, தொழில் பூங்காக்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட இடங்களில், தொழில் துவங்கும் பச்சை வகைப்பாட்டு நிறுவனங்கள், அதனை நிறுவுவதற்கான இசைவினை (Consent to establish) பெற, கட்டணம் செலுத்தி விண்ணப்பம் செய்தால் போதுமானது. அந்த இசைவினைப் பெற காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இவ்வகையான நிறுவனங்கள் சுய சான்றின் அடிப்படையில், கட்டுமானப் பணிகளைத் துவங்கலாம். இயக்குவதற்கான இசைவாணை மட்டும் பெற்றாலே போதுமானது.

ஏற்கெனவே, வெள்ளை வகைப்பாட்டு தொழிற்சாலைகள், மாசுக் கட்டுப்பாடு வாரிய அனுமதி பெற வேண்டியதில்லை என்ற நடைமுறை உள்ளது. மாண்புமிகு அம்மா அரசின் இப்புதிய திட்டம் மூலம், பச்சை வகைப்பாட்டில் உள்ள மேலும் 63 வகை தொழிற்சாலைகள் பயன் பெறும். குறிப்பாக, குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

I am happy to announce a new initiative named “Direct CTO Scheme for Green Industries” to relax the process for pre-establishment clearances for Green category industries.

மேலும், நகர் ஊரமைப்புத் திட்டம் இல்லாத (non-plan area) பகுதிகளில், தொழிற்சாலைகளுக்கான நில வகைப்பாடு மாற்றம் செய்வதை ஒற்றைச்சாளர முறையில், காலவரையறைக்கு உட்பட்டு வழங்கிடும் புதிய நடைமுறையையும் இங்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒற்றைச்சாளர முறையில், இணைய வழியில் விண்ணப்பம் பெறப்பட்டு, அதிகபட்சம் 50 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். இல்லாவிடில், நில வகைப்பாடு மாற்றத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதாகக் கருதி, அந்நிறுவனம் பணிகளைத் துவங்கலாம்.

இத்திட்டத்தின் பயனாக, அனைத்து விதிகளுக்கும் உட்பட்டு, அதிகபட்சம் 30 நாட்களுக்குள் வேளாண்மைத் துறை

தடையின்மைச் சான்றும், 15 முதல் 50 நாட்களில் நில வகைப்பாடு மாற்றமும் செய்யப்படும். அதே காலகட்டத்தில் திட்ட அனுமதியும் வழங்கப்படும். இதன் மூலம், திட்ட அனுமதி பெற முன்பு 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை ஆகும் என்று இருந்த நிலை மாறி, தற்போது 50 நாட்களாக குறையும். அதோடு, deemed approval எனப்படும் கருதப்பட்ட ஒப்புதலும் வழங்கப்படும் என்பதால், எவ்வித கால விரையமும் இன்றி, நிறுவனங்கள் தம் கட்டுமானப் பணிகளைத் துவங்க இயலும்.

I am also happy to announce an initiative for land use re-classification in non-plan areas. Land use re-classification for non-plan areas will be given deemed approval, if the applications in full shape, cross the timeline.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளால் பல புதிய தொழில் முதலீடுகளை தமிழ்நாடு தொடர்ந்து ஈர்த்து, தொழில் துறையில் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. இரண்டாம் உலக முதலீட்டாளர் மாநாடு நடைபெற்ற ஒரே ஆண்டில் 59 திட்டங்கள் தங்கள் வணிக உற்பத்தியைத் துவக்கியுள்ளன. மேலும், 213 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

வெற்றிகரமாக நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பிறகு, இதுவரை 19 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 63 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 83 ஆயிரம் வேலை வாய்ப்புகள் புதிதாக உருவாக்கப்பட உள்ளன.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்கும் பொருட்டு,

- உலகத் தமிழர்களை தொழில் துவங்க வரவேற்கும் “யாதும் ஊரே” திட்டம்.

- தொழில் முனைவோரின் குறைகளைத் தீர்க்க “தொழில் நண்பன்” என்ற இணைய வழி குறைதீர் வசதி.
- தமிழ்நாட்டின் தொழில் துறையின் சிறப்புகளை உலகெங்கும் எடுத்துச் செல்ல “தொழில் வளர் தமிழ்நாடு” திட்டம்.
- தொழில் வழிகாட்டி நிறுவனத்தில் நாடுகளுக்கான அமர்வுகள்.
- தாய்வான் மற்றும் அமெரிக்காவில் தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் பிரதிநிதிகள் நியமனம்.
- மின்சார வாகன பூங்கா, உணவுத் தொழில் பூங்கா, வானூர்தி தொழில் பூங்கா, தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் மூலம் ஒற்றைச்சாளர அனுமதிகளை நேரடியாகக் கண்காணித்து விரைவுபடுத்திட, எனது தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு.

என பல புதிய முன்முயற்சிகளை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்டு வருகிறது. எனது தலைமையிலான உயர்மட்டக் குழுவின் மூலம் இதுவரை **14** ஆயிரத்து **728** கோடி ரூபாய் மதிப்பீட்டிலான **36** தொழில் திட்டங்களுக்கு, பல்வேறு அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம், **22** ஆயிரத்து **763** நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் விரைவில் உருவாக்கப்பட உள்ளன.

இந்த அரசின் நல்லாட்சிக்கு ஒரு அத்தாட்சியாக வேளாண்மை, தொழில், மனித வள மேம்பாடு, பொது சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், சமூகநலத் திட்டங்கள் உள்ளிட்ட பத்து துறைகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஐம்பது குறியீடுகளின் அடிப்படையில், **2019**–க்கான மத்திய அரசின் நல் ஆளுமை குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு முதலாவதாக வந்து சாதனை படைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில் முதலீட்டாளர்களை இருகரம் நீட்டி வரவேற்கும் அரசு எங்கள் அரசு. முதலீட்டாளர்கள் தொழில் தொடங்க அனுமதி மற்றும் அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் குறுகிய காலத்தில் வழங்குவதும் எங்கள் அரசுதான் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த இந்தியத் தொழில் கூட்டமைப்புக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டு உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
30.01.2020 அன்று நடைபெற்ற இந்திய தொழில் கூட்டமைப்பின்
125ஆவது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை.